# கடத்தல் காற்று



கோட்டையம் புஸ்பநாத் தமிழில் சிவன்

# என்னுரை

**கோ**ட்டயம் புஷ்பநாத் எழுதிய மாந்திரீகம் அல்லாத மற்றொரு சமூக நாவல் கடத்தல் காற்று. தமிழ்ப் பத்திரிகை எதிலும் தொடராக வெளிவராத நாவலும்கூட. வாசகர்களை வாசிக்கத் தூண்டும் கதையமைப்பு. ஆவலைத் தூண்டும் சம்பவங்கள். ஒரு சராசரி ஜனரஞ்சகக் கதைக்குரிய அம்சங்கள் அத்தனையும் இதில் உண்டு. எனவே, சுவாரஸ்யமான நாவல். தொடர்ந்து கோட்டயம் புஷ்பநாத்தின் மாந்திரீக நாவல்களை மொழிபெயர்க்கும் வாய்ப்பு அடுத்தடுத்து எனக்கு வாய்த்தது. அதிலிருந்து மாறுபட்ட ஓர் அனுபவம் இது. இதற்கு அடிப்படை ருசிபேதம் என்பதை மறுப்பதற்கில்லை.

வாசிக்கத் தொடங்கும் பருவத்தில் சிறுவனாக இருந்தேன். வளர்ந்தது என்னவோ ஜனரஞ்சகக் கதைகளின் ஊடாகத்தான். வாசிப்பில் தேர்ந்தபோது பரிணாமப்படி இலக்கியத்தின் பக்கம் வந்து விட்டிருந்தேன். ஒரு வாசகனாக மீண்டும் ஜனரஞ்சகத்தின் பக்கம் திரும்புவதில் எனக்கு உடன்பாடில்லைதான்.

தமிழின் ஜனரஞ்சகப் பத்திரிகைகள் மூலமாகப் புகழ்பெற்ற எத்தனையோ எழுத்தாளர்கள் இலக்கியப் பக்கத்திலும் குறிப்பிடத் தக்கவர்களாக இருந்திருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் அவர்களின் மீது பால்யத்தில் என்னிடம் ஏற்பட்ட மரியாதையைத் தொலைக்காதிருக்கும் பொருட்டே, அவர்களின் நூல்களை குறிப்பிட்ட காலகட்டத்துக்குப் பிறகு வாசிக்காமல் நிறுத்திக் கொண்டேன். அது ஒரு தர்மசங்கடமான நிலைமை.

சிறுவயதில் நான் மிகவும் விரும்பிப் படித்த ஓர் எழுத்தாளரின் வரலாற்று நாவலை, சுமார் பதினைந்து வருடங்களுக்குப் பிறகு மறுமுறை வாசிக்க வாய்ப்புக் கிடைத்தது. முதல் பக்கத்தையே என்னால் தாண்ட முடியவில்லை. அந்த மதிப்புக்குரிய எழுத்தாளர் குறித்து என்னுள் இருக்கும் மேன்மையும், மரியாதையும் அழியாமல் இருக்கட்டும் என்பதற்காக, அந்தப் புத்தகத்தை அதற்குமேல் வாசிக்கவில்லை.

ஆனால், தொழில் ரீதியான ஒரு மொழிபெயர்ப்பாளனாக மாறிய பிறகு அந்த விரதத்தை அப்படியே தொடர முடியவில்லை. நான் வளர்ந்து வந்த பாதையில், எனக்குப் பிந்தைய இலக்கிய ஆர்வலர்கள் வருவதற்கான வழி இது என்று தெளிந்தேன்.

முதல் வகுப்பில் படிக்கத் தொடங்கும் ஒரு குழந்தை வயதின் வளர்ச்சியை ஒட்டி வகுப்புகளைத் தாண்டிச் செல்கிறது. பள்ளிக்கூடம் கடந்து கல்லூரியை மிதித்துப் பட்டங்களின் ஊடாக வளர்ந்த அதன் வாசிப்பும், படிப்பும் வெவ்வேறு உயரங்களில். அதுவே கற்பிக்கும் தொழிலுக்கு வந்துவிட்டால், ஒருபோதும் வாழ்க்கையில் திரும்பிப் பார்த்திராத – கடந்து வந்த ஏதோ ஓர் இடத்தில் பிந்தைய தலைமுறையினரின் கையைப் பிடித்து இழுத்து வருவதற்காக நின்று கொள்ள வேண்டியிருக்கிறது.

கல்லூரியில் அவர் தொட்டிருக்கும் உயரம் எதுவாக இருந்தாலும், மூன்றாம் வகுப்புக்கு வந்திருக்கும் எட்டு வயதுச் சிறுவனை மேல் வகுப்புக்கு அனுப்ப அவர் மறுபடியும் மூன்றாம் வகுப்புக்குள் வர வேண்டியிருக்கிறது. மொழிபெயர்ப்பில் அதுபோன்ற ஓரிடத்தில்தான் நான் தற்சமயம் நின்று கொண்டிருக்கிறேன்.

என்னுடன் கல்லூரியையும் தாண்டி வந்தவர்கள், நான் மறுபடியும் மூன்றாம் வகுப்புக்குள் நுழைவதைக் கிண்டலாகவும், வேடிக்கையாகவும், அறிவுபூர்வமாகவும் விமரிசிப்பதற்கு நான் வேறு எந்த வகையில் பதில் கூற?

இந்த நாவலை மொழிபெயர்க்க அனுமதி அளித்த ஆசிரியர் கோட்டயம் புஷ்பநாத், வெளியிடும் கலாநிலையம் திரு. சீனிவாசன், கட்டமைப்பில் பங்கு கொண்ட ஏனையோருடன் வாசகர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகிறது.

சென்னை –600 078.

தொலைபேசி: 24837681

தோழமையுடன்

**சிவன்**

# கடத்தல் காற்று

## 1

"மும்பையிலிருந்து வரும் ஏர்பஸ் இன்னும் சில நிமிடங்களுக்குள் தரையிறங்கப் போகிறது!" அறிவிப்பு ஒலித்தது. 'ஏர்பஸ் ஃப்ரம் மும்பை வில் அரைவ் வெரிசூன்!'

அதுவரை பல்வேறு விஷயங்களில் கவனம் செலுத்திப் பேசிக் கொண்டிருந்தவர்கள்கூடச் சட்டென்று தங்கள் பேச்சை நிறுத்திக்கொண்டனர். அங்கிருந்தவர்களின் இதயத்துடிப்பு அவர்களை அறியாமலே சட்டென்று அதிகரித்தது.

அதுவரை மிகவும் ரகசியமாகப் பாதுகாத்து வைத்திருந்த செய்தியாக இருப்பினும் ஒரே ஒரு மாலைப் பத்திரிகை மட்டும் எப்படியோ அந்தச் செய்தியை வெளியிட்டுவிட்டது.

அதைத் தொடர்ந்து நகரமே ஒட்டுமொத்தமாகப் பீதியில் ஆழ்ந்தது.

அப்படி பயமேற்படுத்திய செய்திதான் என்ன?

எதற்காக அவர்கள் பயப்படவேண்டும்?

கோடீஸ்வரர்கள்...

கோடிக்கணக்கில் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கும் நிதி நிறுவனங்கள்...

கறுப்புப்பணத்தை வெள்ளையாக மாற்றும் மதுபானத் தொழில் சக்ரவர்த்திகள்...

போலீஸ்துறையின் உயரதிகாரிகள்...

மேற்படி மனிதர்கள் எல்லோரது ரத்தக்குழாய்கள் ஒவ்வொன்றிலும் சூடான ரத்தம் வேகமாகப் பாய்ந்தது.

இந்த மனிதர்களையெல்லாம் வருடக் கணக்கில் நடுங்க வைத்துக்கொண்டிருந்த, இந்த நூற்றாண்டின் மிகப் பயங்கரமானவன் என்று பெயரெடுத்த மனிதன், பறந்துவரும் விமானத்துக்குள் இருப்பதாகச் செய்தி ஒன்று ஊருக்குள் பரவியிருந்தது.

யார் அந்த மனிதன்?

ஒவ்வொருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

ஆனால், எவரும் எதுவும் பேசவில்லை.

அந்தப் பெயரை உச்சரித்தால், உச்சரித்த நாக்கே சிலநேரம் இல்லாமல் போகலாம்.

அந்த உருவத்தை போட்டோ எடுத்தால், அந்த புகைப்படக்காரனின் உடல் மறுநாள் தண்டவாளத்தில் துண்டுகளாகிக் கிடக்கும்

தாவூத் இஸ்மாயில்!

இந்தக் காலகட்டத்தின் மிகப்பெரிய கள்ளக்கடத்தல்காரன்.

அழகான தோற்றமுள்ளவன். முப்பத்திரண்டு வயதானவன். இளைஞன். கடைந்தெடுத்த உடம்பு. சிறுத்தைப் புலியின் வேகம் கொண்டவன்.

அந்த வேகம்தான் தாவூத் இஸ்மாயிலின் மிகப்பெரிய சக்தியும், ஆயுதமும்!

அவனைச் சுட்டுத் தள்ளுவதற்காக எதிராளி ஒருவன் துப்பாக்கியை வெளியே எடுக்கலாமா வேண்டாமா என்று யோசிப்பதற்குள் தாவூத் இஸ்மாயில் அந்த மனிதனைச் சுட்டுப் பொசுக்கிவிடுவான்!

உடல்பலத்தைக் கொண்டு அவனை வெற்றி பெறுவதும் சாதாரணமல்ல. குத்துச்சண்டை முதல் ஜூடோ, கராத்தே, சிலம்பம் உட்பட எல்லாவற்றிலும் தேர்ந்தவன். ஒரே நேரத்தில் அவனைப் போன்ற நான்கு மனிதர்களை எதிர்த்து வெற்றிகொள்ளும் வலிமையும் தைரியமும் நிறைந்தவன்.

'ஜிம்னாஸ்டிக்' பேர்வழியான தாவூத், ஆயுதம் எதுவும் கைவசம் இல்லாவிட்டால்கூட டால்பின் மீனைப்போல் மேற்புறம் பாய்ந்து எதிராளியின் தொண்டைப் பகுதியைத் தன் தலையாலேயே மோதித் தகர்க்கும் வித்தை கற்றவன். பார்வைக்கு இளம் ஹீரோ மாதிரித் தோற்றமளிக்கும் தாவூத்தை யாராவது நேரில் பார்க்க நேர்ந்தால் 'இவன்தான் அதையெல்லாம் செய்பவன்!' என்று சத்தியம் செய்து சொன்னால்கூட நம்ப மாட்டார்கள்!

அவன் பார்வையும், புன்னகையும் சரியாகப் பாய்ந்துவிட்டால், எப்படிப்பட்ட இளம்பெண்ணும் அவனிடம் சரணாகதி அடைந்து விடுவாள். அவனது கலகலப்பான பேச்சில் மயங்காத பெண்களே இருக்க முடியாது. மேற்கத்திய இசைக்கருவிகள் சிலவற்றை வாசிப்பதிலும், மேடையில் பாடுவதிலும் பயிற்சி பெற்றவன். சமீபத்தில் வெளியாகி மாபெரும் வெற்றிபெற்ற திரைப்படத்தில்கூட அவன் புனைபெயரில் பாடியிருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்.

ஆனால், அருகில் எங்காவது அவன் இருக்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டாலே, இருந்த இடத்தை விட்டுக்கூட அசையமாட்டார்கள் பெரும்பாலானவர்கள்.

"ஒரு முக்கிய அறிவிப்பு, பார்வையாளர்களின் கவனத்துக்கு!"

இதே அறிவிப்பு, மறுபடியும் முழுதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, "பயப்படும்படியாக எதுவும் இல்லை. எனினும் தீயணைப்புப் படை, காவல்துறை, விமான நிலைய ஊழியர்கள் தவிர ஏனையோர் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு

விரைவில் விமான நிலைய எல்லையைத் தாண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மும்பையிலிருந்து புறப்பட்டுவந்து கொண்டிருக்கும் விமானத்துக்குள் வெடிகுண்டு இருக்கலாம் என்று கருதுவதால், பொதுமக்கள் விமான நிலைய எல்லைக்கு வெளியே சென்றுவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..."

ஒரு சில விநாடிகள் அந்தப் பகுதியில் அமைதி நிலவியது. அங்கிருந்தவர்கள் மூச்சுக்கூட விட மறந்து போனதுபோல் தோன்றியது.

'செய்தி உண்மையாக இருக்குமோ?' காத்திருந்தவர்கள் ஒருவரையொருவர் கேள்விக்குறி மற்றும் சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டனர்.

"வெடிகுண்டு!"

அமைதி நிலவிய அந்தப் பகுதியில் அந்தக் குரல் மட்டும் தனியாக எதிரொலிப்பதுபோல் தோன்றியது.

என்ன செய்வது என்று புரியாமல் எல்லோரும் ஒரு கணம் தடுமாறினர்.

எந்தவிதமான விளைவும் இல்லாததால் மீண்டும் அதே அறிவிப்பு, அதே தொனியில் தொடர்ந்தது.

தொடர்ந்து விரைவிலேயே டாக்ஸிகளும் ஆட்டோக்களும் மனிதர்களுடன் அந்த எல்லையைக் கடந்து கொண்டிருந்தன.

பைலட், கோ-பைலட், ஏர் ஹோஸ்டஸ்கள் இருவர் ஆகியோருடன் நூற்றியெழுபத்தைந்து பயணிகள் விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்தனர். அவர்களில் ஐம்பத்தொரு பேர் வளைகுடா நாடுகளிலிருந்து வருபவர்கள். அவர்களின் உறவினர்கள் வரவேற்பதற்காக விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். அங்கிருந்து வெளியேற மனமில்லாத பொதுமக்களை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

விஷயம் புரியாத சிலர் கத்திக் கூப்பாடு போடவும் செய்தனர். நாலைந்து பெண்மணிகளுடன் வயதான இரண்டு பெரியவர்களும் 'விமானத்தில் இருப்பவர்களின் நிலைமை என்ன ஆகுமோ?' என்ற பயத்தில் மயக்கம்போட்டு விழுந்துவிட்டனர்.

மாலை நேரமானதால் மின்சார விளக்குகள் எரியத் தொடங்கின. இரவு அதிகமான பொழுதாக இருந்தது.

காவல்துறையின் உயர் அதிகாரிகளும், மருத்துவத்துறை நிபுணர்களும், அவசரச் சிகிச்சையளிக்கும் டாக்டர்களும் நர்ஸுகளும், வெடிகுண்டு நிபுணர்களும் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தனர்.

டி. எஸ். பி. அலெக்ஸ் ஜோன்ஸும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விக்கிரமன் நாயரும் போலீஸ் துறையின் காரில் வந்து இறங்கினர். அவர்களுக்கு முன்பாகவே மற்றவர்கள் வந்து சேர்ந்திருந்தனர்.

"விக்கிரமன் சார், ஒருவேளை இது புரளியாகவும் இருக்கலாம்; அல்லது உண்மையாகவும் இருக்கலாம். எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது!" அலெக்ஸ் குறிப்பிட்டார்.

இருபது வருட சர்வீஸில் சிக்கலான எத்தனையோ வழக்குகளைச் சந்தித்து, பெரும்பாலானவற்றில் வெற்றியும் பெற்றவர் அலெக்ஸ்.

சம்பல்காட்டுக் கொள்ளைக்காரர்களை அடக்கி ஒடுக்குவதற்காகப் போன குழுவில் அலெக்ஸும் இருந்தார். பேர்போன கொள்ளைக்காரனான மான்சிங்கைப் பிடித்த குழுவில் இடம் பெற்றிருந்தவரும்கூட.

சம்பல்காட்டுக் கொள்ளைக்காரர்களைவிடப் பயங்கரமானவன் தாவூத் இஸ்மாயில் என்பது அலெக்ஸ் ஜோன்ஸுக்கும் நன்றாகவே தெரியும்.

அதற்கும் காரணமிருந்தது. உலகம் முழுவதும் அவனது தலைமையின்கீழ் ஆங்காங்கே குழுக்கள் சில செயல்பட்டுக் கொண்டிருந்தன. அவர்கள் எல்லோருமே தங்கள் பாஸுக்காக

எதையும் செய்யத் தயங்காதவர்கள். சம்பல் கொள்ளைக்காரர்கள் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே இருந்தனர்.

இன்ஸ்பெக்டர் விக்கிரமன் எதுவும் பதில் பேசவில்லை. டி.எஸ்.பி. தொடர்ந்தார்:

“நம்மைவிடப் பயங்கரமான விரோதிகள் தாவூதுக்கு இருக்கிறார்கள். அவனுடைய தொழில்முறை விரோதிகள். ஒரு தடவை மும்பை சர்ச் கேட் ரயில்வே ஸ்டேஷனில் யாரோ ஒருவன் தாவூதைச் சுட்டுவிட்டான். ஸ்டேஷனுக்குள் நிறுத்தி வைத்திருந்த கம்பார்ட்மென்ட் ஒன்றிலிருந்துதான் துப்பாக்கிக் குண்டு வெளிவந்தது. குண்டு அவன் உடம்பில் பாயவும் செய்தது. புல்லட் புரூஃப் உடையணிந்திருந்ததால் அதிலிருந்து தப்பித்த தாவூத் எதுவும் நடக்காததைப்போல் சட்டென்று அருகிலிருந்த மற்றொரு கம்பார்ட்மென்ட்டில் ஏறிக்கொண்டான். அப்போது யாரையோ வழியனுப்புவதற்காக வந்திருந்தான்! எனவே, அவன் எப்போதும் எச்சரிக்கையோடு இருப்பான்!”

நிமிடங்கள் சில கடந்தன.

போலீஸ் அதிகாரி ஒருவர், அவர்கள் நின்றிருந்த இடத்தை நெருங்கி சல்யூட் அடித்தார்: “சார், மினிஸ்ட்டரோட கார் திடீரென்று ரிப்பேராகி விட்டதாம். தயவுசெய்து உங்கள் காரை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்!”

யோசனையில் ஆழ்ந்த அலெக்ஸிடம் அதே அதிகாரி தொடர்ந்தார்: “சார், நீங்கள் தற்சமயம் பயன்படுத்த தனியார் மருத்துவமனையைச் சேர்ந்த ஏ. சி. ஆம்புலன்ஸ் ஒன்று உள்ளது. நீங்கள் ஓய்வெடுப்பதானால்கூட அதில், அதற்கான வசதிகள் உள்ளன.

“நல்ல யோசனை மிஸ்டர் விக்கிரமன். எனக்கும் களைப்பாக இருக்கிறது. வாருங்கள் கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கலாம்.” அலெக்ஸ் அழைத்தார்.

இருவரும் நவீன வசதிகள் கொண்ட அந்த ஆம்புலன்ஸுக்குள் நுழைந்தனர். உள்ளே ஒரு சிறிய ஃபிரிட்ஜ்கூட இருந்தது.

டி.எஸ்.பி. ஃபிரிட்ஜைத் திறந்து சில்லென்ற தண்ணீரை எடுத்துக் குடித்தார்.

ஆம்புலன்ஸ் ஏர்போர்ட்டுக்கு முதுகுகாட்டிக் கொண்டு நின்றிருந்தது. ஏ. சி. வேனாக இருந்ததால் வெளியே என்ன நடக்கிறது என்று தெரியாமல் போய்விடும். எனவே, பின்புறக் கதவைத் திறந்துவிடும்படி கூறினார்.

விமான நிலைய ஸ்பீக்கர்களில் மீண்டும் அறிவிப்பு முழங்கியது.

"இன்னும் சில விநாடிகளில் ஏர் பஸ் விமான தளத்தை அடையப்போகிறது."

அந்தப் பகுதியே அமைதியாக இருந்தது.

வடக்குத் திசையிலிருந்து மேகங்களை நடுங்கவைத்தபடி விமானத்தின் இரைச்சல் அதிகரிக்கத் தொடங்கியது.

எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்.

விமானத்தின் முன்புறச் சக்கரங்கள் தரையைத் தொட்டு உருளத்தொடங்கின.

சற்றுத் தூரம் முன்புறமாக ஓடிய விமானம் இடதுபுறமாகத் திரும்பி மெதுவாக நின்றது.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் தீயணைப்பு வண்டிகள் விமானத்தைச் சூழ்ந்துகொண்டன. செயல்படத் தயாராயின.

ஒவ்வொரு செயலிலும் பரபரப்புத் தென்பட்டது. விமானத்திலிருந்து வெளியேறுவதற்கான 'கேஸ்வே' பொருத்தப்பட்டது. பயணிகள் ஒவ்வொருவராக இறங்கத் தொடங்கினர். எப்போதென்று தெரியாத விபத்தைத் தவிர்க்கும்

பொருட்டு வழக்கமான சோதனைகளை விரைவாக முடித்துக்கொண்டு பயணிகளை வெளியேற்ற விமான நிலையத்தினர் தீர்மானித்தனர்.

நூற்றியெழுபத்தைந்து பேரும் விமானத்திலிருந்து இறங்கினர். கடைசியாக விமானத்தின் உள்ளிருந்த ஊழியர்களும் இறங்கினர்.

"நல்லவேளை! இதுவரை எதுவும் நடக்கவில்லை!" அலெக்ஸ் ஜோன்ஸ் நிம்மதிப் பெருமூச்சு விட்டவராகக் கூறினார்.

"அவ்வளவு சீக்கிரம் நாம் ஆறுதலடையக் கூடாது சார்!" விக்கிரமன் நாயர் பேசினார்.

"விமானத்துக்குள் வெடிகுண்டு இருப்பதால் பயணிகள் வெகுவிரைவில் விமான நிலைய எல்லையைக் கடக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்." அறிவிப்பு ஒலித்துக் கொண்டிருந்த அதேநேரத்தில் விமானத்துக்குள் ஏதோ ஒன்று வெடிக்கும் சத்தம் கேட்டது. வாகனங்கள் சாரிசாரியாக வெளிப்புறம் செல்லும் பாதையில் விரைந்தன.

"ஆம்புலன்ஸின் டிரைவர் எங்கே போனார்?" அலெக்ஸ் பரபரப்புடன் கேட்டார்.

"இதோ இங்கேயே இருக்கிறேன் சார்!" எங்கிருந்தோ முளைத்த டிரைவர் சட்டென்று இருக்கையில் ஏறி அமர்ந்து வேனை ஸ்டார்ட் செய்தார்.

"சார், நாம எங்கே போகணும்?"

"நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போங்க." அலெக்ஸ் உத்தரவிட்டார்.

ஆம்புலன்ஸ் நகரத் தொடங்கியது.

"சந்தேகத்துக்குரிய யாரையாவது கைது செஞ்சிருக்காங்களா டிரைவர்?" அலெக்ஸ் கேட்டார்.

"எங்கே சார், யாரைக் கைது பண்ணிட்டாங்களான்னு கேக்குறீங்க?"

"தாவூத் இஸ்மாயிலைத்தான் கேக்கிறேன்."

"நான்தான் சார் அது!" அந்தக் குரல் ஓர் இடி முழக்கம்போல் டி. எஸ். பிக்கும், சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும் கேட்டது. இருவரும் சட்டென்று தங்கள் இடுப்பிலிருந்த துப்பாக்கியை உருவினர்.

"அவசரப்படாதீங்க சார். உங்களோட குண்டுகள் என்னை ஒண்ணும் பண்ணாது. ஆனா டேஷ்போர்டில இருக்கிற ஒரு சுவிட்சை அழுத்தினா, உங்க ரெண்டு பேரோட உடம்பும் சல்லடை மாதிரியாயிடும் நீங்க இருக்கிற வேனோட எல்லாப்பக்கமும் கன்னா பின்னான்னு துப்பாக்கியை மறைச்சு தயாரா வெச்சிருக்கானுங்க!"

## 2

சொன்னபடியே செய்யக்கூடியவன் தாவூத் இஸ்மாயில்! அந்த வார்த்தைகள் கல்லில் பொறித்த மாதிரியானவை. அதில் சந்தேகமே இல்லை!

"மிஸ்டர் அலெக்ஸ் ஜோன்ஸ்... நான் உங்களை அப்படியே கூப்பிடலாமில்லையா? விமானத்தில் பயணம் செஞ்ச பயணிகள் எல்லோரையும் உங்க செக்யூரிட்டி ஆளுங்க சோதனை செஞ்சாங்க. ஆனா, விமானத்துக்கு உள்ளேயிருந்து வந்த ஊழியர்களை அவங்க சோதனை போடலை. அதுதான் அவங்க செஞ்ச தப்பு."

அவன் சொன்ன உண்மை உறைத்ததும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பியின் முகத்தை ஊன்றிக் கவனித்தார்.

"ஒரு விஷயத்தை நினைத்துப் பாருங்கள். தேவைப்பட்டால், மும்பையிலிருந்து எனக்காகவே ஒரு தனி விமானத்தைக் கிளப்பிக்

கொண்டு வந்திருக்கலாம்" தாவூத் இஸ்மாயில் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி பேசினான்.

"இப்போது வந்த விமானமும் என் வேண்டு கோளுக்காகத்தான் விடப்பட்டிருக்கிறது. இதில் நான் பயணம் செய்கிறேன் என்பதைத் தெரிந்துகொண்ட உங்கள் துறையின் சுறுசுறுப்பை நான் பாராட்டுகிறேன். ஒருவேளை என்னுடைய எதிராளிகள் யாராவது 'துப்பு' கொடுத்திருக்கலாம்."

போலீஸ் அதிகாரிகளால் எதுவும் பேசமுடியவில்லை. அவன் பேசுவதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். வேறு என்ன செய்ய? அவர்கள் இருவரும் அப்போது அவனிடம் வகையாகச் சிக்கியிருந்தனர்.

"மிஸ்டர் தாவூத் இஸ்மாயில்... உண்மையிலேயே உங்க திறமையை நான் பாராட்டுகிறேன். நீங்கள் ஒரு தந்திரசாலி மட்டுமல்ல... கெட்டிக்காரரும்கூட. நீங்கள் இந்த மாதிரியெல்லாம் செயல்படுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை. வெகு தாமதமாக உணர்கிறேன்"பேசியபடியே அலெக்ஸ் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து சிகரெட் பெட்டியை எடுத்து அதிலிருந்து சிகரெட்டை உருவி உதட்டில் பொருத்தி லைட்டரால் பற்ற வைத்துக் கொண்டார்.

"மிஸ்டர் அலெக்ஸ், உங்களைப் போன்றவர்களின் திட்டங்கள் குறைந்தபட்சம் ஒரு சதவிகிதமாவது தவறும். அந்தத் தவறுதான் என்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. இதுவரையில் வேண்டுமானால் அதை என்னுடைய அதிருஷ்டம் என்றும் சொல்லலாம்."தாவூத் சிகரெட்டுச் சாம்பலை டாஷ்போர்டில் இருந்த ஆஷ்ட்ரேயில் தட்டியபடி பேசினான்.

"இப்போது நாம் எங்கே போகிறோம்?"அலெக்ஸ் விசாரித்தார்.

"உங்களிடமிருந்து இப்படிப்பட்ட முட்டாள்தனமான கேள்வியை நான் எதிர்பார்க்கவில்லை. நான் எந்த இடத்துக்குப் போய்ச் சேரணும்னு நெனைக்கிறேனோ, அதுவரைக்கும் நீங்க

இதுக்குள்ளே இருந்தே ஆகணும். அதற்கு இன்னும் நேரம் இருக்கிறது."தாவூத் இடது கையை உயர்த்தி டிரைவரின் முன்புற இருக்கைக்கும், பின்புற கேபினுக்கும் நடுவே இருந்த சிறிய சதுரமான துவாரத்தை, ஷட்டரை இழுத்து மூடித் தாழ் போட்டான். அத்துடன் அவர்களுக்கிடையே இருந்த தொடர்பும் துண்டிக்கப்பட்டது.

"இவன் எங்கே போகிறான்?" அலெக்ஸ் ரகசியமான குரலில், விக்கிரமன் நாயரிடம் கேட்டார்.

"எங்கே போனா என்ன? எப்படி இருந்தாலும் இவன் நம்ம வலையிலிருந்து தப்பிக்கிறது அவ்வளவு சுலபமில்லை!" விக்கிரமன் நாயர் தனது துப்பாக்கியின் மீது கைவைத்தபடி மெதுவான குரலில் கூறினார்.

"சரி...பார்க்கலாம்!" அலெக்ஸ் ஜோன்ஸ் தைரியத்துடன் சொல்லிக்கொண்டார்.

இவர்களின் பேச்சைக் கேட்டதினாலோ என்னவோ அவசர அவசரமாக சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் அழுத்தித் தேய்த்து அணைத்த தாவூத், வைப்பர் சுவிட்ச் போன்ற ஒன்றை அழுத்தினான்.

ஆம்புலன்ஸின் பின்புற அறைக்குள் எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் சன்னமான புகை ஒன்று மூச்சுத் திணறும்படி வெளிவந்தது. அங்கு அமர்ந்திருந்த அலெக்ஸும், விக்கிரமன் நாயரும் இருமத் தொடங்கினர்.

விக்கிரமன் நாயர் பின்புறக் கதவைத் திறக்க முயன்றார். முடியவில்லை. அது வெளிப்புறம் பூட்டப்பட்டிருப்பது தெரிந்தது. ஒரு சில விநாடிகளுக்குள் இருவரும் சுயநினைவை இழந்தனர்.

இருவரும் கண்விழித்தபோது போலீஸ்துறையின் காருக்குள் இருந்தனர். விமான நிலையத்துக்குப் போக அவர்கள் பயன்படுத்திய அதே காருக்குள் தாங்கள் படுத்திருப்பதை உணர்ந்தனர். அமைச்சரின் கார் எதிர்பாராதவிதமாக ரிப்பேர்

ஆனதாகச் சொல்லி ஏதோ ஓர் அதிகாரி கேட்டு வாங்கிச் சென்றார். அதற்குப் பதிலாகத்தான் அவர்கள் ஆம்புலன்ஸில் ஏறினர்.

நகரிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் சாலையில்தான் நின்றிருந்தது. பொழுது புலரும் நேரம்.

"மிஸ்டர் விக்கிரமன், நேராக என்னுடைய குவார்ட்டர்ஸுக்கு காரை விடுங்கள். நல்லவேளை என் குடும்பத்தார் நாளைக்குத்தான் ஊரிலிருந்து வருகிறார்கள். நீங்களும் குளித்து அப்படியே ஓய்வெடுத்துக்கொள்ளலாம். நான் மிகவும் களைப்படைந்து விட்டேன். அந்தப் புகை கலந்த காற்றைச் சுவாசித்ததுதான் காரணம் என்று தோன்றுகிறது. என்ன இருந்தாலும் அந்தப் புகை ஆபத்தானதல்ல என்று புரிகிறது," -டி.எஸ்.பி. அபிப்பிராயம் தெரிவித்தார்.

"உண்மைதான். அதுமட்டும் ஆபத்தானதாக இருந்தால் நாம் கண் விழிச்சிருக்கவே முடியாதே!"விக்கிரமன் காரை ஸ்டார்ட் செய்தபடி பேசினார்.

கார், எதுவும் சேதாரமாகியிருக்கவில்லை. சற்று நேரத்துக்குள் அவர்கள் குவார்ட்டர்ஸை அடைந்தனர்.

குளித்து, டிபன் சாப்பிட்டபோது புத்துணர்ச்சி திரும்பக் கிடைத்தது போலிருந்தது.

"ராத்திரி நேரத்துல அடிக்கடி போன் வந்துட்டேயிருந்தது." வேலைக்காரர் கூறினார்.

"எங்கேருந்து?"அலெக்ஸ் கேட்டார்.

"அதை மட்டும் எதிர்முனை சொல்லலை!"

அதே நேரம் தொலைபேசி அலறியது.

அலெக்ஸ் ரிசீவரை எடுத்துக் காதருகில் கொண்டுபோனார்.

"ஹலோ, யார் பேசறது... நான், டி.எஸ்.பி. பேசுறேன்."

"நான்தான் சார் தாவூத் இஸ்மாயில் பேசுறேன். சௌக்கியமா இருக்கிறீங்க இல்லையா? உங்களைத் தொல்லைப்படுத்துறதுக்கு மன்னிக்கணும்."

டி. எஸ். பி., டெலிபோனுடன் இணைக்கப்பட்டிருந்த டேப் ரிக்கார்டரை ஆன் செய்தார்.

அது பயனுள்ள ஒரு காரியம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் போனில் பேசும் மனிதனின் குரலும், வார்த்தைகளும், அதன் சுற்றுப்புறத்தில் எழும் ஒலிகளும் ரிக்கார்டாகிவிடும். சுற்றுப்புறச் சத்தம் சில சந்தர்ப்பங்களில் போன் செய்த இடத்தைக் கண்டுபிடிக்கப் பெருமளவில் உதவுவது உண்டு. பக்கா கிரிமினல்களான சிலர், தொடர்பே இல்லாத இடத்திலிருந்து கூட புதிய இணைப்புக் கொடுத்து போன் செய்வார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

"சௌக்கியமா இருக்கிறோம். ஆனா, நீங்க இப்படிச் செய்வீங்கன்னு .நாங்க எதிர்பார்க்கலை. ஆமாம் நீங்க சௌக்கியமா? உங்க இடத்துல இருந்துதானே பேசுறீங்க?" அலெக்ஸ் ஜோன்ஸ் நிதானமாக கேட்டார்.

"ஏர்போர்ட்டிலிருந்து தப்பிக்க எனக்கு வேற வழி தெரியலை. ஆம்புலன்சாக இருந்தால் அதை யாரும் சட்டென்று சோதனை செய்ய மாட்டார்கள். ஒருவேளை என்னை மடக்கினால்கூட நீங்கள் என்னிடம் அகப்பட்டிருந்தீர்கள். என்னைக் காப்பாற்றாமல் நீங்கள் தப்பிக்க முடியாதே!"

"உண்மையிலேயே நீங்கள் ஏர்போர்ட்டிலிருந்து தப்பித்த விஷயம் எங்களுக்கு இன்னும் ஆச்சரியத்துக்கு உரியதுதான். ரியலி ஒண்டர்ஃபுல்!" வேண்டுமென்றே அவனிடம் பேச்சை வளர்ப்பதற்காக அலெக்ஸ் பேசினார்.

"அதையெல்லாம் ஏற்கெனவே நான் உங்ககிட்டச் சொல்லியாச்சே. வீணா பேச்சை இழுத்து நீட்ட முயற்சி பண்ணாதீங்க. நீங்க சௌக்கியமா இருக்கீங்களானு தெரிஞ்சுக்கத்தான் போன் பண்ணினேன்"எதிர்முனை பதிலளித்தது.

"நலம் விசாரிச்சதுக்கு நன்றி! நீங்க எங்கேயிருந்து பேசுறீங்க. லைன் ரொம்பவும் டல்லா இருக்கே!"

"உங்க நோக்கம் எனக்குப் புரிஞ்சிடுச்சு. நான் கொஞ்சநாள் இந்த ஊரிலதான் இருப்பேன். என்னைப் பிடிக்கிறதுக்கு நீங்க முயற்சி செய்வீங்கன்னு எனக்குத் தெரியும். அது அபாயகரமான வேலைன்னு உங்களுக்கு எச்சரிக்கை செய்யிறது என்கடமை.''தொலைபேசித் தொடர்பு சட்டென்று துண்டிக்கப்பட்டது.

"ஆளு இங்கேயேதான் இருக்கிறான்!"தொலைபேசியை வைத்தபடி அலெக்ஸ், விக்கிரமன் நாயரிடம் பேசினார்.

"நம்ம மயக்கம் தெளிஞ்சுட்டமா, இல்லை மயக்கத்துலேயே உயிரை விட்டோமான்னு தெரிஞ்சுக்கிறதுக்காகத் தான் போன் பண்ணியிருக்கான். ராஸ்கல்!"விக்கிரமன் பல்லைக் கடித்தபடி கூறினார்.

அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் நகரிலிருந்த முக்கியமான ஓட்டல்கள் எல்லாவற்றிலும் ஓர் அதிரடிச் சோதனை நடந்தது. ஆனால், தாவூத் இஸ்மாயிலைப் பற்றி எந்த விதமான செய்தியும் கிடைக்கவில்லை.

அந்த நகருக்குள்ளேயே, ஆனால் எப்படிப்பட்டவரும் சந்தேகிக்க முடியாத பத்திரமான ஓரிடத்தில் இருந்தான் தாவூத்.

ஒரு வாரத்துக்கு முன் நகருக்கு வந்த சர்க்கஸ் கூடாரத்தின் ஓர் அறைக்குள் இருந்தான்.

அந்த சர்க்கஸ் கம்பெனியும் அவனுக்குச் சொந்தமானதுதான்.

இருநூறுக்கு மேற்பட்ட கலைஞர்களுடன் நூற்றுக்கணக்கான மிருகங்களும் உள்ள, இந்தியாவிலேயே புகழ்பெற்ற சர்க்கஸ் கம்பெனியை அவன் சில நோக்கங்களுக்காக நடத்தி வந்தான்.

அவ்வப்போது பஃபூன் வேடம் போட்டு முன்வரிசையில் அமர்ந்திருக்கும் வி.ஐ.பி.களை நோட்டமிடவும் செய்ததுண்டு.

வேடம்போட்டு மேடைக்கு வந்து வேடிக்கை காட்டும்போது அவனுக்கு முன்னால் அமர்ந்து வேடிக்கை பார்க்கும் போலீஸின் உயர் அதிகாரிகளும், அவர்களின் குடும்பத்தினரும் மகிழ்ச்சியடைவதை அவன் கவனிக்கத் தவறியதில்லை.

அன்றைய காட்சி முடிவடைந்தது.

இரவு பன்னிரண்டு மணிக்கு மேலாகிவிட்டிருந்தது. அவனுக்காகப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் தங்கியிருந்தான் தாவூத்.

சர்க்கஸ் கம்பெனி மேனேஜரும் அவனுடன் இருந்தார்.

"மிஸ்டர் தாஸ், நாம் இந்த ஊரில் இரண்டு மாசம் இருக்க வேண்டியிருக்கும். அதற்குள் என்னுடைய வேலைகளை முடித்துக்கொள்கிறேன்." தாவூத் மேனேஜரிடம் கூறினான்.

"அவ்வளவு நாள் கூடாரம் அடித்துக் தங்க அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகம்தான். ஒரு வாரத்துக்கு உள்ளேயே தியேட்டர்காரர்களின் பொறாமைக்கு ஆளாகியிருக்கிறோம். நமது சர்க்கஸ்மீது பொதுமக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம்தான். பார்க்கலாம்."

"புதிதாகச் சேர்ந்த 'சாண்டோ' எப்படி இருக்கிறார்?" தாவூத் கேட்டான்.

"பலசாலிதான். ஒரு குதிரையை வெகு சாதாரணமாகவே கைகளால் தூக்கி விடுகிறான். ஆனால், ஒரு முகடு மாதிரி இருக்கிறான். அகம்பாவம் பிடித்தவனாகவும் தெரிகிறான்."

"இப்படிப்பட்ட ஒருவன் நமக்குத் தேவை இல்லை!"

"நம் சர்க்கஸில் அவனுடைய அயிட்டம்தான் குறிப்பிடத்தக்கது!"

"இருக்கலாம். அவன் அளவுக்கு அதிகமாகப் போனால் சரியாகாது. சரி, நீங்கள் போய் படுத்துக் கொள்ளுங்கள்!" தாவூத் விடை கொடுத்தான்.

மேனேஜர் வெளியேறினார்.

இந்த நேரத்தில் தூங்கக்கூடிய மனிதனல்ல தாவூத். எனவே, சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு கட்டிலின்மீது சாய்ந்து உட்கார்ந்தான்.

கூடாரங்களில் விளக்குகள் அணைந்து விட்டிருந்தன. மிருகங்கள் கூட உறங்க ஆரம்பித்து விட்டன.

சற்று நேரத்தில் எங்கிருந்தோ ஒரு பெண் அழும் சத்தம் கேட்டது. காதைக் கூர்மையாக்கிக் கவனித்தான்.

'உண்மைதான் யாரோ அழுகிறார்கள்.'

தாவூத், தனது கூடாரத்திலிருந்து வெளியே வந்தான். அழுகைச் சத்தம் கிழக்குப் பகுதியிலிருந்துதான் கேட்டது. தாவூத் அந்தத் திசையில் நடந்தான்.

ஒரு கூடாரத்தை நெருங்கியதும், "விடுங்கள்... என்னை விடுங்கள்!"ஒரு பெண்ணின் குரல் உயர்ந்தது.

தாவூத் டார்ச் லைட்டை எரிய விட்டபடி கூடார வாயிலாகத் தொங்கிக்கொண்டிருந்த படுதாவை நீக்கினான்.

உள்ளே, புதிதாக வந்த சாண்டோ ஒரு பெண்ணிடம் அத்துமீறி நடக்க முயன்று கொண்டிருந்தான்.

"ஏம்பா, என்ன இதெல்லாம்?" தாவூத் கேட்டான்.

"நீ யாருய்யா இதையெல்லாம் கேட்க?உயிர்மேல ஆசையிருந்தா ஒடிப்போயிடு: வீணா அடிவாங்கிச் சாக வேண்டாம்."சாண்டோ, தாவூதை நோக்கித் திரும்பினான்.

"சரி, முதல்ல வெளியில வாப்பா. கூடாரத்துக்குள்ள இடவசதி போதாது." தாவூத் கூறினான்.

ஆனால், அந்த வார்த்தைகளைப் பொருட்படுத்தாத சாண்டோ, அந்தப் பெண்ணின் நைட்டியைப் பிடித்து இழுத்துக்

கிழித்தான். அரைகுறை ஆடையுடன் அவள் அழுதுகொண்டே இருந்தாள்.

சாண்டோ மறுபடியும் அவளை நெருங்கினான்.

தாவூத் நான்கு எட்டுகளைப் பின்னுக்கு வைத்து நகர்ந்தான். விஷயத்தைப் புரிந்து கொண்ட சாண்டோ, அந்தப் பெண்ணைக் கையில் ஏந்திக்கொண்டு தாவூதை நோக்கித் திரும்பினான்.

அந்தப் பெண்ணை ஒரு கேடயம்போல் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையில் இரும்புக்கம்பியை எடுத்துக் கொண்டான்.

# 3

தாவூத் ஒரு தடவை அவனை ஏற இறங்கப் பார்த்தான். அவனைத் தாக்குவதானால், அந்தப் பெண்ணுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படலாம். எனவே, புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான்.

தாவூத் எதிராளியின் காலைக் கவனித்தான்.

வலது காலை முன்புறமாகத் தரையில் ஊன்றி நின்றிருந்தான்.

அவனது வலது காலைக் குறிபார்த்து முழங்காலின் கீழ்ப்பகுதி எலும்பில், தனது பூட்ஸ் காலால் ஓங்கி ஒரு மிதிமிதித்தான். சாண்டோவின் கையிலிருந்த பெண் நழுவி விழுந்தாள். அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த தாவூத், தனது வித்தையைக் காட்டினான்.

சட்டென்று பின்னுக்கு நகர்ந்து ஒரு மீனைப்போல் பாய்ந்து. தன் தலையால் சாண்டோவின் நெஞ்சில் வலுவாக மோதினான். சாண்டோ நிலைதடுமாறிப் பின்னோக்கிச் சரிந்தான்.

சற்று நேரத்துக்கு அவனால் அசைய முடியாது என்று தெரிந்ததும் தாவூத் அவனைக் கூடாரத்துக்கு வெளியே இழுத்துப்

போட்டான். அந்தப் பெண்ணிடம் உள்ளே போய்ப் படுத்துக்கொள்ளும்படி கூறினான்.

மறுநாள் காலையில் ரத்தம் கக்கியபடி படுத்துக்கிடந்த சாண்டோவை மற்ற ஊழியர்கள் கவனித்து மேனேஜரிடம் தெரிவித்தனர்.

மேனேஜர் தாஸ் அதைப் பற்றி தாவூத்திடம் எதுவும் கேட்கவில்லை. சாண்டோவை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துப் போனார்கள்.

அன்று மதியம் தாஸ், தாவூத்தின் அறைக்கு வந்தார்.

"நீங்க சொன்ன கட்டடத்தை விலைபேசி முடிச்சாச்சு சார். நாலரை லட்சரூபாய். ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்புக்கு நடுவே கட்டடம் இருக்கிறது. இரண்டுமாடிக் கட்டடம். சுற்றிலும் கொக்கோ செடிகள். யாரும் சுலபத்தில் கவனிக்கமுடியாது இடம்!"

"யாருக்காக வாங்குவதாகச் சொன்னீர்கள்?" தாவூத்கேட்டான்.

"எனக்கென்றுதான் சொல்லியிருக்கிறேன். என் பெயரில்தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது."

"நல்ல வேலை செய்தீர்கள். நான் நாளைக்கே அந்த இடத்துக்குக் குடிபோகலாமில்லையா? அது எனக்குப் பொருத்தமான இடமாகத்தான் தெரிகிறது."

"உண்மைதான். உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்."

"என்னுடைய டெலிபோன் நம்பரைத் தெரிந்து வைத்திருப்பவர்கள், என்னுடன் தொடர்பு கொள்ள விரும்பினால், எனக்கு விவரத்தைத் தெரியப்படுத்திவிட்டு, அவர்களை அங்கு அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்!"

"உங்களுக்கென்று தனியாக டெலிபோன் நம்பர் இருக்கிறதா என்ன? இந்த நிமிடம் வரை அது எனக்குத் தெரியாது சார்!"- தாஸ் வியப்புடன் பேசினார்.

'தாவூத் இஸ்மாயிலுக்குத் தனி டெலிபோன் நம்பரா? அண்டர்கிரவுண்ட் தாதாக்களிலேயே முதலிடத்தில் இருக்கிற தாவூத்துக்கு தனி நம்பர் எப்படிச் சாத்தியம்?'தாஸ் யோசனையில் ஆழ்ந்தார்.

"என்னுடைய டெலிபோன் நம்பர், டைரக்டரியில் இருக்காது!"தாவூத் கூறினான்.

"வேறு எப்படி அதைத் தெரிந்து கொள்வது?"

"தெரிய வேண்டியவங்களுக்கு மட்டும் தெரிஞ்சாப் போதாதா?"

"நான் தெரிந்து கொள்ளலாமா, வேண்டாமா?"

"நீங்கள் கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், எந்தக் காரணம் கொண்டும் போலீஸோ, நமது எதிரிகளோ இந்த நம்பரைத் தெரிந்துகொள்ள அனுமதிக்கக் கூடாது,"என்ற தாவூத் சிகரெட் பாக்கெட்டின் உள்ளே உள்ள லேசான தாளில் எழுதிவைத்திருந்த நம்பரைக் காட்டினான்.

தாஸ் அதைக் கவனித்தார்.

"0999" மெதுவான குரலில் உச்சரித்தார்.

"மிகவும் ஆச்சரியமான நம்பர். இந்த நம்பருக்கு டயல் செய்தால் உடனே லைன் கிடைக்குமா?"

"இது வொயர்லஸ் சிஸ்டத்தில் இயங்கும் டெலிபோன். யாராவது இந்த நம்பருக்கு டயல் செய்தால் குறிப்பிட்ட ஒலியலைகளை என் கைவசமுள்ள கம்ப்யூட்டர் பிரித்தெடுத்து, மறுபடி ஒலியாக்கி எனக்குத் தரும். சில நேரம் எதிர்பாராமல் தொலைபேசியும் மணியடிப்பது உண்டு. அந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்."

"நமது சர்க்கஸ் அயிட்டத்தில் குறிப்பிடத்தக்கது குதிரையை உயர்த்தும் சாண்டோவின் வேலை. இன்று அதை யார் செய்யப்

போகிறார்கள் என்பது தெரியவில்லை. அதுதான் எனக்கு இப்போதுள்ள ஒரே கவலை"தாஸ் வருத்தத்துடன் பேசினார்.

தாவூத் சட்டென்று யோசனையில் ஆழ்ந்தான். தன் கையிலிருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேவுக்குள் அழுத்தி அணைத்தபடி கேட்டான்: "குதிரையின் எடை எத்தனை கிலோ?"

"முந்நூற்றைம்பது கிலோ!"

"முந்நூற்றைம்பது கிலோதானே. இன்று அந்த வேலையை நானே செய்கிறேன்."தாவூத் தன் வலது கையை மடக்கித் திரண்டு உருண்டெழுந்த மஸில்ஸைப் பார்த்தபடி கூறினான்.

"நீங்கள் நினைப்பது மாதிரி அது அவ்வளவு சுலபமல்ல என்று தோன்றுகிறது!"

"அதை விடுங்கள். இத்தனை நாளும் அதற்குப் பயன்பட்ட ஒரே குதிரைதானே. பழக்கமில்லாததால் குதிரை கால்களை நீட்டி என்னை உதைக்குமா என்ன?"

"எடைதான் அதிகமே தவிர குதிரை மிகவும் சாதுவானது. அதனுடைய வயிற்றில் உங்கள் தலையை வைத்துக்கொண்டு நீங்கள் நிமிர்ந்து நின்றாலே போதும்!"

"அப்படியானால் நீங்கள் கவலைப்படவேண்டாம்."

"இன்றும் அந்த ஸ்பெஷல் அயிட்டம் இருப்பதாக விளம்பரம் செய்து விடலாமில்லையா?"

"தாராளமாகச் செய்யுங்கள்."

மேனேஜர் தாஸ் ஒருவித நிம்மதியுடன் அங்கிருந்து கிளம்பினார்.

'சாண்டோ பீம்சிங் முந்நூற்றைம்பது கிலோ எடையுள்ள குதிரையை அனாயாசமாகத் தூக்கி நிறுத்துவதைக் காணத் தவறாதீர்கள்!' என்கிற விளம்பரத்தில் எந்த மாற்றமும் இன்றித் தொடர்ந்தது.

சர்க்கஸில் குறிப்பிட்ட அந்த அயிட்டம் வந்தபோது பார்வையாளர்கள் பக்கம் நிசப்தம் நிலவியது. எல்லோரது கண்களும் கூடாரத்தின் தெற்குப்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

இசையின் வேகம் படிப்படியாகக் குறைந்து வந்தது.

அயிட்டம் ஆரம்பமாவதற்கான மணியோசை முழங்கியது.

குதிரை நடந்துவரும் சத்தம் கேட்டது.

ரிங்க்கின் வடக்குப் புறத்திலுள்ள வாசல் வழியாக கொழுகொழுவென்று வளர்ந்த குதிரை ஒன்று நிதானமாக நடந்து வந்தது. அதன்மீது இளவரசனைப் போல் வேடமணிந்த இளைஞன் ஒருவன் மிடுக்குடன் அமர்ந்திருந்தான்.

'இவன்தான் பீம்சிங்கா?' இந்தக் கேள்வி அங்கிருந்த ஒவ்வொருவருக்குள்ளும் எழவே செய்தது.

அவர்களின் கற்பனையில் பீம்சிங் என்பவர் பிரம்மாண்டமான ஒரு பயில்வானாக இருந்தார். ஆனால், குதிரை மீது வந்து கொண்டிருந்தது அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஓர் இளைஞன்.

பளபளப்பான சரிகையாடைகளுடன் ரத்தினங்கள் பதித்த கிரீடத்தையும் அணிந்திருந்தான்.

வரலாற்றுப் பின்னணியிலான சினிமாவில் இடம் பெறும் இளவரசனைப் போலவே தோற்றமளித்தான். செல்வச்செழிப்பான மொகலாய வம்ச முறையில் வணக்கம் செய்தான்.

"இவர் பீம்சிங் இல்லை போலிருக்கிறதே!" முந்தின நாள் சர்க்கஸ் பார்த்த ஒருவர் சந்தேகக் குரல் எழுப்பினார்.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. பீம்சிங் தடித்து உயரமான உடம்புள்ள மனிதர்." முந்தைய வார்த்தை சொன்னவருக்குப் பின்னாலிருந்து குரல் எழுந்தது.

"இந்தப் பையன், இந்தக் குதிரையை எங்கே தூக்கப் போறான்?" பெண்கள் பகுதியிலிருந்து இரண்டு மூன்று குரல்கள் எழுந்தன. பார்வைக்கு கல்லூரி மாணவிகள் போல் தோற்றமளித்தனர். அந்தக் குரலில் பொறாமையும் கலந்திருந்தது.

பெண்களைச் சுண்டியிழுக்கும் ஒருவிதக் கவர்ச்சி அந்த இளைஞனிடம் இருந்ததுதான் காரணம்.

குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தபடி ஒரு தடவை வட்டவடிவ மேடையைச் சுற்றிவந்தான்.

அவன் செயல்கள் மிகவும் கம்பீரமாகவே இருந்தன. தன் தலையிலிருந்த கிரீடத்தை எடுத்து மேற்புறமாக வீசியெறிந்தான். மேற்புறம் பார் கம்பியில் தொங்கிக் கொண்டிருந்த வயதான வேடம் போட்டிருந்த கோமாளி ஒருவன் அதைப் பாய்ந்து பிடித்தான்.

தொடர்ந்து தான் போட்டிருந்த அங்கியை அதே போல் மேற்புறம் எறிந்தான். பிறகு பைஜாமா... கடைசியாக அவன் உடம்பில் சிவப்பு நிறமான ஜட்டி மட்டுமே மிஞ்சியது.

பளபளத்த உடம்பில் அங்கங்கே மாமிசங்கள் உருண்டு திரண்டு துடிப்பதை பார்வையாளர்கள் கவனிக்கவே செய்தனர். பெண்கள் அந்த உருவத்தை மெய்ம்மறந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

சட்டென்று மேடைக்கு வந்த மற்றொரு மனிதன், குதிரையின் அருகே ஸ்டூல் ஒன்றைக் கொண்டுவந்து போட்டான்.

இளைஞன் அந்த ஸ்டூலைக் கையில் எடுத்துப் பரிசோதனை செய்தபிறகு, குதிரையின் நான்கு கால்களுக்கு நடுவே-நேராக வயிற்றுப் பகுதியில் கொண்டுபோய்ப் போட்டான்.

பின்னணி இசை துரிதகதியை அடைந்து கொண்டிருந்தது.

மறுவிநாடி சட்டென்று இசை நின்றுபோனது.

மேடையின்மீது நின்றிருந்த இளைஞன் குதிரையின் வயிற்றில் தலையைக் கொடுத்து மெதுவாக உயர்த்தத் தொடங்கினான். குதிரை மேற்புறமாக உயர்ந்தது.

கடிகார முள் நகரும்போது ஏற்படும் ஒலிபோல் இசை விட்டு விட்டு ஒலித்தது.

இளைஞன் குதிரையின் விலாப்புறங்களைப் பிடித்திருந்த கையை எடுத்து இரண்டு புறமும் நீட்டினான். குதிரை மேடையிலிருந்து மூன்றடி உயரம் வரை உயர்ந்திருந்தது. ஒரு தடவை அப்படியே பார்வையாளர்கள் எல்லாருக்கும் தெரியும்படியாக சுழன்று வந்தான் இளைஞன். பார்வையாளர்கள் மத்தியில் ஆரவாரம் உயரத்தொடங்கியது. அத்துடன் காட்சி முடிவடையாமல் மேலும் தொடர்ந்தது.

தலையில் குதிரையைத் தாங்கியபடியே அந்த இளைஞன் ஸ்டூல் மீது ஏறி நின்றான்!

இசை சுத்தமாக நின்று போனது.

பார்வையாளர்கள் மத்தியில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அமைதி நிலவியது. மூச்சைப் பிடித்துக் கொண்டு எல்லோரும் குதிரையையும் இளைஞனையும் வியப்புடன் வேடிக்கை பார்த்தனர்.

நிதானமாக ஸ்டூலிலிருந்து இறங்கி, குதிரையை மேடைப்பரப்புக்குக் கொண்டு வந்து, அதேநேரம் அதன் மீது ஏறி அமர்ந்த இளைஞன் கையை ஆட்டியபடி ரிங்குக்குள் போய் மறைந்தான்.

மேற்கொண்டு சர்க்கஸில் பார்க்க என்ன இருக்கிறது என்று நினைத்தனர் பார்வையாளர்கள்.

காட்சி நல்லபடியாக முடிந்தாலும். குதிரையைத் தூக்கிய வீரன் பீம்சிங் இல்லையென்றே பலரும் நினைத்தனர்.

அது வேறு யாரோ ஓர் இளைஞன்.

டி.எஸ்.பி. அலெக்ஸ் தன் குடும்பத்தாருடன் சர்க்கஸ் பார்க்க அன்று வந்திருந்தார்.

“நீங்கள் சர்க்கஸ் முடிந்த பிறகு நேராக காருக்கு வந்து சேருங்கள்”என்று மனைவியிடம் சொல்லிவிட்டு வெளியே வந்தார். அன்று குதிரையை உயர்த்திய இளைஞன் அவர் மனத்தில் நிறைந்திருந்தான்.

டாக்ஸி ஒன்றை அமர்த்திக்கொண்டு போலீஸ்கிளப்புக்கு வந்து சேர்ந்தார். ‘க்ரைம் பிராஞ்ச்’ சூபரின்டெண்டெண்ட் ஹமீதும், டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் சுதீரும் இருந்தனர்.

சர்க்கஸ் கூடாரத்தில் தான் கண்ட, தன்னைக் கவர்ந்த காட்சியை, அலெக்ஸ் மற்ற இருவரிடமும் விவரித்தார்.

“அழகான இளைஞனும்கூட!”

“அதற்குப் பிறகு உங்களால் அங்கு உட்கார முடியவில்லை, அப்படித்தானே?” க்ரைம் பிராஞ்ச் சூபரின்டெண்டெண்ட் ஹமீது கேட்டார்.

“உண்மை அதுதான் மிஸ்டர் ஹமீது?”

ஹமீது கெட்டிக்காரரான போலீஸ் ஆபீஸர். முடிவடையாமல் தேங்கிக்கிடந்த சிக்கலான எத்தனையோ வழக்குகளைத் துப்பறிந்து கண்டுபிடித்திருக்கிறார். இப்போது தாவூத் இஸ்மாயிலைக் கண்டுபிடிப்பதற்காக மத்திய அரசு அவரை டெப்யூட் செய்திருக்கிறது.

“உண்மையிலேயே அது ஆச்சரியத்துக்குரிய ஒரு காட்சிதான். எவ்வளவு அனாயாசமா அவன் குதிரையைத் தூக்கினான் தெரியுமா? அந்த நேரத்தில் அவன் கைகளிலுள்ள மஸில்ஸ்கள் எப்படி உருண்டு திரண்டு நின்றன தெரியுமா? எப்படிப்பட்டவர் பார்த்தாலும் ஒரு கணம் அசந்து நின்றுபோய் விடுவார்கள்.’’ அலெக்ஸ் தன் மனத்திலிருப்பதை அடக்கமாட்டாமல் கூறினார்.

டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் மௌனமாக அமர்ந்திருந்தார். அவரின் நெற்றியும் கண்களும் மெதுவாக அசைந்து கொண்டிருந்தன.

"நாம் உடனடியாக சர்க்கஸ் கூடாரத்துக்குப் போக வேண்டியதுதான்!" சுதீர் எழுந்தபடி பேசினார்.

"என்ன சர்க்கஸ் பார்க்கவா போகிறீர்கள்?" ஹமீது கேட்டார்.

"இல்லை, என்னுடைய சந்தேகம், அந்த இளைஞன்தான் தாவூத் இஸ்மாயிலாக இருக்க வேண்டும்." சுதீர் தன்னுடைய ரிவால்வரை எடுத்து, இடுப்பிலிருந்த உறையில் செருகிக் கொண்டார்.

# 4

டிடெக்டிவ் இன்ஸ்பெக்டர் சுதீர், டி.எஸ்.பி. அலெக்ஸ் ஜோன்ஸ், க்ரைம் பிராஞ்ச் டி.எஸ்.பி. ஹமீது ஆகிய மூவரும் வேன் ஒன்றில் ஏறி சர்க்கஸ் கூடாரத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

போலீஸ் துறை வேனாக இருந்தால் எதிராளிக்கு ஏதாவது சந்தேகம் ஏற்படலாம் என்பதால் போலீஸ் அடையாளமில்லாத வேனில் புறப்பட்டார்கள்.

தாங்கள் சந்திக்கும் மனிதன் ஒருவேளை தாவூத் இஸ்மாயிலாக இருந்தால்... ஏதாவது தந்திரம் செய்து அவனை வேனில் போட்டுக்கொண்டு வருவதென்றும் தீர்மானித்தனர்.

உயர்தர போலீஸ் அதிகாரிகள், தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் மப்டி உடையில் சாதாரணமாக அந்த வேனில் பயணம் செய்வது வழக்கம். ரகசியமாகச் சென்று, மறைந்திருந்து பிடிக்க வேண்டிய குற்றவாளிகளைக் கொண்டு வருவதற்கும், அவன் எப்படிப்பட்ட பயங்கரமனிதனாக இருந்தாலும் உள்ளே கட்டிப்போட்டு வைக்கத் தேவையான கருவிகளும் இருந்தன.

சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு அதற்குள் எதுவும் புலப்படாது. வழக்கத்தை ஒட்டியே இப்போதும் மப்டியில் சென்றனர்.

வேனைச் செலுத்திவந்த மிஸ்டர் சுதீர் சர்க்கஸ் கூடாரத்துக்கு முன் நிறுத்தினார்.

அந்தக் காட்சி அப்போதும் முடிந்திருக்கவில்லை.

"நாம் எப்படி அவனை நெருங்குவது? சரியான திட்டம் இல்லாமல் போவது நல்லது அல்ல." ஹமீது கூறினார்.

"அது மிகவும் அவசியம்!" அலெக்ஸும் அதை ஒப்புக்கொண்டார்.

"நாம் எதற்காக அவனைப் பார்க்க விரும்புகிறோம் என்பதை யாராவது கேட்டால், அவன் நம்புவது மாதிரி ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்." சுதீர் கூறினார்.

"என்ன செய்யலாம்?"

"அதையும் நீங்களே சொல்லுங்கள்."

இருவரும் சுதீரையே பார்த்தனர்.

"நான் ஒரு பத்திரிகை நிருபர் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தியாவிலேயே மிக அதிக பளு தூக்கும் ஒரு மனிதன் என்ற முறையில் அவனைப் பேட்டி எடுப்பதற்காக வந்திருப்பதாகச் சொல்ல வேண்டியதுதான்."

"நல்ல யோசனைதான்!"

"ஆனால், ஒப்புக் கொள்வானா என்று தெரியவில்லை."

"பேட்டிக்காக இப்போது வரவில்லையென்றும் முதலில் சாதாரணமாகப் பேசிவிட்டு, பேட்டிக்குத் தேதி வாங்கவே வந்திருப்பதாகவும் சொல்வோம்."

"சரி வாருங்கள்... முயற்சி செய்யலாம்!"

மூவரும் வேனிலிருந்து இறங்கி சர்க்கஸ் கூடாரத்தை நோக்கி நடந்தனர்.

கேட்டிலிருந்த செக்யூரிட்டி கார்டிடம், 'சர்க்கஸ் கம்பெனி மேனேஜர் எங்கே?' என்று கேட்டனர். பத்திரிகைக்காரர்கள் என்று சொன்னதால் நேராக அவனே, அவர்களை மேனேஜரின் அறைக்கு அழைத்துக்கொண்டு போனான்.

மேனேஜர் தாஸ் சிகரெட் ஒன்றைப் புகைத்தபடி தனது அறைக்குள் அமர்ந்திருந்தார்.

"உட்காருங்கள்!" தாஸ், எதிர்ப்புறத்தில் போட்டிருந்த நாற்காலிகளைச் சுட்டிக்காட்டினார்.

நல்ல உயரமும், அதற்கேற்ற உடற்கட்டும் கொண்டிருந்த மூற்று பேரையும் பார்த்ததும் மேனேஜருக்குச் சன்னமான சந்தேகம் ஏற்படவே செய்தது. அவர்களின் பார்வை, நடவடிக்கை போன்றவை பத்திரிகை நிருபர்களைப்போல் இல்லை! யாராக இருப்பார்கள்? ஒருவேளை போலீஸ் அதிகாரிகளாக இருப்பார்களா? அப்படித்தான் இருக்கவேண்டும் என்று தோன்றியதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதையும் முடிவு செய்து கொண்டார். மனத்துள் எழுந்த போராட்டங்களை ஒதுக்கி வைத்துவிட்ட தாஸ் கேட்டார்.

"என்ன சார் ஏதாவது விசேஷமா? டிக்கட்டுகளைப் பரிசோதனை செய்ய வந்திருக்கிறீர்களா, இல்லேன்னா, பாஸ் ஏதாவது தேவையா? பத்திரிகையாளர்னு வேற சொன்னார் நம்ம செக்யூரிட்டி!"

"நாங்கள் அதுக்கெல்லாம் வரலை. ஒரு கட்டுரை எழுத வேண்டியிருக்கு. அது தொடர்பா உங்ககிட்டப் பேசணும்னு வந்திருக்கிறோம். பேசலாமில்லையா?"

"தாராளமா! உங்களுக்கு எந்த மாதிரித் தகவல் தேவை?"

"உங்களோட சர்க்கஸ் அயிட்டத்திலேயே ரொம்பவும் பெஸ்ட்டுன்னு சொல்றது சாண்டோ குதிரையைத் தூக்குறதுதான்

இல்லையா... அவரைப் பத்தித்தான் எழுதப் போறோம். கலர்ல போட்டோ போட்டு அவரோட சாதனையைப்பத்தி நாலு வார்த்தை எழுதலாம்னு நெனைக்கிறோம். இப்போ உங்களோட சர்க்கஸ் நடந்துட்டிருக்கிறதால அது உங்களுக்கு ஒரு விளம்பரமாகவும் இருக்கும்."சுதீர் பேச்சைத் திசை திருப்பினார்.

இதைக் கேட்டவுடன் தாஸின் சந்தேகம் வலுவடைந்தது. 'நிச்சயமாக இவர்கள் பத்திரிகையாளர்கள் அல்ல. கெட்டிக்காரத்தனமாக நடந்து கொள்வதாக நினைத்து வந்திருக்கிறார்கள். எனவே முடிந்தவரையில் இவர்களுக்குச் சந்தேகம் ஏற்படாதபடி பக்குவமாகப் பேசி அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் நிலைமை எக்கச்சக்கமாகிவிடும்.'

"அதற்கென்ன தாராளமாகக் கூப்பிட்டுப் பேசலாம்" என்று கூடாரத்துக்கு வெளியே வந்த தாஸ் உடனேயே திரும்பி வந்தார் தயங்கியபடி. "சார் கொஞ்சநேரத்துக்கு முன்னால் நீங்க வந்திருந்தால் நேரிலேயே அதை நீங்க பார்த்திருக்கலாம். அடடா இப்பத்தான் ஞாபகம் வருது சாண்டோ இப்ப அவரோட கூடாரத்துல இருப்பாரோ என்னவோ? அந்த மனுஷன் ஒரு முரட்டுத்தனமான நபர். 'என்வேலை முடிஞ்சிடுச்சு இல்லையா, இனி என்னைத் தேடாதே. அடுத்த காட்சிக்கு சரியான நேரத்துல நான் இல்லேன்னா கேளு'ன்னு ரொம்ப முறைப்பாப் பேசுவார்."

"நீங்க சொல்றதைப் பார்த்தா, சாண்டோ அறையில இருக்கமாட்டாருன்னுதான் தோணுது. எதுக்கும் நீங்க போய் ஒரு தடவை பார்த்துட்டு வந்துடுங்க. இருந்தா, நாங்க வந்திருக்கிற தகவலைச் சொல்லுங்க. நாங்க இங்கேயே காத்திருக்கிறோம்!" ஹமீது சொன்னார்.

தாஸ், சர்க்கஸ் நடைபெறும் பெரிய கூடாரத்தை ஒட்டிச் சற்றுத் தொலைவில் கிழக்குப்புறமாக இருந்த கூடாரத்தை நோக்கி நடந்தார்.

தாவூத் கட்டிலில் நீண்டு நிமிர்ந்து படுத்திருந்தான். அவன் உடம்பில் ஜட்டி மட்டுமே இருந்தது. மாமிசப் பகுதிகள் புடைத்து

விம்மி நிற்கும் கிரேக்கச் சிலையைப் படுக்க வைத்திருப்பது போலத் தோன்றியது. உடம்பில் ஆங்காங்கே வியர்வை முத்துகள் அரும்பியிருந்தன. கழுத்தில் வடக்கயிறு போல் சற்றுக் கனமான தங்கச் சங்கிலி ஒன்று தொங்கியது. அதில் தாயத்து ஒன்றும் இருந்தது!

"என்ன தாஸ், ஏதாவது அவசரமான தகவலா?" தாவூத் கேட்டான்.

தாஸ் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார். "உங்களைப் பார்க்க மூணு பேர் வந்திருக்காங்க. பத்திரிகையாளர்கள்னு சொல்லிக்கிறாங்க. ஆனா, அவங்களைப் பார்த்தா, அப்படித் தெரியலை. எனக்கென்னமோ சந்தேகமா இருக்கு. குறிப்பா உங்களைச் சந்திச்சு, உங்களைப் பத்தி எழுதுறதுக்காக வந்திருக்காங்களாம்!"

"உங்களுக்கு என்ன சந்தேகம்?" தாவூத் கேட்டான்.

"வந்திருக்கிறவங்க போலீஸ் அதிகாரிகளா இருப்பாங்களோனு!"

"உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டா, அது உண்மைதான். அவங்க போலீஸ்காரங்களேதான்!"

"இப்ப திடீர்னு அவங்க உங்களைத் தேடிவரக் காரணம்?"

"நான் குதிரையை உயர்த்தியபோது, என்னைப் பற்றி ஓரளவு தெரிந்த யாராவது ஒரு போலீஸ் அதிகாரி பொதுமக்களோடு ஒரு பார்வையாளனா உட்கார்ந்து என்னைப் பார்த்திருக்கலாம். ஒருதடவை டெல்லியில் சர்க்கஸ் நடந்தபோதும் நான் இப்படிச் செய்ய நேர்ந்தது. குதிரைப் பந்தய மைதானத்தில் நடந்தது அது. இரண்டு லட்ச ரூபாய் கொடுத்து ஒரு குதிரையை வாங்கியிருந்தேன். அதன்மேல் அன்று ஜாக்கியாக உட்கார்ந்து அதை ஓட்டியவனும் நான்தான். அன்னிக்கு குதிரைப் பந்தயத்தைப் பார்க்க என்னை விரும்பும் பெண் ஒருத்தியும் வந்திருந்தாள்..."

தாஸைப் பொறுத்தவரை இவையெல்லாம் புதிய செய்தியாக இருந்தன. தாவூத் இஸ்மாயில்தான் தன் முதலாளி என்பதை அவர் அறிந்துகொண்டதே வெகுதாமதமாகத்தான். தாஸ், அந்த சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து இரண்டு வருடங்கள்தான் ஆகியிருந்தன.

"பிறகு...."தாஸ் கேட்டார்.

"முன் வரிசையில் உட்கார்ந்திருந்தாள். என் குதிரை இரண்டாவதாக வந்தது. அவள் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருந்தது. அந்த மைதானத்திலேயே அந்தக் குதிரையை இதே மாதிரித் தூக்கி வீசியெறிந்தேன். பிறகு குதிரை எழுந்திருக்கவில்லை."

தாஸின் முகம் வியப்பில் மலர்ந்தது.

தாவூத் இஸ்மாயில் ஒரு கள்ளக்கடத்தல்காரன் மட்டுமல்ல; அவனிடம் வேறு பல திறமைகளும் ஒளிந்திருக்ன்றன.

"அது அன்றைய மாலைப் பத்திரிகை, மறுநாள் காலைப் பத்திரிகைகளில் எல்லாம் வெளியானதால் செய்தி காட்டுத்தீ போல் பரவியது. ஆனால், அது எதிர்பாராத ஒரு செயலாக இருந்ததால் யாரும் போட்டோ எடுக்கவில்லை. 'அப்படித் தூக்கி எறிந்தவர்தான் தாவூத் இஸ்மாயில்!' இப்படி ஒரு சில பத்திரிகைகள் குறிப்பிடத் தவறவில்லை. என்னைப் பற்றி எவ்வளவெல்லாம் எழுதியிருக்கிறார்கள் தெரியுமா... கற்பனை, கட்டுக்கதை, பயங்கரமான கதைகள். படிப்பவர்கள் வாயைப் பிளக்கும் அதிசயமான கட்டுக்கதைகள்!"

"அப்படியானால் பத்திரிகையாளர்கள் என்கிற பெயரில் வந்திருக்கும் போலீஸாருக்கு நான் என்ன பதில் சொல்லி அனுப்ப?"

"ரொம்ப சுலபம்! என்னுடைய வித்தை முடிந்ததும் நான் வெளியே போய் விட்டதாகச் சொல்லுங்கள்!"

"சொல்லலாம். ஆனால், அடுத்த காட்சிக்கு நீங்கள் வருவதை எதிர்பார்த்த நமது கூடாரத்தைச் சுற்றி போலீஸ் காவல் நின்றுவிட்டால்..."

"வேறு என்ன செய்யலாம்?"

"நமது மோட்டார் பைக் ஆசாமியை அவர்களிடம் அனுப்பி வைத்தால் என்ன? அவரும் ஏறத்தாழ உங்களைப் போலத்தானே இருக்கிறார். உங்களைத் தொலைவிலிருந்து பார்த்தவர்களால் சட்டென்று அவரை அடையாளம் தெரிந்து கொள்ளவும் முடியாது!"

"அதுவும் நல்ல யோசனைதான். புருஷோத்தமனை உடனே கூப்பிடுங்கள்!" தாவூத் கூறினான்.

மரணக்கிணறு வித்தையை முடித்துக்கொண்டு அப்போதுதான் புருஷோத்தமன் தனது கூடாரத்துக்குத் திரும்பியிருந்தான். உதவியாளன் ஒருவன் வந்து புருஷோத்தமனை மேனேஜர் அழைப்பதாகக் கூறிவிட்டுச் சென்றான்.

புருஷோத்தமனுக்கும் ஏறத்தாழ இஸ்மாயிலைப் போன்ற உடல்வாகு இருந்தது. இரும்பால் செய்யப்பட்ட கோளம் ஒன்றுக்குள் மோட்டார் பைக் ஓட்டுவது அவனது வேலை. அதில் தேர்ந்தவன். இன்றுவரை அவனுக்கு அதில் எந்தவிதமான விபத்தும் ஏற்பட்டதில்லை. ஒவ்வொரு காட்சியிலும் சுமார் அரைமணி நேரத்திலிருந்து முக்கால் மணி நேரம் ஓட்டுவதுடன் அவனது வேலை முடிவடைந்து விடும்.

தாவூத் இஸ்மாயிலைப் பற்றி புருஷோத்தமனுக்கு எதுவும் தெரியாது. தான் பணிபுரியும் சர்க்கஸ் கம்பெனியின் முதலாளி பயங்கரமான ஒரு பேர்வழி என்பது மட்டும் தெரியும். புருஷோத்தமன் சற்று நேரத்தில் இஸ்மாயிலின் கூடாரத்துக்கு வந்தான்.

"குதிரையை உயர்த்தும் வேலையைச் செய்வது நான்தான் என்று நீங்கள் சொல்லவேண்டும். அதாவது நீங்கள்தான் அதைச்

செய்வதாகச் சொல்லவேண்டும்! மூன்று பத்திரிகையாளர்கள் வந்திருக்கிறார்கள். அப்படித்தான் தங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்!" தாவூத், புருஷோத்தமனிடம் கூறினான்.

"என்னிடம், அங்கேயே அதைச் செய்து காட்டச் சொன்னால்?" புருஷோத்தமன் சந்தேகம் கிளப்பினான்.

தாவூத்தும், தாஸூம் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"அப்படியெல்லாம் கேட்க மாட்டார்கள். பயப்படாதீர்கள். அதை சர்க்களில் பார்த்திருப்பார்கள் அல்லது இனிமேல் வந்து பார்ப்பார்கள். ஆனால், உங்களைவிட ஐந்து மடங்கு எடையுள்ள குதிரையை எப்படி உங்களால் தூக்க முடிகிறது என்று கேட்பார்கள். அது வெகு காலமாகப் பயிற்சி எடுத்துக் கற்றுக் கொண்ட வித்தை என்று சொல்லுங்கள்."

"கன்னாபின்னாவென்று ஏதாவது கேள்வி கேட்டால்?"

"அப்படி எதுவும் நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்."

இதுவரையில் தாஸூம், புருஷோத்தமனும் மட்டும் பேசிக்கொண்டனர். கடைசியாக தாவூத் இஸ்மாயில் ஓர் எச்சரிக்கையை மட்டும் கூறினான்.

"கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது எங்கேயும் தவறு செய்து விடாதீர்கள்!"

புருஷோத்தமன் தலையாட்டினான்.

இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

மேனேஜர் அறைக்குள் இருவரும் நுழைந்தபோது மூவரும் பழைய நிலையிலேயே அமர்ந்திருந்தனர். மூவரும் புருஷோத்தமனை ஏற இறங்கப் பார்த்தனர். உண்மையிலேயே வந்திருப்பவர்கள் யார் என்று தெரியாததால் புருஷோத்தமன் எந்தவிதமமான பதற்றமும் இன்றி நின்றிருந்தான்.

“உட்காருங்கள் மிஸ்டர்...” -சுதிர், புருஷோத்தமனிடம் பேசினார்.

“புருஷோத்தமன் என்பது அவர் பெயர்.”தாஸ் இடையில் புகுந்து கூறினார்.

கூடார மூலையில் மடக்கி வைத்திருந்த நாற்காலி ஒன்றை எடுத்துப் போட்டுக்கொண்டு புருஷோத்தமன் அமர்ந்தான்.

“உங்க பேர்?”ஹமீது கேட்டார்.

“புருஷோத்தமன்!”

“உண்மையான பேரே அதுதானா?”அலெக்ஸ் கேட்டார்.

“புருஷோத்தமன்தான். எங்க மேனேஜர்தான் பப்ளிசிட்டிக்காக ‘பீம்சிங்’ என்று மாற்றினார்.”

“உங்க அப்பா பேரு!”

“நிஜமாவே எனக்குத் தெரியாது”

“அம்மா பேர்?”

“ரெண்டு பேரையுமே நான் பார்த்ததில்லை சார்!”

“உங்களுக்கு இந்தப் பேரை வெச்சது யார்?”

“அதுவும் குறிப்பிட்டுச் சொல்ல முடியலை சார்!”

“நீங்கள் எத்தனை வருஷமா இந்தக் குதிரையைத் தூக்குற வித்தையைச் செய்யிறீங்க?”

சட்டென்று அப்படி ஒரு கேள்விவரும் என்பது தெரியாததால் புருஷோத்தமன் தயங்கினார்.

“ரொம்ப நாளா செய்யிறேன்!”

“ஞாபகப்படுத்திப் பாருங்க, எத்தனை வருஷமா செய்யிறீங்கன்னு!”

புருஷோத்தமன் ஒரு கணம் தாஸைப் பார்த்தான்.

"என்ன... உங்களாலேயே அதைச் சொல்ல முடியாதா? அதையும் தாஸ்தான் சொல்லணுமா?" அலெக்ஸ் சற்று எரிச்சலுடன் கேட்டார்.

"ஆறு மாதங்களுக்கு மேலாகிறது!" தாஸ் பதிலளித்தார்.

"மிஸ்டர் புருஷோத்தமன், குதிரையை எப்படித் தூக்குறீங்கன்னு தெரிஞ்சுக்கிறதுக்காகத்தான் நாங்க வந்திருக்கிறோம். அதை நாங்க போட்டோவும் எடுக்கணும். நாங்க பத்திரிகைக்காரங்க. சாதாரணமான பத்திரிகைக்காரங்க இல்லை. எங்களைப் பார்த்தாலே தெரியலையா? மிஸ்டர் தாஸ், உங்களிடம்தான் சொல்கிறோம். கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். உண்மையாகவே குதிரையைத் தூக்கும் நபர் எங்களிடம் வரும்போது. உங்கள் புருஷோத்தமனை அனுப்பிவைக்கிறோம். நாங்க உண்மையா யார்ங்கிறதைச் சொல்கிறோம். முடிஞ்சா புரிஞ்சுக்கங்க. விசாரணை செய்யிறதுக்காக நாங்க இவரை எங்க கஸ்டடியில் எடுத்துக்கிறோம். எங்ககிட்ட விளையாடுறது அவ்வளவா நல்லது இல்லை. அது ஆபத்தான விளையாட்டு" அலெக்ஸ் ஜோன்ஸ் தன் இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்துக் காட்டிவிட்டு மறுபடியும் உறையில் செருகிக் கொண்டார்.

புருஷோத்தமனைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் மூவரும் அந்த கூடாரத்திலிருந்து வெளியேறியவுடன் மேனேஜர் தாஸ், தனது கூடாரத்தின் பின்புறப் படுதாவை நீக்கிக் கொண்டு தாவூத் இஸ்மாயிலின் கூடாரத்தை நோக்கி ஓடினார்.

# 5

தாவூத் இஸ்மாயில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். கவலை தோய்ந்த முகத்துடன் பரபரப்பாக ஓடிவந்த தாஸைப்

பார்த்ததும் என்னவோ ஏதோவென்று பதற்றமடைந்த தாவூத் தனது தலையணைக்கு அடியிலிருந்த ரிவால்வரை எடுத்தான்.

“சார் நிலைமை மிகவும் சிக்கலாகிவிட்டது!” மூச்சு விடாமல் பேசினார் தாஸ்.

“நிதானமாகச் சொல்லுங்க. என்ன நடந்தது?” தாவூத் கேட்டான்.

“புருஷோத்தமனை போலீஸார் தங்களது கஸ்டடியில் கொண்டு போயிருக்கிறார்கள். அவன் எதையாவது தப்பும் தவறுமாகப் பேசினால், போலீஸார் இங்குள்ள எல்லாரைவும் வாரிக் கொண்டு போய் விளாசித்தள்ளப் போகிறார்கள்! ஆம்பிளை-பொம்பளைங்கிற வித்தியாசமெல்லாம் பார்க்க மாட்டாங்க போலிருக்கு.”

“தாஸ், பதறாதீர்கள்... பயப்படாதீர்கள். அதற்கு ஒரு வழி செய்யலாம்”-என்றபடி எழுந்தவன் பாண்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டு, சட்டைக்குள் உடம்பை நுழைத்துக் கொண்டான். கைத்துப்பாக்கியை எடுத்து பேண்ட் பேக்கட்டுக்குள் போட்டுக்கொண்டு கூடாரத்திலிருந்து வெளியேறினான்.

“நமது மோட்டார் பைக் எங்கே? வேண்டாம்... நம்முடைய வேன் எங்கே இருக்கிறது?”

“இந்தாருங்கள் வேன் சாவி. அதோ அந்த கூண்டுக்குப் பின்னால் நிற்கிறது!” - தாஸ் கையால் சுட்டிக்காட்டியப் பேசினார்.

போலீஸ் அதிகாரிகளை ஏர்போர்ட்டிலிருந்து கடத்தி வந்தபிறகு, தாவூத் வேனின் வண்ணத்தை மாற்றியிருந்தான். இப்போது வெளிப்பார்வைக்கு அரசாங்க அனுமதி பெற்ற ஒரு டாக்ஸியாகத் தோற்றமளித்தது வேன். ஆனால், வேனின் உள்ளே எந்தவிதமான மாற்றமும் செய்திருப்பதாகத் தெரியவில்லை.

வேனுக்கு முன்னால் வந்து நின்று ஒரு தடவை சுற்று முற்றும் பார்த்துவிட்டுத் திருப்தியடைந்தவனாக மீண்டும் தன்

கூடாரத்துக்குள் நுழைந்து சூட்கேஸைத் திறந்து 'டிராபிக் போலீஸ்' என்று அச்சடித்திருந்த நான்கு ஸ்டிக்கர்களை எடுத்து வந்தான்.

வேனின் நான்கு புறமும் அதை ஒட்டினான்.

இப்போது தூயவெள்ளை நிறத்திலிருந்த வேனின் மீது ஸ்டிக்கர் ஒட்டியதால், உண்மையிலேயே அது ஒரு போலீஸ் வேன் மாதிரியே காட்சியளித்தது.

"வித்தியாசமாக எதுவும் தெரிகிறதா?" தாவூத் கேட்டான்.

"யாருக்கும் சந்தேகம் ஏற்படாது சார்!" தாஸ் பதிலளித்தார்.

தாவூத் இஸ்மாயில் வேனை ஸ்டார்ட் செய்து வேகமாக சர்க்கஸ் கூடார காம்பௌண்டிலிருந்து வெளியேறினான்.

டி.எஸ்.பி. அலெக்ஸ் ஜோன்ஸின் குவார்ட்டர்ஸ் தாவூத்துக்குத் தெரியும்.

வேன் நேராக அந்த இடத்துக்கு விரைந்தது. அரசாங்க அதிகாரிகள் வசித்திருந்த அந்தப் பகுதியில் வேன் நுழைந்ததால் யாரும் சந்தேகப்படவில்லை. கவனித்ததாகவும் தெரியவில்லை.

தாவூத் இஸ்மாயில் தன்னுடைய வேனை டி.எஸ்.பி - யின் குவார்ட்டர்ஸுக்கு முன்னால் நிறுத்தினான்.

வேனிலிருந்து இறங்கி வெளிப்புற கேட்டின் தாழ்ப்பாளை விலக்கியதும் வீட்டுக்குள் மணியடிப்பது கேட்டது. கேட்டின் தாழ்ப்பாளில் 'ஸ்டாப் சுவிட்ச்' இணைத்திருப்பது தெரிந்தது.

வீட்டுக்குள் விளக்குகள் எரிந்தன. வாசல் கதவும் உடனே திறக்கப்பட்டது.

இளம்பெண் ஒருத்தி வெளியே வந்தாள். அவள் கையில் புத்தகம் ஒன்று இருந்தது. டி.எஸ்.பி - யின் நெருங்கிய உறவு கொண்டவளாக இருக்கவேண்டும்.

டி.எஸ்.பி - யின் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் தற்போது சர்க்கஸ் கூடாரத்துக்குள் அமர்ந்து கொண்டிருப்பதும்

தாவூத்துக்குத் தெரியும். சர்க்கஸ் காட்சியை முடித்துவிட்டு டி.எஸ்.பி - யின் குடும்பத்தினர் வரும்போதுதான் தனது திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நினைத்திருந்தான். ஆனால், அதற்கு முன்பாகவே தனக்கு வேறொரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

"என்னங்க வேணும்? மாமா வீட்டில் இல்லையே!" இளம்பெண் பேசினாள்.

தாவூதைப் பார்த்ததும் போலீஸ்துறையைச் சேர்ந்தவன் என்று அவள் நினைத்திருக்க வேண்டும். கேட்டுக்கு வெளியே நின்றிருந்த வேன் பளிச்சென்று ஸ்டிக்கருடன் தெரிந்தது.

"அலெக்ஸ் எங்கே போயிருக்கார்? நான் அவரோட ஃபிரண்ட். பாலக்காட்டுல எஸ்.பி.யா இருக்கிறேன்."தாவூத் பேசினான்.

"அப்படீன்னா உள்ளே வாங்க. வந்து உட்காருங்க... மாமா வந்துடுற நேரம்தான்."அவள் வரவேற்றாள்.

அழகான இளைஞன் ஒருவனைப் பார்த்ததும் என்னவோ அவனிடம் ஒருவித ஈர்ப்புத் தோன்றியது. எஸ்.பி - யாக வேலை பார்ப்பதால் ஐ.பி.எஸ். தேறியவனாகத்தான் இருக்கவேண்டும்.

"உட்கார்றதுக்கு நேரமில்லை. அலெக்ஸோட மனைவியும் குழந்தைகளும் சர்க்கஸுக்கு வந்திருந்தாங்க. பையன் மேல சிறுத்தை பாய்ஞ்சதில அதோட நகம் பட்டுக் காயமாயிடுச்சு. இப்ப ஆஸ்பத்திரியில இருக்கிறான் பையன்." தாவூத் செயற்கையான பதற்றத்தை வரவழைத்துக்கொண்டு பேசினான்.

"உண்மையாகவா? யாருக்குன்னு சொன்னீங்க, பையனுக்கா? இருங்க நான் வர்றேன் கல்யாணி..." இளம்பெண் பரபரப்படைந்தவளாக உட்புறம் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

ஒரு பெண்மணி வாசலுக்கு அருகே தென்பட்டாள். அநேகமாக வேலைக்காரியாக இருக்கவேண்டும்.

"நான் இதோ வந்துடுறேன். சர்க்கஸ் பார்க்கப் போன இடத்துல ஏதோ ஆபத்தாம்." அவள் படியிறங்கியபடியே பேசினாள்.

"இப்படியேவா வரப்போறீங்க?" தாவூத் கேட்டான்.

"இதெல்லாம் போதும்!" அவள் வேனை நோக்கி விரைந்தாள்.

தாவூத் இஸ்மாயில் வேனின் முன்புறக் கதவைத் திறந்துவிட்டான்.

அவள் முன்புற இடது இருக்கையில் அமர்ந்தாள்.

கதவை மூடிவிட்டு, டிரைவிங் ஸீட்டில் அமர்ந்து வேனை ஸ்டார்ட் செய்தான். வேன் நகரத் தொடங்கியதும் ஒரு சுவிட்சை அழுத்தினான். முன்புறக் கதவு இரண்டும் பூட்டிக்கொண்டன.

"பேர் என்னம்மா?" தாவூத் கேட்டான்.

"சூஸன் தாமஸ். இன்ஜினீயரிங் படிக்கிறேன். அடுத்த வாரம் எக்ஸாம். அதனாலதான் நான் சர்க்கஸுக்கு வரலை." தெருப்பக்கத்தை வேடிக்கை பார்த்தபடியே பதிலளித்தாள்.

"அலெக்ஸின் அக்கா மகளா?"

"ஆமாங்க!"

"திருவில்லாவில இருக்கிறவங்கதானே?" தாவூத் வெறுமனே கேட்டு வைத்தான்.

"இல்லை... ரான்னியில இருக்கிறோம்."

"அலெக்ஸ் எப்பவோ சொல்லியிருந்தார். நான்தான் மறந்து போயிட்டேன்."

"எங்களைப் பத்தியெல்லாம் கூடவா உங்ககிட்டப் பேசியிருக்கார்?"

"நாங்க நிறையவே பேசியிருக்கிறோம். ரொம்பவும் நெருக்கமான நண்பர்கள்."

"எந்த ஆஸ்பத்திரியில இருக்காங்க?" சூஸன் பொறுமை இழந்தவளாகக் கேட்டாள்.

"பதற்றப்படுகிற அளவுக்கு ஒண்ணுமில்லை. சிறுத்தையோட நகம்பட்டதில தோல் கொஞ்சம் உரிஞ்சு போயிருக்கு... அவ்வளவுதான்."

"இருந்தாலும் சின்னக் குழந்தையாச்சே!"

"நாம அங்கேதானே போறோம். வீணா கவலைப்படாதீங்க."- அவளுக்கு ஆறுதல் சொன்ன தாவூத் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான்.

டாஷ் போர்டின் சிறிய கதவைத் திறந்த தாவூத் சாக்லெட் ஒன்றை எடுத்து சூஸனிடம் கொடுத்தான்.

"இந்தாங்க... சாப்பிடுங்க!"

சூஸன் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் அதை வாங்கி, உறையைப் பிரித்து வாயில் போட்டுக்கொண்டாள்.

"இந்த சாக்லெட் உங்களுக்குப் பிடிக்குமா?"

"பிடிக்குமே!"

சாக்லெட்டை மென்றுகொண்டே பதில் அளித்தாள். சற்று நேரத்தில் கண்கள் செருகி, மயக்கம் வருவதுபோல் தோன்றியது சூஸனுக்கு. இரண்டு தடவை கொட்டாவி விட்ட பிறகு பின்புறமாகச் சரிந்து உட்கார்ந்தாள்.

"என்னங்க தூக்கம் வருதா?"

"தலைசுத்தற மாதிரி இருக்கு!"

"ரொம்ப நேரமா தொடர்ந்து படிச்சிட்டிருந்தீங்க இல்லையா, அதனால இருக்கலாம்."

தலை துவண்டு சரிந்தாள்.

தாவூத் வேனை நிறுத்தினான்.

ஸ்டிக்கர்களைக் கழற்றியெடுத்தான்.

வேன் நேராக சர்க்கஸ் கூடாரத்தை நோக்கிப் புறப்பட்டது.

வேனை நிறுத்திவிட்டு தாஸின் அருகே வந்தான் தாவூத்.

அன்றைய வரவு - செலவுக் கணக்கைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார் தாஸ். தாவூத் வருவதற்குள் சர்க்கஸ் காட்சி முடிந்துவிட்டிருந்தது.

"நான் போன விஷயம் சரியாகி விட்டது. எஸ்.பி - யின் மருமகளைக் கொண்டு வந்திருக்கிறேன்." தாவூத் சாதாரணமான விஷயமாகச் சொன்னான்.

"ஐயோ... நிலைமை மிகவும் சிக்கலாகிவிடும் போலிருக்கிறதே!"

"கவலைப்படாதீங்க. அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன் தாஸ். முன்னப்பின்ன யோசிக்காம எதையும் செய்றவன் இல்லை நான். அந்தப் புது வீட்டோட சாவியை எடுங்க. இந்தப் பொண்ணை அந்தக் கட்டடத்துக்குள்ளே கொண்டுபோய் போட்டுட்டு உடனே வந்துடறேன்!"

தாவூத் மோட்டார் பைக்கில் ஏறி ஸ்டார்ட் செய்து புறப்பட்டான்.

பப்ளிக் டெலிபோன் பூத்தின் அருகே பைக்கை நிறுத்தினான். உள்ளே நுழைந்து கதவை மூடி டயல் செய்தான். தொடர்பு கிடைத்ததும் நாணயத்தைப் போட்டான்.

போலீஸ் கிளப் அலுவலகம்.

"போலீஸ் கிளப் அலுவலகம்!"எதிர்க்குரல் பதிலளித்தது.

"எஸ்.பி.அலெக்ஸ் ஜோன்ஸ் இருக்கிறாரா... நான் அவரோட ஃபிரண்டு பேசுறேன்."

"நான்தான் அலெக்ஸ் பேசுறேன்!"

"ஃபிரண்டுன்னா தெரியுதுங்களா? தாவூத் இஸ்மாயில்! அவசரப்படாதீங்க. சூஸன் தாமஸ் இப்ப என்கிட்டதான் இருக்குறாங்க. அவளோட மானமும் உயிரும் பத்திரமா இருக்கணும்னா, புருஷோத்தமனை உடனேயே சர்க்கஸ் கூடாரத்துக்கு அனுப்பி வெக்கணும். அதுவும் சில நிமிடங்களுக்குள். இல்லேன்னா நான் எதுக்கும் உத்தரவாதம் தர முடியாது. ஓ.கே." தாவூத் ரிசீவரை வைத்தான்.

மோட்டார் பைக் அங்கிருந்து கிளம்பியது.

அலெக்ஸின் மூளை துரிதமாகச் செயல்பட்டது.

இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் மிகவும் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும். அவசரமாகச் செயல்படக்கூடாது. எனவே, புருஷோத்தமனிடம் வந்தார்.

"நீங்க குதிரையை உயர்த்துறவர் இல்லேன்னு எனக்குத் தெரியும். ஆனால் அந்த நபர் யாருன்னு உங்களுக்குத் தெரியுமா தெரியாதா?" அலெக்ஸ் கேட்டார்.

"உண்மையாவே எனக்குத் தெரியாது சார்!"

"சரி நீங்க போகலாம்."-என்றவர் போலீஸ் டிரைவரைப் பார்த்து. "இவரை சர்க்கஸ் கூடாரத்தில் கொண்டுபோய் விட்டு விட்டு வாருங்கள்!" என்றார்.

சற்று நேரத்தில் போலீஸ் ஜீப் ஒன்று புருஷோத்தமனைச் சுமந்துகொண்டு போலீஸ் கிளப்பிலிருந்து கிளம்பியது.

"என்ன அலெக்ஸ், என்ன நடந்தது? எதற்காக புருஷோத்தமனை வெளியே விட்டீர்கள்? யார் உங்களுக்கு போன் செய்தது?"

"தாவூத் இஸ்மாயில் போன் செய்தான்!"

"உண்மையாகவா, என்ன விஷயமாம்?" ஹமீது கேட்டார்.

"நாம ஒருவிதமா அவனை மடக்கப் பார்த்தபோது, அவன் வேறுவிதமா நம்மளை மடக்கப் பார்க்குறான். அவன் பொய் சொல்லமாட்டான். தேவையானா நாம மறுபடி புருஷோத்தமனைப் பிடிக்கிறது கஷ்டமா என்ன?"

அலெக்ஸ் ஜோன்ஸ் தன்னுடைய குவார்ட்டர்ஸூக்கு போன் செய்வதற்காகத் திரும்பினார்.

டெலிபோன் மறுபடி மணியடித்தது. அலெக்ஸே எடுத்தார். அவர் மனைவிதான் பேசினாள்.

"விவரம் தெரிஞ்சுது. பயப்படாதே. தேவையான நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்துல எல்லாம் சரியாயிடும்...."

"... ... ... ..."

"கவலைப்படாதே. நான்தான் சரியாயிடும்னு சொல்றேன்ல" ரிசீவரை கிராடிலில் வைத்துவிட்டு, படிகளில் கீழ்நோக்கி இறங்கத் தொடங்கினார்.

அதே நேரம் மோட்டார் பைக் ஒன்று வேகமாகவந்து. போலீஸ் கிளப்பின் கேட் அருகில் நின்றது.

அலெக்ஸ் வேகமாக வெளியே வந்தார்.

# 6

"சார், மிஸ்டர் அலெக்ஸ் ஜோன்ஸ்..." மோட்டார் பைக்கில் வந்தவன் கேட்டான்.

"நான்தாம்பா, என்ன வேணும்?" எஸ்.பி. வாசற்படிக்கு உள்ளே நின்றபடி கேட்டார்.

"உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது!" கடிதத்தைக் கொடுத்தவிட்டு அவசர அவசரமாக பைக்கை கிளப்பிக்கொண்டு போனான்.

கடிதத்தைக் எடுத்துக் கொண்டு வெளிச்சம் நன்றாக இருந்த பகுதிக்கு வந்தவர், பிரித்து வாசித்தார்.

'நீங்கள் புத்திசாலித்தனமாகச் செயல்பட்டிருக்கிறீர்கள். சூசன் தாமஸை உங்கள் வீட்டில் பத்திரமாக விட்டிருக்கிறேன்.

உங்கள் நண்பன்
தாவூத் இஸ்மாயில்'

அவசர அவசரமாகக் கடித்தை மடித்து வெளியே வந்து போர்ச்சில் கிடந்த ஜீப்பில் ஏறி ஸ்டார்ட் செய்தவர், மோட்டார் பைக் போன பாதையில் விரைந்தார்.

மெயின்ரோட்டுக்கு வந்துபோது எராளமான வாகனங்கள் இரண்டு புறமும் சீறிப்பாய்ந்து கொண்டிருந்தன. இதன் நடுவில் தனக்குக் கடிதம் கொண்டுவந்த பைக்கைக் கண்டுபிடிப்பது சுலபமல்ல என்று தோன்றியதால் ஜீப்பை வீட்டை நோக்கிச் செலுத்தினார்.

வீட்டில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

சூசன் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தாள்.

"அவன் உனக்கு ஏதாவது தொல்லை கொடுத்தானாம்மா!" அலெக்ஸ் கேட்டார்.

"ஒண்ணும் இல்லை மாமா. வேன்ல ஏறினவுடனே ஒரு சாக்லெட் தந்தார். உடனே மயக்கமாயிட்டேன். வேற எதுவும் பண்ணலை"-சூசன் எந்தவிதப் பரபரப்பும் இல்லாமல் பேசினாள்.

"ஆள் எப்படிம்மா இருந்தான்?"அலெக்ஸின் மனைவி டெய்ஸி கேட்டாள்.

"இந்தி சினிமா நடிகர் மாதிரி இருந்தார்!"

"முகம் வில்லத்தனமா தெரிஞ்சதா?"

"அப்படிச் சொல்ல முடியாது!"

"அவனைப் பார்த்தபோது நீ பயந்தியா?"

"எனக்கு எந்தவிதமான பயமும் தோணலை."

"உன்னை எங்கே கொண்டுபோனான்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியலை! நினைவு வந்த போதும் நான் வேன்லயேதான் இருந்தேன்."

"ஓகோ..."

டெலிபோன் மணியடித்தது.

டெய்ஸி ரிசீவரை எடுத்தாள்

சுவர்க் கடிகாரம் மணி ஒன்று என்பதைக் காட்ட ஒரு தடவை அடித்தது.

"உங்களுக்குத்தான்." டெய்ஸி ரிசீவரை அலெக்ஸிடம் கொடுத்தாள்.

"யார் சைமனா, என்ன விசேஷமா... ஏதாவது உண்டா? இல்லை... இன்னிக்கு இனிமேல் நான் வரமுடியாது. நாளைக்குத்தான்.....உண்மைதான். அப்படியொரு சம்பவம் நடந்தது. அதையெல்லாம் நாளைக்கு விவரமா சொல்றேன். கண்டிப்பா..." ரிசீவரை கிராடிலில் வைத்த அலெக்ஸ் டவல் எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

அந்தக் குளிர் நேரத்திலும் அவருக்கு வியர்த்துக் கொட்டியது.

"என்னங்க... சைமன் என்ன கேட்டார்?" டெய்ஸி கேட்டாள்.

''அவசரமான விஷயமாம். உடனே என்னைப் பார்க்கணும்னாரு."

"இன்னிக்கு இதுக்கு மேல நீங்க வேற எங்கேயும் போக வேண்டாம். இன்னிக்கு யார் மூஞ்சியில் விழிச்சோமோ"? டெய்ஸி எரிச்சலுடன் பேசினாள்.

"அதைத்தான் சொல்லிட்டேனே" என்ற அலெக்ஸ் டெலிபோனைப் படுக்கையறைக்கு எடுத்துச்சென்றார்.

தலையணை மீது தலைவைத்துப் படுத்ததும் மறுபடி டெலிபோன் மணியடித்தது.

"இது என்ன தொந்தரவுப்பா?" என்று சலித்துக் கொண்டவராக ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ ... யாரது?"

"நான்தான்... இன்னுமா புரியலை. தாவூத் இஸ்மாயில் பேசுறேன். குட்நைட்!"

"ராஸ்கல்!" ரிசீவரைக் கிராடிலில் வைத்தபடி முணுமுணுத்தார்.

"ஒழுங்காத் தூங்கக்கூட விடமாட்டான் போலிருக்கிறதே!" அலெக்ஸ் யோசனையில் ஆழ்ந்தார்.

ஒரு தடவை டெலிபோனை உற்றுப் பார்த்தவர் ரிசீவரை எடுத்துக் கீழே வைத்தார். இனி அதன்மூலம் தொல்லை இருக்காதே!

மறுநாள் மிகவும் தாமதமாகத்தான் காலையில் கண் விழித்தார். முந்தையநாள் இரவுச் சம்பவங்கள் மோசமான ஒரு கனவைப்போல் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தன.

அன்று அவர் அலுவலகத்துக்குப் போகவில்லை.

தொலைபேசி மூலமாகச் சில யோசனைகள் கூறிவிட்டு வீட்டிலேயே இருந்தார். உள்துறை அமைச்சகத்தின் மேல்மட்டத்திலிருந்து, தாவூத் இஸ்மாயில் பற்றிய நடவடிக்கைகள் எந்த அளவுக்கு உள்ளன என்று கேட்ட குறிப்பு ஒன்று வந்தது அலுவலகத்துக்கு.

சர்வதேசக் கடத்தல்காரர்களுடன் தொடர்பு கொள்வதற்காகத்தான் தாவூத் இஸ்மாயில் இந்த மாநிலத்துக்கு வந்திருப்பதாக புலனாய்வுத் துறையினர் உறுதியாகக் கூறினர்.

ஆனால், அவன் நோக்கம் என்னவென்று திட்டமாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டனர். 'ஒருவேளை ராணுவ ரகசியங்களைக் கடத்துவதுகூட நடக்கலாம்.' என்று மத்தியப் புலனாய்வுத்துறையினர் தாவூத் இஸ்மாயிலைப்பற்றி வழங்கியிருந்த குறிப்புகளும் உடனடியாக அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தது.

காலை பத்துமணி சுமாருக்கு சைமன் மறுபடியும் போன் செய்தார்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு வருவதாக அலெக்ஸ் அவனிடம் கூறினார்.

"அந்த அளவுக்கு நேரம் எடுக்காதீங்க சார்... சாப்பாடெல்லாம் இங்கேயேகூட ஏற்பாடு பண்ணிடலாம், உடனடியா வாங்க சார்!" சைமன் வற்புறுத்தினார்.

"ஓகே இதோ புறப்படுகிறேன்!"என்றவர் ரிசீவரை வைத்தார்.

சைமன் கோமஸ் பிரபலமான ஒரு வியாபாரப் பிரமுகர். குண்டூசி முதல் கப்பல் வரை அவர் செய்யாத வியாபாரமே கிடையாது. வெளிநாடுகளிலும்கூட அவரது வியாபார நிறுவனங்கள் பரந்து விரிந்து கிடந்தன.

வாழ்க்கையில் எப்போதும் சுறுசுறுப்பான பயணங்களிலேயே இருப்பார் சைமன்.

காலைப் பலகாரம் கொச்சியில் சாப்பிட்டால் மதிய உணவுக்கு பாரீஸ் நகரில் இருப்பார். அவரது இரவு உறக்கம் லண்டனிலா, நியூயார்க்கிலா என்று சொல்ல முடியாது. அவர் எந்த நேரத்தில் எந்த இடத்துக்குப் பயணமாவார் என்பது அவருக்கே திட்டமாகத் தெரியாது.

பொதுநல நிறுவனங்களுக்கும், பொதுநலம் சார்ந்த அரசாங்கப் பணிகளுக்கும் பணத்தை வாரியிறைக்க அவர் தயங்கியதே இல்லை. 'எந்த நேரத்தில் எந்த அரசியல்வாதி

பதவிக்கு வருவான்னு யாருக்கய்யா தெரியும்? எல்லாருக்கும் குடுத்துவச்சா, ஒரு பயலும் நம்மளைத் தொந்தரவு பண்ணமாட்டாங்க இல்லையா, அதுதான்!' என்பது சைமனின் வழக்கம்.

அவர் அப்பா, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின்போது கப்பற்படையில் கேப்டனாக இருந்தவர். சுதந்திரம் கிடைத்த பிறகுதான் அவர் காலமானார். சைமனின் அப்பா வின்செண்ட் ஏராளமாகச் செலவு செய்யும் பேர்வழி. இரண்டு மூன்று முறை உலகத்தையே சுற்றி வந்திருக்கிறார்.

அலெக்ஸ், தன்னுடைய சொந்த வேலைகளுக்காக ஒருபோதும் டிபார்ட்மெண்ட் வண்டிகளைப் பயன்படுத்துவதில்லை. தன்னுடைய சொந்தக் காரையே அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பார். அலெக்ஸ் பயணம் செய்வது பெரும்பாலும் புது கார்களில்தான். ஒரு கார் வாங்கி ஆறு மாதமாவதற்கு முன்பே அதை விற்றுவிடுவார். அதற்குள் வேறொரு கார் தயாராக வந்திருக்கும். அலெக்ஸின் பொழுதுபோக்கே இதுதான் என்று சொல்லலாம்.

அலெக்ஸின் கார், சைமன் கோமஸின் பங்களா கேட்டைக் கடந்து ஓரமாக நின்றது. துப்பாக்கி ஏந்திய காவல்காரர் கேட்டைத் திறந்துவிட்டார்.

கார் உள்ளே நுழைந்தும் காவல்காரர் விறைப்புடன் சல்யூட் அடித்தார். அந்தக் காவல்காரர் எக்ஸ்-ராணுவ ஊழியராக இருக்கவேண்டும்.

அலெக்ஸ் அந்த பிரமாண்ட பங்களாவின் பெரிய நிலைவாசற்படியை நெருங்கியதும் கதவு தானாகத் திறந்து கொண்டது.

திறந்துகொண்ட கதவின் பின்னால்-அலெக்ஸுக்கு நேர் முன்னால் ஆஜானுபாகுவான தோற்றத்துடன் சைமன் கோமஸ் சிரித்தபடி நின்றுகொண்டிருந்தார்.

எப்படிப்பட்டவரும் ஒரு கணம் ஊன்றிப் பார்க்கும் உடற்கட்டு. ஒரு வியாபாரியாக மாறாமலிருந்தால் இவரும்கூட ராணுவ கேப்டன் ஆகியிருப்பாரோ என்னவோ?

கனமான மீசை.

தடித்த ஃபிரேமிட்ட கண்ணாடி.

கையில் பளபளக்கும் வாக்கிங் ஸ்டிக். கம்பீரமான குரல்!

"உட்காருங்கள் மிஸ்டர் அலெக்ஸ் ஜோன்ஸ்!" இருக்கை ஒன்றை சுட்டிக்காட்டியபடி பேசினார் சைமன். அவர் குரலில் உறுதியும் கட்டளைத்தொனியும் தெரிந்தன.

சொன்னபடி கேட்கும் ஒரு நல்ல பிள்ளையைப் போல் அலெக்ஸ் மெத்தென்ற சோபாவில் அமர்ந்தார்.

"நிலைமை எப்படியிருக்கிறது?" சைமன் தனது கைத்தடியை மெதுவாக உயர்த்தினார்.

உண்மையில் அந்த வாக்கிங் ஸ்டிக் மல்ட்டி பர்ப்பஸ் ஆயுதமாக இருந்தது. தேவைப்பட்டால் கைத்தடியின் கீழ்ப்பகுதி ஒரு பானட் போலக் கத்தியுடன் வெளிப்படும். கத்தி சற்று ஒதுங்கித் துப்பாக்கியாகவும் பயன்படும்.

"செய்தி உங்களுக்கும் தெரிந்திருக்குமே!" அலெக்ஸ் சிகரெட் ஒன்றைப் பொருத்திக் கொண்டார்.

சைமன் தன்னுடைய வாக்கிங் ஸ்டிக்கின் மேற்புறக் கைப்பிடியைக் கட்டைவிரலால் அழுத்தியபடி அலெக்ஸின் சிகரெட்டுக்கு அருகே கொண்டு போனார். அதிலிருந்து நீலநிற ஜூவாலை உயர்ந்தது.

சிகரெட்டைப் பற்ற வைத்து ஆழ்ந்து உறிஞ்சியவாறே சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தார் அலெக்ஸ்.

"கேள்விப்பட்டேன். இந்த ஊருக்கும் அவன் வந்திருக்கிறதாத் தோணுது ." சைமன் தனது கைத்தடியைத் தரையில் தட்டி

ஒலியெழுப்பிய பிறகு மேஜை மீது போட்டுவிட்டு மற்றொரு இருக்கையில் அமர்ந்தார்.

"உண்மைதான்!"அலெக்ஸ் ஒப்புக்கொண்டார்.

தலையாட்டிக் கொண்ட சைமன் உட்புறமாகத் திரும்பி "யார் அங்கே இருக்கிறது?" என்று குரல் கொடுத்தார்.

இளம்பெண் ஒருத்தி வந்தாள்.

பருமனான உடம்பு. கையில்லாத ரவிக்கையும் முழங்காலளவு வரையிலிருந்த குட்டைப் பாவாடையும் அணிந்திருந்தாள்.

இளமை பொங்கி வழியும் உடல். மார்புப் பகுதிகள் எழும்பி நின்றிருந்தன.

இடுப்புப் பகுதியில் அழகாகச் சதை மடிந்து கிடந்தது. அந்தக் காட்சி அலையடிப்பது போலிருந்தது.

வந்தவள் ஒரு சிறு பெட்டியைத் திறந்து சுருட்டு ஒன்றை எடுத்து சைமனிடம் நீட்டினாள். அதைப் பெற்றுக்கொண்டவர் தனது லைட்டரால் பற்ற வைத்துக் கொண்டார்.

"மெரீனா-டிரிங்ஸ்."சைமன் அவள் கன்னத்தில் வாக்கிங் ஸ்டிக்கால் செல்லமாகத் தட்டியபடி கூறினார்.

அவள் அங்கிருந்து வெளியேறினாள். வெளியேறும்போது அவள் அலெக்ஸைப் பார்த்து ஒரு தடவை கண் சிமிட்டவும் மறக்கவில்லை.

சற்று நேரத்துக்குள் அழகான ட்ரே ஒன்றில் இரண்டு ஒயின் கிளாஸுகளை எடுத்து வந்தாள். விஸ்கியில் சதுரமான ஐஸ்கட்டிகள் மிதந்து கொண்டிருந்தன. ட்ரேயை இருவருக்கும் முன்பாக நீட்டினாள்.

ஆளுக்கொரு கிளாஸ் எடுத்துக் கொண்டனர்.

"சியர்ஸ்ஃபார்..." என்றபடி சைமன் வார்த்தையைப் பாதியிலேயே நிறுத்திக்கொண்டார்.

"...மிஸ்டர் சைமன் கோமஸ்!"என்று அலெக்ஸ் வாக்கியத்தை முடித்தார்.

இருவரும் ஒரே நேரத்தில் உதட்டில் வைத்து மெதுவாக 'சிப்'பத் தொடங்கினர்.

"என்னிக்கு வந்தான்னு தெரியுமா?"சைமன் கேட்டார்.

"ரெண்டு நாளாயிடுச்சு!"

"அவன் ஊர் சுத்துறதுக்காக வர்ற ஆளு இல்லை... ஏதோ விஷயம் இருக்கும்."

"உண்மைதான்."

"இந்த ஊர் கிரிமினல்களோட லிஸ்ட் அவன் கையில இருக்கும்."

"அது அவன் வழக்கம்தானே?"

"அவனை ஒரு கட்டுக்குள்ள கொண்டு வரணும். அவனைப் பிடிக்க முடியாமப் போயிட்டா அது ரொம்ப மோசமான விளைவைக் கொடுக்கும்!"சைமன் மிகவும் தாழ்ந்த குரலில் பேசினார்.

"ரெண்டு தடவை என் கையில சிக்கினான். ஆனா..."அலெக்ஸ் உதட்டைச் சுழித்தார்.

"என்ன... ரெண்டு தடவை உங்க கையில சிக்கியும் தப்பிச்சுட்டானா? உங்களால ஒண்ணும் செய்ய முடியாத சந்தர்ப்பமாப் போயிருக்கும்னு நெனைக்கிறேன்." கிளாஸிலிருந்த மொத்த விஸ்கியையும் ஒரே இழுப்பில் தொண்டைக்குள் ஊற்றிவிட்டு, கிளாஸை மெரீனாவுக்கு நேராகப் போட்டார்.

ஒரு விளையாட்டு வீரனின் லாகவத்துடன் அவள் கிளாஸைப் பிடித்து ட்ரேயில் வைத்தாள்.

"அவன் பிடிபடாம இருக்கற ஒவ்வொரு நிமிஷமும் என்னை மாதிரி ஆளுங்க பயந்துகிட்டேதான் இருக்கணும். என் பேரையும் சேர்ந்து அவன்கிட்ட இருக்கற லிஸ்ட்டுபடி எல்லோரையும் கண்டிப்பா இந்தத் தடவை சரி பண்ணிடுவான்! இது ஒருவகையில் நீயா நானாங்கிற ஈகோ பிரச்னை. ஜெயிக்குறது யார்னு ஒரு பிடிவாதம் இருக்கத்தானே செய்யும்? ஞாபகம் இருக்கட்டும். உங்க குழந்தைங்க, மருமகப்பசங்க பேர்லகூட எஸ்டேட்டுங்க இருக்குறதை ஞாபகம் வெச்சுக்கங்க."-சைமன் கோமஸ் வாக்கிங் ஸ்டிக்கைத் தரையில் தட்டியபடி பேசினார்.

"சீக்கிரமாகவே அவன் பிணத்தை நான் இங்கே கொண்டு வரத்தான் போறேன். இது உறுதி ." அலெக்ஸ் எழுந்தார்.

"என்ன புறப்பட்டுட்டீங்களா... இன்னும் சாப்பாடு இருக்குது... மெரீனா வேற உங்களுக்காகவே காத்திருக்கிறா. புறப்படுறேன்னா எப்பிடி?" சைமன் அவளைப் பார்த்தவாறே பேசினார்.

அவள் டைனிங் ஹாலை நோக்கி நடந்தாள்.

அன்றிரவு சுமார் பதினோரு மணியளவில்தான் அலெக்ஸ் தனது வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

சைமன் கோமஸ் அதிகமாக விஸ்கி அருந்தவில்லை. அதுதான் அவரது இயல்பும் கூட.

பன்னிரண்டு மணியடித்த பிறகுதான் சைமன் படுக்கையறைக்குச் சென்றார்.

அப்போது காலிங்பெல் ஒலித்தது.

சைமன் தனது கைத்தடியை எடுத்துக்கொண்டு வரவேற்பு அறைக்கு வந்து நின்றார். அங்கிருந்தே குரல் கொடுத்தார். "யாரது?"

"நான்தான் சார் 'ஷெய்க்...ஷெய்க்'" என்று ஒரு குரல் பதிலளித்தது.

சைமன் முன்புறமாக நகர்ந்து கதவைத் திறந்தார்.

# 7

கதவுக்கு வெளியே இருந்தவன் சட்டென்று வீட்டுக்குள் நுழைந்தான். சைமனால் உள்ளே நுழைந்தவனைத் தடுக்க முடியவில்லை.

உட்புறமிருந்த வெளிச்சத்தில் சைமன் வந்தவனைக் கவனித்தார்.

"ஷெய்க்...?"

"அப்படிச் சொல்லலேன்னா, நீங்க கதவைத் திறக்காம நேரா போலீஸுக்கு டயல் பண்ணியிருக்பீங்க! அது எனக்குத் தெரியும்."

"கெட்டிக்காரர்தான்... இருக்கட்டும். நீங்கள் யார் என்று தெரியவில்லையே?"சைமன் தன்னுடைய வாக்கிங் ஸ்டிக்கைப் பார்த்தவாறே கேட்டார்.

"போலீஸ் டிபார்ட்மெண்ட்டோ, சி.ஐ.டி.யோ கிடையாது. என் பேரை நீங்க கண்டிப்பாத் தெரிஞ்சுக்கணும்னா சொல்றேன்-தாவூத் இஸ்மாயில்!"

"உண்மையாகவா! தாவூத் இஸ்மாயில் நீங்கதானா? நான் எதிர்பார்த்ததைவிட ரொம்ப இளமையா இருக்குறீங்க!"சைமன் உண்மையிலேயே வியப்பு அடைந்தார்.

தாவூத் இஸ்மாயில் இந்த அளவுக்கு இளைஞனாக இருக்ககூடும் என்று சைமன் நினைத்ததே இல்லை. தாவூத் என்ற பெயரைத் தவிர, அந்த உருவம் இப்படிப்பட்டது என்று அதுவரை யாருமே குறிப்பிட்டதில்லை. தப்பித்தவறிக்கூட அவன் புகைப்படம் எதுவும் பத்திரிகைகளிலோ, வேறு எப்படியுமோ வெளியானதில்லை. உண்மையைச் சொன்னால் வெளி

மனிதர்கள் யாரும் இதுவரை அவனை போட்டோ எடுத்ததில்லை. அதற்குச் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. அவனும் அதை அனுமதித்ததில்லை.

"என்னை அடையாளம் தெரிஞ்சுக்க உங்களால முடியலையா? இல்லை, நம்புறது கஷ்டமா இருக்கா? எதுக்கும் இதை ஒரு தடவை பாருங்க!" தாவூத் தனது மேற்சட்டைப் பாக்கெட்டிலிருந்து தங்க பிஸ்கட் ஒன்றை எடுத்து முன்புறம் இருந்த டீப்பாய் மீது போட்டான்.

வாக்கிங் ஸ்டிக்கை சோபாவில் சாத்தி வைத்துவிட்டு, சைமன், அந்தத் தங்க பிஸ்கெட்டைக் கையில் எடுத்துப் பரிசோதித்தார். அதில் 'டி' என்கிற ஆங்கில எழுத்து உட்குழிவாகச் செதுக்கப்பட்டிருந்தது.

"நான் கையாளுற எல்லாப் பொருள்கள்லேயும் என்னோட இந்த அடையாளம் இருக்கும். தேவையானா இதையும் நீங்க எடுத்துக்கலாம்." தாவூத் தனியாக இருந்த சோபா ஒன்றைக் காலாலேயே நகர்த்தி அதன் மீது உட்கார்ந்து கொண்டு சிகரெட் ஒன்றை உதட்டில் வைத்தான்.

"இந்த நேரத்துல நீங்க இங்கே வந்திருக்கிற நோக்கம்?" - கேட்டபடியே சைமன் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து சுருட்டு ஒன்றை எடுத்து, மேற்புற பாலிதீன் உறையைப் பிரித்து உதடுகளுக்கிடையில் செருகிக் கொண்டார். தாவூத் தன்னுடைய பாக்கெட்டுகளில் லைட்டரைத் தேடும்போதே, வாக்கிங் ஸ்டிக்கிலிருந்த லைட்டரைத் தட்டி எரிய வைத்து தாவூத்திடம் நீட்டினார்.

"என்னை மாதிரி நபர்கள் பகல்நேரத்துல சுதந்திரமா வெளியே வர முடியும்னா நெனைக்கிறீங்க? நான் உங்களை மாதிரி இல்லை. எந்த நேரமும் நான் ஒரு கிரிமினல். உங்களை மாதிரி பகல் நேரத்துலகூட என்னால யோக்கியமானவனா வேஷம் போட முடியறதில்லை!"

அந்த வார்த்தைகள் சைமன் கோமஸின் நெஞ்சுக்குள் 'சுருக்' கென்று தைக்கவே செய்தது. எனினும் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"நீங்க இப்போ இந்த மாநிலத்துக்கு வந்திருக்கிறதுக்குப் பிரத்தியேக நோக்கமிருக்கிறதா நான் நினைக்கிறதுல தவறு இல்லையே?" -சைமன் கோமஸ் தன் முகத்தைச் சரித்துப் பார்த்தபடி கேட்டார்.

"அது உண்மை இல்லை. என்னோட இந்தப் பயணமே உங்களை மாதிரியான நபர்களைச் சந்திக்கிறதுக்கு மட்டும்தான்." -தாவூத் சிகரெட்டை ஆஷ்ட்ரேவுக்குள் போட்டபடி பதிலளித்தான். ஆஷ்ட்ரேக்குள் சிகரெட் விழுந்த முறையே ஏதோ சர்க்கஸ் வித்தை மாதிரி இருந்தது. சைமன் அந்தக் காட்சியை ஏதோ ஓர் அற்புதம் போல் பார்த்தார்.

"என்னை மாதிரியான நபர்கள் என்றால்...?"சைமன் கேட்டார்.

"அந்தந்தப் பகுதியின் டி.எஸ்.பி - க்களுடன் நல்ல தொடர்பும் உறவும் வைத்திருப்பவர்கள் என்று அர்த்தம். அலெக்ஸ் ஜோன்ஸ் ஆரம்பத்தில் நேர்மையான ஒரு போலீஸ் அதிகாரியாக இருந்தார். ஆனால், இப்போது உங்களின் கைப்பாவையாகியிருக்கிறார்!"

"நீங்க இந்த மாதிரிப் பேசுறதை நான் ஒப்புக்க முடியாது. என்னுடைய கைப்பாவையா?...என்ன வார்த்தை பேசுகிறீர்கள்?"

"பதுக்கல் பேர்வழிகளும் கறுப்புபணம் வைத்திருப்பவர்களும் இப்போது அவரின் நெருங்கிய நண்பர்கள்."

"அப்படியானால் நீங்கள் என்னையும் அந்தப் பட்டியலில் வைத்திருக்கிறீர்கள், இல்லையா?"

"அதில் சந்தேகமா என்ன?"

"நீங்கள் அளவுக்குமேல் சுதந்திரம் எடுத்துக்கொள்கிறீர்கள்."

"நீங்கள் மறுக்க முடியாதே!"

"இப்போது எதற்காக என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள்?"

"நான் விளக்கமாவே உங்ககிட்டச் சொல்றேன். முதல் காரணம், உங்களை நேரடியா சந்திக்கிறது. நான் புறப்படுகிறேன். நீங்களும் என்கூட வரணும்!" -தாவூத் அவரை அழைத்தான்.

"முன்னப்பின்னத் தெரியாத நீங்க கூப்பிட்ட உடனே உங்ககூட கிளம்புற நிலைமையில நான் இல்லை."

சட்டென்று தாவூத் இஸ்மாயில் முன்புறமாகத் தாவி, சைமன் கோமஸின் வாக்கிங் ஸ்டிக்கைத் தட்டினான். சைமன் ஒருபுறமாகச் சரிய ஆரம்பித்ததும் தாவூத் அவரைத் தாங்கிப் பிடிக்கவும் செய்தான்.

"போதும்னு நெனைக்கிறேன். மேற்கொண்டு நான் எதுவும் செய்யிறதுக்கு இடம் வைக்க மாட்டீங்கன்னு நம்புறேன்!" தாவூத்தின் முக உணர்ச்சிகள் சட்டென்று மாறின.

தாவூதின் கண்களில் குரூரம் அலையடித்தது. கண்ணிமைகள் சரிந்து நிமிர்ந்தன. மூக்கின் இருபுறமுள்ள தசைகள் சன்னமாக அசைந்தன.

"நான் வருகிறேன்!"சைமன் ஒப்புக்கொண்டார்.

வாக்கிங் ஸ்டிக்கைப் பிடித்து ஊன்றியபடி சைமன் தாவூத்துடன் நடக்கத் தொடங்கினார்.

போர்ட்டிகோ பகுதிக்கு வந்தனர்.

தாவூத் மோட்டார் பைக்கை ஸ்டார்ட் செய்தான். "ஏறுங்கள்....ஞாபகமிருக்கட்டும், வழியில் தவறாக எதையும் செய்யாமலிருப்பது நல்லது" எச்சரிக்கை செய்தான்.

கோடீஸ்வரரான சைமனுக்கு தாவூத் சொல்வதற்குக் கீழ்ப்படிவது தவிர வேறு வழி தெரியவில்லை. பைக்கின் பெலியனில் ஏறி உட்கார்ந்தார்.

இது போன்றதொரு சந்தர்ப்பம் சைமனுக்கு இதுவரை நேர்ந்ததில்லை. தன் மொத்தக் கோபத்தையும் அடக்கிக் கொண்டவராக அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் போன பிறகு தாவூத் பிரேக்கை அழுத்தி நிறுத்தினான்.

"இறங்குங்கள்!"தாவூத் கூறினான்.

சைமன் பைக்கிலிருந்து இறங்கிய அதே விநாடி தாவூத் பைக்கைக் கிளப்பி மறைந்தான். மின்னல் வேகத்தில் அவன் கண்ணிலிருந்து மறைவதை சைமன் பார்த்துக் கொண்டே நின்றார்.

முதல் தடவையாக தன்னை ஒரு மனிதன் அவமானப் படுத்தியிருக்கிறான். என்ன செய்வது என்று தெரியாமல் முன்புறமாக நடக்கத் தொடங்கினார். அவர் சற்றுத் தொலைவு செல்வதற்குள்ளாகவே, அவருக்குப் பின்னால் ஒரு டாக்ஸி வந்து நின்றது.

"சார், ஏறிக்கங்க. உங்களை உங்களோட பங்களாவில் கொண்டுபோய் விடுகிறேன்."டிரைவர் கூறினான். தயங்காத சைமன் டாக்ஸியில் ஏறிக்கொண்டார். டாக்ஸி திரும்பி முன்புறமாக நகர்ந்தது.

"எதுக்காக என் பக்கத்துல பிரேக் போட்டு நிறுத்தினீங்க?" -பின்ஸீட்டில் அமர்ந்திருந்த சைமன் கேட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால ஒருத்தர் மோட்டார் பைக்ல வந்தார். அவர்தான் உங்களைக் கொண்டுபோய், உங்க வீட்டுல விடச்சொல்லி விலாசம் சொன்னார்."

"ஓகோ... அப்படியா சங்கதி?"சைமன் கறுவுவது போல் பேசிக்கொண்டார்.

டாக்ஸி சைமனின் பங்களா முன்னால் நின்றது.

“வாங்க, உங்களோட சார்ஜைத் தர்றேன்!”வண்டியிலிருந்து இறங்கிய சைமன் கூறினார்.

“தேவையில்லை சார். அதையும் விலாசம் சொன்னவரே கொடுத்துவிட்டார்.”

“உண்மையாகவா?”சைமன் ஒருகணம் திரும்பிப் பார்த்தார்.

டாக்ஸி, அதற்குள் கிளம்பிவிட்டது.

சைமன் கேட்டை நெருங்கியதும் வாட்ச்மேன் திறந்து விட்டான்.

“கொஞ்ச நேரத்துக்கு முன்னால் பைக்ல வந்தவரை எதுக்காக வீட்டுக்குள்ள விட்டீங்க? என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே?”சைமன் கோபத்துடன் கேட்டார்.

“ஷெய்க்னு சொன்னார் சார். அப்படி யார் சொன்னாலும் கேள்வி எதுவும் கேட்காம உள்ளே விடணும்னு சொல்லியிருக்கீங்க. அதுதான்!”

“அப்படியா, சரி பரவாயில்லை!”சைமன் உள்ளே போனார்.

கட்டிலில் படுத்துக்கொண்ட போதும் சைமனின் மன உளைச்சல் குறையவில்லை. ‘எதற்காக இப்போது தாவூத் வந்துவிட்டு போனான்?’

அவன் கொடுத்து விட்டுப்போன தங்க பிஸ்கெட்டைக் கையில் எடுத்துப் பார்த்தார்.

மறுநாள் அலெக்ஸ் ஜோன்ஸ் வந்தவுடன் முந்தைய நாள் இரவில் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை விளக்கினார்.

“தன்னோட வியாபாரத்தை விரிவுபடுத்துறதுக்காகத்தான் வந்திருக்கிறான்னு தெரியுது!”அலெக்ஸ் ஜோன்ஸ் தன் கருத்தை வெளியிட்டார்.

“எனக்கென்னமோ அப்படித் தோணலை!”

"உங்களுக்கு என்ன தோணுது?"

"அவனோட நோக்கம் வேற ஏதோ ஒண்ணு!"

"விளக்கமாச் சொல்லுங்களேன்!"

"நம்மளோட வியாபாரத்தை நொறுக்குறதுக்காகத்தான் வந்திருக்கிறான்!"

"ஒருவேளை அதுகூட உண்மையா இருக்கலாம். ஒரு முக்கியமான விஷயத்தை உங்ககிட்ட ஞாபகப்படுத்தணும் கிறதுக்காகத்தான் வந்தேன். கொஞ்சம் ரகசியமானதும்கூட அலெக்ஸ் சுற்றுமுற்றும் பார்த்தபடி பேசினார்.

"அப்படீன்னா என் தனியறைக்குப் போயிடலாமே."சைமன் எழுந்தார்.

எல்லாவித நவீன உபகரணங்களும் பொருத்தப்பட்ட ஓர் அறை அது. டெலிவிஷன், டெலிபிரிண்டர் தவிர வேறு என்னென்னவோ லெக்ட்ரானிக்ஸ் கருவிகளும் இருந்தன.

"ஏதாவது சாப்பிடுறீங்களா?"சைமன் கேட்டார்.

"இருந்தா நல்லது. சூடா ஏதாவது தாங்க. எனக்குள்ளேயும் ஒரே புழுக்கம்தான். சூட்டுக்குச்சூடுதான் சரி."-அலெக்ஸ் சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டார்.

சைமன் தனது மேஜை மீதிருந்த ஒரு சுவிட்சை அழுத்தினார். உடனே அரைகுறை ஆடையுடன் பெண் ஒருத்தி வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனாள்.

திரும்பி வரும்போது அவள் கையிலிருந்த ட்ரேயில் விஸ்கி பாட்டிலும், கண்ணாடி கிளாஸுகளும் இருந்தன.

கவர்ச்சிகரமான அவள் உடம்பை ஊன்றிப் பார்த்த அலெக்ஸ் கிளாஸைக் கையில் எடுத்தார்.

"நீ போம்மா!"சைமன் கூறியதும் அவள் அங்கிருந்து விரைந்தாள்.

"இப்போது சொல்லுங்கள். என்ன விஷயம்?"சைமன் விஷயத்தைத் தெரிந்துகொள்வதில் தீவிரமானார்.

"நாளைக்கு இண்டர்போலிலிருந்து பெரிய அதிகாரி ஒருவர் வருகிறார். மிகவும் ரகசியமான தகவல் இது!"

"எதற்காக வருகிறார்?"

"சொல்லத்தானே வர்றேன்... இந்தியாவிலிருக்கிற சில குற்றவாளிகளைப் பற்றிய தகவல்களும் ஆதாரங்களும் அவர் கொண்டு வருவதாகத் தெரிகிறது."

"வரட்டும் வரட்டும்... நம்ம தொடர்பான தகவல் ஏதாவது அதில் இருக்குமா?"சைமனின் முகம் திடீரென்று மங்கலடைந்தது.

சற்றுமுன்பு வரை சைமனின் முகத்திலிருந்த உற்சாகம் சட்டென்று வடிந்துபோனது. அலெக்ஸ் சொன்ன செய்தி அவரைக் கலவரப்படுத்தியிருக்க வேண்டும். சட்டென்று கிளாஸில் விஸ்கியை ஊற்றி, சோடாகூடக் கலக்காமல் அவசரமாகத் தொண்டைக்குள் இறக்கினார்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன். அவர் கொண்டுவரும் தகவலில் நம் சம்பந்தப்பட்ட செய்திகளும் இருக்கலாம். ஆனால், தாவூத் இஸ்மாயிலும் அந்தப் பட்டியலில் இருப்பது உறுதி!"

"ஒருவேளை தாவூத் இஸ்மாயிலைப் பிடிப்பதற்காக வருகிறாரோ என்னவோ?"

"எப்படி இருந்தாலும் நாமும் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்."

"அதற்கு நாம் என்ன செய்யலாம்? அதை எப்படி நாம் தெரிந்துகொள்வது?"

"என் மனத்தில் இருப்பதைச் சொல்லட்டுமா? எத்தனையோ் தடவை நாம் ஆச்சரியகரமான முறையில் தப்பித்திருக்கிறோம். போலீஸ் விரித்திருந்த வலை மிகவும் பலமானதுதான். நாம் நமது தொடர்புகளால் இதுவரை தப்பித்தோம்."

"உண்மைதான்! அதில் உங்களது பங்கைப் பாராட்டாமல் இருக்கக்கூடாது! உங்களது டிப்ஸ்"கள் மட்டும் இல்லாவிட்டால் எப்போதோ நாம் பிடிபட்டிருப்போம்!"

''சம்பந்தப்பட்டவர்களுக்கு எப்படித் தகவல் வெளியாகிறதென்று யோசித்திருப்பார்கள். அதனால் இந்தத் தடவை அது முடியாதுபோல் தோன்றுகிறது." அலெக்ஸ் கூறினார்.

''இதற்கு மாற்றுவழி கிடையாதா என்ன?'' சைமன் பரபரப்புடன் கேட்டார்.

"சுலபமான ஒரு வழியிருக்கிறது. நாளைக்கு வரும் அதிகாரியை மடக்கி நமது இடத்துக்குக் கொண்டு வரவேண்டும். அதன்பிறகு அவரிடமுள்ளதை வாங்கி மொத்தமாக எரித்துவிட வேண்டியதுதான்! நாம் உடனடியாக இதைச் செய்யாவிட்டால் ஆபத்துதான்!"

"அடையாளத்தை மட்டும் சொல்லுங்கள். நான் அவரை இந்த பங்களாவுக்குள் கொண்டு வந்த பிறகு உங்களுக்குத் தகவல் தெரிவிக்கிறேன்." சைமன் உறுதியளித்தார்.

அந்த நேரம் தொலைபேசி மணியடித்தது.

சைமன் ரிசீவரை எடுத்தார்.

"ஆமாம் சைமன்தான் பேசுகிறேன். நீங்கள் யார்? என் 0999-ஆ? வேடிக்கையை விடுங்கள். என்ன தகவல்?" சைமன் சிரித்தபடி கேட்டார்.

# 8

எதிர்முனையின் டெலிபோன் நம்பரைக் கேட்டதும் சைமனுக்கு வேடிக்கையாகத் தோன்றியது. அந்த இடைவெளிக்குள் காதில் கேட்ட நம்பரை மறக்கவும் செய்தார்.

"புரியவில்லை... நீங்கள் யார் பேசுகிறீர்கள்? என்ன நம்பர் சொன்னீர்கள்?"சைமன் மறுபடி கேட்டார்.

"தாவூத் இஸ்மாயில் பேசுகிறேன். என்னுடைய நம்பர் 8011." சட்டென்று தொடர்பு துண்டிக்கப்பட்டது எதிர்முனையில்.

கடைசியாகத் தொலைபேசியில் கேட்ட எண் அலெக்ஸ் வீட்டுத் தொலைபேசி எண். சைமன் உடனே 8011-உடன் தொடர்பு கொண்டார். அலெக்ஸின் மனைவிதான், கணவர் வீட்டில் இல்லை என்பதைத் தெரிவித்தாள்.

தாவூத் இஸ்மாயில் வந்துவிட்டான் என்பது தெரிந்தது முதல் சைமன் நிம்மதியிழந்தவரானார். இப்போது இரண்டாவதாக மற்றொரு பேராபத்து வந்து கொண்டிருக்கிறது. இண்டர்போலிலிருந்து, பன்னாட்டுக் குற்றவாளிகளைப் பற்றிய விவரங்களுடன் வரும் அதிகாரி. அந்த அதிகாரியை உயிருடன் பிடிக்க முடியவில்லையென்றால், எந்த ரகசியமும் வெளியாகாதபடி அவரைக் கொலை செய்துவிடுவதென்று தீர்மானித்தார் சைமன்.

இரண்டுநாட்கள் எந்தவிதமான பரபரப்புமின்றிக் கடந்துபோனது. தாவூத் இஸ்மாயிலைப் பற்றி யாருக்கும் எந்தவிதமான தகவலும் தெரியவில்லை. அவனது இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ள காவல்துறையுடன், கடத்தல் கும்பல்களும் முயன்றன.

போலீஸார் ஓர் உத்தியைப் பயன்படுத்தினர். சர்க்கஸ் கம்பெனிக்கு இறைச்சி விற்கும் மனிதனை ஆளனுப்பி, போலீஸ் கிளப்புக்கு வரவழைத்தனர்.

அவர் பெயர் அப்துல் கரீம்.

"உட்காருங்கள் மிஸ்டர் கரீம்."டி.எஸ்.பி. வரவேற்று உபசரித்தார்.

ஐம்பது வயது மதிக்கலாம். தாடி, மீசையை அளவாக வெட்டிவிட்டிருந்தார். குள்ளமான உருவம்.

"பயப்படாதீர்கள். சில விவரங்களைத் தெரிந்த கொள்ளத்தான் உங்களை வரவழைத்திருக்கிறேன்." டி.எஸ்.பி. பேச்சைத் தொடர்ந்தார்.

அப்துல் கரீம் இதையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லையென்று தோன்றியது.

"என்ன வேண்டுமோ கேளுங்கள். எனக்குத் தெரிந்ததை சொல்கிறேன்." கரீம் பதிலளித்தார்.

"உங்களால் ஒரு வேலை ஆகவேண்டியுள்ளது. இந்த நாட்டையே ஒரு பேராபத்திலிருந்து காப்பாற்ற உங்கள் தகவல் உதவும்."

"என்ன சார் என்னென்னமோ சொல்றீங்க? நான் அப்படி எதுவும் செய்ததாத் தெரியலையே?" விழித்தபடி பேசினார் கரீம்.

"நீங்க எதுவும் செஞ்சதா நானும் சொல்லலையே... நீங்க மனசு வைச்சா, எங்களுக்கு உதவ முடியும்!"

"சொல்லுங்கள் சார்!" தன்னுடைய மடியிலிருந்து சுருட்டு ஒன்றை எடுத்தவர் என்ன நினைத்தாரோ மீண்டும் மடியிலேயே வைத்துக் கொண்டார்.

"சுருட்டுப் பிடிக்கிறதுக்கு நீங்க ஒண்ணும் தயங்க வேண்டாம். உங்க வழக்கப்படியே நடந்துக்கங்க!"

கரீம் சுருட்டைப் பற்றவைத்து ஒரு தடவை ஆழ்ந்து இழுத்துவிட்டு, டி.எஸ்.பி. சொல்வதைக் கேட்கத் தயாரானவரைப் போல் அவரைப் பார்த்தார்.

"மிகப் பெரிய கள்ளக்கடத்தல்காரனான தாவூத் இஸ்மாயிலைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவன் இந்த ஊருக்கு வந்திருக்கிறான். அவனைப் பிடிக்கிறதுக்கு நீங்க உதவணும்?"

"எனக்கும் அவனுக்கும் என்ன சார் சம்பந்தம்? தப்பு செய்யுறது யாரா இருந்தாலும் எனக்குப் பிடிக்காது. நான் எப்படி உங்களுக்கு உதவுறது?"

"சொல்றேன் நீங்க வழக்கமா கறி சப்ளை பண்றீங்களே; அந்த சர்க்கஸ் கம்பெனியோட அவனுக்கு ஏதோ தொடர்பு இருக்கு. சர்க்கஸ் கம்பெனி சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு இடத்துல அவன் ஒளிஞ்சிருக்கலாம்னு நினைக்கிறோம்."

"அதை நான் எப்படி சார் தெரிஞ்சுக்கிறது?"

"உங்களால அது முடியும். எங்களுக்குத் தெரிஞ்சவரைக்கும் அவன் அடையாளத்தைச் சொல்றோம். நல்லா பழகுறவன். அழகான இளைஞன். முகத்தை மழுங்க ஷேவ் பண்ணியிருப்பான். முகத்துல மீசைகூட இருக்காது. இந்த மாதிரி யாரையாவது நீங்க சர்க்கஸ் கூடாரத்துல பார்த்தா, அதை உடனே எங்ககிட்ட சொன்னாப் போதும். அதற்காக உங்களுக்காக ஒரு பரிசு காத்திருக்கு!"

"நீங்க சொல்ற மாதிரி யாரையாவது பார்த்தேன்னா கண்டிப்பா உங்ககிட்டச் சொல்றேன்."

"அவ்வளவுதான். இனிமே நீங்க போகலாம்."

மறுநாள் சர்க்கஸ் கம்பெனிக்கு இறைச்சி கொண்டு போனவர்களுடன் கரீமும் போனார். மற்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படாத மாதிரி ஒவ்வொருவரின் முகத்தையும் கரீம் ஊன்றிப் பார்த்தார். அன்று அப்படி யாரும் தென்படவில்லை. ஆனால், கரீம் உடனடியாக ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்தார். கரீமிடம் வேலை செய்யும் ஒருவனை சர்க்கஸ் கம்பெனியில் சேர்த்துவிட்டு, அலெக்ஸ் சொன்னதை அவனிடம் சொல்லி எச்சரித்தார்.

அன்று வெள்ளிக்கிழமை. ஏப்ரல் பதிநாலாம் தேதி. விடுமுறை நாளும்கூட-தமிழ்ப் புத்தாண்டு நாள்.

மிஸ்டர் வில்லியம் ப்ளெய்க் என்பவர் பிரான்ஸிலிருந்து வருவதாக, அலெக்ஸுக்கு அன்று இரவு செய்தி கிடைத்தது.

மாநில குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவரிடமிருந்துதான் அலெக்ஸ் அந்தச் செய்தியைப் பெற்றார். செய்தி உண்மைதான் என்பது தெரிந்தவுடன் அலெக்ஸ் சைமனுக்கு விவரத்தைத் தெரியப்படுதினார்.

சைமன் தனது அடியாட்களில் ஐந்து பேரை வரவழைத்தார். அவர்கள் எல்லோரும் சைமனுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தனர். அவர்களின் குடும்பங்களை சைமன் தனது நேரடிக் கண்காணிப்பில் வைத்துத் தேவையான உதவிகளைச் செய்து வந்தார். வெளியுலகத்தில் சுலபத்தில் தலைகாட்ட முடியாத பயங்கரக் குற்றவாளிகள் அவர்கள்.

வழக்கு முடிந்து தண்டனை பெற்ற பிறகு சிறையிலிருந்து தப்பித்தவர்களும், போலீஸின் பிடியில் அகப்படாமல் தலைமறைவாக இருக்கும் கிரிமினல் குற்றவாளிகளும்தான் அவர்கள். கம்ப்யூட்டரில் திட்டமிட்டது மாதிரி கொலை மற்றும் தாக்குதல்களை அவ்வளவு கச்சிதமாக நிறைவேற்றுபவர்கள்.

சைமன் தன்னுடைய ரகசிய இடத்துக்கு அவர்ளை வரவழைத்திருந்தார்.

“ஒரு முக்கியமான விஷயத்துக்காகத்தான் உங்களை வரவழைச்சிருக்கிறேன்னு நீங்க புரிஞ்சுக்கிட்டிருப்பீங்க. விஷயத்தைச் சுருக்கமாவே சொல்றேன்.

இன்னிக்கு ராத்திரி கொச்சின் விமான தளத்துக்கு ஒரு விமானம் வருது. அதில் ஒரு வெளிநாட்டுக்காரர் வர்றார். இதுதான் அவர் போட்டோ.”

போஸ்டுகார்டு சைஸிலிருந்த ஐந்து புகைப்படங்களை அவர்களிடம் கொடுத்தார் சைமன். தொடர்ந்தார்: “இவர்தான் நான் குறிப்பிடுகிற வெளிநாட்டு ஆசாமி. ஏர்போர்ட்டுக்குள்ள இவரை உங்களால ஒண்ணும் பண்ணமுடியாமல் போகலாம்.

அதனால நீங்க இந்த ஆளைப் பின்தொடரணும். ஏதாவது பெரிய ஓட்டல்லதான் தங்கவைப்பாங்க. சமய சந்தர்ப்பத்தைப் பார்த்துக்கங்க. என்னோட வேண்டுகோள், அவர் இங்கே வந்த பிறகு ரொம்பநேரம் உயிரோட இருக்கக் கூடாது?"

"நாங்க காரியத்தைக் கச்சிதமா முடிச்சுடுறோம் சார். உங்களுக்கு அதில சந்தேகமே வேண்டாம். அடையாளமா அவர் உடம்பில இருந்து எந்தப் பகுதியைக் கொண்டு வரணும் நாங்க?"- ஐந்து பேரின் தலைவன் போலிருந்தவன் கேட்டான்.

"அந்த ரிஸ்க்கெல்லாம் உங்களுக்கு வேணாம். ஆள் தொலைஞ்சான்னு உறுதியான தகவல் வந்தாப்போதும்."

"ஓகே சார். நாங்க கிளம்பட்டுமா?"

ஐந்து பேரும் ஐந்து கார்களில் கிளம்பினர்.

இரவு மணி பதினொன்று.

ஏர்போர்ட்டில் ஜன நடமாட்டம் அவ்வளவாக இல்லை. சாதாரணமாக இந்த ஃப்ளைட்டில் பயணிகள் அதிகமாக இருப்பதில்லை.

ஆனால், பம்பாயிலிருந்து வரும் இந்த ஃப்ளைட்டில் அன்று மட்டும் பயணிகள் வழக்கத்தைவிட அதிகம். பெரும்பாலானவர்கள் வியாபார நிமித்தமோ, தொழில் நிமித்தமோ சுற்றுப் பயணத்திலேயே இருப்பவர்கள். சைமன் அனுப்பிய அடியாட்கள் ஏர்போர்ட் காம்பௌண்ட்டில் கார்களை நிறுத்தியதை ஏனோ அந்த நேரத்தில் யாருமே கவனித்ததாகத் தெரியவில்லை.

சரியாகப் பதினொன்று பத்துக்கு விமானம் ஏர்போர்ட்டில் தரையிறங்கி நின்றது.

அந்த நேரத்தைக் கணக்கிட்டு வந்தவர்களைப் போல் மத்திய குற்றப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் டாக்ஸி ஒன்றில் வந்து சேர்ந்தனர்.

வில்லியம் பிளெய்க்கை வரவேற்றுப் பத்திரமாக அழைத்துச் செல்வதற்காக அவர்கள் வந்திருந்தனர். வில்லியமும் விமானத்தில் வந்திருந்தார்.

உட்புறம் பரிசோதனைகளைக் கடந்து வெளிவாசலுக்கு வந்தவர், போலீஸ் அதிகாரிகள் காத்திருந்த காரை குறிபார்த்து நேராக நடந்தார்.

காரணம் அந்த காரிலிருந்து பச்சை விளக்கை ஆட்டி அவருக்கு அடையாளம் செய்திருந்தனர். மூன்று தடவை பச்சை விளக்கு மின்னி மறைந்தது.

வில்லியம் பிளெய்க் அந்த காரை நெருங்கும் சமயத்தில் மற்றொரு கார் சட்டென்று அவரை உரசுவது மாதிரி வந்து நின்றது.

"இந்த காரில் ஏறிக்கொள்ளுங்கள். அது எதிராளிகளுடையது. சீக்கிரம் ஏறுங்கள்." இரண்டாவதாக வந்த காரிலிருந்து பிரெஞ்சு மொழியில் அழைப்பு வந்தது.

தனது சொந்த மொழியைக்கேட்ட உற்சாகத்தில் வில்லியம் எதையும் யோசிக்காமல் சட்டென்று அந்த காரில் ஏறினார். ஒருவிநாடி கூடத் தாமதிக்காமல் கார் விரைந்தது.

எதிர்பாராதவிதமாக யாரோ வந்து வில்லியமை காரில் ஏற்றிக் கொண்டு போவதை போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

"டிரைவர் அந்த காரை பின்தொடருங்கள். சீக்கிரம் சீக்கிரம்...!" மூன்று பேரில் ஒருவர் கட்டளையிட்டார்.

ஆனால், எவ்வளவு முயன்றும் கார் ஸ்டார்ட் ஆகாமல் முரண்டு பிடித்தது.

"டிரைவர் அந்த வண்டி போகுது... சீக்கிரம்னு சொன்னா வண்டியை எடுக்கமாட்டேங்குறீங்களே!"

"இந்த நேரம் பார்த்து வண்டி என்னமோ மக்கர் பண்ணுது சார்!"டிரைவர் சலிப்புடன் பேசினார்.

"சீக்கிரமா இறங்கி என்ன கோளாறுன்னு பார்க்காம இருக்கீங்களே! சே...எப்படிப்பட்ட சூழல் இது. முட்டாள்தனமா மாட்டிக்கிட்டோம்."இரண்டாவதாக இருந்த ஒருவர் கூறினார்.

அதற்குள் வில்லியம் இருந்த கார் அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தே போனது.

என்னென்னவோ செய்து பார்த்தும் போலீஸ் அதிகாரிகள் பயணம் செய்யவேண்டிய கார் கிளம்பவே இல்லை. கடைசியில் அதை அங்கேயே விட்டுவிட்டு வேறொரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

சைமன் கோமஸ் அனுப்பிய ஆட்கள் வில்லியமைப் பார்க்கவே இல்லை. அவர்கள் வேறொரு வெள்ளைக்காரரைத் தவறுதலாகத் தொடர்ந்தனர். அவர் பயணம் செய்த காரைத் தொடர்ந்ததில் அது நகரின் மிகப்பெரிய ஓட்டலை அடைந்தது. காரிலிருந்து வெள்ளைக்காரர் இறங்கும் போதுதான் சைமனின் அடியாட்களுக்குத் தாங்கள் செய்த தவறு புரிந்தது. அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

நள்ளிரவு பன்னிரண்டு மணி.

சைமன் வீட்டு டெலிபோன் ஒலித்தது.

"யாரது?"சைமன் கேட்டார்.

"நீங்கள் எதிர்பார்த்துட்டிருக்கிற நபர் இப்போ என்கூட இருக்கிறார். தாவூத் இஸ்மாயில் பேசறேன்."

"யூ ஸ்டுப்பிட்!" -சைமன் கோபத்துடன் ரிசீவரை கிராடிலில் எறிந்தார்.

# 9

'இந்தியாவிலுள்ள சர்வதேசக் குற்றவாளிகளைப் பற்றிய விவரம் மற்றும் ஆதாரங்களுடன் இந்திய போலீஸ் துறையின் உதவியை நாடி இந்தியாவுக்கு வந்த வில்லியம் பிளெய்க் கடத்தப்பட்டார்' என்ற செய்தி போலீஸ் வட்டாரங்களில் மட்டுமின்றி, மிகப்பெரிய கள்ளக்கடத்தல் மற்றும் கறுப்புப் பணக்காரர்களையும் ஒரே நேரத்தில் அதிர்ச்சியடைய வைத்தது.

வெளிநாட்டு வங்கிகளில் கோடிக் கணக்கான ரூபாயைப் போட்டு வைத்திருக்கும் கறுப்புப்பண முதலைகளின் பெயர்ப்பட்டியல்கூட வில்லியம் கைவசமிருந்தது. எனவே வில்லியம் இந்தியாவுக்கு வந்து இங்குள்ள போலீஸாரைத் தொடர்பு கொண்டால், பெரும் பெரும் அரசியல் புள்ளிகளுடன் அமைச்சர்கள்கூட கைது செய்யப்படலாம் என்ற செய்தி பரபரப்புடன் ரகசியமாகப் பரவிய சூழ்நிலையே ஒரு மாதிரி பீதி நிறைந்ததாக இருந்தது.

வில்லியத்தைக் கடத்திப் போனது தாவூத் இஸ்மாயில்தான் என்பது எப்படியோ வெளியில் பரவி விட்டது. தாவூத் இஸ்மாயில், வில்லியமைப் பிணைக் கைதியாக வைத்துப் பேரம் பேசுவான் என்றும் எதிர்பார்த்தனர். எனவே, தாவூதைப் பிடித்துவிட்டால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்ற நோக்கில் போலீஸார் செயல்பட்டனர்.

தாவூதைப் பிடிப்பது போகட்டும்... அவன் எங்கிருக்கிறான் என்பதைக் கண்டுபிடிப்பதே அவ்வளவு சுலபமாக இல்லை.

நகரில் அவன் எந்த இடத்தில் இருக்கக்கூடும்?

டி.எஸ்.பி.அலெக்ஸ், போலீஸ் துறையைச் சேர்ந்த பலரையும் மாறுவேடத்தில், பல்வேறு கட்டங்களில் சர்க்கஸ் கூடாரத்துக்குள்

அனுப்பிச் சோதனை செய்து பார்த்துவிட்டார். அவன் அங்கு இருப்பதற்கான எந்தவித அடையாளமும் தெரியவில்லை.

தெளிவாக ஆங்கிலம் பேசும் தாவூத் இஸ்மாயில், மிக விரைவிலேயே வில்லியம் பிளெய்க்குடன் நட்புறவு பூண்டான். தன்னை ஒரு போலீஸ் அதிகாரி என்று சொல்லித்தான் அவரிடம் அறிமுகம் செய்துகொண்டான். ஆனால், கெட்டிக்காரரான வில்லியம் மிக விரைவிலேயே தாவூத் இஸ்மாயிலை அடையாளம் தெரிந்து கொண்டார். சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக ஒரு தடவை அவன் புகைப்படம் மற்றும் அங்க அடையாளங்களை தனிமையில் ஒப்பிட்டுப் பார்த்து உறுதி செய்துகொண்டார். ஆனால், தான் தாவூத் இஸ்மாயிலை அடையாளம் தெரிந்து கொண்டதை வெளிக்காட்டிக் கொள்ளவே இல்லை.

மாலை நேரத்தில் தாஸிடமிருந்து போன் வந்தது. விசாரணையும், நடவடிக்கைகளும் படுசுறுசுறுப்பாக நடைபெறுவதாகவும், மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றும் தாஸ் தெரிவித்தார்.

செய்தித்தாள்களை உடனுக்குடன் தன் கைக்குத் கிடைக்கும்படி தாவூத் இஸ்மாயில் ஏற்பாடு செய்திருந்தான்.

வில்லியம் பிளெய்க் கடத்தி வரப்பட்ட மூன்றாவது நாளன்று, ஐஸ்கிரீம் வியாபாரி வேடத்தில் வந்த ஒரு நபர் தாவூத் இஸ்மாயிலுக்குப் பத்திரிகைகள் எடுத்து வந்தார் தாஸ்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தவர். ஐஸ்கிரீம் விற்பவர் இத்தனை பத்திரிகைகள் வாங்கிப் படிக்கிறாரா என்று யாரும் சந்தேகப்படக் கூடாது என்பதால், ஐஸ்கிரீம் பெட்டியின் அடியில் அதற்கென்றே ரகசிய அறை ஒன்று தயாரிக்கப்பட்டது. ஐஸ் வியாபாரியாகப் பத்திரிகைகளை தாவூதிடம் ஒப்படைக்கும் வேலையைச் செய்தவர் சர்க்கஸ் கம்பெனி ஊழியர் ஒருவர்தான்.

வில்லியம் பிளெய்க் ஆங்கிலப் பத்திரிகைகளைப் புரட்டியபோது, கொச்சி நகரிலுள்ள பிரபலமான ஓட்டல் ஒன்றில்

பாரீஸ் நகரைச் சேர்ந்த காபரே டான்ஸரின் நிகழ்ச்சி ஒன்று நடைபெறப் போகிறது என்கிற விளம்பரத்தைக் கவனித்தார்.

உடனே அந்த நிகழ்ச்சிக்குப் போக வேண்டும் என்கிற வேட்கை வில்லியமிடம் உயர்ந்தது.

வில்லியமின் ஆசைக்கும் ஒரு காரணமிருந்தது. காபரே டான்ஸர் லூஸியாவுடன் ஏற்கெனவே அவருக்குப் பழக்கமிருந்தது. பழக்கம் என்றால் நெருக்கமான பழக்கம்.

மேலை நாடுகளில் துப்பறியும் பிரிவினர் தாங்கள் ஏற்றுள்ள வழக்குகளை நிரூபிப்பதற்காக எல்லா வகையான வழிமுறைகளையும் பின்பற்றுவர். அப்படி ஒரு கட்டத்தில் லூஸியாவிடம் நெருங்க நேர்ந்து, அந்த நட்பு அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டது.

ஒரு தடவை பகை நாடு ஒன்றின் ராணுவ ரகசியங்களை அறிந்து கொள்வதற்காக லூஸியாவைப் பயன்படுத்திக்கொள்ள நேர்ந்தது.

லூஸியா சரியான ஓர் அழகி!

உடற்கட்டும், அழகும், தங்கநிறத் தலைமுடியும் கொண்ட அவள் மேனி ரோஜாப்பூவின் வண்ணத்துடன் இருந்தது.

எதிரி நாட்டின் ராணுவ அமைச்சரை வசியப்படுத்திக் காரியம் சாதிக்கவேண்டிய பொறுப்பை வில்லியமிடம் ஒப்படைத்திருந்தனர். எனவே, அதற்காக அந்த அமைச்சரின் நடவடிக்கைகள், அன்றாட அலுவல்கள், பலம் - பலவீனம் உட்பட எல்லாவற்றையும் வில்லியம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமானது. ஐம்பத்தைந்து வயதான ராணுவ அமைச்சர் அழகான பெண்கள் என்றால் சுலபமாகப் பழகுவார் என்று வில்லியமுக்குப் புரிந்தது அமைச்சரின் மனைவியிடம் முதலில் நட்புறவை ஏற்படுத்திக்கொண்ட லூஸியா, அதை வைத்தே விரைவில் அமைச்சருக்கும் அறிமுகமானாள். லூஸியாவின் அழகும் நெருக்கமும் ராணுவ அமைச்சரின் மலரும்

நினைவுகளைக் கிளறி, உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்ததால், விரைவிலேயே இருவரும் ரகசியமான இடங்களில் ஓய்வெடுக்கச் சென்றனர். ஒரு கட்டத்தில் ஒரு நிமிடம்கூட லூஸியாவைப் பிரிந்திருக்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டார் அமைச்சர். லூஸியா அவரை அந்த அளவுக்குக் கிறங்க அடித்திருந்தாள்.

ராணுவ அமைச்சர் இடறி தலைகுப்புற விழுந்தே போனார்.

நேரடியாகப் போர்முனைக்குச் சென்று குண்டு வீசுவதுடன், அந்தப் பகுதியில் ஏற்படும் விளைவுகளை வீடியோ படமாக எடுக்கும் கருவி ஒன்றை அந்த நாடு கண்டுபிடித்திருந்தது. கட்டளைகள் முழுவதும் கம்ப்யூட்டர் மூலமே மேற்கொள்ளப்பட்டன.

இந்த ரகசியங்கள் அடங்கிய ஃபைல் அமைச்சரின் அந்தரங்க அறையில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த அறைக்குள் அமைச்சர் தன் சொந்த மனைவியைக்கூட அனுமதிப்பதில்லை.

அப்படிப்பட்ட அந்தரங்க அறைக்குள் மட்டுமே மேற்கொண்டு அமைச்சருடன் பேசுவேன், இருப்பேன் என்று லூஸியா பிடிவாதம் பிடித்தாள். அங்கிருப்பதெல்லாம் காதல் சூழ்நிலைக்கு ஒவ்வாத எலெக்ட்ரானிக்ஸ் உபகரணங்கள் என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னார் அமைச்சர். ஆனால், லூஸியா எதற்கும் மசியவே இல்லை.

கடைசியில், லூஸியாவின் பிடிவாதத்துக்கு அமைச்சர் இணங்குவதைத் தவிர வேறு வழியில்லை. ஓர் இரவை அந்த அறைக்குள் செலவிட்டனர்.

வில்லியம் பிளெய்க் கொடுத்திருந்த மயக்க மருந்து கலந்த மதுவை, அமைச்ருக்குக் கொடுத்தவுடன் அவர் சுயநினைவற்று மயக்கமடைந்தார். அந்தச் சமயத்தைப் பயன்படுத்தி, மாக்னெட் சாவியின் உதவியால் அறை முழுவதையும் பரிசோதித்தாள்.

கடைசியில் பத்திரமான இடத்தில் மறைத்து வைத்திருந்த அந்த ஃபைலைக் கண்டுபிடித்து எடுத்தாள். இரவோடு இரவாக அதை ஜெராக்ஸ் பிரதியெடுத்து வில்லியமிடம் வழங்கவும் செய்தாள்.

அந்த ராணுவ ரகசியம் வெளியானதைத் தொடர்ந்து அமைச்சர் பதவி விலக நேர்ந்தது. விசாரணை, வழக்கு என்று தொடர்ந்ததில் அமைச்சர் சிறைக்குப் போனார். லூஸியா கெட்டிக்காரத்தனமாக இதிலிருந்து தப்பித்துவிட்டாள்.

அதற்குப் பிறகு வில்லியமுக்கு லூஸியாமீது ஒரு விதப் பிடிப்பு ஏற்பட்டது. லூஸியாவே எதிர்பாராத ஒரு பெரும் பரிசை வழங்கினார் வில்லியம்.

அதன்பிறகு அவளை அடிக்கடி சந்திக்க விரும்பினாலும் அதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. இதோ இப்போது கொச்சி நகருக்கு வந்திருக்கிறாள்.

தான் தாவூத் இஸ்மாயிலிடம் சிறைப்பட்டிருப்பதால் வெளியேற முடியாது என்று வில்லியமுக்குத் தெரிந்தாலும், தாவூத்திடம் இது குறித்துப் பேச வேண்டுமென்று தீர்மானித்தார்.

“மிஸ்டர் தாவூத், உங்களை நான் பரிபூரணமா நம்புறேன். நீங்கள் எல்லா விஷயத்திலும் மிகவும் கெட்டிக்காரத்தனமாக நடந்து கொள்கிறீர்கள். என்ன காரணத்துக்காகவோ என்னை உங்கள் கட்டுப்பாட்டில் சிறை வைத்திருக்கிறீர்கள். நாம் இப்படியே நாட்களைக் கடத்துவதில் பயன் ஏதும் இல்லையென்று தோன்றுகிறது. எனக்கும் தனிப்பட்ட முறையில் சில விஷயங்களுக்குச் சுதந்திரம் தேவைப்டுகிறது.”வில்லியம் பிளெய்க் கூறினார்.

“உங்களுக்கு உரிய பரிசை நான் தருகிறேன். உண்மையைச் சொன்னால் நான் உங்களை இங்கே கொண்டு வந்திருப்பதற்கு என்னுடைய சில தேவைகள்தான் காரணம் -குறிப்பாகச் சொன்னால் என்னுடைய பாதுகாப்பை முன்னிட்டு. ஒரு வகையில்

நீங்களும் நானும் ஒரே மாதிரிதான். வெவ்வேறு நோக்கத்துடன் ஒரே மாதிரிச் செயல்படுபவர்கள்."

"அதனால்தான் உங்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றி பேசலாம் என்று நினைக்கிறேன்." வில்லியம் அணைத்து வைத்திருந்த சுருட்டைப் பற்ற வைக்க முயன்றபோது தாவூத் அதை தடுத்தவாறே சொன்னான் "உங்களுக்காகவென்றே உங்களது ஆ்ஃ ப் எகரோனா சுருட்டை ஸ்பெஷலாக வரவழைத்திருக்கிறேன்." பின்பு மேஜையைத் திறந்து மரத்தாலான ஒரு சிறு பெட்டியை எடுத்துக் கொடுத்தான்.

"அதைப் பார்த்தவுடன் வில்லியம் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். உடனே அதிலிருந்து ஆ்ஃ எ கரோனா சுருட்டு ஒன்றை எடுத்து, பாலிதீன் உறையை நீக்கி, மூடியுள்ள அடிப்பகுதியைக் கடித்து இழுத்தார்.

தாவூத், சிகார் லைட்டை எரியவிட்டு அவர் சுருட்டுப் பற்றவைக்க உதவினான்.

"என்னமோ சொல்ல வந்தீங்களே... அதை முழுசா சொல்லி முடிச்சுடுங்களேன்"தாவூத் கேட்டான்.

"இந்த விளம்பரத்தைப் பார்த்தீங்களா?"

"லூஸியாவின் காபரேவைத்தானே சொல்கிறீர்கள்?"தாவூத் வெகு சாதாரணமாகக் கேட்டான்.

"லூஸியாவை உங்களுக்கு தெரியுமா என்ன?" வில்லியம் வியப்புடன் கேட்டார்.

"தெரியும். லூஸியாவின் நடனத்தை மூன்று தடவைக்குமேல் பார்த்திருக்கிறேன்."

"அப்படியானால் என் வேண்டுகோளை உங்களிடம் சொல்வதில் தவறில்லை!"

"சொல்லுங்கள்!"

"லூஸியாவின் டான்ஸை நான் பார்க்கவேண்டும்!"

"அது அவ்வளவு அவசியமா?"

வடிகட்டி, மறைக்க வேண்டியவற்றையெல்லாம் மறைத்து ஓரளவுக்கு லூஸியாவுடனான தனது நட்பை வெளியிட்டார் வில்லியம்.

அதைக் கேட்டவுடன் பராக்கிரமசாலியான தாவூதுக்கு வில்லியமின் மீது ஒரு வித மதிப்புத் தோன்றியது.

"மிகவும் சிக்கலான சமாசாரம்! உங்களுக்கே தெரியும். இது என்னையும் உங்களையும் ஒரே நேரத்தில் பாதிக்கும் விஷயம்."

"உங்கள் நிலைமையும் எனக்குத் தெரிகிறது. ஆனால், எதையெல்லாமோ அனாயாசமாகச் செய்து முடிக்கும் உங்களுக்கு, இதெல்லாம் ஒரு பொருட்டே இல்லையென்றுதான் எனக்குப்படுகிறது" வில்லியம் உறுதியான குரலில் பேசினார்.

"முயற்சி செய்கிறேன். இன்று அல்லது நாளை நாம் லூஸியாவின் டான்ஸைப் பார்க்கலாம்." தாவூத் பேசினான்.

மதிய உணவுக்குப் பிறகு வில்லியம் கண்ணயர்ந்து கொண்டிருந்தார். தாவூத் பத்திரிகையில் வெளிவந்த காபரே நடன விளம்பரத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

டெலிபோன் மணி ஒலித்தது.

தாவூத் ரிசீவரை எடுத்து காதருகே கொண்டு போனான்.

"ஹலோ!"

"நான் டாக்டர் சுகாசினி பேசறேன்."

"யார்?" அதட்டலாகக் கேட்டான்.

"சாரி..." எதிர்முனையில் போன் துண்டிக்கப்பட்டது.

நடந்தது இதுதான்.

நகரின் புகழ்பெற்ற தனியார் மருத்துவமனையின் டாக்டர் சுகாசினி. அவள், தனது நினேகிதியான விலாசினியுடன்பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருந்தாள். பேசியதும் யதேச்சையாக 0999 என்ற நம்பரை கைபோன போக்கில் அழுத்தினாள். என்ன ஆச்சரியம், எதிர்முனையில் மணியடித்ததும் யாரோ ஒருவர் எடுத்துப் பேசுகிறார்.

திரும்பவும் விலாசினிக்கு போன் செய்து "டாக்டர், 0999 என்கிற நம்பர் புழக்கத்தில் உண்டா என்ன?" என்று கேட்டாள்.

"அப்படியொரு நம்பர் டைரக்டரியிலேயே கிடையாதே. ஒரு வேளை உன் பிரமையாக இருக்கலாம்."

சுகாசினி திரும்பவும் அதே நம்பரை டயல் செய்தாள் எதிர்முனை யார் என்று கேட்டபோதே பழையபடியே பதிலளித்தாள். 'உங்கள் விலாசம் என்ன?' என்ற கேள்விக்கு, உண்மையான விலாசத்தையே பதிலாகத் தந்தாள். சொல்லிவிட்டு "நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

எதிர் முனையிலிருந்து கிடைத்த பதில் டாக்டர் சுகாசினியை நடுங்க வைத்தது!

# 10

"கடவுளே நான் கேட்டது உண்மைதானா!" ரிசீவரை வைத்தபடி சுகாசினி தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருக்கும் ஒரு பெரும்புள்ளியா தன்னுடன் பேசியது!

அவன் எப்படிப்பட்டவனாக இருப்பான்? முன் எப்போதோ ஒரு தடவை புகழ்பெற்ற ஆங்கில இதழ் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தபோது படித்த செய்தி ஒன்று அவளது நினைவில் எழுந்தது.

'உலகக் கடத்தல் புள்ளிகள்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரையில் தாவூத்தின் படமும் இருந்தது. போட்டோவாக இல்லாமல் போட்டோ போலவே வரையப்பட்ட ஓர் ஓவியம் அது.

அந்த இதழில் கேன்ஸர் நோய்க்குப் புதிதாக ஒரு மருந்து கண்டுபிடித்திருப்பதைப் பற்றிச் செய்தி வெளியிட்டிருந்தனர். அதனால் அந்த இதழ் முழுமையையும் படித்துவிட்டு அதை பத்திரமாக எடுத்து வைத்த ஞாபகம்.

'அந்த புத்தகத்தை எங்கே வைத்திருக்கிறேன்?' யோசித்தவாறே முக்கியமான ஃபைல்கள் வைத்துள்ள அலமாரியைக் குடைந்தாள். அரைமணி நேரத் தேடலுக்குப் பிறகு அது அவள் கைக்குத் தட்டுப்பட்டது.

புத்தகத்தைப் புரட்டி மறுபடி அந்தக் கட்டுரையை வாசித்தாள். 'பயங்கரமான கடத்தல் காரர்கள்' என்ற வரிசையில் தாவூத் இஸ்மாயிலின் படமும் செய்தியும் இடம் பெற்றிருந்தன.

எல்லாவற்றையும் படித்த பிறகு அவள் மனத்தில் ஓர் உருவம் தானாகவே வடிவம் பெற்றது. புகழ்பெற்ற துணி விளம்பரம் ஒன்றில் கோட் சூட் அணிந்த, ட்ரிம் செய்த தாடியோடு தென்பட்ட இளைஞனாக தாவூத், அவளுக்குத் தோன்றினான். தாடியில்லாமல் முஸ்லிம் இளைஞன் ஒருவனை அவளால் கற்பனை செய்ய முடியவில்லை.

கட்டுரையை படித்து முடித்த பிறகு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவள், பத்திரிகையை டேபிள் மீது போட்டபடி கண்ணயர்ந்தாள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு தனக்கு வந்த கடிதங்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்தாள் டாக்டர் சுகாசினி. அதில் ஒரு கிரீட்டிங்ஸ் கார்டும் இருந்தது. அழகான கவருக்குள் பத்திரமாக ஒட்டப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட வாழ்த்து அட்டைகள் சாதாரணமாக மருந்துக் கம்பெனிகளிலிருந்து

வருவதுண்டு. ஆனால், இப்போது அப்படி வாழ்த்து அனுப்பும் சீஸன் அல்ல. எனவே கடைசியாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று ஒதுக்கி வைத்தாள்.

கடைசியில் அந்த உறையைப் பிரித்தாள். ஆடம்பரமான, பெரிய ஒட்டல் ஒன்றில் நடைபெறவுள்ள நடனக் காட்சிக்கான அனுமதிச்சீட்டு ஒன்றுடன் கடிதம் ஒன்றும் இருந்தது.

"மதிப்புக்குரிய டாக்டர்,

இந்தக் கடிதத்தை எழுதியதற்காக என்னை மன்னியுங்கள். இதுவரை நான் உங்களை நேரில் பார்த்ததில்லை. உங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், முதல் தடவையாக தொலைபேசியில் நீங்கள் பேசியதிலிருந்து இன்னும் தெளிவாகச் சொல்வதானால் உங்கள் குரலைக் கேட்டதிலிருந்து உங்கள் மீது என்னவென்று விவரிக்க முடியாத மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை இது முட்டாள்தனமாகவும் இருக்கலாம். காபரே என்று சொன்னவுடன் உங்களுக்கு யோசனைகள் எந்தத் திசையில் பாயும் என்பதை நானறிவேன். உண்மையைச் சொல்வதானால் காபரே டான்சர் லூசியாவை எனக்கு முன்னமேயே தெரியும். எனவே அவள் நடனத்தைப் பார்க்க விரும்புகிறேன். உங்களை நான் ஏமாற்றுவதாகவோ, இதை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதாகவோ நீங்கள் நினைக்கக் கூடாது. ஒருவேளை இந்த நடனம்கூட என்னை எதிலாவது சிக்க வைக்கப் போட்ட திட்டமாகவும் இருக்கலாம். இருப்பினும் நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமாகலாமே. நீங்கள் விரும்பினால் அந்த நடனத்துக்கு வரலாம். ஓட்டலில் நாம் சந்திக்கலாம். ஓட்டல் ரிசப்ஷனிஸ்ட்டிடம் நீங்கள் யார் என்பதை மட்டும் சொன்னால் போதும்.

இவ்வண்ணம்

தாவூத் இஸ்மாயில்,.

அந்தக் கடிதம் சுகாசினியின் கையில் காற்றில் அலையும் ஓர் இலைபோல் படபடத்தது.

'என்ன செய்யலாம்?'-அவள் யோசித்தாள்.

'டான்ஸ் நிகழ்ச்சிக்குப் போகலாமா, வேண்டாமா?

போனால் அது முறையாகுமா?

போகாமலிருந்தால் அந்த மனிதர் என்ன நினைப்பார்?

இந்த நிமிடம் வரை நான் நேரில் பார்க்காத அந்த மனிதர் எப்படி என்னுள் இந்த அளவுக்கு சுவாதீனம் செலுத்துகிறார்? இந்தச் சூழ்நிலையில் என்னதான் செய்வது?'

ஒரு தடவை அவனை நேரில் பார்க்கவேண்டுமென்ற வேட்கை எப்போதோ அவள் மனத்தை அடிமைப் படுத்தியிருந்தது.

கடைசியாக நடனத்துக்குப் போவதென்று தீர்மானித்தாள்.

கடிதத்தை மறுபடி உறைக்குள் போட்டாள். மிகவும் முக்கியமான கடிதங்களைப் பத்திரப்படுத்தும் அலமாரிக்குள் அதை வைத்துப் பூட்டினாள்.

நடன நிகழ்ச்சிக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. அவள் எந்த நேரமும் அதையே மனத்தில் நினைத்துக் கொண்டிருந்தாள். மருத்துவமனையில் வேலை பார்த்த நேரம் போக மற்ற நேரமெல்லாம் அவள் தாவூத் இஸ்மாயிலின் நினைவாகவே இருந்தாள். அவன் அனுப்பிய கடிதம் அவளை அந்த அளவுக்கு அலைக் கழித்தது.

மற்றொரு விதத்தில் சொன்னால் அதற்காக அவள் பெருமிதப்படவும் செய்தாள். ஆனால், மறுகணமே தன் பெருமிதம் நியாயமானதுதானா என்றும் யோசித்தாள். அகில உலகக் கடத்தல்காரன் மீது எனக்கு அன்பு என்பது பெருமிதப் படக்கூடிய ஒன்றுதானா?

மருத்துவ மனையிலிருந்து வீட்டுக்கு வந்த பிறகு அவளது கவனம் முழுவதும் டெலிபோனின் மீதே இருந்தது. எந்த நேரத்திலும் தாவூத் இஸ்மாயிலிடமிருந்து போன் வரலாம் என்று

எதிர்பார்த்தாள். ஆனால், அப்படியொரு சம்பவம் நடக்கவேயில்லை.

அன்றொரு நாள் தவறுதலாகத் தான் ரிங் செய்த நம்பரை ஞாபகப்படுத்திப் பார்த்தாள். 999,909,9990,9009... ஒவ்வொன்றையும் டயல் செய்து பார்த்தாள். ஒவ்வொரு தடவையும் எதிர்முனையில் யாரோ போனை எடுத்தார்கள் ஆனால், அவர்களிடம் 'தாவூத் இஸ்மாயில்தானா?' என்று எப்படிக் கேட்பது.

'கடவுளே, அப்படியே அது அவராக இருந்தாலும் அதை வேறு யாராவது தெரிந்து கொண்டு, எங்கள் இருவரைப் பற்றியும் போலீஸுக்குத் தெரிவித்துவிட்டால் என்ன செய்வது? ஒன்றிரண்டு தடவை யாரோ எதிர்முனையிலிருந்து ஹலோ என்று கேட்டபோது, "டாக்டர் சுகாசினி பேசுகிறேன்" என்றாள். நம்பர் சரிதானா என்று சரி செய்வதாகக் கூறினாள்.

தாவூத் இஸ்மாயிலின் போன் நம்பர் மட்டும் மறந்தே போனது. சரி, எப்படியும் லூஸியாவின் நடனத்தில் சந்திக்கப் போகிறோமே என்று ஒரு வகையாக ஆறுதலடைந்தாள்.

லூஸியாவின் நடனம் நடைபெறுகிற நாளன்று நிகழ்ச்சி தொடங்கும் நேரத்தைச் சிறிது மாற்றியிருப்பதாக அன்றைய பத்திரிகைகளில் விளம்பரம் வெளியாகியது. நடனம் ஏழு மணிக்கு ஆரம்பமாகும் என்று கூறியது அந்த விளம்பரம்.

சரியாக ஆறுமணிக்கு டி.எஸ்.பி. ஹமீது ஆகியோர் ஓட்டலுக்கு வந்து சேர்ந்தனர்.

''அவன் கண்டிப்பாக இன்றைய டான்ஸுக்கு வருவான்!" அலெக்ஸ் கூறினார்.

"எந்த மாதிரி வேடத்தில் வரப்போகிறானோ?" ஹமீது கேட்டார்.

"கண்டிப்பாகப் பார்வையாளர்களில் ஒருவனாகவாவது

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பார்வையாளர்கள் ஒவ்வொருவரையும் தனியாகப் பரிசோதிக்க வேண்டியிருக்குமோ?"

''வேண்டாமென்றுதான் நினைக்கிறேன்'' அலெக்ஸ் சொன்னார்.

"வேறு என்னதான் செய்வது?"

"யோசிப்போம்!"

அப்போது ஓட்டல் மேனேஜர் அங்கு வந்தார்.

"ஹலோ மிஸ்டர் ஜாக்ஸன் பெரேரா, ஏதாவது தெரிந்ததா?"

"என் பக்கத்தில் எதுவும் தெரியவில்லை. நீங்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?" மேனேஜர் கேட்டார்.

"எல்லோரையும் ஒட்டுமொத்தமாகப் பரிசோதனை செய்து விடலாமென்று நினைக்கிறோம்." -ஹமீது கூறினார்.

"அதுதான் நல்லதென்று தோன்றுகிறது. ஆனால், அது சாத்தியமல்லவென்றும் தெரிகிறது."

"பொதுவாக இது மாதிரி டான்ஸ் நிகழ்ச்சிகளைப் பார்க்க வருபவர்கள் நகரின் முக்கியப் பிரமுகர்கள். அவர் களையெல்லாம் நாம் பரிசோதித்துக் கொண்டிருப்பது சாத்தியமா? அது இந்த ஓட்டலின் நல்ல பெயரைப் பாதிக்குமே!"

''அப்படியானால் ஒன்று செய்வோம். உங்களுக்குப் பழக்கமில்லாத மனிதர்களை மட்டும் நாங்கள் பரிசோதித்துக் கொள்ளலாமா?"

"அது நியாயம்தான். இருந்தாலும்..."

அவர்கள் உட்கார்ந்து பேசிக்கெண்டிருக்கிற இடத்திலிருந்து பார்த்தால் வரவேற்பு ஹாலும், ஹாலைத் தாண்டி கார்கள் வந்து நிற்கும் போர்ட்டிகோவும் நன்றாகத் தெரிந்தது.

அப்போது--

டாக்டர் சுகாசினி தனது காரை ஓட்டிக்கொண்டுவந்து நிறுத்தினாள்.

# 11

டாக்டர் சுகாசினி காரிலிருந்து இறங்கி நேராக வரவேற்பு கௌண்ட்டரை நெருங்கினாள்.

"டாக்டர் சுகாசினி!" வரவேற்பாளர் இருக்கையில் இருந்த இளைஞனிடம் சொன்னாள்.

உடனே தலைதாழ்த்தி டிராயரைத் திறந்து இரு நூற்றியேழாம் நம்பர் அறையின் சாவியை எடுத்து அவளிடம் கொடுத்தான் இளைஞன். "நடனம் ஆரம்பிப்பதுவரை நீங்கள் அந்த அறையில் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்."

மேற்கொண்டு எதுவும் பேசாமல் சாவியை வாங்கிக் கொண்டு லிஃப்டை நோக்கி நடந்தாள்.

மூன்றாவது மாடியில் லிஃப்ட் நின்றதும் வெளியே வந்தாள். எதிரே தென்பட்ட ஓர் அறையின் நம்பரைப் பார்த்தாள். இரு நூற்றியேழு எங்கிருக்கும் என்று அனுமானித்தவளாக நடந்தாள். சரியாக அந்த அறையின் முன்னால் நின்றாள். இரண்டு புறமும் திரும்பிப் பார்த்தாள். வராந்தாவின் இடது மூலையில் யாரோ நின்றபடி அவளைக் கவனிப்பது தெரிந்தது. அதைப் பொருட்படுத்தாதவளாக அறையைத் திறந்து உள்ளே நுழைந்ததும் கதவைத் தாழிட்டுக்கொண்டாள்.

அறைக்குள் ஃபேன் விரைவாகச் சுழன்று கொண்டிருந்தது. விலையுயர்ந்த மேல்நாட்டு 'சென்ட்'டின் மணம் அறைக்குள் 'கும்'மென்று மணத்தது.

அடுத்த நொடி அவள் கண்கள் திடுக்கிட்டு உயர்ந்தன. ஃபேன் அறைக்குள் விரைவாகச் சுழல்வதைப் பார்த்ததும் தான்

ஏதோ ஆபத்தில் சிக்கிக்கொண்டதாக உள்ளுணர்வு கூறியது. சட்டென்று பனிப்படலம் சூழ்ந்து கொண்டதாகத் தோன்றியது.

ஒரு கணத்துக்குள் தன்னைச் சுதாரித்துக்கொண்டு திரும்பி நின்று எதிர்ப்புறம் பார்த்தபோது ஜன்னலை ஒட்டி ஒரு மனிதன் வெளிப்புறத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. சட்டென்று கதவைத் திறந்துகொண்டு வெளியேற முற்பட்டவளை ஒரு குரல் தடுத்தது.

"கொஞ்சம் நில்லுங்கள்!"

நின்று திரும்பிப் பார்த்தாள். அழகான இளைஞன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் வலது கையில் சிகரெட் ஒன்று புகைந்து கொண்டிருந்தது. மழமழவென்று ஷேவ் செய்த முகம். அலட்சியமாக ஒதுக்கிவிடப்பட்டிருந்த தலைமுடி. இந்தி சினிமாவுலக இளம் கதாநாயகனைப்போல் இருந்தான்.

"நீங்கள் எதிர்பார்த்த நபர் நான்தான்!"

"தாவூத் இஸ்மாயில்!" அவள் உதடுகள் அந்தப் பெயரை மெதுவாக உச்சரித்தது.

"ஆமாம்... அதே நபர்தான். உட்காருங்கள். வியப்பாக இருக்கிறதா?" புன்னகைத்தபடி அவன் கேட்டான்.

அந்த முதல் சந்திப்பிலேயே அவன் மீது அவளுக்கு இனம் புரியாத ஓர் ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது. அவள்து மனத்திலிருந்த அதே உருவம்தான் எதிரிலும் நின்று கொண்டிருக்கிறது.

"என்ன பேசமாட்டேன் என்கிறீர்கள்?" தாவூத் கேட்டான்.

"ம்..." வார்த்தைகளை மென்று விழுங்கினாள்.

"யாரோ உங்களை ஏமாற்றிவிட்டதாக நினைத்து விட்டீர்கள் இல்லையா?"

"உண்மைதான்!"

"இவ்வளவுமுன்னெச்சரிக்கைகள் எனக்குத் தேவைப்படுகிறது. இப்போதுகூட யாராவது வெளியில் காத்திருப்பார்களே"-பாதி புகைத்த சிகரெட்டை ஆஷ்ட்ரேக்குள் அழுத்தித் தேய்த்து அணைத்தபடி அவளுக்கு எதிரிலிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

"என்னைப் பற்றி மிகவும் பயங்கரமான கதைகளைக் கேள்விப்பட்டிருப்பீர்கள், அப்படித்தானே?"

பதில் எதுவும் சொல்லாமல் சிரித்துக்கொண்டாள்.

"வாழ்க்கையை எப்போதும் 'த்ரில்'லுடன் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புபவன் நான்! அதனால்தான் இந்த நடனம் பார்க்க வந்திருக்கிறேன். உண்மையைச் சொன்னால், இந்த நடன நிகழ்ச்சியே எனக்காக விரிக்கப்பட்ட வலை. அதுவும் எனக்குத் தெரியும்." தாவூத் இஸ்மாயில் சாதாரணமான குரலில் பேசினான்.

"டாக்டர் சுகாசினி, உங்களை இங்குள்ள யாருக்காவது தெரியுமா?"

"சிலருக்குத் தெரியும்!"

"நீங்கள் டாக்டர் என்பதும் அவர்களுக்குத் தெரியுமா?"

"என்னைத் தெரிந்தவர்களுக்கெல்லாம் அதுவும் தெரியும்."

"நல்லவேளை! அப்படியானால் எனக்கு ஒரு கவலை தீர்ந்து விட்டது. நான் எப்படியும் நடன நிகழ்ச்சியைப் பார்த்து விடலாம். நான் உங்ககூட வருவேன்னு யாருமே எதிர்பார்க்க மாட்டாங்க!" -அவன் தனது இருக்கையிலிருந்து எழுந்து மேஜை மீதிருந்த சிறிய சூட்கேஸைத் திறந்து நூறு ரூபாய் நோட்டுக்கட்டுகள் இரண்டை எடுத்து சுகாசினியின் முன்னால் வைத்தான்.

"இதை என்னுடைய அன்பளிப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்!" தாவூத் கூறினான்.

"மன்னிக்கணும்! நான் இதை எதிர்பார்த்து இந்த இடத்துக்கு வரலை."

“பணம்ங்கிறது எப்படிப்பட்டவங்களுக்கும் தேவையான ஒண்ணுதானே! எவ்வளவோ பணம் எங்கிட்டேயிருந்து எப்படியெல்லாமோ செலவாகுது. அதுல ஒரு சின்னப் பகுதியை மனசுக்குப் பிடிச்சவங்களுக்குக் கொடுக்கிறதுல எந்தத் தப்பும் இல்லையே?”

“நீங்க ஆயிரம் சொன்னாலும் இந்தப் பணம் எனக்குத் தேவையில்லை.” சுகாசினி உறுதியுடன் கூறினாள்.

“அப்புறம் உங்க இஷ்டம்!”-தாவூத் அந்தப் பணத்தை மறுபடி சூட்கேஸுக்குள் எடுத்து வைத்தான்.

அறையிலிருந்த இண்டர்காம் ஒலித்தது.

தாவூத் ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தான். “நடனம் ஆரம்பமாகப் போகிறது. வாருங்கள் கிளம்பலாம்.” ரிசீவரை வைத்தபடி தாவூத் கூறினான்.

இருவரும் காபரே நடக்கும் ஹாலை நோக்கி நடந்தனர்.

அவர்களை யாருமே கவனித்ததாகத் தெரியவில்லை.

பெரும்பாலும் பார்வையாளர்கள் இரண்டு மூன்று நபராகவோ குடும்பமாகவோ வந்திருந்தனர். அதில் ஒரேயொரு இளைஞன் மட்டுமே தனியாக வந்திருந்தான். ஏராளமான தாடியுடன், சுருண்ட தலைமுடியுடன் காணப்பட்டான். பேண்ட்--ஷர்ட் அணிந்திருந்த அந்த இளைஞனின் வாய், பைப் ஒன்றைக் கவ்வியிருந்தது.

ஆயிரம் ரூபாய் கட்டண வரிசையில் அமர்ந்திருந்தான் அந்த இளைஞன்.

பாப் இசை காற்றில் பரவிக் கொண்டிருந்தது. லூஸியாவை அறிமுகப்படுத்தும் வார்த்தைகள் மைக்கில் ஒலிக்கத் தொடங்கியதும் இசை சட்டென்று அடங்கியது.

டி.எஸ்.பி. அலெக்ஸ் மற்றும் ஹமீதின் கண்கள் ஒவ்வொரு முகங்களையும் கவனித்துக்கொண்டே வந்தன. அவர்களின் பார்வை கடைசியில் தாடிக்கார இளைஞன் மீது நிலைத்தன.

அலெக்ஸ், மப்டியில் நின்றிருந்த போலீஸ்காரர்களைப் பார்த்தார். அவர்களும் அந்த இளைஞனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

பார்வைக்குப் பணக்கார இளைஞனாக இருந்தான். விலை உயர்ந்த உடைகளுடன் ராடோகோல்டு வாட்ச் அணிந்திருந்தான்.

டி.எஸ்.பி. கண்ணைக் காட்டி சைகை செய்தபோது மப்டி போலீஸார் அந்த இளைஞனை நெருங்கினர்.

“அநேகமாக அவன்தான் தாவூத் இஸ்மாயில் ஆக இருக்க வேண்டும். நிகழ்ச்சி முடிவதுவரையில் அவனை எச்சரிக்கையோடு கவனித்து வாருங்கள். அவசரப்பட்டு அவனை நெருங்கிப் பிடித்துவிடாதீர்கள்!” அலெக்ஸ் கூறினார்.

“அவ்வளவு நேரம் நாம் காத்திருக்க வேண்டுமா என்ன?” ஹமீது கேட்டார்.

“தாவூத் இஸ்மாயில் நாம் நினைக்கிறபடி சாதாரணமானவன் அல்ல. பயங்கரமானவன். அவன்கிட்ட வெடிபொருள்கள் ஏதாவது இருக்கலாம். நாம் அவனைச் சூழ்ந்துகொண்டோம், தப்பிக்க வேறு வழியில்லை என்று தெரிந்தால் அவன் எதையும் செய்யலாம்.”

“அதற்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. நான் அதைப் பற்றி யோசிக்கவே இல்லை!”

“எதற்கும் தயங்காதவன்தான்!”

“ஒன்று செய்வோம்.... நிகழ்ச்சி முடிவது வரையில் அவனைக் கவனிப்போம். ஓட்டலை விட்டு அவன் வெளியேறுவதற்குள் பிடிக்கவேண்டும்! அதில் கோட்டை விடக்கூடாது!” அலெக்ஸ் மப்டி போலீஸ்காரர்களிடம் ரகசியமான குரலில் எச்சரித்தார்.

அதற்குள் நடனம் ஆரம்பமாகி விட்டிருந்தது. வட்டமான ஸ்பாட் லைட்டின் வெளிச்சம் லூஸியாவின் உடம்பை வஞ்சனையின்றி நனைத்துக் கொண்டிருந்தது.

டாக்டர் சுகாசினியையும், இஸ்மாயிலையும் போலீஸ் அதிகாரிகள் கவனிக்கவே செய்தனர். அதே சமயம், மப்டி போலீஸார் இருவர் தாடிக்கார இளைஞனை நெருங்கி, விலகி வந்து மறுபடியும் நெருங்குவதையும் இஸ்மாயில் கவனிக்கத் தவறவில்லை.

ஒரு மணிநேரம் கடந்ததே யாருக்கும் தெரியவில்லை.

நிகழ்ச்சி முடிவடைந்தது.

பார்வையாளர்கள் ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர். அவர்களுடன் இஸ்மாயிலும், டாக்டர் சுகாசினியும் இருந்தனர். தாடிக்கார இளைஞன் கடைசியாக வெளியேறத் தொடங்கினான்.

"எந்தவிதச் சிக்கலும் இல்லை, தாடிக்காரன் நம் கையில் சிக்கிவிட்ட மாதிரிதான்!"

தாடிக்காரன் லிஃப்டை நெருங்கியபோது, "உங்களைப் பார்ப்பதற்க்காக இரண்டு பேர் காத்திருக்கிறார்கள்!" என்று அவனை நெருங்கிய இருவரில் ஒரு மப்டி போலீஸ்காரர் கூறினார்.

அவன் கொஞ்சமும் தயங்காமல், அவர்கள் குறிப்பிட்ட திசையை நோக்கி நடந்தான். சூபரின்டெண்டெண்ட் ஹமீதின் கையில் போட்டோ ஒட்டிய ஓர் அட்டையை எடுத்து நீட்டினான் தாடிக்கார இளைஞன்.

"ஓகோ...பத்திரிகை நிருபரா!"

"ஆமாம் சார்!

"மன்னிக்கணும்! நாங்க வேறொரு நபர்னா உங்களைத் தப்பா புரிஞ்சிக்கிட்டோம்."

"பரவாயில்லை போகட்டும். பத்திரிகைக்குக் கொடுக்கிற மாதிரி உங்ககிட்ட ஏதாவது செய்தி இருக்கா சார்?"

"இருக்கிறதே!"

"சொல்லுங்க."

"இந்த நடன நிகழ்ச்சியை நாங்க ஏற்பாடு செஞ்சதே ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகத்தான். ஒரு பத்திரிகையாளர்ங்கிற முறையில அதை உங்ககிட்டச் சொல்றதுல தப்பு இல்லேன்னு நெனைக்கிறேன்." அலெக்ஸ் பேசினார்.

தாடிக்கார இளைஞன் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஸ்கிரிப்ளிங் பேடு ஒன்றையும் பேனாவையும் வெளியே எடுத்தான்.

"தாவூத் இஸ்மாயில் எப்படியும் இங்கே வருவான்னு நாங்க எதிர்பார்த்தோம். இங்கே வந்தா எப்படியும் மாட்டிக்குவோம்னு நெனைச்சதால, இந்த நிகழ்சிக்கு வராமப் போயிட்டான் போல இருக்கு!"

"உண்மையாவா சொல்றீங்க? தாவூத் இஸ்மாயிலுக்காகவா. இந்த டான்ஸ் புரோகிராமை ஏற்பாடு செஞ்சீங்க? ரியலி நல்ல டான்ஸ் சார். ஒரு விஷயம் சார். தாவூத் எங்கேயாவது போகணும்னு நெனைச்சா, என்ன வந்தாலும் அந்த இடத்துக்குப் போகாம இருக்க மாட்டான். கண்டிப்பா இங்கேயும் வந்திருந்தான். டான்ஸ் முடியறவரைக்கும் இருந்தான்."

"உங்களுக்கு அது எப்படித் தெரியும்?"

"நானே அவனைப் பார்த்தேனே!"

"நிஜமாவா சொல்றீங்க?"

"அவனைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும். எங்க பத்திரிகையிலேயே நான் அவனைப் பத்தி நிறைய எழுதியிருக்கிறேன்."

"அப்புறம் ஏன் நீங்க அதை எங்களுக்குத் தெரியப் படுத்தலை?"

"நீங்க இதுக்கு முன்னாலேயே இதைப் பற்றி என்கிட்ட ஒரு கோடி காட்டியிருந்தாலோ, விவரத்தைச் சொல்லியிருந்தாலோ கண்டிப்பா உங்களுக்கு நான் உதவியிருக்கலாம்."

"உங்களை நாங்க எந்த விலாசத்துல தொடர்பு கொள்ள முடியும்?"

"இந்தாங்க சார், இதுதான் என்னோட விசிட்டிங் கார்டு." அழகான கார்டு ஒன்றை ஹமீதின் கையில் கொடுத்தான்.

ஹமீது, கார்டை வாங்கிக்கொண்டு தாடிக்கார இளைஞனுக்கு விடை கொடுத்தார்.

போலீஸ் பட்டாளம் தங்களது சோதனைகளை முடித்துக்கொண்டு கீழ்த்தளத்துக்கு வந்தனர். ரிசப்ஷனிஸ்ட் அலெக்ஸைப் பார்த்து, "சார், உங்களுக்கு ஒரு போன் வந்திருக்கிறது!" என்றாள்.

அலெக்ஸ் ரிசீவரைப் பெற்றுக் காதருகில் கொண்டு போனார்.

"ஹலோ சார். நீங்க பேசிட்டிருந்த நிருபர் என்னோட ஆளுதான். நான்தான் அவரை அங்கே வரச் சொல்லியிருந்தேன். நானும் இன்னொரு நண்பரோட அங்க வந்திருந்தேனே!" தாவூத் இஸ்மாயில் கூறிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தான்.

ரிசீவரைக் கொடுத்துவிட்டு நேராக ஹமீதிடம் வந்த அலெக்ஸ், அவரிடமிருந்த விசிட்டிங் கார்டை வாங்கிப் பார்த்தார். பிறகு சொன்னார்.

"இந்தத் தடவை அவன் நம்ம கையில் இருந்து தப்பிக்கவே முடியாது!"

# 12

தாவூத் இஸ்மாயில் லூஸியாவின் நடனத்தைப் பார்க்க வந்திருந்தான் என்பதை அறிந்தபோது எஸ்.பி.அலெக்ஸ் கோபத்தால் முகம் சிவந்தார்.

கையிலிருந்த ரிசீவரை தரையில் வீசியடிக்க வேண்டும் போல் தோன்றினாலும் ஒருகணத்துக்குள் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு சுயநினைவை மீட்டு எடுத்தார்.

உடனே ஹமீதுக்குத் தகவல் தெரிவித்தார். அந்தச் செய்தி அவருக்கும் வியப்பு அளிக்கவே செய்தது.

அலெக்ஸ் அதன் பிறகு தாமதிக்காமல் காரில் ஏறி சைமனின் பங்களாவை நோக்கி விரைந்தார்.

நடன அரங்கத்தில் நடந்தது என்ன என்பதை விவரமாக அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் காத்திருந்தார் சைமன்.

"தாவூத் இஸ்மாயில் ஓட்டலுக்கு வந்திருந்தான் என்று பேசிக் கொள்கிறார்களே, உண்மையா?" சைமன் கேட்டார்.

"அவன் வந்திருந்ததுகூடப் பெரிய விஷமில்லை. அவன் அனுப்பிய ஆள் எங்கள் எல்லோருடைய கவனத்தையும் திசை திருப்பிவிட்டான். நாங்கள் ஒரு தாடிக்கார இளைஞனைக் கடைசியாகச் சுற்றி வளைத்தோம், தாவூத் இஸ்மாயிலாக இருப்பான் என்று. ஆனால், தான் ஒரு பத்திரிகை நிருபர் என்று அடையாள அட்டையைக் காட்டிவிட்டு எங்களிடமிருந்து தப்பித்து விட்டான். அதன் பிறகுதான் இதெல்லாம் அவனது நாடகம் என்று புரிந்தது."

"நீங்கள் என்ன மாதிரியெல்லாம் திட்டம் போடுவீர்கள் என்பதுவரை அவனுக்குத் தெரிந்திருக்கிறது!"

"அப்படித்தான் தோன்றுகிறது!"- அலெக்ஸ் கூறினார்.

"நீங்கள் உடனே இங்கு வந்ததும்கூட நல்லதுக்குத்தான். அவனது நடவடிக்கைகளைப்பற்றி நீங்களும் நிறையத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். நாளை இரவு பன்னிரண்டு மணிக்கு கப்பல் ஒன்று வருகிறது. கல்ஃப் நாடுகளிலிருந்து வரும் கப்பல். நாம் இதுவரை நினைத்தே பார்க்க முடியாத அளவுக்கு அதில் தங்க பிஸ்கெட்டுகள் வருகின்றன. அது மட்டும் பத்திரமாக நம்மிடம் வந்து சேர்ந்துவிட்டால், பிறகு மற்றவை ஒரு பொருட்டே அல்ல. எல்லா விஷயங்களையும் அதன்பிறகு அரசியல்வாதிகள் மூலமாக சமாளித்துக் கொள்ளலாம். நிறையப் பேரை விலைக்கே வாங்கலாம். ஆனால், அதைப் பத்திரப்படுத்துவது சுலபம் என்று தோன்றவில்லை."

"வரப்போகும் சரக்குகளின் மொத்த மதிப்பு எவ்வளவு இருக்கும்?" அலெக்ஸ் கேட்டார்.

"ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சரக்குகள்!"

உண்மையிலேயே அந்த வார்த்தைகள் அலெக்ஸைத் திடுக்கிட வைத்தன. மறுவிநாடியே அதில் ஒரு பங்கு தனக்கும் கிடைக்கப் போகிறது என்பது மகிழ்ச்சியையும் அளித்தது.

"தங்கம் எந்த முறையில் நம்மிடம் வந்து சேரும்?"

"அதைப் பற்றி திட்டமான செய்திகள் எதுவுமில்லை. என்னிடம் அவற்றைப் பத்திரப்படுத்தத் தகுதியான இடத்தை ஏற்பாடு செய்யும்படி தகவல் வந்திருக்கிறது. அதை முதலில் ஏற்பாடு செய்வோம்!"

அலெக்ஸ் சற்று நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

"அதற்கு ஏற்ற ஓர் இடம் இருக்கிறது. எஸ்டேட்டில் இருக்கும் ஒரு பங்களா அது. வெள்ளைக்காரர் ஒருவருக்குச் சொந்தமான பங்களா. அங்கு தங்கியிருந்த கணவன்-மனைவி இருவருமே இறந்து போனதால் அதனுடைய நிர்வாகம் தற்போது என்

நண்பன் ஒருவனது கைக்கு வந்திருக்கிறது. நாங்கள் வேட்டைக்காகப் போகும்போது அங்கே தங்குவதுண்டு."

"நாம் நாளைக்கே அந்த இடத்தைப் பார்வையிடலாமா?" சைமன் கேட்டார்.

"அதை இப்போதே நண்பரிடம் கேட்டுவிட்டால் போகிறது" என்றபடி தனது பாக்கெட்டிலிருந்து டைரி ஒன்றை எடுத்துப் புரட்டினார்.

தொலைபேசியை எடுத்து ட்ரங்க்கால் பதிவு செய்தார். உடனடியாகவே லைன் கிடைத்தது.

"ஹலோ... ரஷீதுதானே பேசறது?"

"ஆமாம்!" எதிர்முனை பதிலளித்தது.

"நாளைக்கு ராத்திரி நானும் என் நண்பர் ஒருவரும் பங்களாவுக்கு வருகிறோம். அந்த பங்களாவைக் கொஞ்சம் சுத்தப்படுத்திக் தயாராக வைத்திருங்கள். மற்றவற்றை நாம் நேரிலேயே பேசிக்கொள்ளலாம்." ரிசீவரை கிராடிலில் வைத்த அலெக்ஸ், சைமனைப் பார்த்துச் சிரித்தார்.

"நாளை இரவு பத்து மணிக்கு நாம் இங்கிருந்து கிளம்பலாம் இல்லையா?" சைமன் கேட்டார்.

ஐம்பது கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத்தைக் கனவு கண்டு கொண்டு எஸ்.பி. அலெக்ஸ், சைமன் வீட்டிலிருந்து புறப்பட்டார். இந்தச் செய்தியை அவர் வேறு யாரிடமும் சொல்லவில்லை. இந்தச் செய்தியால், அவர் தாவூத் இஸ்மாயிலையேகூட மறந்துவிட்டார் எனலாம்.

மறுநாள் இரவு பத்து மணிக்கு முன்பாகவே அலெக்ஸ் சைமனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். சைமன் ஏற்கெனவே பயணம் புறப்படத் தயாராக இருந்தார். வீட்டுக்கு வெளியே போர்ட்டிகோவில் கருநீல நிறத்திலான மெர்சிடிஸ் பென்ஸ் கார் ஒன்று பளபளப்புடன் காத்திருந்தது.

"இந்த கார் எங்கிருந்தது..... புதுசாக உள்ளதே?"

"அதையெல்லாம் பயணத்தின்போது சொல்கிறேன். முதலில் புறப்படுங்கள்!" சைமன் காரின் கதவைத் திறந்துவிட்டார்.

இருவரும் பின்ஸீட்டில் அமர்ந்து கொண்டனர்.

கார் ஏ.சி. போடப்பட்டு இதமாக இருந்தது. காற்றில் மிதப்பது மாதிரி கார் நகர்ந்தது.

தெருவிளக்குகள் விரைந்து வந்து நெருங்கி மறைந்தன. கறுத்த ரிப்பன் மாதிரி முன்புறம் நீண்டு கிடந்த சாலை, பின்புறமாக மறைந்து கொண்டிருந்தது.

மரங்களும் தெருவிளக்குகளும் காரைக் கடந்து மறைந்து கொண்டிருந்ததால்தான் கார் நகர்ந்து கொண்டிருப்பதே தெரிந்தது.

டிரைவர் மிகவும் தேர்ந்த ஒரு மனிதர் என்பதும் தெரிந்தது.

"டிரைவர் புது ஆளா?" அலெக்ஸ் கேட்டார்.

"நான், அதே பழைய ஆள்தான் சார்!" டிரைவர் பதிலளித்தான்.

"ஓகோ.... வாசுதானே!"

"புதுசா யூனிபார்ம் போட்டிருப்பதால உங்களுக்கு அடையாளம் தெரியலை போலிருக்கு சார்!"

"கார் புதுசாச்சே... நம்ம டிரைவரும் புது ஆளா ஆகட்டும்னுதான் யூனிஃபார்ம்!" சைமன் சிரித்தபடி பேசினார்.

கார், நகர எல்லையைத் தாண்டி விரைந்து கொண்டிருந்தது.

மூன்றரை மணி நேரம் நகர்ந்ததே தெரியவில்லை. அதன் பிறகு கார் எஸ்டேட்டுக்குள் பயணம் செய்தது.

இருபுறமும் வளர்ந்து நிற்கும் தேயிலைச் செடிகளின் நடுவிலுள்ள பாதை வழியே கார் விரைந்தபோது சற்றுத்

தொலைவில் மற்றொரு கார் கிடப்பதைப் பார்த்தனர். பென்ஸ் கார். அந்த காரின் அருகே நின்றதும் ரஷீத் அதிலிருந்து இறங்கி பென்ஸ்காரின் முன்புறம் ஏறி அமர்ந்து கொண்டார்.

பென்ஸ் காரைத் தொடர்ந்து ரஷீத் இருந்த காரும் நகர்ந்தது.

"உங்களுக்காகத்தான் காத்திருந்தேன், ஏன் இவ்வளவு லேட்டாயிடுச்சு?"

"ரோட்டுல டிராஃபிக் அதிகம். மலைப்பாதை வேறயா, அதுதான் லேட்டாயிடுச்சு!" டிரைவர் பதிலளித்தார்.

அரைஞாணம் போல் வளைந்து கிடந்த பாதையில் நகர்ந்த கார் குன்றின் உச்சியில் இருந்த பங்களாவின் முன்னால் வந்து நின்றது.

"வாசு நீங்க, ரஷீதோட காரை எடுத்துட்டுப் போங்க. நான் ரெண்டு நாள் கழிச்சுத்தான் வருவேன்." சைமன் டிரைவரிடம் கூறினார்.

"காருக்குள் வேறொருவரும் இருக்கிறார்." ரஷீத் அவசரப்பட்டார்.

"அதை முன்னாலேயே சொல்லக்கூடாதா? யாரு அது?"

"நீங்க வர்றதா தகவல் தெரிவிச்சதால, அதுக்கான ஏற்பாடுகள் பண்ண வேண்டாமா? அதுதான். ராமன் குட்டி, நீ அவளை உள்ளே கூப்பிட்டு வாப்பா. இவங்களும் பார்த்துக்கட்டும்." ரஷீத் தன் டிரைவரிடம் கூறினார்.

ராமன்குட்டி அழகான இளம்பெண் ஒருத்தியை அழைத்து வந்தான். கட்டான உடல். சிவப்பேறிய கன்னக் கதுப்புகளும், உடையை மீறிப் பிதுங்கியிருக்கும் உடல் பகுதிகளும் பார்ப்பவரைக் கிறங்க வைப்பதாக இருந்தன.

ரஷீத் கதவைத் திறந்து லைட்டை எரிய விட்டான்.

அந்த அறைக்குள் எல்லாவிதமான வசதிகளும் இருந்தன. மூன்று முழுபாட்டில் மேனாட்டு மதுவகைகளும் சூடு ஆறாமலிருப்பதற்காக ஹாட்பேக்கில் கோழியிறைச்சியும் சப்பாத்தியும் தயாராக இருந்தன. அருகிலேயே நாலைந்து கண்ணாடி கிளாஸுகளும் இருந்தன.

"டிரைவர்கள் ரெண்டு பேரும் தேவையில்லையே. அனுப்பிவிடலாமில்லையா?" ரஷீத் கேட்டார்.

"இதையெல்லாம் பரிமாற வேறு யார் இருக்கிறார்கள்?" சைமன் கேட்டார்.

"நாமளே ஒருத்தருக்கு ஒருத்தர் பரிமாறிக் கொள்ள வேண்டியதுதான். இதையெல்லாம் எதுக்காக அவங்க பார்க்கணும்?" ரஷீத் பதிலளித்தார்.

"அதுவும் சரிதான். அவர்களை அனுப்பிவிடுவதுதான் நல்லது." அலெக்ஸ் கூறினார்.

"அப்படியானால் நாம் ஆரம்பித்துவிட வேண்டியதுதானே?"- ரஷீத் கேட்டார்.

பாட்டில்களின் மூடிகள் திறக்கப்பட்டன. கிளாஸுகளில் மதுவின்மீது குளிர்ந்த ஐஸ் கட்டிகள் மிதந்தன. தட்டுகளில் சப்பாத்தியும் இறைச்சித்துண்டுகளும் ஆவியெழுப்பின.

"பேர் என்னம்மா?" அலெக்ஸ் அங்கிருந்த இளம் பெண்ணிடம் கேட்டார்.

"ஸாலி!"

"நீ சாப்பிடுவியாம்மா... இந்தா சாப்பிட்டுக்கோ!" அலெக்ஸ் அவள் பக்கமாக ஒரு கிளாஸைத் தள்ளி வைத்தார்.

எந்த விதமான தயக்கமும் இல்லாமல் அவள் அதை எடுத்து 'மடக் மடக்' என்று குடித்தாள்.

"பாட்டு... டான்ஸ் இப்படி ஏதாவது தெரியுமாம்மா உனக்கு?" சைமன் கேட்டார்.

"டான்ஸ் ஆடுவாள், பார்க்கிறீங்களா?"

"பார்க்காம... அதுக்காகத் தனியா இன்னொரு தடவையா வரமுடியும்?" அலெக்ஸ் அவளைத் தலை முதல் பாதம் வரை பார்த்தபடி பேசினார்.

"ஸாலி, காபரே டான்ஸில் ஸ்பெஷலிஸ்ட். அதையே ஆடும்மா. டிரஸ்ஸை மாத்திட்டு வந்துடும்மா." ரஷீத் அவளிடம் சொன்னார்.

பிறகு அறையிலிருந்த ஸ்டீரியோவை ஆன் செய்தார்.

ஸாலி கெட்டிக்காரி. அவளுக்கு அந்த பங்களா ஏற்கெனவே பழக்கமாயிருந்தது போல் தெரிந்தது. அடுத்த அறைக்குள் நுழைந்து லைட்டைப் போட்டாள்.

அறையிலிருந்து வெளிவந்தபோது அவள் உடம்பில் இரண்டே இடங்களை மட்டுமே மறைத்திருந்தாள்.

ஸ்டீரியோவிலிருந்து உயர்ந்த மேற்கத்திய இசையின் தாளலயத்துக்கு ஏற்றபடி அவள் உடம்பு வில்போல் வளைந்து ஆடியது.

கிளாஸுகளில் மதுவகை நிரம்பி, பின் காலியாகிக் கொண்டிருந்தன.

ஒரிஜினல் காபரே நடனமே அங்கு நடைபெற்றது. ஆட்டத்தின் இறுதியில் ஆடைகள் களையப்படுவதற்கு ஒப்ப விளக்கு அணைப்பது என்கிற ஒன்று மட்டுமே இல்லாமலிருந்தது.

நேரம் செல்லச் செல்ல அவர்களின் கண்களில் அவள் இரண்டு மூன்று உருவங்களாகத் தென்பட்டாள்.

அன்றைய இரவு அந்த பங்களாவில் மிகவும் உல்லாசமாகவும், உற்சாகமாகவும் கழிந்தது.

விடியற்காலையில் ரஷீத், ஸாலியை வழியனுப்பி வைத்தார். சற்று நேரத்துக்குள் காலை நேரப் பலகாரம் வந்து சேர்ந்தது.

"நீங்கள் எத்தனை நாட்கள் இங்கு இருப்பீர்கள்." ரஷீத் கேட்டார்.

"நீங்கள் போகிறதுக்குள் சொல்கிறோம். இனிமேல்தான் முக்கியமான விஷயத்தைப் பற்றி நாம் பேசவேண்டி உள்ளது. இந்த பங்களாவுக்கு சுற்றிலும் வெளியே, குறி தவறாமல் துப்பாக்கியால் சுடக்கூடிய ஆட்கள் சிலரைக் காவலுக்கு நிறுத்த வேண்டும். அவர்களுக்குத் தேவையான துப்பாக்கிகள், வெடிகுண்டுகளை நான் ஏற்பாடு செய்து தருகிறேன். நமது அனுமதியில்லாமல் யாராவது இந்த பங்களாவை நெருங்கினால் சுட்டுக் கொன்றுவிட வேண்டியதுதான். இங்கு வந்த எவனுமே உயிருடன் திரும்பிப் போகக்கூடாது!"

"இந்த இடத்துக்கு அப்படி யாராவது வருவார்களா என்ன?"

"வரக்கூடிய ஒரே மனிதன், தாவூத் இஸ்மாயில்தான்!"

"அவன் எதுக்காக இங்கே வரணும்?"

"வருவான். அவனோட கண்ணும் காதும் மூளையும் சாதாரணமானது இல்லை!"

"அப்படியானால் நீங்கள் சொன்னபடி ஏற்பாடு செய்துவிட வேண்டியதுதான்."

"இந்தத் திட்டம் சரிவர நிறைவேறினால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கலாம். நமது பொருள் பாதுகாக்கப்படுவதுடன் தாவூத் இஸ்மாயில் என்கிற விரோதியும் தொலைந்து விடுவான்" அலெக்ஸ் கூறினார்.

அன்று இரவு இண்டலிஜென்ஸ் பிரிவின் உயர் அதிகாரிகளுக்கு ஒரு செய்தி கிடைத்தது. "ஐம்பது கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் வரப்போகிறது. அதை முன்னின்று நடத்துப் போவது தாவூத் இஸ்மாயில்தான்!"

# 13

நள்ளிரவு தாண்டியது.

தாவூத் இஸ்மாயில் தனது பங்களாவில் இருந்தான்.

இன்டர்போல் அமைப்பின் பிரதிநிதியான வில்லியம் ப்ளெய்க் அவனுக்கு முன்னால் அமர்ந்திருந்தார்.

"மிஸ்டர் பிளெய்க். உங்களை நான் எதற்காகத் கடத்திக்கொண்டு வந்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரிகிறதா?" தாவூத் கேட்டான்.

பிளெய்க்கின் முன்புறம் ஜானிவாக்கர் விஸ்கியும் ஐஸ் கியூபுகள் நிறைந்த ஃபிளாஸ்கும் கிளாஸுகளும் வைக்கப் பட்டிருந்தன. அவர் கையிலிருந்த சிகார் பைப்பிலிருந்து புகை உயர்ந்து கொண்டிருந்தது.

செம்பட்டையான தலைமுடியும் பிரெஞ்சு மீசையும் தாடியும் பிளெய்க்குக்கு அழகாகவே இருந்தது. அவர் கண்மணிகள் கருமையானதாக இருக்கவில்லை. நன்றாக ஆங்கிலம் பேசுவார். தாவூத் அவரிடம் ஓர் ஆங்கிலேயனைப் போலவே சரளமாகப் பேசினான்.

"தெரியாமல் என்ன? இங்கு இருக்கிற கள்ளக்கடத்தல் மற்றும் போதை மருந்துக் கடத்தல்காரர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் வேறு என்ன?" பிளெய்க் எந்த விதமான தயக்கமும் இல்லாமல் பேசினார்.

"நீங்கள் அப்படி நினைப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால்...." தாவூத் சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக்கொண்டு பேச்சைத் தொடர்ந்தான்: "உண்மையில் உங்கள் உயிரைக்

காப்பாற்றுவதற்காகத்தான் உங்களைக் கடத்தினேன். நம்புவதற்குச் சிரமமாக இருக்கிறதா?"

"என்னைக் காப்பாற்றுவதற்கா?" பிளெய்க்கின் குரலில் வியப்புத் தெரிந்தது.

"ஆமாம்... அதுதான் உண்மை. உங்களது பிரீஃப் கேஸில் ஒரு பைல் வைத்திருக்கிறீர்களே, போட்டோக்கள் அடங்கிய ஃபைல்...?"

"ஆமாம்... அதில் உங்கள் படமும்தான் இருக்கிறது!"

"அது எனக்கும் தெரியும்." உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்த தாவூத் அருகிலிருந்த அலமாரியைத் திறந்து ஒரு ஃபைலை எடுத்துவந்து டீப்பாயின்மீது வைத்தான்.

"இந்தாருங்கள் அந்த ஃபைல்!" தாவூத் பேசினான்.

"நீங்கள் எனக்குத் தெரியாமல் என்னிடமிருந்து திருடியிருக்கிறீர்கள் இல்லையா?"

"நீங்கள் சொன்னது உண்மைதான். இப்போது திருப்பித் தருகிறேன். இதிலுள்ள மொத்தத்தையும் நான் ஜெராக்ஸ் பிரதி எடுத்திருக்கிறேன். அது என்னிடம் வெகு பத்திரமாக இருக்கிறது."

"உங்களுக்கு எதற்கு அது?"

"சொல்கிறேன்." தாவூத் இஸ்மாயில் ஃபைலைத் திறந்து ஒவ்வொரு பக்கங்களையும் புரட்டினான். ஒவ்வொரு பக்கத்திலும் புகைப்படத்துடன் என்னவெல்லாமோ குறிப்பிடப்பட்டிருந்தது. "இதோ இந்தப் பெண்ணின் பெயர் ஃப்ளோரா. இவளை உயிருடன் எரித்தே கொன்று விட்டார்கள்." தாவூத் அழகான ஓர் இளம் பெண்ணின் புகைப்படத்தைக் காட்டியபடி பேசினான்.

"ஃப்ளோரா இப்போது உயிருடன் இல்லையா?" பிளெய்க் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"இல்லை! இதோ இந்த மனிதனைத் தெரியுமா உங்களுக்கு?" தாவூத் மற்றொரு படத்தைக் காட்டியபடி கேட்டான்.

''கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தப் படத்தில் பார்த்திருக்கிறேன். சைமன் கோமஸ்தானே இவர் பெயர்?"

"ஆமாம் இவர் சைமன். இவர் ரஷீத், எஸ்டேட் நிர்வாகி- உரிமையாளர் என்றே சொல்லலாம். இவர் பெயர் அலெக்ஸ், போலீஸ் சூபரின்டெண்டெண்ட்."

"உண்மையாகவா? இவர் போலீஸ் சூபரின்டெண்டெண்ட் தானா?"

"ஆமாம்... இவரேதான். உண்மையில் இவரது வேலை கடத்தல்தான். கடத்தல்காரர்களுக்கு எதிராக போலீஸ் துறையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை உடனுக்குடன் கடத்தல்காரர்களுக்கு தெரிவிப்பவர் இவர்தான்."

"சே... என்ன ஒரு துர்ப்பாக்கியமான நிலை1!" என்று சலித்துக்கொண்டவராக பிளெய்க் நிறைந்திருந்த விஸ்கி கிளாஸைக் கையில் எடுத்தார்.

"இருந்தாலும் அதுதான் உண்மை மிஸ்டர் பிளெய்க் இன்னும் இருக்கிறது. கேளுங்கள்.

ஒரு தடவை ஏறத்தாழ இருபத்தைந்து லட்சரூபாய் பெறுமானமுள்ள பிரௌன் ஷுகருடன் ஃப்ளோரா பம்பாயிலிருந்து புறப்பட்டாள். ரஷீத் கொடுத்து அனுப்பியிருந்தார். நான் அப்போது பம்பாயில் இருந்தேன். எனக்குச் செய்தி கிடைத்தது. கடத்தல்காரர்களான எங்களுக்குள் போட்டியும், பொறாமையும் சந்தையில் பொருளைத் தள்ளிவிடுவதில் யார் கெட்டிக்காரர் என்பதை நிருபிக்கும் ஓட்டப் பந்தய விளையாட்டுகளும் அடிக்கடி நடக்கும். அதனால் சமயம் கிடைக்கும் போதெல்லாம் எதிராளியைக் காட்டிக் கொடுக்கவும் செய்வோம்..."

வில்லியம் பிளெய்க் மௌனமாக தாவூத் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் இதுவரை கேள்விப்படாத செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்ததே காரணம்.

சமூகத்தின் அடிமட்டத்தில் ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போரின் இப்படிப்பட்ட சண்டை-சச்சரவுகள் பற்றி ஓரளவு அவருக்குத் தெரியும். என்றாலும் இவ்வளவு அதிகமாகத் தெரியவில்லை. அதனால் சிறு குழந்தை பாட்டியிடம் கதை கேட்கும் ஆர்வத்துடன் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் கண்கள் தாவூத் இஸ்மாயிலின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தன.

''என்னிடம் வேலை செய்யும் டிக்ரூஸ் என்பவரை ஃப்ளோராவைத் தொடர்ந்து கண்காணிக்கும்படி அனுப்பியிருந்தேன். அவர்கள் ஒன்றாக ரயிலில் பயணம் செய்தனர். இதுபோன்ற சந்தர்பங்களில் விமானத்தில் பயணம் செய்வதைவிட, ரயிலில் பயணம் செய்வதுதான் பாதுகாப்பு. இரண்டு நாட்கள் அவளுடனே பயணம் செய்தும் டிக்ரூஸால், அவள் சரக்கை எங்கே மறைத்து வைத்திருக்கிறாள் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள், அவளது பாதுகாப்பான இடத்தையும் அடைந்து விட்டாள். அவள் போய்ச் சேர்ந்த இடம் சைமன் கோமஸின் பங்களாதான்!"

"பிறகு?" ஆவலுடன் கேட்டார் பிளெய்க்.

''அதன்பிறகு ஃப்ளோராவை யாருமே உயிருடன் பார்க்கவில்லை. உடல் முழுக்கக் கருகிய நிலையில் அவள் பிணத்தைக் குப்பைத்தொட்டியில் கண்டெடுத்தார்கள்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படி இவ்வளவு துல்லியமாகத் தெரிந்தது." பிளெய்க் கேட்டார்,

"நானும் ஒரு இன்டலிஜென்ஸ் பிரிவை வைத்திருக்கிறேன்... ஏறத்தாழ உங்கள் டிபார்ட்மென்ட்டுக்கு இணையாக. அதில் ஒருவன்தான் டிக்ரூஸ். நடந்தது என்ன என்பதைச் சொல்லி விடுகிறேனே! டிக்ரூஸ், ஃப்ளோராவுடன் பயணம் செய்வதை எதிர்க்கோஷ்டியில் ஒருவன் பார்த்துவிட்டான். அவன் ஃப்ளோராவின் பாதுகாப்புக்காக, பொது மக்களில் ஒருவனாகவே

ரயிலில் பயணம் செய்தான். டிக்ரூஸூக்கு இந்த விவரம் தெரியவில்லை. ஃப்ளோராவைத்தான் டிக்ரூஸ் பின்தொடர்கிறான் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. இந்த நிலைமையில் ஃப்ளோரா மறுபடி வெளியே வந்தால் துங்களது ரகசியங்கள் வெளியாகி விடலாம் என்று கருதியதால் விஷயத்தை ரஷீத்திடம் கூறினான். ரஷீத் அவளைக் கொலை செய்ய உத்தரவிட்டிருப்பான்."

வில்லியம் பிளெய்க் ஒரு விஷயத்தில் வியப்பு அடைந்தார். தாவூத் எவ்வளவு துல்லியமாக ஒவ்வொன்றையும் கவனிக்கிறான்: எவ்வளவு விரைவில் எதிர்நடவடிக்கை மேற்கொள்கிறான்; எதிராளிகளின் பலவீனத்தைத் தனது பலமாக மாற்றிக் கொள்கிறான் என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்தார். இந்த மனிதன் சாதாரணமான ஓர் எதிரியல்ல என்பது அப்போதுதான் அவருக்குத் தெளிவாக விளங்கியது.

''என்னைப் பற்றி நான் இன்னும் எதுவும் சொல்லவில்லையே. அதையும் சொல்லி விடுகிறேன்'' என்ற இஸ்மாயில் தொடர்ந்தான்.

"என்னைப் போன்ற கடத்தல்காரர்களிடமிருந்து நான் மிகவும் மாறுபட்டவன். மற்ற கடத்தல்காரர்கள் விபசார விடுதி நடத்துவதுடன், பெண்களைக் கடத்திக் கொண்டுபோய் விற்பனை செய்து லட்சக் கணக்கில் சம்பாதிக்கிறார்கள். நான் ஏழைகளுக்கு உதவி செய்கிறேன். என் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை அவர்களுக்காக என்றே ஒதுக்கி வைத்திருக்கிறேன். குடிசைகளுக்குக் கூரை போடவும், கல்யாணம், காதுகுத்தல், தொழில், வியாபாரம் போன்றவற்றுக்கு உதவி செய்கிறேன். குறைந்த பட்சம் பத்தாயிரம் பேராவது என்னால் இப்போதும் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நான் செய்வது நியாயம்தான் என்று சொல்ல மாட்டேன்!"

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா?" பிளெய்க் நம்ப முடியாதவராகக் கேட்டார்.

"அதற்கு ஆதாரமாக இந்தப் புகைப்படங்களைப் பாருங்கள்!" தாவூத் ஆல்பத்தை அவரிடம் கொடுத்தான்.

அதில் ஒவ்வொரு குடிசைக்கு முன்னும் ஒவ்வொரு குடும்பம் நின்று கொண்டிருந்தது. ஏழை மக்களுக்கு குடிசை கட்டுவதற்கு உதவியதும், நெசவுக் கருவிகள், பொம்மைகள் செய்யும் குடிசைத் தொழில்களுக்குப் பண உதவி செய்ததும் அதனால் இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் தொழில்களையும் அந்த ஆல்பத்திலிருந்த படங்கள் சுட்டிக்காட்டின.

"எனதுவருமானத்தில ஒரு பகுதியை இப்படிப்பட்டவர்களுக்கு உதவி மனத்திருப்தி அடைகிறேன். அதில் ஒரு சிறிய ஈடுபாடு."

"ஒரு விஷயம் உங்களுக்கு ஞாபகமிருக்கட்டும். நீங்களாக என்ன மாற்று வழி செய்து கொண்டாலும் குற்றம் குற்றம்தான். அதை மறுக்க முடியாது."

"உண்மைதான். அதுவும் எனக்குத் தெரியும். ஒடுகிறவரை இப்படியே ஓடட்டும். சரி அதெல்லாம் கிடக்கட்டும். உங்களைப் பற்றி இதுவரையில் நீங்கள் எதையும் சொல்லவில்லையே. நான் மிகவும் கெட்டிக்காரத்தனமாக உங்களைக் கடத்திக்கொண்டு வந்ததால் நீங்கள் இப்போது உயிருடன் இருக்கிறீர்கள். இல்லாவிட்டால் ஏதாவது ஒரு வழியில் உங்களைக் கொன்று உடலை எரித்திருப்பார்கள். உங்களைக் கொல்வதற்குத்தான் அவர்கள் திட்டம் போட்டிருந்தார்கள்."

"உண்மையாகவா?" ப்ளெய்க், தாவூத்தைப் பார்த்தபடி கேட்டார்.

"ஆமாம்... அப்படி ஏதாவது நடந்திருந்தால்கூட உங்களால்-அதாவது உங்கள் துறையால் சம்பந்தப்பட்ட யாரையும் பிடித்திருக்க முடியாது."

அதே நேரம் இஸ்மாயிலின் ரகசிய டெலிபோன் மணியடித்தது.

"யாரது?... ஆமாம் நானேதான். என்ன விஷயம் தாஸ்?"தாவூத் இஸ்மாயில் கேட்டான்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் ஐந்து கோடி ரூபாய் சரக்கு கைமாறியதாகக் கேள்விப்பட்டேன்."

தாஸின் தகவல் தாவூத் இஸ்மாயிலின் முகத்தை வெளிறச் செய்தது.

'தாம் தோல்வியடைந்து விட்டோம்!' என்ற உணர்வு இஸ்மாயிலின் கண்களில் பளிச்சிட்டது.

"உங்களுக்கு எப்படித் தகவல் கிடைத்தது?" தாவூத் கேட்டான்.

"யாரோ டெலிபோனில் சொன்னார்கள்?"

"விளையாட்டுக்காகச் சொல்லியிருக்கலாம்!"

"டெலிபோன் பேச்சை ஒட்டுக்கேட்டதாகக்கூட சொன்னார்கள்."

"யார் ஷைனி போன் பண்ணினாளா?"

"அவள் குரல் மாதிரித் தெரியவில்லை!"

டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் தாவூதுக்காக ஒற்று வேலை செய்பவள்தான் ஷைனி. அதையும் ஏற்பாடு செய்தவர் சர்க்கஸ் கம்பெனி மேனேஜர் தாஸ்தான்.

"அஞ்சு கோடி ரூபாய் பொருள்கள் கைமாறியிருக்கிறதா?" தாவூத் ஷூஸைத் தரையில் ஓங்கி மிதித்தபடி திரும்பினான்.

"மிஸ்டர் பிளெய்க்; நான் கொஞ்ச நேரத்தில் திரும்பி வருகிறேன்." சொல்லிவிட்டு உடனே அங்கிருந்து மறைந்தான் தாவூத்.

# 14

தாவூத் நேராக வந்து சேர்ந்த இடம் சர்க்கஸ் கம்பெனிதான்.

மிருகங்களுக்கு இறைச்சி கொடுப்பவன் என்ற முறையில் தான் அப்போது வந்திருந்தான். சர்க்கஸ் கூடாரத்தைச் சுற்றி போலீஸ் காவல் இருக்கும் விஷயம் தாவூதுக்கு ஏற்கெனவே தெரியும்.

மறுபுறத்தில் சைமன் கோமஸும், அலெக்ஸும் இணைந்து தன்னைக் கொல்லத் தருணம் பார்த்திருக்கிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும்.

"பொருள் எப்படிக் கைமாறியதாம்?" தாவூத், தாஸிடம் கேட்டான்.

"அது எனக்குத் தெரியாது. ஆனால், எஸ்டேட்டுக்கார ரஷீதின் பங்களாவுக்கு ஓட்டல் ஸீனியாவிலிருந்து காபரே டான்ஸர் ஒருத்தியைக் கொண்டு போயிருக்கிறார்கள்...." தாஸ் கூறினார்.

"இந்தச் செய்தி உறுதியானதுதானா?"

"அதனால் ரஷீத்துடன் மேற்படி இருவரும் அங்குதான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன்".

"அதை எப்படித் தெரிந்து கொள்வது?" தாவூத் விசாரித்தான் யோசனையில் ஆழ்ந்தபடி.

'தெளிவான தகவல் இல்லாமல் நேரத்தை வீணாக்கி விட்டால், கடத்தப்பட்ட பொருள் தடயம் இல்லாமல் மறைக்கப்பட்டுவிடும். அதன் பிறகு வருந்துவதில் அர்த்தமில்லை.'

"அதனால் முடிந்தவரையில் அவர்களை மடக்குவதுதான் ஒரே வழி." தாவூத் பொறுமையற்றவனாகப் பேசினான்.

"ஸீனியா ஓட்டலில் வேலை செய்யும் ஒருவனை இங்கு வரவழைத்து உபசரித்தபோது அவன்தான், டான்ஸர் விஷயத்தைச் சொன்னான். மிகவும் முக்கியமான வி.ஐ.பி-க்கள் யாராவது வந்தால் மட்டுமே ஓட்டல் ஸீனியாவிலிருந்து ஆட்களைக் கொண்டு போவது வழக்கமாம். எனவே, இரண்டும் இரண்டும் நாலு என்று கணக்கிட்டு விட்டேன்."

"நீங்கள் சொல்வதை வைத்துப் பார்த்தால் செய்தி உண்மையாக இருக்க வேண்டுமென்றுதான் எனக்கும் தோன்றுகிறது." தாவூத் எழுந்தான்.

"ரஷீதின் எஸ்டேட் இருக்கும் இடம்-சரியான லொக்கேஷன் உங்களுக்குத் தெரியுமா?" தாஸ் கேட்டார்.

"ஓரளவுக்குத் தெரியும்!"

"எதற்கும் இந்த மேப்பை கைவசம் வைத்துக் கொள்ளுங்கள். நானே ரஃப்பாகப் போட்டது." என்றபடி மேஜைக்குள் இருந்து சுருட்டிய காகிதம் ஒன்றை எடுத்துத் தந்தார்.

அதை அந்த டேபிளின் மீதே விரித்துப் பார்த்த தாவூத், அதற்காக தாஸின் தோளைத் தட்டிப் பாராட்ட மறக்கவில்லை.

"இது எப்படி முடிந்தது?" தாவூத் கேட்டான்.

"எல்லாம் அந்த ஓட்டல் ஊழிய நண்பரின் கைங்கரியம்தான்?"

"ரொம்பக் கச்சிதமான வேலை. அந்த நண்பரை மறுபடி இங்கே வரவழைக்க முடியுமா?"

"அதற்கென்ன, தாராளமாக வரவழைத்து விடலாம்!" என்றபடி தாஸ் எழுந்தார்.

தாஸ் உடனே மோட்டார் பைக்கில் ஏறி விரைந்தார்.

தாவூத் அந்த எஸ்டேட்டின் வரைபடத்தையே ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மெயின் ரோட்டிலிருந்து வலது புறமாகத் திரும்பியது எஸ்டேட்டுக்குச் சென்ற ரோடு. சற்றுத் தூரம் நேராகப் போன ரோடு இரண்டு வளைவுகளுக்குப் பிறகு பங்களா வாசலில் முடிவடைந்தது. வீட்டின் பின்புறமாகத் திரும்பவும் சாலை தொடர்ந்து நீண்டது. அதன் பிறகு இடது புறம் திரும்பவும் ரோட்டில் ஏராளமான வளைவுகளுடன் போனது. ஒரு குன்றில் முடிவடைந்தது போல் சுற்றிச் சுற்றிச் சென்று உச்சியுடன் முடிவடைந்தது. அங்கும் ஒரு பங்களா இருந்தது. அந்த பங்களா உச்சியை அடைவது சுலபமான காரியமல்ல. மேற்புறத்திலிருந்து யார் பார்த்தாலும் சுற்றிலும் நடப்பது நன்றாகத் தெரியும். அவ்வளவு சுலபத்தில் அங்கிருப்பவர்களின் கண்ணில் மண்ணைத் தூவ முடியாது.

மோட்டார் பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. தொடர்ந்து தாஸின் பின்னால் ஓர் இளைஞன் வந்தான்.

அவனுக்கு தாவூத் யார் என்று புரியவில்லை.

"நான் சொன்ன நண்பர் இவர்தான்!" தாஸ் அறிமுகப் படுத்தினார்.

"பார்த்தால் பயமாக இருக்கிறதா?" தாவூத் அவனிடம் கேட்டான்.

"அப்படியெல்லாம் கிடையாது சார்!" இளைஞன் பயமின்றிப் பதிலளித்தான்.

"என்கூட உங்களால வரமுடியுமா? நான் நினைக்கிற காரியம் வெற்றியடைஞ்சுட்டா உங்களுக்கும் ஒரு பங்கு தர்றேன்." தாவூத் கூறினான்.

"வெற்றி... பங்கு... என்னென்னமோ சொல்கிறீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை." சந்தேகத்துடன் இளைஞன் தாஸைப் பார்த்தான்.

"நான் சொன்னது புரியவில்லை இல்லையா சரி விளக்கமாகவே சொல்கிறேன். ரஷீதின் பங்களாவுக்கு நீங்கள் எப்போதாவது போயிருக்கிறீர்களா?" தாவூத் கேட்டான்.

"போயிருக்கிறேன்!"

"எதுக்காக?"

"ஓட்டலுக்கு வந்திருந்த ரஷீத், பெண்கள் சிலர் வேண்டுமென்று கேட்டார். பெண்களை நான்தான் அவருடன் அழைத்துப் போனேன். அப்புறம் அதுவே வழக்கமாயிடுச்சு. வேற யாரெல்லாமோ போவாங்க."

"வழக்கம்னா அடிக்கடி நடக்குமா?"

"அப்படின்னு சொல்ல முடியாது. எப்பவாவது நடக்கும்."

"அதுக்குப் பிறகு நீங்க போனதே இல்லையா?"

"மறுபடி ஒரு தடவை போயிருக்கிறேன்."

"இந்த இடம் மட்டும் இவ்வளவு அழுத்தமாக மனத்தில் பதிந்து போனதுக்குக் காரணம் ஏதாவது இருக்கா?"

"யார் போனாலும் அதை அவ்வளவு சீக்கிரம் மறந்துட மாட்டாங்க. அந்த மாதிரி வேற இடம் எதுவும் இல்லாததால ஞாபகத்துல இருக்கும்."

"சரி... இப்ப நாம அந்த பங்களாவுக்குப் போகலாம் இல்லையா? அதற்குத்தான் கேட்டேன்." தாவூத் கேட்டான்.

மோட்டார் பைக்கில் ஏறிக்கொண்ட தாவூத் ஓட்டல்கார நண்பனைப் பின்புறம் உட்காரச் சொன்னான். பைக் இருவரையும் சுமந்துகொண்டு புறப்பட்டது.

மெயின் ரோட்டிலிருந்து கிளைபிரியும் பகுதியை அடைந்ததும் பைக்கை நிறுத்தி இருவரும் இறங்கினர். பைக்கை புதருக்குள் மறைத்து வைத்தார்கள்.

சன்னமான நிலா வெளிச்சம் இருந்தது.

பாதையோரங்களில் வளர்ந்திருந்த மரங்களின் ஊடாக வந்து விழுந்த நிலவொளி நைந்துபோன துணி மாதிரி இருந்தது.

"பங்களாவுக்குப் போகும் நேர்பாதையில் நாம் போக வேண்டாம். இதோ இந்த வழியாக மேலே போகலாம். இந்த வழியில் போனால் உச்சியை அடைவதும் சுலபம்!" தாவூத் கூறினான்.

"நான் ரெண்டாவது தடவை வந்தபோது துப்பாக்கி ஏந்தின காவல்காரங்க பங்களாவைச் சுத்தி இருந்ததா ஞாபகம்." இளைஞன் கூறினான்.

"இருக்கட்டும்.... பார்க்கலாம்!" தாவூத் தன் தோளில் கிடந்த பிளாஸ்டிக் பையிலிருந்த ஒரு கையெறி குண்டை எடுத்துப் பார்த்துவிட்டுத் திரும்பவும் பைக்குள் போட்டுக்கொண்டான்.

காட்டுச் செடிகளை விலக்கிக்கொண்டு இருவரும் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

ஆங்காங்கே சிதறிக் கிடந்த நிலா வெளிச்சம் மட்டுமே அவர்களுக்குக் கிடைத்த உதவி.

சிறிய காட்டு வழிகள் அவ்வப்போது சுற்றி சுற்றிச் செல்லும் பாதைகளைக் குறுக்கிட்டன.

ஏழு சுற்றுகளில் இரண்டைத் தாண்டினார்கள். மூன்றாவது சுற்றுப் பாதையை நெருங்கும் சமயத்தில் தாவூத் ஓட்டல் ஊழியனை, இடது கையால் பின்புறமாகத் தள்ளி, குனிந்து நிற்கும்படி சைகை செய்தான்.

புதருக்கு மத்தியில் ஒளிந்திருந்தபடி ஊன்றிக் கவனித்தனர். துப்பாக்கியைத் தோளில் போட்டபடி ஒருவன் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தான்.

இளைஞன் சொன்னது சரிதான் என்பது தாவூத்துக்கு விளங்கியது. இதே மாதிரி வேறு சிலரும் இருக்கக்கூடும்.

அவர்களை எப்படிச் சமாளிப்பது என்பதைப் பற்றி யோசிக்கத் தொடங்கினான் தாவூத்.

தாவூத் ஊர்ந்து தவழ்ந்துகொண்டே சாலையை நெருங்கினான். அப்போது காவல்காரன் தாவூதுக்கு நேராக வந்து கொண்டிருந்தான். தாவூத் மூச்சை அடக்கிப் பிடித்தபடி படுத்திருந்தான். தாவூதை நெருங்கியவன் கண்ணாலேயே அந்தப் பகுதியைத் துழாவினான். பிறகு நீண்ட டார்ச் லைட்டை எடுத்து மேற்புறமாக வெகுதூரம் வரையில் வெளிச்சம் பாய்ச்சிப் பார்த்துவிட்டு, திருப்தியடைந்தவனைப் போல் திரும்பி நடக்கத் தொடங்கினான்.

தாவூத் இஸ்மாயில் சட்டென்று துள்ளி எழுந்தான் கையை முன்புறமாக நீட்டியபடி முன்னால் சென்று கொண்டிருப்பவனை நெருங்கினான். துப்பாக்கி வைத்திருந்தவன் திரும்பியதும், புலியின் வேகத்துடன் தாவூத் அவன் மீது பாய்ந்ததும் ஒரே நேரத்தில் நடந்தன.

தரையில் நின்ற நிலையிலேயே மேற்புறம் உயர்ந்து இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்துத் தூக்கி காவலாளியின் நெஞ்சில் மிதித்தான். மிதி வாங்கியவன் மட்டமல்லாக்க விழுந்தான். துப்பாக்கியை எடுக்கும் சந்தர்ப்பம்கூட அவனுக்கு வாய்க்கவில்லை.

தாவூத், மல்லாந்து கிடந்தவனின் மார்பின் மீது தாவி உட்கார்ந்தான். தன் சுண்டுவிரல் மற்றும் நடுவிரலை ஒன்று சேர்த்து காவலாளியின் கழுத்தில் அழுத்திப் பதித்தான். அந்த நிலையில் அவனால் உடம்பை ஒரு தடவை அசைக்கக்கூட முடியவில்லை. அவன் மூச்சு நின்றுவிட்டிருந்தது. தாவூத் அவனைக் காட்டுப்பகுதிக்குள் இழுத்துப் போட்டுவிட்டு, அவனது துப்பாக்கியை எடுத்து அவனுடன் வந்த இளைஞனிடம் தந்தான்.

"ஞாபகம் வச்சுக்கப்பா தம்பி. நாம பங்களாவுக்குள்ளே போயாகணும். தவிர்க்க முடியாத பட்சத்தில்தான் சுடணும்!" தாவூத் எச்சரித்தான்.

மறுபடி பாதையைக் கடந்து புதர்கள் வழியாக ஊர்ந்தனர். பாதை மீண்டும் குறுக்கிட்டதை உணர்ந்து நிமிர முற்பட்டபோது அங்கும் ஒரு காவல்காரன் நிற்பது தெரிந்தது. அவனிடம் துப்பாக்கி இருந்தது. முதுகுப்பக்கம் துப்பாக்கியைப் போட்டிருந்ததால் தாவூதுக்குப் பளிச்சென்று தெரியவே செய்தது.

இருவருக்கும் இடையே சுமார் ஐம்பது மீட்டர் இடை வெளியிருந்தது. தாவூத் அந்தக் காவலாளியையே பார்த்துக் கொண்டிருந்தான். எனவே, நெருங்குவதற்கு முன்னேயே எதிராளி சுட்டுவிடுவதற்கு வாய்ப்பு உள்ளது.

ஒரே ஒரு தடவை அந்த மலைக்காட்டுப் பகுதியில் குண்டு வெடித்தால் அதன் பிறகு தாங்கள் இருவரும் தப்பிக்க முடியாது என்பது தாவூதுக்குத் தெரியும். மற்ற காவல்காரர்களும் அதைக் கவனிப்பார்கள்: எச்சரிக்கையடைந்து விடுவார்கள். அதன் பிறகு தான் நினைத்து வந்ததை முடிப்பது நடக்காது. எனவே தாவூத் அங்கேயே உட்கார்ந்தபடி அந்தக் காவலாளியின் நடவடிக்கையைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

காவல்காரன் தாவூதுக்கு முதுகு காட்டி நின்றான். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாவூத் சாலையைக் கடந்து மறுபுறம் காட்டுப் பகுதிக்குள் கடந்தான். ஆனால், எழுந்து நிற்க முடியாது. தோளுக்கு மேற்புறப் பகுதிகள் வெளியே தெரியும். புதர்ச் செடிகளுடன், பராமரிக்கப்படாத தேயிலைச் செடிகள் உயர்ந்து வளர்ந்திருந்தன. அந்தப் பகுதியில் வேண்டுமென்றே தேயிலைக் கொழுந்தைக் கிள்ளாமல் காடு மாதிரி வளர விட்டிருந்தார்கள்.

அந்த வழியாக மிகவும் கஷ்டப்பட்டு எந்தவிதமான சத்தமும் எழுப்பாமல் தாவூத் காவல்காரனின் பின்புறம் வந்தான். ஏதோ சந்தேகத்தால் காவல்காரன் திரும்பினான். முதுகிலிருந்து அவன் துப்பாக்கியை உருவுவதற்குள் அவன்மீது பாய்ந்த தாவூத் துப்பாக்கியை அவனிடமிருந்து பிடுங்கி, அதன் பின்புறத்தால் அவனைத் தாக்கினான். காவல்காரன் உணர்வற்றுத் தரையில் விழுந்தான்.

அதுவரையிலான தன்னுடைய நடவடிக்கையில் தாவூத் திருப்தியடைந்தான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மாற்றாரின் உதவியை நாடினால் நேரம் பார்த்து நடந்து கொள்வது என்பது அவ்வளவு சரியாக இருக்காது என்று நினைத்தான் தாவூத்.

தாவூத் அந்தத் துப்பாக்கியை காட்டுக்குள் வீசி எறிந்தான்.

"மேற்கொண்டு எந்த வழியில் போவது சுலபம்?" தாவூத் தன்னுடன் வந்த இளைஞனிடம் கேட்டான்.

"அதோ தெரிகிறது பாருங்கள். அந்தப் பகுதியை அடைந்துவிட்டால் பிறகு பங்களாதான்." இளைஞன் கையைச் சுட்டிக் காட்டிப் பேசினான்.

அதே சமயம் ஒரு பெரிய செர்ச் லைட் போன்ற ஒன்று உயரமான இடத்திலிருந்து அவர்கள் நின்றிருந்த பகுதியை நோக்கிப் பிரகாசமான வெளிச்சத்தைப் பாய்ச்சியது.

# 15

சட்டென்று தாவூதும், இளைஞனும் தேயிலைச் செடிகளின் ஊடே கவிழ்ந்து படுத்துக்கொண்டனர்.

பங்களாவின் மேற்புறம் பொருத்தப்பட்டிருந்த அந்த விளக்கு கலங்கரை விளக்கைப்போல ஒவ்வொரு பகுதியிலும் வெளிச்சம் பாய்ச்சியபடி சுழன்று கொண்டிருந்தது. பங்களாவில் இருப்பவர்களுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் செர்ச் லைட்டை இயக்கியிருக்கிறார்கள்.

தாவூத் செடிகள் அசைந்து விடாமல் ஊர்ந்து ஒட்டல் தொழிலாள இளைஞனை அணுகினான்.

"உங்களை நான் என்ன பெயர் சொல்லிக் கூப்பிடுவது?" தாவூத் மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டான்.

“பேரு டோமி. அப்படியே கூப்பிடுங்க.”

“டோமி... கவனமா என்னையே கவனிச்சுப் பின்பற்றணும். நான் இந்த மாதிரி விஷயங்களில் பழக்கமானவன். நீங்க அப்படி இல்லை. நமக்கு இங்கே ஒரு தவறு ஏற்பட்டா, நாம ரெண்டு பேரும் இந்த இடத்துக்கு உரமாப் போயிடுவோம்!”

டோமி ஒப்புக்கொண்டான்.

பருந்து ஒன்று வட்டமிடுவதுபோல் வெளிச்ச வட்டம் அவர்கள் மீதே சுழன்று கொண்டிருந்தது. இரண்டு மூன்று நிமிடங்கள் அந்தரத்தில் சுழன்ற வெளிச்சம் அணைந்தது.

“இன்னும் கொஞ்ச நேரத்துக்கு இருக்காது என்று தோன்றுகிறது” என்ற தாவூத் அந்த இளைஞனின் தோளில் கை வைத்து முன்புறதமாக வரச் சொன்னான்.

அந்தச் சமயத்தில் அலெக்ஸ் ஜோனும், சைமன் கோமஸும், ரஷீதும் பங்களாவுக்குள் உற்சாகமாக இருந்தார்கள். அவர்களுடன் மூன்று பெண்களும் இருந்தனர்.

மது, இறைச்சி, பெண்.... என்று மூவரும் உற்சாகத்தின் உச்சியில் இருந்தனர். அவர்களுடன் அமர்ந்து மதுவருந்திக்கொண்டிருந்த பெண்களின் உடம்பில் உடைகள் மிகவும் குறைவாகவே இருந்தன. அழகு மற்றும் கட்டான உடலமைப்புடன் இருந்த பெண்களைச் சீண்டியும் வேடிக்கையாகப் பேசியும் பொழுது நகர்ந்து கொண்டிருந்தது.

அந்த அறைக்குள் காவல்காரன் ஒருவன் அவசரமாக வந்தான்.

“என்னப்பா காளி, ஏதாவது விபரீதமா?” தோளில் துப்பாக்கியும், இடுப்பில் கத்தியும் செருகி வைத்திருந்த அவனிடம் ரஷீத் கேட்டான்.

சினிமாவில் தென்படும் கொலைகாரர்களைப்போலத் தோற்றமளித்தான் காளி. ஆறடிக்கு மேல் உயரத்துடன்

இருந்தான். அகன்ற மார்புடன் இரும்புத் துண்டுகளை ஒட்ட வைத்தது போன்ற சதைப்பகுதிகள். நரம்புகள் புடைத்து எழும்பி நிற்கும் கைப்பகுதிகள் போன்றவை அவனுடைய தோற்றத்தின் பயங்கரத்தை அதிகப்படுத்த உதவின.

கறுப்பாக இருந்தாலும் எண்ணெய் தேய்த்ததுபோல் பளபளப்பான உடம்பு. கொலை செய்வதில் எந்தவிதமான தயக்கமும் இல்லாதவன் காளி. நான்கு பேரைக் சுட்டுக்கொன்ற வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மறுபடியும் அப்பீல் செய்ததில் விடுதலை அடைந்தவன்.

அவனுக்கு விடுதலை வாங்கித் தந்தவர் ரஷீத்துதான்.

காளியைப் போலவே மேலும் நாலைந்து பேர் ரஷீத்திடம் வேலை செய்கின்றனர். எப்படிப்பட்ட மோசமான காரியத்தைக் செய்யவும் தயங்காதவர்கள். எல்லோருமே குற்றவாளிகள் என்பது ஒற்றுமையான விஷயம்.

"சன்னமான ஒரு சந்தேகம்!"- காளி கூறினான்.

"என்ன சந்தேகம்?" அலெக்ஸ் சந்தேகத்துடன் அவனைப் பார்த்தார்.

அவரைப் பொறுத்தவரை இரண்டுவிதமான பயம் இருந்தது. முதலாவது தாவூத் இஸ்மாயில். தன்னுடைய தற்போதைய சூழ்நிலை தெரிந்தால் தயங்காமல் சுட்டுக் கொன்று விடுவான். போதாக்குறைக்கு வில்லியம் பிளெய்க்கும், அவரது ஃபைலும்கூட இப்போது அவன்வசம். இரண்டாவதாக போலீஸ் துறை எப்படியாவது மோப்பம் பிடித்து வந்துவிடுவார்களோ என்பது.

தான் ஒரு போலீஸ் அதிகாரி என்ற நிலையில் தன்னைப் பழிவாங்க தாவூத் முயலலாம். பழி வாங்கிய பிறகு தன்னுடைய பின்னணி மற்றும் அன்று வரையிலான ரகசியங்களைப் பத்திரிகைகளில் கொடுக்கலாம்.

தாவூத் இஸ்மாயிலின் பொழுது போக்குகளில் ஒன்றைப் பற்றி அலெக்ஸுக்கு நன்றாகவே தெரியும்.

கள்ளக்கடத்தல் மற்றும் போதை மருந்து வியாபாரத்துடன் தொடர்புள்ள போலீஸ் அதிகாரிகள் மற்றும் சுங்க இலாகாவினரைப் பொதுமக்கள் முன் அடையாளம் காட்டுவதும், தோலுரிப்பதும் அவனுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

அவன் சொல்வதை வெளியிடவும் சில பத்திரிகைகள் தயாராக இருக்கின்றன.

ஒரு தடவை இன்கம்டாக்ஸ் கமிஷனர் ஒருவரின் அரண்மனை போன்ற பங்களாவைப் பல கோணங்களில் போட்டோ எடுத்தான். அவரின் பினாமிகளைப் பட்டியலிட்டு அவர்களின் பாங்க் கணக்குகளைச் சேகரித்து, அந்த உறவினரான பினாமிகள் உண்மையில் ஐந்து பைசாகூட சம்பாதிகத் திராணியற்றவர்கள் என்பதையெல்லாம் விளக்கி நாலைந்து பத்திரிகைகளில் கட்டுரை வெளியிடச்செய்தான்.

அது உண்மையிலேயே ஒரு பெரிய பரபரப்பைக் கிளப்பிவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக போலீஸுக்கு அவன் விவரம் தெரிவித்தால், அவர்கள் மற்றொரு பக்கத்தில் சுற்றி வளைப்பார்கள். பெரிய கும்பலாக போலீஸார் வந்து, இப்படிப்பட்ட இடத்தில் கையும் களவுமாக நேரடியாகப் பிடித்ததாகச் செய்தி வெளியானால்.... அதை அவரால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அலெக்ஸுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. எனவே, முதல் தடவை சந்தேகம் என்றவுடன் ஏகத்துக்கு நடுங்கியவர் டி.எஸ்.பி. அலெக்ஸ்தான்.

"இப்போ பிரச்னை எதுவுமில்லை." காளி சொன்னான்.

"ஏதேதோ சத்தம் கேட்டதா முன்னே சொன்ன போலிருக்கே." கோமஸ் விசாரித்தார்.

“ஒருவேளை நம்ம ஆளுங்களே ஒருத்தனோட ஒருத்தன் பேசியிருப்பாங்க. இல்லேன்னா நமக்கு அப்படித் தோணுச்சோ என்னவோ?”

“சரி, எப்படி இருந்தாலும் எச்சரிக்கையா இருக்கிறது நல்லது. நம்ம ஆளுங்ககிட்ட சிகரெட்டெல்லாம் பிடிக்க வேண்டாம்னு சொல்லுங்க. இவங்க பாட்டுக்கு மறைவா ஒதுங்கப் போய் அவன் பாட்டுக்கு நேரா வந்துடப் போறான்.” அலெக்ஸ் எச்சரிக்கை விடுப்பதிலேயே குறியாக இருந்தார்.

“அப்படி யாரும் சட்டுன்னு வந்துட முடியாது வரவும் இல்லை”- காளி உறுதியளித்தான்.

“அப்படி இருந்தால் நல்லது!”

“நாங்க அஞ்சு பேரு இருக்கிறோம். எங்களைக் கொல்லாம இதுக்குள்ளே யாரும் நுழைய முடியாது” காளி தைரியம் அளித்தான்.

“சரி, காளி நீ போகலாம்!” ரஷீத் காளிக்கு விடை கொடுத்தார்.

காளி அங்கிருந்து புறப்பட்டான்.

இதற்குள் தாவூத் பங்களாவை நெருங்கியிருந்தான். பங்களாவைச் சுற்றி சிறிய இடைவெளியில் முள் கம்பி வேலி போட்டிருந்தார்கள். தாவூத் வேலியை நெருங்கி, முள் கம்பிகளுக்கு இடையே இருந்த இடைவெளியைக் கவனித்தான்.

எச்சரிக்கையுடன் நுழைவதானால் ஒரு மனிதன் தாராளமாக நுழைந்து விடலாம். புதிதாகக் கட்டியிருந்தனர் கம்பி வேலியை. முறுக்கேறி விறைப்பாக இருந்தது. சந்தேகம் கொண்ட தாவூத் தனது பாக்கெட்டிலிருந்து டெஸ்ட்டரை எடுத்து முள்கம்பியைத் தொட்டான். டெஸ்ட்டரின் பல்பு பச்சை நிறத்தில் ஒளிர்ந்தது.

அதிகச் சக்திவாய்ந்த மின்சாரம் வேலியில் பாய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

மிகவும் தந்திரமான பாதுகாப்பும்கூட.

மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் கம்பிகள் நெருக்கமாகப் போடாமலிருந்ததன் ரகசியம் தாவூதுக்குப் புரிந்தது. வேலியருகில் வருபவர்கள் எப்படியும் இந்த இரண்டு பகுதிகளிலும்தான் நுழைய முற்படுவார்கள். ஆனால், கம்பியைத் தொட்டவுடன் மின்சாரம் தாக்கவும் வேண்டும். சாதாரணமான நபர்கள் மின்சாரம் பாய்கிறதா, இல்லையா என்றெல்லாமா பார்த்துக் கொண்டிருப்பார்கள்?

தாவூத் யோசனையில் ஆழ்ந்தபடி நின்றான்.

டோமியை அருகே வருமாறு சைகை செய்தான். அவன் அருகில் வந்தான்.

கம்பியில் மின்சாரம் பாய்வதை தாவூத் காண்பித்ததும் டோமி வாயடைத்துப் போனான்.

தோள் பையிலிருந்து கம்பியை வெட்டுவதற்காக கட்டிங் பிளேயரை எடுத்தான். டோமியிடம் நகர்ந்து நிற்கச் சொல்லிவிட்டு, கம்பியின் ஒரு பகுதியை வெட்டினான். கட்டிங் பிளேயராலேயே கம்பியை மேல்நோக்கி வளைத்தும் விட்டான். அதேபோல் கீழ்ப்புறக் கம்பியை வெட்டி வளைத்தான்.

இப்போது எந்தவிதமான சிரமமுன்றி மறுபுறம் செல்ல முடிந்தது. முதலில் தாவூத் இஸ்மாயில் கம்பி வேலியைக் கடந்து உள்ளே வந்தான். டோமியும் பின்தொடர்ந்தான்.

பங்களாவுக்கு அருகில் இருந்த பெரிய தடையைத் தாண்டியாகிவிட்டது. இதைத் தாண்டி யாரும் வர முடியாது என்பதால் உட்புறம் அவ்வளவாக பாதுகாப்பு இருக்காது என்று நினைத்தான்.

வேலியை ஒட்டி உயரமான புல் ஏராளமாக மண்டி வளர்ந்திருந்தது. ஒரு கணம் உற்றுக் கவனித்தபோது பங்களாவுக்குச் சுற்றிலும் அதை வளர விட்டிருப்பது தெரிந்தது. அதில் தவிழ்ந்தபடி முன்புறமாக ஊர்ந்தான்.

திடுமென்று பங்களாவின் மீதிருந்த செர்ச்லைட் எரிந்தது. வட்டமாகச் சுழன்றது. அதன் வெளிச்சம் லேசாக தாவூதின் தலையில் படவும் செய்தது.

'எதற்காக லைட் மறுபடி எரிகிறது?' தாவூத் யோசித்தான். 'ஒரு வேளை யாருக்காவது சந்தேகம் ஏற்பட்டிருக்குமோ?'

லைட் அணைந்தது. மேலும் இரண்டடி நடந்தபோது பங்களாவின் மொத்த விளக்குகளும் அணைந்தன.

தாவூத் கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி ஒன்று பத்து என்பதை அந்த எலெக்ட்ரானிக்ஸ் வாட்ச் தெளிவாகக் காட்டியது.

"ஒருவேளை உறங்கத் தொடங்கியிருக்கலாம்!" தாவூத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

ஆனால், உண்மையில் நடந்ததே வேறு.

வேலியைத் துண்டித்தபோது அதனுடன் தொடர்பு கொண்ட சிவப்புநிற பல்பு வீட்டுக்குள் எரியத் தொடங்கியது. எனவே வேலியில் ஏதோ சிக்கல் என்று தெரிந்தது, அதைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களுக்கு.

'ஒருவேளை பங்களாவை யாராவது சூழ்ந்து கொண்டிருக்கிறார்களோ?' அவர்களிடம் சந்தேகம் எழுந்தது.

அலெக்ஸின் யோசனைப்படிதான் விளக்கு அணைக்கப்பட்டது.

"ஒருவேளை யாராவது காம்பௌண்டுக்குள் நுழைந்திருந்தால், பங்களாவுக்குள் வரட்டும், விட்டுவிடுங்கள்!" என்றார்.

'வாசல்படிக்கு வந்ததும் விளக்குகளை எரியவிட்டு நடவடிக்கையைத் தொடங்கலாம்' என்பது அவரது திட்டம்.

காளியை அழைத்தார்.

வந்து சேர்ந்தான்.

"யாரோ வந்திருக்கிறார்கள். எச்சரிக்கையோடு இருங்கள். நிலைவாசற்படியருகே மூன்று பேர். உள்ளே இருப்பவர்களையும் உதவிக்கு அழைத்துக் கொள்ளுங்கள். அஞ்சுபேர் பங்களாவைச் சுற்றி வரட்டும். சந்தேகத்துக்கு உரியவர்களாக யார் தென்பட்டாலும் சுட்டுத் தள்ளுங்கள்." ரஷீத் காவல்காரர்களுக்கு உத்தரவிட்டார்.

காளி துப்பாக்கியைத் தோளில் மாட்டிக்கொண்டு வெளியேறினான்.

தாவூத் இஸ்மாயில் பங்களாவின் முன்புறத்தை அடைந்தான். ஊன்றிக் கவனித்தபோது இயற்கை வெளிச்சத்தில் யாரெல்லாமோ வாசற்படியருகில் நிற்பது போல் தெரிந்தது.

காளியும் அவன் கூட்டாளிகளும்தான் அங்கு நின்றிருந்தனர். கண்களைக்கூட இமைக்காமல் அவர்கள் வாசற்புறத்தையே கவனித்துக் கொண்டிருந்தனர்.

# 16

அந்த நேரம் காளிக்கு ஏதோ ஒரு சந்தேகம் தோன்றியது.

தாங்கள் நின்றுகொண்டிருக்கும் பகுதிக்கு முன்னால் ஏதோ அசைவது போலத் தோன்றியது. புல் ஏராளமாக வளர்ந்திருக்கும் பகுதியில்தான் அதுவும் தெரிந்தது; சன்னமான காற்று வீசியது போலிருந்தது.

தேர்ந்த குற்றவாளியாக இருந்தாலும் கூர்மையான அறிவு கொண்டவனாதலால் காளிக்கு உண்மையில் அது காற்றினால் எழுந்தது அல்ல, யாரோ மனிதர்தான் நிற்பதாகத் தோன்றியது. சற்று நேரத்துக்கு முன்னால் நிகழ்ந்த சம்பவத்தை வைத்துப் பார்த்தால் நிச்சயம் அது யாரோ மனிதர்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

ஒரு பூனை மாதிரி அவன் காதுகளைக் கூர்மையாக்கினான்.

இருட்டை ஊடுருவதுபோல் அவன் கண்கள் பளபளத்தன. உடனடியாக அவனுக்கு விஷயம் விளங்கியது.

"யாரோ நிற்கிறார்கள்! மறைந்து நிற்கிறார்கள். அந்தப் பகுதியில் வேறு ஏதாவது அசைவு தெரிந்தால், பார்த்தால் கண்ணை மூடி துப்பாக்கியால் சுட்டுவிட வேண்டியதுதான்' என்று தீர்மானித்தவனாகத் துப்பாக்கியை உயர்த்தினான்.

இரண்டு தடவை குண்டு வெடித்தது.

ஆனால், விழுந்தது காளியும் அவனது கூட்டாளி ஒருனும்தான்.

கண்ணிமைப்பதற்குள் பங்களா உயிர் பெற்றது.

காவல்காரர்கள் துப்பாக்கியும் கையுமாக ஓடி வந்தார்கள்.

அலெக்ஸ், சைமன், ரஷீது மூவரும் கலவர நிலைக்கு வந்தார்கள். அவசர அவரசமாகக் கதவை மூடினர். விளக்கை அணைத்துவிட்டனர். எனினும் மூவரும் கைத்துப்பாக்கியைக் கையில் தயாராக வைத்தபடி நின்றனர்.

அறைக்குள் நுழைவது யாராக இருந்தாலும் சுட்டு விடுவதென்று தீர்மானித்தனர்.

தாவூத் இஸ்மாயிலும் டோமியும் பங்களாவுக்குள் வந்து விட்டனர். மாடிப்படியேறி மேற்புறத்தை அடைந்தனர். அதற்குள் கீழ்த்தளத்தின் வரவேற்பு ஹாலில் விளக்குகள் எரியத் தொடங்கின.

நிலைவாசலைக் கடந்து ஆறுபேர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அவர்கள் எந்த நேரத்திலும் துப்பாக்கியைப் பயன்படுத்தும் தயார் நிலையில் இருந்தார்கள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள்தான் தாவூத் இஸ்மாயிலுக்கு மிகவும் பிடித்தமானவை. இதுபோன்ற நேரங்களில்தான்

உண்மையில் அவனுடைய திறமை என்ன என்பதே மற்றவர்களுக்குப் புரிகிறது.

தாவூதின் கையிலிருந்த துப்பாக்கி வெடித்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவன் விரல்களும் கைகளும் செயல்படும் சுறுசுறுப்பு எப்படிப்பட்டவரையும் பிரமிக்கவே வைக்கும். தீபாவளிக்கு பட்டாசு வெடிப்பதைப்போல் தொடர்ந்து வெடியோசை கேட்டது. விநாடிக்கு விநாடி அவனது குறி மாறியது. ஆனால், இந்தத் துப்பாக்கிச் சூட்டில் யாருமே மரணமடையவில்லை. எல்லோரின் கைகளின் மணிக்கட்டுப்பகுதி மட்டுமே சேதாரமாகியது. அதே நேரம் ஒவ்வொருவர் கையிலிருந்த துப்பாக்கிகளும் தெறித்து விழுந்தன.

சாதாரணமாக இடது கையைப் பயன்படுத்தும் நபர்களைப் பொறுத்தவரை அவன் குறி ஒன்றுமே தவறவில்லை.

எல்லோரும் கீழே விழுந்ததும் தாவூத், டோமியை அந்த இடத்தில் நிற்க வைத்தான்.

"யார் வந்தாலும் கண்ணை மூடிட்டுச் சுட்டுடு. இது ஜீவமரணப் போராட்டம். எதிரிகள் இந்த மாதிரி இடங்களிலிருந்து எப்படித் தப்பித்தாலும் அது நமக்கு ஆபத்துதான். ஞாபகமிருக்கட்டும்." எச்சரிக்கை செய்த தாவூத் அங்கிருந்து மறைந்தான்.

தோளில் போட்டிருந்த பையிலிருந்து வேட்டைக்காரர்கள் பயன்படுத்தும் ஹெட்லைட்டை எடுத்து நெற்றியில் பொருத்திக்கொண்டான்.

ஒரு தடவை லைட்டை எரியவிட்டான்.

ஏறத்தாழ ஒரு மீட்டர் விட்டமுள்ள வெளிச்சம் வட்டமாகச் சுவரில் பதிந்தது. தலையை லேசாகத் திருப்பினான்.

அதையொட்டியிருந்த கதவுகளுக்கு மத்தியில் திரைச்சீலை அகப்பட்டிருப்பது தெரிந்தது. அப்படியானால் அந்த அறைக்குள் ஆட்கள் இருக்கிறார்கள் என்பது அர்த்தம்!

அதன் பிறகு தாவூத் தாமதிக்கவில்லை.

சற்றுப் பின்புறமாக நகர்ந்து ஒரு தடவை கதவின் அகலத்தை ஊன்றிக் கவனித்தவன் ஒரே பாய்ச்சலில் கதவை எட்டி உதைத்தான்.

உட்புறம் செருகி வைத்திருந்த தாழ்ப்பாள் கொக்கியிலிருந்து விடுபட்டது.

தலையில் பொருத்தியிருந்த ஹெட்லைட்டைக் கழற்றி அருகில் தட்டுப்பட்ட மேஜைமீது வைத்து, அதன் சுவிட்சைத் தட்டினான்.

விளக்கு எரியத் தொடங்கிய அதே கணத்தில் துப்பாக்கியொன்று விசையுடன் குண்டை உமிழ்ந்தது.

குண்டுவெடித்த வெளிச்சம் தென்பட்ட திசையை நோக்கி தாவூத்தும் சுட்டான்.

"ஐயோ!" 1 என்றோர் அலறல் கேட்டது.

லைட் சற்று நகர்ந்து ஒளிவிட்டம் மாறியது.

மறுபடியும் குண்டு வெடித்தது.

தாவூத்தின் விரல்கள் சுறுசுறுப்படைந்தன.

அலறல் எழுந்தது.

தாவூத் லைட்டைக் கையில் எடுத்துக்கொண்டான். அணைத்துவிட்டுப் பழையபடி அதே இடத்திலேயே வைத்து லைட்டை எரியவிட்டான்.

இந்தத் தடவை வெடியோசை கேட்கவில்லை. நடந்தது இதுதான்:

இரண்டு தடவை எழுந்த வெடிச்சத்தத்தினால் பாதிப்படைந்தது அலெக்ஸும், சைமனும்தான். இருவரது மணிக்கட்டுகளும் கழன்றுபோய் விட்டதுபோல்

'விண்விண்'ணென்று தெறித்தன. துப்பாக்கி, யாரோ பிடுங்கியெறிந்ததுபோல் தொலைவில் போய் விழுந்தது.

சந்தேகம் கொண்ட ரஷீத் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

மறுபடி லைட்டை எரியவிட்டும் எந்தவிதமான எதிர் நடவடிக்கையும் இல்லாமல் போகவே, தாவூத் ஹெட்லைட்டை எடுத்து நெற்றியில் பொருத்திக்கொண்டான்.

சுவிட்சை அழுத்தித் தலையைத் திருப்பியபோது அலெக்ஸ் ஜோன்ஸும், சைமன் கோமஸும் குண்டு பாய்ந்து விழுந்து கிடந்தது தெரிந்தது. அந்த அறையின் சுவிட்ச் போர்டைக் கண்டுபிடித்து விளக்கை எரிய விட்டான்.

''நான்தான் தாவூத் இஸ்மாயில்! அந்தத் தங்க பிஸ்கெட்டுக்ளை ஒழுங்கா என்கிட்ட ஒப்படைக்கலேன்னா, உங்களைக் கொல்றதைத் தவிர எனக்கு வேற வழியில்லை. நான் சொன்னா சொன்னபடி நடக்குறவன்ங்கிறது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம். ம்...எடுங்கள்!" தாவூத் தன் கையிலிருந்த துப்பாக்கியின் குதிரையை இழுத்தபடி பேசினான்.

அழுத்தினான்.

அலெக்ஸ் ஜோன்ஸின் வலது கால்ஷூவில் குண்டு பாய்ந்தது.

''இது என் குறி தவறாதுன்னு உங்களுக்கு நிரூபிக்கிறதுக்காகக் கொடுத்த இலவச இணைப்பு. ம்... எங்கே தங்கபிஸ்கெட்டுகள்?" தாவூத் கேட்டான்.

"அதோ.. அந்த அலமாரிக்குள்!" அலெக்ஸ் மிகுந்த வேதனையுடன் அலறினார்.

தாவூத் அலமாரியைத் திறந்து பார்த்தான்.

அதற்குள் எதுவும் இல்லை!

"ரஷீத்!" தாவூத் இஸ்மாயில் உரத்த குரலில் அலறினான். "அதை என்னிடம் ஒப்படைக்காவிட்டால், இதோ என் முன்னால் கிடக்கும் இந்த இருவரையும் நான் சுட்டுப் பொசுக்கத் தயங்கமாட்டேன். அது மட்டுமின்றி உனது பங்களாவையே குண்டுவைத்துத் தகர்த்து விட்டுத்தான் இங்கிருந்து கிளம்புவேன். ஞாபகமிருக்கட்டும்!"

அதற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை.

"ரஷீத், நீ எங்கே இருந்தாலும் நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்க. நான் மூணு எண்ணுறதுக்குள்ள நீ இங்கே வரலேன்னா, உன் நண்பர்கள் ரெண்டு பேரும் இங்கேயே சாவறது உறுதி!" தாவூத் மீண்டும் உரத்த குரலில் அலறினான்.

அலெக்ஸும், சைமன் கோமஸும் அதைக் கேட்டு நடுங்கினார்கள். 'தாவூத் சொன்னால் சொன்னபடி செய்யக்கூடியவன். அதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாதே!'

தாவூத், விழுந்து கிடக்கும் இருவரையும் குறிபார்த்தபடி எண்ணத் தொடங்கினான்:

"ஒன்... டு..."

அமைதி!

"தயவு செஞ்சு சுட்டுடாதே தாவூத்!" அலெக்ஸும், சைமனும் ஏககாலத்தில் அலறினார்கள்!

"...த்ரீ!"

"இதோ இங்கே இருக்கிறேன்!" திடுமென்று ரஷீதின் குரல் கேட்டது. துப்பாக்கியின் குறியை மாற்றாமலே தாவூத் திரும்பினான். ரஷீதின் குரல் கேட்டது. ரஷீத், ஒரு பெரிய பாலித்தீன் பையுடன் வாசலருகில் நின்றிருந்தான்.

"இதோ இதற்குள் இருக்கிறது நீ கேட்ட தங்க பிஸ்கெட்டுகள்!"- ரஷீத் அந்த பாலித்தீன் பையை தாவூத் இஸ்மாயிலின் முன்னால் வீசியெறிந்தான்.

வலது கையில் துப்பாக்கியைப் பிடித்தபடி தாவூத் அருகில் வந்து பாலித்தீன் பையின் வாய்ப்புறக் கட்டுகளை அவிழ்த்தான். அதிலிருந்து ஒரு தங்க பிஸ்கெட்டை எடுத்தது மேற்புறம் போட்டு, அதை நோக்கிச் சுட்டான். அது நாலைந்து துண்டுகளாகச் சிதறித் தரையில் விழுந்தது.

"உதிர்ந்து போயிருக்கிற துண்டுகளை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் கிளம்புவது வரையில் இங்கிருந்து யாரும் நகரக்கூடாது. வீணாக என் துப்பாக்கிக்கு வேலை கொடுக்காமல் இருப்பது நல்லது!" தாவூத் பின்புறமாக நகர்ந்தான்.

கண்மூடித் திறப்பதற்குள் தாவூத் பாலித்தீன் பையுடன் அங்கிருந்து மறைந்துவிட்டான்.

"டோமி, நீ சீக்கிரமாப்போய் பங்களாவுக்கு முன்னால இருக்கிற காரை ஸ்டார்ட் பண்ணு!" தாவூத் டோமியிடம் சொன்னான்.

போர்ட்டிகோவில் கார் ஒன்று நின்று கொண்டிருந்தது.

சில நிமிடங்களுக்குள் கார் ஸ்டார்ட் ஆன இரைச்சல் கேட்டது. தாவூத் காருக்குள் ஏறிக்கொண்டான்.

வளைவான எஸ்டேட் ரோட்டில் கார் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது.

"நம்மளோட வேலை வெற்றிகரமா முடிஞ்சிடுச்சு இல்லையா?" தாவூத் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு கேட்டான்.

"எனக்கே இதெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது நம்பவே முடியவில்லை!" டோமி பதிலளித்தான்.

எஸ்டேட்டின் எல்லையைக் கடந்ததும் மெயின் ரோட்டுக்கு வந்து கார் மேற்குத்திசையில் திரும்பியது.

"நேரா ஊருக்குள்ள போகலாமா, வேற எங்கேயாவது போக வேண்டியிருக்கா சொல்லுங்க." டோமி கேட்டான்.

தாவூத் வழி சொல்லித் தந்தான். கார் சற்று நேரத்தில் டாக்டர் சுகாசினியின் வீட்டு முன்னால் நின்றது.

"நாளைக்கு சாயந்திரம் நான் ஓட்டலுக்கு வர்றேன். போகிறவழியில இந்த காரை எங்கேயாவது விட்டுட்டுப் போயிடு. இந்தா... இதை வெச்சுக்க..." தாவூத் இரண்டு தங்க பிஸ்கெட்டை எடுத்துக்கொடுத்தான்.

டோமி, அதை வாங்கத் தயங்கினான்.

"தயங்காம வாங்கிக்கலாம். கள்ளக்கடத்தலை போலீஸில காட்டிக் கொடுத்தாலே, பறிமுதல் பண்ணுறதுல பத்து சதவிகிதம் துப்புக்கொடுத்தவங்களுக்கு உண்டு" தாவூத் வற்புறுத்தினான்.

டோமி அதை வாங்கி பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

கார் அங்கிருந்து மறைந்தபிறகு தாவூத் இஸ்மாயில் ரோட்டைக் கடந்து, கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான். காலிங்பெல் சுவிட்சில் விரலை வைத்து அழுத்தினான்.

உள்ளே பெல் ஒலிக்கும் சத்தம் கேட்டது.

கதவு திறக்கப்பட்டது.

வீட்டுக்குள் நுழைய முற்பட்டபோது துப்பாக்கியின் முனை ஒன்று தாவூத்தின் கழுகுக் கண்களுக்குத் தட்டுப்பட்டது.

தாவூத் சட்டென்று பின்வாங்கி ஒதுங்கி நகர்ந்தான்.

# 17

அறைக்குள் தட்டுப்பட்ட துப்பாக்கியின் விளிம்பும் தாவூதை நோக்கித் திரும்பி முன்னேறியது.

"அசையாதே!" உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

தாவூத் ஓசையெழுப்பாமல் இடதுபுறமாக நகர்ந்தான்.

ரிவால்வரைப் பிடித்திருந்த கை கதவுக்கு வெளியே வந்தது.

தாவூத்தால் அதிலிருந்து தப்பிக்க முடியவில்லை.

துப்பாக்கியுடன் டி.எஸ்.பி. ஹமீது வெளியே வந்தார்.

"கொள்ளையடித்த தங்க பிஸ்கெட்டுகள் எங்கே?" ஹமீது கேட்டார்.

"பத்திரமாக வச்சிருக்கிறேன். நாம உள்ளே போய் விரிவாப் பேசலாமே!" தாவூத் கேட்டுக் கொண்டான்.

ஒரு பிரத்தியேகத் தைரியத்துடன்தான் அவன் அப்படிப் பேசினான். தன் கையில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்க பிஸ்கெட்டுகள் இருப்பதால் அந்த போலீஸ் அதிகாரி தன்னைச் சுட்டுக்கொல்ல மாட்டார் என்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்தது.

மேலும் அது டாக்டர் சுகாசினியின் வீடு. அந்த இடத்தில் தனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், அது பல வகையான வதந்திகளையும் கிளப்பிவிடலாம் என்று நினைத்தான்.

'டி.எஸ்.பி. ஹமீது எப்படி இங்கே வந்தார்? தான் இந்த இடத்துக்குத்தான் வருவேன் என்று அவருக்கு எப்படித் தெரியும்? சுகாசினி இதற்கு உடந்தையாக இருந்திருப்பாளோ?' தாவூத்தின் மனத்துள் இப்படிப் பல யோசனைகள் கிளை பரப்பினாலும் தைரியத்துடன் வீட்டுக்குள் நுழைந்தான்.

துப்பாக்கியைக் கையிலிருந்து அகற்றாமலே ஹமீதும் பின்னுக்கு நகர்ந்தார்.

"வீணா எதுக்கு சார் அந்தத் துப்பாக்கியைக் கையில வெச்சிருக்கீங்க? விரல் ஏதாவது ஏடாகூடமா அசைஞ்சா நம்ம ரெண்டு பேருக்குமே அது நல்லதில்லை. இதோ பார்த்தீங்களா... இது ஃபாரின் தயாரிப்பு..." தாவூத் தன்னுடைய பாக்கெட்டில் இருந்து துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

தாவூதின் கையில் துப்பாக்கியைப் பார்த்ததும் ஹமீது ஒருகணம் தயங்கினார்.

அந்த இடத்தில், அந்தச் சூழ்நிலையில் அனாவசியமான துப்பாக்கிச் சண்டையைத் தவிர்க்க வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தார்.

“சார் நான் ஒண்ணு சொல்லட்டுமா? என்னை நீங்க சுடலாம். நானும் சுடுறதுல அவ்வளவு மோசமானவன் கிடையாது. நாம ரெண்டு பேரும் ஒரே சமயத்துல துப்பாக்கியை அசைப்போம். ஒருவேளை அதிர்ஷ்டவசமா நான் மட்டும் அதில தப்பிக்கலாம். வீணா ஒரு பரிசோதனை முயற்சி தேவையா? நான்தான் உங்களோட பேசத் தயார்னு சொல்றேனே!” தாவூத் மிகவும் சாதாரணமாகப் பேசினான்.

அந்த வார்த்தைகள் ஹமீதை யோசிக்க வைத்திருக்க வேண்டும். உடனே தனது துப்பாக்கியை உறைக்குள் போட்டுக்கொண்டார்.

“அதுதான் நம்ம இருவருக்குமே நல்லது.” தாவூத் இஸ்மாயில் சிகரெட் கேஸை வெளியே எடுத்து சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டான்.

“நான் அதிக நேரம் இங்கே தங்க முடியாது. சீக்கிரம் சொல் எங்கே அந்தத் தங்க பிஸ்கெட்டுகள்?” ஹமீது பொறுமையிழந்தவராகக் கேட்டார்.

“இதோ...”- தாவூத், தன் கைவசமிருந்த பாலித்தீன் பையை மேஜைமீது தலைகீழாகக் கொட்டினான். தங்கக்கட்டிகள் சிதறி விழுந்தன. ஹமீது அந்தக் காட்சியைக் கண்டு வியப்பினால் வாயடைத்துப் போனார். அப்போது டாக்டர் சுகாசினியும் அங்கு வந்து சேர்ந்தாள்.

“டாக்டர் நீங்கதான் என்னைக் காட்டிக் கொடுத்தீங்களா?” தாவூத் அவளை நோக்கித் திரும்பியபடி கேட்டான். அவன் கண்கள் சிவந்திருந்தன.

“இல்லை... நான் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன்.” சுகாசினி பயந்தவளாகப் பேசினாள்.

“தாவூத் இஸ்மாயில், இந்தக் கேள்விக்கு நானே பதில் சொல்கிறேன். நான் இங்கே வந்ததற்கும் சுகாசினிக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. நீ இங்கேதான் வருவாய் என்று நான் யூகித்தேன். மற்றொரு விஷயத்தையும் நான் சொல்கிறேன். இந்தத் தொடர்பு வேறு யாருக்கும் நிச்சயமாகத் தெரியாது.” ஹமீது இருவரையும் மாறிமாறிப் பார்த்தார்.

“அதாவது உங்களுக்கு மட்டும் எல்லாம் தெரியும். அதனால் இனிமேல் டாக்டரை பிளாக்மெயில் செய்யப் போகிறீர்கள், அப்படித்தானே?”

“என் பெயர் ஜலாலுதீன் ஹமீது. நான் ஒரு முஸ்லிம்... உண்மையான முஸ்லிம்..: அதாவது எல்லாவகையிலும் நான் சொன்னதன் பொருள் உங்களுக்கு விளங்கியிருக்கும் என்று நம்புகிறேன்.”

“நான் உங்களை நம்புறேன் சார். இந்தத் தங்க பிஸ்கெட்டுகளை உயிரைப் பணயம் வைத்து நான் எடுத்து வந்திருக்கிறேன். இதை எடுத்துவர எனக்கு உதவிய நபருக்கு நான் ஒரு பங்கு தரவேண்டி உள்ளது. கள்ளக் கடத்தல் பொருளைக் கைப்பற்றும்போது காட்டிக் கொடுத்தவருக்குப் பத்து சதவிகிதம் அன்பளிப்புத் தருவது உங்கள் வழக்கமல்லவா? அதை மட்டும் நான் இதிலிருந்துஎடுத்துக்கொள்ளலாமில்லையா?” தாவூத், ஹமீதின் முகத்தைப் பார்த்தான்.

“நீ குறிப்பிட்ட அந்தப் பங்கை நிச்சயம் எடுத்துக் கொள்ளலாம். இதை நீ கைப்பற்றியபோது அந்த இடத்தில் யாரெல்லாம் இருந்தார்கள்?” ஹமீது கேட்டார்.

தாவூத் மௌனமாக யோசித்தான்.

‘வேண்டுமானால் இந்தச் சந்தர்ப்பத்தில் அலெக்ஸ் ஜோன்ஸின் பெயரைச் சொல்லலாம். அவர் இப்போதும் பதவியில்

இருக்கிறார். அவரை வேலையிலிருந்து தொலைக்க இது ஒரு நல்ல வாய்ப்பும் கூட.'

"வேண்டாம் சார்! நீங்கள் அதைத் தெரிந்துகொள்ள வேண்டாம். உங்களுக்கு வழக்கில் பயன்படுத்த ஒரு நபர் தேவையென்றால் என் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்... இது உங்களுக்கு வழக்கமான வேலையும் கூட!"

தாவூதின் வார்த்தைகளைக் கேட்ட ஹமீது ஒரு கணம் வியப்படைந்தார்.

தன் மீதுள்ள குற்றத்தை மறைக்க அவன் வேறு யாருடைய பெயரையாவது சொல்வான் என்றுதான் டி.எஸ்.பி.ஹமீது நினைத்தார். ஆனால், பேர்போன குற்றவாளியான தாவூத் இஸ்மாயிலின் மற்றொரு நல்ல குணத்தை அப்போது அவரால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

பத்து தங்கபிஸ்கெட்டுகளை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றை மறுபடி எடுத்து பாலித்தீன் பேக்கில் போட்டான். பேக்கை ஹமீதிடம் ஒப்படைத்தான். பின்பு தனக்கென்று ஒதுக்கி வைத்திருந்த தங்கக் கட்டிகளில் ஐந்தை எடுத்து ஹமீதின் கையில் கொடுத்துவிட்டுச் சொன்னான்: "இது உங்களுக்கான ரிவார்டு. அதாவது என்னைப் பிடித்ததாக நீங்கள் பதிவு செய்யும் வழக்குக்கு... டாக்டர் சுகாசினி இப்படி வாருங்கள்!" தாவூத் அவளை அழைத்தான்.

கட்டளை போலிருந்த அவன் குரலுக்கு அவளால் கட்டுப் படாமல் இருக்க முடியவில்லை. அவள், அவனுக்கு அருகே வந்தாள்.

"உட்காருங்கள் டாக்டர்!"

அவள் அமர்ந்தாள்.

"மீதமுள்ள ஐந்தும் உங்களுக்கு உரியது. உங்களுக்கு இதை நான் பரிசளிக்கக் காரணம், நீங்கள்தானே உரிய நபர்!" தாவூத் அவளிடம் பேசினான்.

“வேண்டாம்... இது எனக்குத் தேவையில்லை உங்களை இந்த இடத்தில் இவர் பிடிக்க நேர்ந்ததில் நான் வருத்தப்படுகிறேன். எனக்கு வேண்டாம்.” அவள் மறுத்தாள்.

“நல்லது உங்களை நினைத்துப் பெருமிதப்படுகிறேன்.” அவன் அவளை சாதாரணமாகப் பார்த்தான்.

“சரி, நான் புறப்படுகிறேன். இன்னும் இருபத்து நாலுமணி நேரத்துக்கு இது தொடர்பாக உங்களை யாரும் பிடிக்க மாட்டார்கள்.”- ஹமீது எழுந்தார்.

அவர் வாசலைக் கடந்தார்.

வெளியேறியதும் திரும்பி நின்று எச்சரித்தார்: “கதவை மூடிக்கொள்ளுங்கள் நான் போகிறேன். எச்சரிக்கையாக இருங்கள்.”

ஹமீது அங்கிருந்து மறைந்தார். அவரது கார் ஸ்டார்ட் செய்து புறப்பட்ட சத்தம் கேட்டது.

“டாக்டர்... என்ன இது? எதற்காக இப்படி?” தாவூத் கேட்டான்.

சுகாசினி அவனை நெருங்கி வந்தாள்.

“என்னை நீங்கள் இன்னுமா நம்பவில்லை?” அவள், அவன் முகத்தைப் பார்த்துக் கேட்டாள்.

“இப்போது எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. நம்புகிறேன்!” அவள் நெற்றியில் விழுந்திருந்த தலைமுடியை ஒதுக்கியபடி கூறினான்.

அந்தக் கண்களில் ஏதோ ஒன்று தெரிந்தது.

“இப்போ சுத்தமா பயம் போயிடுச்சு இல்லையா?” தாவூத் அவளது முகத்தை தன்னை நோக்கி இழுத்தான். அவள் முகம் உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவன் குனிந்து அவளை முத்தமிட்டான். அவன் கைகள் அவள் தோள்களின் மீது பதிந்து மெதுவாக கீழ் நோக்கி இறங்கத் தொடங்கின.

“டாக்டர்...”

“வேண்டாம்... என்னைப் பேர் சொல்லியே நீங்க கூப்பிடலாம்.” அவள் பிகுவுடன் பேசினாள்.

“ஆமாம்... இவ்வளவு தூரம் வந்த பிறகு அதெல்லாம் எதுக்கு? சுகாசினி நான் ரொம்பவும் களைப்பா இருக்கிறேன். உண்மையைச் சொன்னால், மரணத்திலிருந்து தப்பித்து வந்திருக்கிறேன். இப்ப குளிக்கணும் போல் இருக்கு!”

அவளிடமிருந்து விலகி நடந்தான்.

மேஜை மீது கிடந்த தங்கபிஸ்கெட்டுகளை அவன் சுகாசினியின் கைகளில் வைத்தான்.

“வேண்டாம்... இதெல்லாம் தேவையில்லை.” அவள் மறுத்தாள்.

“பரவாயில்லை வைத்துக்கொள் சுகாசினி. நீ இதை எடுத்துக் கொள்ளாவிட்டால் இங்குள்ள சட்டத்தின் காவலர்கள் எடுத்துக்கொள்வார்கள், அவ்வளவுதான். அப்படிப்பட்ட ஒருவரிடமிருந்துதான் நான் இதையெல்லாம் தட்டிப் பறித்து வந்திருக்கிறேன்.”

“அப்படியா... யார் அந்தக் கனவான்?”

“அதை மட்டும் கேட்காதே.” அவன் அவள்ள வாயைப் பொத்தினான். அவள் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவற்றை வாங்கிக் கொண்டாள்.

குளியலறைக்குள் நுழைந்த தாவூத் இஸ்மாயில் குளிர்ந்த நீரை எடுத்து ஊற்றிக் குளிக்கத் தொடங்கினான். அவன் உடல் புத்துணர்வு பெற்றது.

லுங்கி ஒன்றை உடுத்திக்கொண்டு அவளின் படுக்கையறைக்குள் நுழைந்த அவனின் திண்மையான உடம்பு சுகாசினியின் மனத்தில் உணர்வுகளின் மத்தாப்புகளைக் கொளுத்தியது. அவனின் உறுதியான கரங்களையும், திரண்ட

மார்புப் பகுதிகளையும் வெண்மையான வயிற்றுப் பகுதியையும் அவள் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

அவள் அணிந்திருந்த நைட்கவுனின் பட்டன்களின் மீது தாவூதின் விரல்கள் பட்டதும் அவை தானாகவே அவிழ்ந்து கொண்டன. தாவூதின் கைகள் அவள் உடல் பரப்புகளின் கண்டபடி அலைந்தன.

சுகாசினியின் கைகள் இரண்டும் தாவூதின் முதுகுப்பகுதிகளில் பதிந்தன. அவனது வெப்பமான மூச்சு, அவளின் கன்னக் கதுப்புகளில் மோதிச் சிதறின.

"இருபத்துநாலு மணி நேரம் ஞாபகமிருக்கிறதா?"- சுகாசினி அவன் பிடரியை வருடியபடி கேட்டாள்.

"நான் மறக்கலை. அதுக்கு அப்புறமும் ஹமீது என்னைப் பற்றிச் சொல்லமாட்டார்... தேடமாட்டார்!"

"ஏன் அப்படி?"

"அவருக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. இல்லாவிட்டால் துல்லியமாக இங்கு வந்து எப்படி என்னை மடக்கியிருப்பார்?"

"ஆமாம்... எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!" சுகாசினி எழுந்தபடி பேசினாள்.

"நான் ஒண்ணு கேட்கட்டுமா?" சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு தாவூத் இஸ்மாயில் சுகாசினியின் உதடு, கன்னம் என்று விரல்களை அளைய விட்டபடி கேட்டான்.

"கேளுங்க!"

"ஹமீது எப்படி இங்கே வந்தார்?"

"அவர் எனக்கு போன் பண்ணினார்!"

"அப்புறம்?"

"நான் வீட்டிலதான் இருக்கிறேன்னு சொன்னேன். வேற எதுவும் கேட்கலை. கொஞ்ச நேரத்துல கார்ல வந்து இறங்கினார்.

நான் தனியா இருக்கிறேன்னு சொன்னதும், என்னால உனக்கு எந்தத் தொந்தரவும் ஏற்படாதும்மான்னு சொன்னார். இன்னிக்கு ராத்திரி இங்கே ஒரு விருந்தாளி வரப்போறார். அவருக்காகத்தான் வந்திருக்கிறேன்னார். அந்த விருந்தாளி யாருன்னே உண்மையில் எனக்குத் தெரியாமத்தான் இருந்தது."

"அப்புறம்...?"

"அவராவே உங்களைப் பத்திப் பேசினார். அதுக்கப்புறம் அவர்கிட்ட நான் எதையும் மறைக்கலை!"

"ஓகோ... ஹமீது என்னைப் பற்றி அளவுக்கு அதிகமாகவே தெரிந்து வைத்திருக்கிறாற்போல் தெரிகிறது. அவரால் எனக்கு எப்போது வேண்டுமானாலும் ஆபத்து ஏற்படலாம்!"

"எனக்கு அப்படித் தோணலை. அவர் விரும்பியிருந்தா, இன்னிக்கேகூட உங்களுக்குத் தொல்லை தந்திருக்கலாம்."

"அதை வைத்துக்கொண்டு பேசக்கூடாது. இந்த போலீஸ் அதிகாரிகள் எல்லாருமே இப்படித்தான். தங்களது காரியம் நிறைவேறுவதற்காக எப்படி வேண்டுமானாலும் நடிப்பார்கள். அவ்வளவு சீக்கிரம் அவர்களை நம்பக்கூடாது."

"அதுக்கு இப்போ என்ன செய்யப் போறீங்க?"

"அதை இருபத்துநாலுமணி நேரத்துக்குப் பிறகு யோசிப்போம்."

"எனக்கென்னமோ அது அவ்வளவு நல்லதாப்படலை. இருபத்து நாலுமணி நேரம் தாண்டுறதுக்குள் போலீஸ் இந்த வீட்டை வளைச்சுக்கலாம்."

"எனக்கும் அது தெரியும்!"

அலெக்ஸ் ஜோன்ஸும், சைமன் கோமஸும் விடியற்காலையிலேயே ஊருக்குள் இருந்த பெரிய மருத்துவ மனைக்கு வந்தனர்.

மதிய நேரம் வந்த ஹமீது அலெக்ஸைப் பார்த்தார்.

"என்ன அலெக்ஸ்? என்ன ஆச்சு உங்களுக்கு? எதுக்காக உங்க கையில் பாண்டேஜ்?" கட்டுப்போட்டிருக்கும் கையைப் பார்த்தபடி ஹமீது கேட்டார்.

"ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட் சார்!"

"அப்படியா, கவலைப்படுற அளவுக்கு எதுவுமில்லையே, பரவாயில்லை. வில்லியம் பிளெய்க்கைப் பத்தி ஒரு தகவல் கிடைத்தது.

"எங்கே இருக்கிறார்?" அலெக்ஸ் ஆவலுடன் கேட்டார்.

"தாவூத் இஸ்மாயிலோட கஸ்டடியில இருக்கிறார்!"

"அதுதான் தெரியுமே இடம் எது சார்?"

"மறுபடி அவனைப் பார்த்தேன்னா, பிளெய்க்கை விடுதலை பண்ண வச்சிடலாம்!"

"மறுபடின்னு சொன்னா... ஏற்கெனவே அவனைப் பிடிச்சுட்டீங்களா என்ன?"

"தப்பிச்சிட்டான். ஆனால், அவன் கடத்தி வந்த தங்க பிஸ்கெட்டுகள் எல்லாத்தையும் கைப்பற்றி விட்டேன். அதை நான் போலீஸ்ல ஒப்படைக்கவும் செஞ்சுட்டேன். முறைப்படி ரசீதுகூட போட்டாச்சு" ஹமீது ஒரு துண்டுக்காகிதத்தை எடுத்துக் காட்டினார்.

அலெக்ஸ் ஜோன்ஸ் சந்தேகம் நிறைந்த கண்களுடன் ஹமீதைக் கவனித்தார்.

# 18

"மிஸ்டர் ஹமீது, நீங்கள் ஒரு அதிசய மனிதரேதான்!" அலெக்ஸ் ஜோன்ஸ் கூறினார்.

"நீங்க இந்த அளவு புகழ்கிற மாதிரி நான் எதையும் செய்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை!''ள ஹமீது தன்னடக்கத்துடன் பேசினார்.

"நீங்கள் கண்டிப்பாக அதிசய மனிதரேதான்! எனக்குத் தெரிந்து அவனை தோல்வியடையச் செய்த முதல் நபர் நீங்கள் தான்!"

ஹமீது அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மௌனமாக நின்றார்.

அதைப் பார்த்ததும் அலெக்ஸுக்குள் மீண்டும் சந்தேகம் எழுந்தது. 'ஒருவேளை தாவூத் இஸ்மாயில் அவரிடம் எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டானா? அவனிடமிருந்து தங்க பிஸ்கெட்டுகளைக் கைப்பற்றியவர் அவனை ஏன் கைது செய்யவில்லை? ஹமீதும், தாவூத் இஸ்மாயிலும் ஏதாவது ரகசிய உடன்பாடு செய்து கொண்டிருக்கிறார்களோ?'

"நான் அவனைக் கைது பண்ணலேங்கிறதுல உங்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டிருக்கலாம்!" ஹமீது வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினார்.

"இருந்தாலும் நீங்கள் சிறந்த புலனாய்வாளர் என்பது தெரியும். கெட்டிக்கார அதிகாரியும்கூட. அதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை!"

"நான் அவனைக் கைது பண்ணாம இருந்ததுக்கும் ஒரு காரணம் இருக்கு. அவனை மட்டும் பிடிக்கிறதால நம்ம நோக்கம் நிறைவேறப் போறதில்லை. அவனை விடுதலை பண்ணச் சொல்லி மேலிட வற்புறுத்தல்கள் வரும். இல்லேன்னா இதுக்கு முன்னால் நடந்திருக்கிற மாதிரி ஜாமீனில் வெளியேறுவான். அதுக்குப் பதில்அவனை வெளியில விட்டுட்டுப் பின்தொடர்றதுதான் நல்லதுன்னு நெனைச்சேன்!"

"நீங்கள் சொன்னதும் சரிதான்!" அலெக்ஸின் சந்தேகம் இப்போது உறுதியானது.

"நாம் உடனடியாக வில்லியம் பிளெய்க்கைக் கண்டுபிடிக்க வேண்டும். அவன்தான் அவரை மறைத்து வைத்திருக்கிறான். அவரிடம் இங்குள்ள முக்கியக் குற்றவாளிகளின் பட்டியலே உள்ளது."

"இந்தச் சந்தர்ப்பத்தில் அவனை இதற்காகவே நீங்கள் மடக்கியிருக்கலாமே?"

"இப்பவும் அவன் என் கண்காணிப்புலதான் இருக்குறான்."

"அப்படியானால் அவனைப் பற்றிய வேட்டையில் நாம் ஒன்றாக இணைந்து செயல்படுவது நல்லது!"

"விசாரணை மற்றும் தேடல் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்த பிறகு நாம் ஒன்று சேர்ந்து கொள்வதுதான் நல்லது." ஹமீது கூறினார்.

அன்று மாலையில் அலெக்ஸ், சைமனைச் சந்தித்தார். தான் கேள்விப்பட்ட செய்திகளை அவரிடம் தெரிவித்துப் பரஸ்பரம் விவாதம் செய்தனர். விக்கிரமன் நாயரும் அப்போது அங்கு வந்து சேர்ந்தார்.

"நாம, டி.எஸ்.பி. ஹமீதோட சேர்ந்து அவனைப் பிடிக்கப் போறது நடக்கிற விஷயமாத் தோணலை. ஹமீதுக்கு அவன்கிட்ட ஏதோ தனியான பிரியம் இருக்கிறதாத் தோணுது." சைமன் தன் கருத்தைத் தெரிவித்தார்.

"நானும் அப்படித்தான் சந்தேகப்படுகிறேன்.என்னோட ஜூனியர்ங்கிற முறையில் நான் அவர்மேல் ரிப்போர்ட் பண்ணவும் செய்யலாம். ஆனால், ஒரு சின்னச்சிக்கல். தாவூத் நம்மளைப் பத்தி அவர்கிட்ட என்ன சொல்லியிருப்பான்னு தெரியலையே!"

அதைக் கேட்ட விக்கிரமன் நாயரின் நெற்றி சுளிவடைந்தது.

"அவர் சொல்வதும் நியாயம்தான். நாம் அப்படியொரு கோணத்தில் இதுவரை யோசித்தே பார்த்ததில்லை. என் யோசனை என்னன்னா, முதல்ல அவனோட இருப்பிடத்தைக்

கண்டுபிடிச்சு, அவனைத் தொலைச்சுக் கட்டிட்டா என்ன? அப்பத்தான் அவனால எந்தவிதமான தொந்தரவும் இருக்காது." சைமன் கோமஸ் கூறினார்.

"அதற்கு என்ன வழி?" அலெக்ஸ் தாடையில் கை பதித்தபடி யோசனையில் ஆழ்ந்தார்.

"அதற்கேற்றஒருவனைநான் கண்டுபிடித்திருக்கிறேன்!" சைமன் ஒரு தீர்மானத்துக்கு வந்தவராகப் பேசினார். அவர் விரல்கள் அருகிலிருந்த அழைப்பு மணியின் சுவிட்சை அழுத்தின.

ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்மணி உள்ளே வந்தாள்.

"அந்த தாதாவை வரச் சொல்லுங்க!" சைமன் ஆங்கிலோ இந்தியப் பெண்ணைப் பார்த்துக் கூறினார்.

அவள் உட்புறமாக விரைந்தாள்.

சற்று நேரத்தில் எழுபது வயசுக்குமேல் தோற்றமளித்த கிழவர் ஒருவர் அந்தப் பகுதியிலிருந்து வெளியே வந்தார்.

ஆறு அடிக்கும் அதிகமான உயரத்துடன் இருந்தார். நீண்டகோட் அணிந்திருந்தார். வெள்ளிக் கம்பிகளைப் போன்ற தலைமுடியும், ஏறத்தாழ வயிற்றைத்தொடுமளவு நீண்ட தாடியும் வைத்திருந்தார். அவர் புருவங்கள்கூட நரைத்திருந்தன.

"இவர்தான் தாதா." சைமன் கோமஸ் அறிமுகப்படுத்தினார். அலெக்ஸுக்கும், விக்கிரமன் நாயருக்கும் ஒன்றும் பிடிபடவில்லை.

"என்னடா வயசான ஆளைக் கூட்டிட்டு வந்து தாதாங்கிறானேன்னு பாக்குறீங்களா? உங்க சந்தேகம் நியாயம்தான். ஆனா இவரோட திறமை அலாதியானது. ஒரு தடவை இவங்களுக்கு காட்டுங்களேன்." சைமன் தாதாவைப் பார்த்தபடி பேசினார்.

தாதா ஒருதடவை கைதட்டிச் சத்தம் எழுப்பினார்.

முதலில் வெளிவந்த பெண் வெளியே வந்தாள்.

அவள் கையில் இரண்டங்குல விட்டமும் இரண்டு மீட்டர் நீளமும் கொண்ட இரும்புக்கம்பி ஒன்று இருந்தது. அவள் அதை தாதாவின் கையில் கொடுத்தாள்.

அவர் அதை அவளிடமிருந்து வாங்கும்போதே கம்பியின் கனம் ஓரளவுக்குப் புரிந்தது. குறைந்தபட்சம் பத்து கிலோ கிராமுக்கு மேல்தான் இருக்கும்.

அந்தப் பெண்மணியும் பலவீனமான ஒருத்தியல்ல என்பது புரிந்தது.

தாதா அந்தக் கம்பியைத் தரையில் ஊன்றி மெதுவாக அழுத்தத் தொடங்கினார். என்ன ஆச்சரியம்! கம்பி வளைந்து போனது! கம்பியை உயர்த்தியபோது அதன் வளைவு நன்றாகத் தெரிந்தது. பிறகு கம்பியின் இரண்டு முனைகளிலும் இரண்டு உள்ளங்கைகளை வைத்து அழுத்தி நெருக்கினார். கம்பியின் இரண்டு முனைகளும் ஒன்று சேர்ந்து கம்பி கோள வடிவத்துக்கு வந்திருந்தது. தாதா கம்பியைக் கீழே போட்டார்.

"இப்படிப்பட்டவர்தான் தாதா. இன்னும்கூட சில வித்தைகள் செய்வார் பாருங்கள்." சைமன் கோமஸ் தாதாவைப் பார்த்தார்.

உடனே தாதா தன்னுடைய நீளமான கோட்டை அவிழ்த்து அதை அந்தப் பெண்மணிக்கு நேராக எறிந்தார். அது கீழே விழாமல் அவள் பிடித்துக் கொண்டாள்.

மாமிசப்பகுதிகள் துடித்து நிற்கும் மல்யுத்த வீரனின் உடலைப்போல இருந்தது அவர் உடல். தாதா, தாடியை உருவி எறிந்தார்.

களிமண் உருண்டைகளை எறிந்து ஒட்ட வைத்தது போல் இருந்தது மார்பிடங்கள். முப்பத்தைந்து வயதுக்கு மேல் மதிப்பிடமுடியாதபடி, உடற்பயிற்சியால் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருந்தார்.

"இந்தப் பயில்வானை வைத்துக்கொண்டு என்ன செய்வதாக உங்கள் உத்தேசம்?" அலெக்ஸ் கேட்டார்.

"சொல்றேன்... நீங்க ரெண்டுபேரும் போகலாம்." தாதாவையும் ஆங்கிலோ இந்தியப் பெண்ணையும் பார்த்தபடி சைமன் கூறினார்.

இருவரும் அங்கிருந்து மறைந்தனர்.

"அவர் மூலமாக நான் ஒரு சவால்விடப் போகிறேன்!" சைமன் கூறினார்.

"என்ன சவால்?"

"நாளைக்கு இதே தாதாவை, இதே கிழவேஷத்தில் சர்க்கஸ் கூடாரத்துக்கு அனுப்பப் போகிறேன். பளு தூக்குவதற்காக சாண்டோ வரும்போது இவரைவிட்டுச் சவாலுக்கு அழைப்பேன். அந்த விஷயத்தில் இந்த தாதாவை வெல்வதற்கு ஆளில்லை. அதன் மூலம் சர்க்கஸ் கம்பெனியில் ஒரு பிரச்சினை ஏற்படும். அதைச் சமாளிப்பதற்காக தாவூத் இஸ்மாயில் நேரடியாகக் களத்துக்கு வருவான். அந்த இடத்தில் அத்தனை பார்வையாளர்கள் முன்னிலையிலேயே அவனை தாதா எலும்பை நொறுக்கித் தூள் தூளாக்கிப் போடுவார்."

"அவன் இந்தச் சவாலை ஏற்றுக் கொள்ளாவிட்டால்..." அலெக்ஸ் கேட்டார்.

"மானப் பிரச்சினையல்லவா? அவன் கண்டிப்பாக வருவான். அன்று குதிரையைத் தூக்க வரவில்லையா? அதேபோல் வருவான்."

"இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்று அவன் சந்தேகப்பட்டால்...?"

"அதற்கு எந்த வழியுமே இல்லாமல் செய்துவிட்டால் போகிறது!"

"சோதித்துப் பார்ப்பதில் தவறில்லை. ஆனால், ஒரு விஷயம்..." அலெக்ஸ் மற்றொரு யோசனை கூறினார்: "இப்படி ஒருவன் சர்க்கஸ் கூடாரத்துக்குள் வந்திருக்கிறான் என்பது தெரியாவிட்டால் அவன் எப்படி கூடாரத்துக்குள் வருவான்?"

"அதற்கான வழியையும் கண்டுபிடித்திருக்கிறேன். நாளை மாலை சர்க்கஸிலுள்ள சாண்டோவைப் போட்டிக்கு அழைக்கும் வீரர் ஒருவர் வருகிறார் என்ற செய்தியைப் பரப்பிவிட வேண்டியதுதான்.'

"அதுவும் நல்ல யோசனைதான்!"

அன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு தாவூத் இஸ்மாயில் டாக்டர் சுகாசினியின் வீட்டுக்கு வந்தான். இந்தத் தடவை ஒரு போலீஸ் அதிகாரியின் வேடத்தில் வந்திருந்தான். கேட் அருகிலேயே சற்று நேரம் காவல் இருப்பதுபோல் துப்பாக்கியுடன் நின்றான்.

யாரோ ஒரு போலீஸ் அதிகாரியின் தோற்றத்தில் நிற்பதை சுகாசினியும் பார்த்தாள்.

அவள் ஜன்னலருகிலேயே நின்று கவனித்தாள்.

அதேநேரம் போலீஸ் ஜீப் ஒன்று வந்து கேட் அருகில் நின்றது.

அதிலிருந்து அலெக்ஸ் இறங்கி வந்தார்.

"யாராவது வந்தாங்களா?" தாவூத் இஸ்மாயிலிடம் அலெக்ஸ் கேட்டார்.

"இல்லை... சார்... யாரும் வரலை!"

"சரி ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும்." என்று சொல்லிவிட்டு வந்த விரைவிலேயே ஜீப்பில் ஏறிப் புறப்படவும் செய்தார். தாவூத் இஸ்மாயில் ஒருவேளை அங்கு வரலாமென்று யாரோ அவருக்குத் தகவல் சொல்லியிருந்தார்கள். எனவே, தொடர்ந்து எப்போதும் அங்கு ஒரு போலீஸ்காரர் காவலிருக்கும்படி அலெக்ஸ் ஏற்பாடு செய்திருந்தார்.

அதன் பிறகும் சற்று நேரம் அங்கேயே நின்றிருந்த தாவூத், ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக காலிங்பெல்லை நெருங்கி அதை அழுத்தினான்.

அப்போதுதான் வெளிலைட்டைப் போட்டு, வந்திருப்பது யாரென்று கவனித்தாள். போலீஸ் வேஷத்தில் தாவூத் இஸ்மாயில் நிற்பதைக் கவனித்தாள். சட்டென்று வாசல் கதவைத் திறந்தாள்.

"என்ன இந்த வேடத்தில்?" சுகாசினி கேட்டாள்.

"டாக்டர் சுகாசினியின் வீட்டைக் கண்காணிப்பதற்காக என்னைப் போட்டிருக்கிறார்கள். அதாவது தாவூத் இஸ்மாயில் வந்தால் கண்டுபிடிப்பதற்காக."

"ஓகோ... அப்படியானால் நீங்கள் உள்ளேயே வந்து அதைச் செய்யலாமே?"

"அதுதான் சரி!" என்றபடி கதவைத் தாண்டி வந்து, அவள் தோளில் கைவைத்தபடி கதவை மூடித் தாழிட்டான்.

"முதலில் இந்த வேஷத்தை மாத்திக்கிறேன்!"

சுகாசினி லுங்கி ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

"தூங்குற நேரம் ஆகிடுச்சு இல்லையா?"

"சாப்பிட்டுட்டு அப்புறம் தூங்கலாம்!"

"ஓகோ... உடனடியாத் தூங்குற வேலை கிடையாதா... நல்லதுதான்.''அவன் அவள் தலைமுடியில் விரலை அளையவிட்டபடி கேட்டான்.

"தூங்காம இருக்கிறது உங்களுக்குச் சந்தோஷமான விஷயமா என்ன?" அவள் சிரித்தாள். அவள் கைகள் அவன் பரந்த மார்பை வருடின.

"இந்தப் பெண்களின் கைக்கே ஒரு தனித்தன்மை இருக்கிறது." அவன், அவள் முன்கைப் பகுதியை வருடி பேசினான்.

"ஏன் அப்படி?"

"ஒரு ஆணின் கையை இப்படி வருடினால் மரத்துண்டை மற்றொரு மரத்துண்டில் தேய்ப்பது போலிருக்கும்."

"ஓகோ... காதல் இலக்கியம் வந்துடுச்சா?"

"இது ஜனரஞ்சக இலக்கியமும்கூட. யாருக்கும் எட்டாததல்ல!"

"ஜனரஞ்சகமானால் தொட்டுத் தடவலாம். இல்லாவிட்டால் எட்டியிருக்கவேண்டும் என்ற பயமா?"

"நான் சாதாரணமானவன். உயர்ந்த இலக்கியமெல்லாம் எனக்கு சரிப்படாது. அதுதான்!"

அவன் வலுவான கைகள் அவளை இழுத்து அணைத்தன. அவளின் நீண்டபெருமூச்சுகள் அவன் கன்னக் கதுப்புகளை வெப்பப்படுத்தின.

கடிகாரம் மணி ஒன்று என்பதைச் சொன்னது.

அதே நேரம் வெளியே ஜீப் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

# 19

"ஜீப்பில் வந்திருப்பது யாராக இருக்கும்?"- தாவூத் சட்டென்று எழுந்தபடி கேட்டான்.

சுகாசினியும் உடனேயே எழுந்து விட்டாள். "என்ன... என்னங்க?" அவள் கேட்டாள்.

"வெளியில் ஜீப் வந்து நிக்குற சத்தம் கேட்டது. வந்திருக்கிறது யார்னு யோசிக்கிறேன்." தாவூத் இஸ்மாயில் மெதுவான குரலில் பேசினான்.

"யாரா இருந்தா நமக்கென்ன? இது என் வீடு. டாக்டர் சுகாசினியோட வீட்டுக்குள்ளே ராத்திரியானாலும் பகலானாலும் யாராவது கேக்காமக் கொள்ளாம நுழைஞ்சுட முடியுமா?" அவள் தைரியத்துடன் கேட்டாள்.

அதே நேரம் காலிங்பெல் ஒலித்தது.

"கதவைத் திறக்காமப் பேசிப் பாரு!" தாவூத் ரகசியம்போல் பேசினான்.

"திறக்கப் போறதில்லை" என்றபடி சுகாசினி எழுந்தாள். படுக்கையறையின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

வரவேற்பு அறைக்கு வந்தவள் வலதுபுறமிருந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். யாரோ வெளியில் நிற்பது போல் தெரிந்தது.

"வீட்டில யாருமில்லையா?" வெளியிலிருந்து ஒரு குரல் கேட்டது.

"யாருங்க அது... என்ன விஷயம்?" சுகாசினி கேட்டாள்.

"கதவைத் திறங்கள்!" அது ஒரு கட்டளைபோல் இருந்தது.

அதற்குள் அவளை நெருங்கி வந்த இஸ்மாயிலைத் திரும்பிப் பார்த்தாள். "யார் என்று கேள்!" தாவூத் ரகசியக் குரலில் பேசினான்.

"யார் நீங்க? முதல்ல அதைச் சொல்லுங்க!" சுகாசினி உரத்த குரலில் கேட்டாள்.

"அதையெல்லாம் கதவைத் திறந்த பிறகு சொல்றேன்."

"அதெப்படி, இந்த நேரத்துல... அதுவும் நான் தனியா இருக்கும்போது கதவைத் திறக்க முடியும்? அதனால அங்கேயிருந்து நீங்க யாருன்னு சொல்லுங்க."

"அப்படியெல்லாம் சொல்லக்கூடிய விஷயமில்லை அது. உள்ளே வந்துதான் சொல்லமுடியும்."

"நீங்க பேசுறது முறையாத் தெரியலையே?"

நேரம் கடத்தாமக் கதவைத் திறங்க. இல்லேன்னா, கதவைத் திறக்குறதுக்கு என்ன செய்யணும்னு எங்களுக்குத் தெரியும்!"

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள் என்பது தாவூத் இஸ்மாயிலுக்குப் புரிந்தது. ஒருவேளை சுகாசினியைக் கடத்திப் போக வந்திருப்பார்களோ?' அவன் மனத்தில் சட்டென்று ஒரு பொறி தட்டியது.

"கதவைத் திறந்துவிடு!" தாவூத் அவளிடம் கூறினான்.

இருப்பினும் கதவைத் திறக்காமல் தயங்கினாள் சுகாசினி. தாவூத் அவளிடம் மறுபடி வற்புறுத்தினான்.

அவள் கதவைத் திறந்தாள்.

சட்டென்று ஒருவன் வீட்டுக்குள் பாய்ந்தான்.

"நீதானே டாக்டர் சுகாசினி? ம்...சீக்கிரம் ஜீப்பில் ஏறு. இல்லாவிட்டால் நாங்கள் தூக்கிப்போட்டுக்கொண்டு போக வேண்டியிருக்கும்!" ஒருவன் குரலை உயர்த்தியபடி பேசினான்.

கதவின் மறைவில் நிழல் பகுதியில் மறைந்திருந்த தாவூத் அவனை ஒரு தடவை ஊன்றிப் பார்த்தான்.

சுமார் ஆறு அடி உயரமிருந்தான். பேண்ட்டும் இறுக்க மான பனியனும் அணிந்திருந்தான். அவன் கையில் கத்தி ஒன்று இருந்தது. சுமார் ஒன்றரையடி நீளமுள்ள கத்தி.

"நேரம் கடத்தாம சீக்கிரமா சொன்னதைச் செய்யணும். இல்லேன்னா, உன் பிணம் இங்க கிடந்து உருளும்!" கத்தியை அவள்முன் நீட்டியபடி பேசினான்.

அவனை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்தான் தாவூத் இஸ்மாயில். அதே நேரம் வெளியில் இருப்பவர்கள் தனது தாக்குதலைத் தெரிந்து கொள்ளக்கூடாது. என்ன செய்யலாம்?

தாவூத் ஒரு தடவை அறையைப் பார்த்தான்.

அவனுக்கு அருகில் வலது புறத்தில் நான்கு கதவுகள் கொண்ட பெரிய ஜன்னல் இருந்தது. உட்புறம் திரைச்சீலை இருந்தது. மேற்புறம் ஸ்பிரிங் கம்பியுடன் இணைக்கப்பட்டிருந்தது.

சத்தம் எழுப்பாமல் திரைச்சீலையிலிருந்த ஸ்பிரிங்கை உருவியெடுத்தான். அதில் ஒரு சுருக்குப் போட்டுக்கொண்டு வந்தவனுக்குப் பின்புறமாக நெருங்கினான்.

"என்னம்மா... உயிரோட இருக்குறதுல ஆசை இல்லை போலிருக்கே. நாங்க பிணத்தைத்தான் கொண்டு போகணுமா?" அவன் கத்தியை சுகாசினியின் கழுத்துக்கு அருகே-மிக அருகேகொண்டு சென்றான்.

"ம்..." உரத்த குரலில் அலறினான்.

கண்மூடித் திறப்பதற்குள் அது நிகழ்ந்தது.

சுருக்கை வீசி ஒரே இழுப்பில் அவனை தாவூத் அருகில் இழுத்தான். அவன் விழிகள் பிதுங்கின. இடது முழங்காலை மடக்கி அவன் வயிற்றில் ஓங்கி ஒரு மிதிமிதித்தான். சத்தம் எழுப்பக்கூட முடியாமல் அவன் சுருண்டு விழுந்தான்.

"ஜாக்கி... ஜாக்கி...!" வெளியிலிருந்த யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

தன் காலடியில் விழுந்து கிடப்பவனின் பெயர் ஜாக்கி என்பது தாவூத்துக்குப் புரிந்தது.

"ஓகோ நீதான் ஜாக்கியா? ரொம்ப நல்லது. மிச்சமிருக்கிறவங்க பேர்களும் கொஞ்ச நேரத்துல தெரிஞ்சுடும். ம்...வரட்டும். குரல் கொடுத்தால் கழுத்தை நெரிச்சுடுவேன்!" தாவூத் ரகசியக் குரலில் மிரட்டினான். அதற்குள் அவன் உயிர் பாதி போய்விட்டிருந்தது.

"ஜாக்கி, உள்ளே என்ன வித்தையா காட்டுற? சீக்கிரம் அவளைக் கொண்டு வா!" வெளியிலிருந்த ஒரு குரல் அவசரப்படுத்தியது.

ஆனால், அதற்கு பதிலேதும் கிடைக்காமல் போகவே, குரல் கொடுத்தவன் ஜீப்பிலிருந்து இறங்கி வாசலை நெருங்கினான்.

சந்தேகத்தாலோ என்னவோ சற்று நேரம் கதவருகில் தயங்கி நின்றான்.

"ஓகோ... நீ மட்டும் தனியா சாப்பிடுறயா? நானும் வந்துடுறேன்!" குரல் கொடுத்தபடியே வாசல் கதவைத் தாண்டினான்.

தாவூத்தின் வலுவான வெட்டுதலை ஏற்று கவிழ்ந்து விழுந்தான். அவன் காலைப் பிடித்து இழுத்து, அவனை ஜாக்கியின் மீது எறிந்தான்.

வீட்டுக்குள்ளிருந்து எந்தவிதமான சத்தமும் வராமல் போனதால் ஜீப்புக்குள் இருந்தவர்களுக்கு சந்தேகம் தோன்றத் தொடங்கியது.

டிரைவருடன் மேலும் மூன்று பேர் ஜீப்பில் இருந்தனர்.

அலெக்ஸ் ஜோன்ஸ் அனுப்பியிருந்த அடியாட்கள் அவர்கள். சுகாசினியின் வீட்டுக்குள் ஒருவேளை தாவூத் இஸ்மாயில் இருக்கலாம் என்று அலெக்ஸுக்குத்தோன்றியிருந்தது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்று இருவரையும் அமுக்கிக் கொண்டு வருவதற்குத்தான் ஆட்கள் வந்திருந்தனர்.

"தாவூத் அகப்படாவிட்டால்கூடப் பரவாயில்லை சுகாசினியை மட்டுமாவது கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டிருந்தார் அலெக்ஸ். நேராக அவளை ரஷீதின் பங்களாவுக்குக் கொண்டு வரும்படி உத்தரவிட்டிருந்தார் அவர்களிடம். அதிலும் இரண்டு வகையான லாபம் இருந்தன. ஒன்று தாங்கள் மூவருக்கும் அவள் விருந்தாவாள். அவளைக் காப்பாற்றுவதற்காகக் கண்டிப்பாக தாவூத் அங்கு வந்து சேருவான். அவனுக்காக விரிக்கப்பட்ட வலைதான் இது!

"சரிதான் ரெண்டு பேரும் சரியான அவசரக் குடுக்கைங்க போல இருக்கு. அவங்கவங்க விஷயத்தைப் பார்த்துங்கிறாங்க. பங்களாவுக்குப் போயிட்டா இதுக்கெல்லாம் உரிமையானவங்க வேற முதலாளிங்க. சரி நாம போய் என்னன்னாவது பார்த்துட்டு

வரலாம்.” ஜீப்பில் இருந்தவர்களில் ஒருவன் அபிப்பிராயம் தெரிவித்தான்.

ஒருவன் ஜீப்பிலிருந்து இறங்கினான்.

“சீக்கிரம் போய்ப் பார்த்து ஒரு குரல் கொடு. நான் தயாரா உட்கார்ந்திருக்கேன்.” மற்றொரு நபர் குரல் கொடுத்தான்.

ஜீப்பிலிருந்து இறங்கிய ராக்கி ஒரு கராத்தே நிபுணனும்கூட. சராசரியான மனிதர்கள் நான்கு அல்லது ஐந்து பேரை தனி ஒருவனாகவே சமாளிக்கும் ஆற்றல் வாய்ந்தவன். தாவூத் இஸ்மாயிலைச் சமாளிப்பதற்காக அன்றுதான் அவனை பம்பாயிலிருந்து வரவழைத்திருந்தார் அலெக்ஸ்.

வாசலுக்கு வந்தவன் உட்புறம் எட்டிப் பார்த்தான். உள்ளிருந்து எந்தவிதமான சத்தமும் கேட்கவில்லை. இருட்டாகவும் இருந்தது.

தெருவிளக்கின் வெளிச்சம் நிலைவாசற்படியைக் கடந்து வாசலின் உருவத்தைத் தரையில் கோலம் போட்டுக் காட்டியிருந்தது. அந்த வெளிச்சப் பிரதிபலிப்பில் உட்புறமிருந்த சோபா மற்றும் டீப்பாய் தெரிந்தது.

அங்கு யாரும் மனிதர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் சட்டென்று உள்ளே நுழையாமல் அங்கேயே தயங்கி நின்றான். ஒரு தடவை நன்றாக மூச்சை இழுத்து வெளியிட்டான். ஏதாவது எதிர்பாராத தாக்குதல் நிகழ்ந்தாலும் சமாளிப்பதற்குத் தயாரானான்.

உள்ளே போன இருவரின் குரலும் கேட்காததால் அவனுள் சன்னமான சந்தேகம் கிளைத்தது.

“ஜாக்கி... ஜாக்கி!” ஒரு தடவை அழைத்தான்.

பதிலில்லை.

“ஹேய் ஜாக்கி து கஹாம் ஹே?” இந்தத் தடவை வாக்கியமாகவே இந்தியில் பேசினான்.

'நீ எங்கேப்பா இருக்கிறே?' என்று இந்தியில் கேட்ட போதே வந்திருப்பவன் இந்தப் பகுதிக்குப் புதியவன் என்பது தாவூதுக்கு புரிந்தது.

பம்பாய் நகரில் நிறைய மோதல்களில் ஈடுபட்ட அனுபவம் பெற்ற தாவூத் இஸ்மாயில், சுகாசினியின் கையைப் பிடித்து உட்புறம் அழைத்துப் போனான்.

பிறகு உள்ளிருந்தே குரல் கொடுத்தான்: "ஆவோ ராக்கி!" அவன் குரல் கரகரப்பாக மாறியிருந்தது.

குரல் வந்த திசையை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவனிடம் நேரடியாக மோதுவதைவிட பழைய முறையையே பயன்படுத்துவதுதான் நல்லது என்று நினைத்தான் தாவூத்.

மறுபடியும் அவன் திரைச்சீலையின் ஸ்பிரிங்கை எடுத்துக் கொண்டான். பழையபடியே அதில் சுருக்குப் போட்டுக் கொண்டான். மெதுவாக பழைய இடத்தை நோக்கி நகர்ந்தான்.

ராக்கி காதைக் கூர்மையாக்கிக் கொண்டவனாக சட்டென்று நின்றான்.

"ஆவோஜி.." தாவூத் மீண்டும் கரகரப்பான குரலில் அழைத்தான்.

ராக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினான்.

கையிலிருந்த ஸ்பிரிங் சுருக்கை அவன் கழுத்தில் போட்ட அதே விநாடியில் தன்னை நோக்கி இழுக்கவும் செய்தான்.

ராக்கியால் உடனே செயல்பட முடியாமல் போனது. மூச்சுவிடவே திணறினான்.

'இவனைக் கொல்லாவிட்டால் சரிப்படாது!' என்று நினைத்தான் தாவூது.

சுருக்கு இறுகியது. ராக்கி முடிந்த மட்டும் கைகால்களைப் பயன்படுத்தி விடுபட முயன்றான். முடியவில்லை. விரைவிலேயே அவன் துடிப்பு அடங்கியது. மறுபடி நிசப்தம்.

"இப்படியே இங்கே ஒவ்வொருத்தரா போட்டுக் கிட்டே இருந்தா என்ன ஆகுறது?" அதுவரை எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சுகாசினி கேட்டாள்.

"பொறு, ஏற்பாடு பண்ணலாம். மிச்சமிருக்கிற ஆளுங்க என்னதான் பண்ணப் போறாங்கன்னு தெரியட்டும்!" தாவூத் கதவை நெருங்கி நின்றான்.

ஜீப்பிலிருந்து பார்த்தவனுக்கு வாசலில் யாரோ நிற்பது தெரிந்தது. தமது ஆட்களில் ஒருவனாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்தான். தன்னுடைய வாய்ப்பை இழக்க வேண்டாமென்று அவனும் ஜீப்பிலிருந்து இறங்கினான்.

கதவை நெருங்குவதுவரை இருளிலும் வெளிச்சத்திலுமாக போக்குக் காட்டிக்கொண்டிருந்த தாவூத் அவன் மீது பாய்ந்து கழுத்தைப் பிடித்து நெரிக்கத் தொடங்கினான்.

ஒரே ஒரு தடவை முனகியவன் அதன் பிறகு சத்தம் எழுப்பவே இல்லை.

தாவூத் ஜீப்பை நெருங்கினான்.

"யார், ஜீப்பில டிரைவர்தானே? நீங்க மட்டும் எதுக்கு? கொஞ்சம் வந்து உதவுங்களேன்." தாவூத் கேட்டுக் கொண்டான்.

"நீங்க யார்? எனக்குத் தெரியலையே?" டிரைவர் கேட்டான்.

தாவூத் இஸ்மாயில்ங்கிறது என் பேரு!"

ஜீப் சட்டென்று ஸ்டார்ட் ஆனது.

# 20

ஒரே தாவலில் டிரைவரின் நெஞ்சுப் பகுதியைத் துணியுடன் கொத்தாகப் பிடித்த தாவூத் அவன் இழுத்துத் தரையில் போட்டான்.

"இந்த மாதிரி டக்குன்னு கிளம்பிட்டா என்ன ஆகுறது? உன்னைச் சும்மாவிடக் கூடாது!" மிதிப்பதற்காகக் காலை ஓங்கினான்.

"என்னைக் கொன்னுடாதீங்க!" அவன் கைகூப்பி வணங்கினான்.

"அப்படீன்னா ஒழுங்கு மரியாதையா என்கூட வா... நான் சொல்றபடி செய்!"

டிரைவர் எழுந்து அவனைப் பின்தொடர்ந்தான். "இங்க கிடக்கிற குப்பைகளை அள்ளி உன் வண்டிக்குள்ள போட்டுக்க. வா... நானும் உதவி செய்யுறேன்."

இருவரும் கோணிமூட்டைகள் மாதிரி நான்கு பேரையும் ஒவ்வொருத்தராகக் கொண்டு வந்து ஜீப்பின் பின்புறம் போட்டனர்.

டிரைவிங் ஸீட்டில் உட்கார்ந்தவனிடம் தாவூத் கடைசியில் இப்படிக்கூறினான்: "உங்களை அனுப்பிச்சு வெச்சாரே, அந்த மகானுபாவன் கிட்டப்போய், இனிமேல் இந்த மாதிரி வித்தையெல்லாம் செஞ்சா நல்லதில்லைன்னு சொல்லிடுப்பா! பாவம் யார் யாரோ, யாருக்காகவோ வேதனைப்பட வேண்டியிருக்கு பாரு!"

ஜீப் நகர்ந்தது. மெதுவாக நகர்ந்த ஜீப், பத்தடி நகர்ந்ததும் வேகமெடுத்துச் சீறிப் பாய்ந்தது.

"மேற்கொண்டும் யாராவது வருவார்களோ என்னவோ?" சுகாசினி வாசல்புறத்தைப் பார்த்தபடி பேசினாள்.

"அப்படி வந்தாங்கன்னா என் குணமே மாறிப்போயிடும். இதுவரைக்கும் செஞ்சதெல்லாம் சின்னப் பிள்ளை விளையாட்டுதான். விடியிறவரைக்கும் நாம இங்கேயே இருக்கப் போறோமா?" அவன் அவள் தோளில் கைபோட்டபடி பேசினான்.

"கதவை அடைக்கிறதுக்கு முன்னாடி அப்படியென்ன அவசரம்? பொறுமை கிடையாதா உங்களுக்கு?"-அவனிடமிருந்து விலகி, தெருவாசல் கதவை மூடித் தாழிட்டாள்.

"ராத்திரி நேரத்துல தொல்லை குடுக்க வந்திருக் கானுங்களே... சரி, நான் இங்கே இருக்கிறது தொல்லையா இருக்கா டாக்டர்?" சுகாசினியைப் பார்த்தபடி கேட்டான்.

"அப்படியெல்லாம் கிடையாது. இப்போ எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. இந்த மாதிரி ஒரு மனிதர் இருக்கிறாருன்னு கேள்விப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இந்த அளவுக்கு நான் எதிர்பார்க்கலை."

"எந்த அளவுக்கு?"

"இவ்வளவு தைரியத்தோட!"

"கூலிக்கு ஆளுங்களை வெச்சு, கள்ளக்கடத்தல் செய்யிற நீரிழிவு நோயாளியான, ஒரு நடுத்தர வயசுக்காரனா கற்பனை செஞ்சிருந்தியோ?"

"கிட்டத்தட்ட அந்த மாதிரிதான்!"

"சரி, இப்போ என்ன தோணுது?" அவளை இறுக அணைத்தபடி கேட்டான்.

"எலும்பெல்லாம் நொறுங்கிடுமோன்னு தோணுது. அப்பா இங்கேயுமா இவ்வளவு முரட்டுதனம்?" அவன் பிடியிலிருந்து விடுபட முயற்சி செய்யாமலே பேசினாள்.

"கள்ளக்கடத்தல்காரன்னு கேள்விப்பட்டபோது நிறைய வில்லத்தனங்களும் சேர்ந்திருக்கணுமே!"

"அதுவும் இயற்கைதானே!'

"அதுக்கு ஏதாவது அடிப்படை இருக்கா?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால கண்ணால நேரடியாவே பார்த்தேனே... நாலு பேரை பந்தாடினீங்களே!"

"அஞ்சாவதாக ஒருத்தியையும் இப்போ பந்தாடப் போறேன்." அவளை மேலும் நெருக்கி அணைத்தபடி பேசினான்.

"நான் மூச்சுத்திணறியே செத்துவிடுவேன் போல இருக்கே!"

"ஒரு டாக்டர் அப்படியெல்லாம் சுலபமா செத்துப் போயிட மாட்டாங்க."

காலையில் பொழுது விடிவதற்கு முன்பாக தாவூத் இஸ்மாயில் சுகாசினியின் வீட்டிலிருந்து, தனது ரகசிய இருப்பிடத்தை நோக்கிக் கிளம்பினான்.

வில்லியம் பிளெய்க்கை மறுபடியும் பார்த்தபோதுதான் அவனுக்கு ஆறுதலாக இருந்தது.

''மிஸ்டர் பிளெய்க், இங்கிருந்து எப்போதுதான் வெளியேறுவோம் என்று நீங்கள் நினைப்பது இல்லையா?" தாவூத் கேட்டான்.

பிளெய்க், தாவூதைப் பார்த்த பிறகு சுருட்டுப்புகையை ஒரு தடவை ஆழ்ந்து இழுத்தார். மௌனமாகத் தன்னுடைய பிரீஃப் கேஸை நெருங்கிய பிளெய்க் டயரி ஒன்றை எடுத்து, தாவூத் இஸ்மாயிலிடம் கொடுத்தார். அது 1988 ஆம் வருட டயரி.

"புரட்டிப் பாருங்கள்!"

தாவூத் இஸ்மாயில் அலட்சியத்துடன் அந்த டயரியை வாங்கிப் புரட்டத் தொடங்கினான்.

ஆரம்பத்தில் வழக்கமான ஒரு டயரிக்கு உரிய அம்சங்களான தேதி, விடுமுறை நாட்கள், வருமான வரிக்கணக்கு அட்டவணை, அஞ்சலக விவரங்கள் என்று பக்கங்கள் கடந்தன.

பின்னர் டயரியின் வெண்மையான கோடுபோட்ட பக்கங்கள் தென்பட்டன.

பத்துப் பக்கங்கள் தாண்டுவதற்குள் அந்தப் பக்கங்களில் ஏதோ வேறுபாடு தெரிந்தது. நவீனமான முறையில் அதன்மீது ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு போட்டோ அதன்கீழே படத்திலிருப்பவரைப் பற்றிய விவரம் ஆகியவை சுத்தமான எழுத்துக்களால் அச்சிடப்பட்டிருந்தன.

தாவூத் பக்கங்களைப் புரட்டிக் கொண்டேயிருந்தான்.

அவர்கள் ஒவ்வொருவரும் சர்வதேசக் குற்றவாளிகள் என்கிற பட்டியலின் கீழ் இணைக்கப்பட்டிருந்தனர்.

ஒரு புகைப்படத்தைப் பார்த்தவன் புரட்டுவதைச் சட்டென்று நிறுத்தினான். அவன் கண்கள் வியப்பால் விரிந்தன.

அந்தப் புகைப்படம் டி.எஸ்.பி.அலெக்ஸ் ஜோன்ஸினுடையது. யூனிஃபாரத்துடன் கூடிய புகைப்படம்! அவரைப் பற்றிய விவரங்களும் அதில் இருந்தன. தாவூத் அதை வாசித்தான். 'ஒரு காலத்தில் நேர்மையான போலீஸ் அதிகாரி. ஆனால், அதுகூட டிபார்ட்மென்ட்டில் ஆரம்பத்தில் நல்ல பெயர் வாங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடிப்பு என்பது, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த கொள்ளையர்களைப் பிடித்த பிறகு, அவர்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொண்டதிலிருந்து தெரிகிறது.

போலீஸ் துறைக்கு வரும் குற்றவாளிகளைப் பற்றிய தகவல்கள், ரகசியங்களை நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களிடம் விற்பனை செய்கிறார். கடந்தகால நடவடிக்கை மற்றும் முழுமையான நிகழ்காலத் தொடர்புகள் பற்றிய தெளிவான விவரங்களுடன் கையும் களவுமாகப் பிடிப்பதற்காகக் காத்திருக்கிறார்கள்.

அடுத்த பக்கத்தில் சைமன் கோமஸின் படமும், அவரைப் பற்றிய தகவலும் இருந்தன. அலெக்ஸுடனான சைமனின் தொடர்பும் அதில் விளக்கப்பட்டிருந்தது.

பிந்தைய பக்கங்களில் இருந்த படங்களில் தாவூத்துக்குத் தெரியாத - ஆனால், கேள்விப்பட்டிருந்த பல்வேறு கள்ளக் கடத்தல்காரர்களின் புகைப்படங்களும் விவரங்களும் இருந்தன. ஏறத்தாழ மையப்பகுதியில் தாவூத் இஸ்மாயிலின் போட்டோவும், விவரமும் இருந்தன. 'பயங்கரமான கடத்தல்காரன்; தந்திரசாலி; இதுவரை பிடிபடாத, புரியாத குற்றவாளி!'

"ஓகோ... நான்கூட இதில் இருக்கிறேனே!" தாவூத் சொன்னான்.

"ஆமாம்... நீங்களும்தான் இருக்கிறீர்கள். ஆனால், உங்களைவிடப் பயங்கரமானவர்கள் அவர்கள். நான் அவர்களிடம் அகப்பட்டிருந்தால் என்னை எப்போதோ கொன்று போட்டிருப்பார்கள். இந்த டயரியையும் கைப்பற்றி அழித்திருப்பார்கள்.

"அதுவும் உண்மைதான். அதற்கும் சந்தர்ப்பம் உண்டு."

"எப்படியாவது நான் அவர்களை அடையாளம் காட்டி அவர்களை கைது செய்தே தீரவேண்டும்." வில்லியம் பிளெய்க் கூறினார்.

"உங்களால் இப்போது அது முடியாதே. நீங்கள் இப்போது என் பிடியிலல்லவா இருக்கிறீர்கள்?" தாவூத் தன்னிடமிருக்கும் டயரியை அவரிடம் திருப்பிக் கொடுத்தபடி பேசினான்.

"மிஸ்டர் தாவூத் இஸ்மாயில், நானும் உங்களைப் போல்தான். ஆனால், நம் இருவரின் வழிகள் ரெண்டும் வெவ்வேறு. நான் நினைத்தால் இந்த நிமிடத்தில்கூட எனது இருப்பிடத்தை போலீஸாரிடம் சொல்லி இங்கிருந்து தப்பிக்க முடியும். உங்களை நகரவிடாமல் சுற்றிவளைக்க முடியும். ஆனால், என்னுடைய சுயபாதுகாப்பைக் கருதித்தான் அதைச் செய்யாமல் இருக்கிறேன்."

"நீங்கள் சொன்னது உண்மைதான் என்று நான் எப்படி நம்புவது? விரும்பினால்-முடிந்தால் சொல்லுங்களேன். நானும் தெரிந்து கொள்கிறேன்." தாவூத் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டு ஜன்னலருகில் போய் நின்றான். அதே நேரம் பக்கத்து அறையிலிருந்து டெலிபோன் ஒலித்தது.

தாவூத் இஸ்மாயில் அந்த அறைக்கு விரைந்தான்.

சர்க்கஸ் கம்பெனியிலிருந்து தாஸ் போன் செய்திருந்தார்.

மறுநாள் மாலையில் சர்க்கஸ் கம்பெனியில் உள்ள வெயிட் லிஃப்டிங் சாம்பியனை பெரியவர் ஒருவர் சவாலுக்கு அழைத்திருப்பதாக தாஸ் தகவல் சொன்னார்.

"யாருங்க போன் பண்ணினது?" வில்லியம் பிளெய்க் கேட்டார்.

"நகரத்தில் ஒரு சர்க்கஸ் கம்பெனி கூடாரம் அடித்து சர்க்கஸ் நடத்துகிறது. அங்கு இருக்கும் பளு தூக்கும் சாம்பியனை யாரோ ஒரு பயில்வான் சவாலுக்குக் கூப்பிட்டிருக்காராம்."

"சர்க்கஸ் கம்பெனி உங்களுடையதுதானே?"

"அதெப்படி உங்களுக்குத் தெரியும்?"

"மிஸ்டர் தாவூத், நீங்கள் என்னென்ன வியாபாரம் செய்கிறீர்கள் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்கு நான் ஒரு தகவல் சொல்லட்டுமா?"

"சொல்லுங்களேன்!"

"உங்களைப் பிடிப்பதற்காகப் போடப்பட்டுள்ள வலையாகத்தான் இந்த சவால் இருக்குமென்று நினைக்கிறேன்."

"நீங்கள் சொன்னதைப் பற்றி நானும் யோசித்தேன். இருந்தாலும் இதில் நான் விட்டுக் கொடுக்கவும் முடியாது."

"நீங்கள் எப்படி இந்தச் சவாலை ஏற்றுக்கொள்ள முடியும்? போட்டிக்கு வருபவன் உங்கள் சாண்டோவை விட அதிகமான எடையைத் தூக்குவான்!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"வெயிட் லிஃப்ட்டிங்கின்போது, உங்கள் சாண்டோ சுமக்கும் பாரத்துடன், சாண்டோவையும்கூட அவர் சேர்த்துக் தூக்கலாம்."

"அப்படிப்பட்ட மனிதர் கூடவா இருப்பார்?"

"அப்படிப்பட்ட மனிதனைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்திருப்பார்கள். இந்தச் சவாலில் தோற்கக்கூடாது என்கிற கௌரவத்துக்காக நீங்கள் அந்த பயில்வான் முன்னால் போவீர்கள். அப்போது போலீஸ் உங்களைச் சுற்றிவளைக்கும். சுலபமாகக் கைது செய்துவிடுவார்கள். பளு தூக்கியிருக்கும்

சமயத்தில் உங்கள் கைகள் உயரத்திலல்லவா இருக்கும்? அந்தச் சமயத்தில் தப்பிக்கவோ, எதிராளிகளிடம் மோதவோ உங்களுக்கு நேரமிருக்காது. அதற்காகத்தான் இந்த ஏற்பாடு."

தாவூத் இஸ்மாயில் யோசனையில் ஆழ்ந்தான். பிளெய்க் சொல்லுவதுபோல் நடப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தை எப்படிச் சமாளிப்பது?

"மிஸ்டர் தாவூத், நான் உங்களுக்கு உதவி செய்ய முடியும்! அதாவது என்னால் உங்கள் சர்க்கஸ் கம்பெனியின் மானத்தைக் காப்பாற்ற முடியும்!" பிளெய்க் சொன்னார்.

"உண்மையாகவா?" தாவூத் சந்தேகத்துடன் கேட்டான்.

"இதோ பாருங்கள்!" வில்லியம் பிளெய்க் இருக்கையிலிருந்து எழுந்து கோட்டை அவிழ்த்து ஹேங்கரில் மாட்டினார். பிறகு சட்டையின் பித்தான்களைக் கழற்றினார் அவர் உடம்பு ஒரு பயில்வானின் உடம்பு போலிருந்தது.

சுவரோரமாக நகர்ந்து வில்லியம் பிளெய்க் சுவரோடு ஒட்டியபடி நிறுத்தியிருந்த பெரிய அலமாரியை இரண்டு கைகளாலும் பிடித்துத் தூக்கினார். தலைக்கு மேல் அதை உயர்த்தியவர் மறுபடி நிதானமாகத் தரையில் வைத்தார்.

தாவூத் இஸ்மாயில் வியப்புடன் அந்தக் காட்சியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இப்போ என்ன சொல்றீங்க? உங்க சாண்டோ ஒரு நேப்பாளியர்தானே? நானும் நேப்பாளி மாதிரியே நடிக்கிறேன். என்னை யாரும் தாவூத் இஸ்மாயில் என்று சந்தேகப்பட முடியாது இல்லையா?" பிளெய்க் கூறினார்.

"நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். ஆனால், என் மனம் இதற்குத் சம்மதிக்கவில்லையே!"

"நீங்கள் கொஞ்சம்கூட பயப்பட வேண்டியதில்லை. அந்தச் சவாலில் வெற்றி பெற்ற பிறகு நானே இந்த இருப்பிடத்துக்குத் திரும்பி வந்து விடுகிறேன். இந்த உத்திரவாதம் போதுமா?"

தாவூத்துக்கு இதுவும் நல்ல யோசனைதான் என்று தோன்றியது.

"இன்னொரு முக்கியமான விஷயம். உங்களுக்குப் பதிலாக நான் சவாலை ஏற்று வெற்றி பெற்றாலும் அவர்கள் என்னைப் பிடிக்க முற்படுவார்கள். அவர்கள் என்னை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகாமல் வேறு எங்காவது கொண்டு போனால் நிலைமை விபரீதமாகிவிடும்."

"கவலையை விடுங்கள். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். தைரியமாகப் போங்கள்." தாவூத் உறுதியளித்தான்.

மறுநாள் சாண்டோ மோதும் நேரமும் வந்தது.

# 21

என்ன காரணத்தாலோ அன்று வழக்கத்தைவிட அதிகமாக, சர்க்கஸ் பார்க்க ரசிகர்கள் கூட்டம் வந்திருந்தது.

சாண்டோவைச் சவாலுக்கு அழைக்க வேறு யாரோ ஒரு பயில்வான் வந்திருக்கும் செய்தி ஊருக்குள் பரவி விட்டதுதான் காரணம் என்று தோன்றுகிறது.

எல்லோரது உதடுகளும் 'சாண்டோ சாண்டோ' என்றே உச்சரித்துக் கொண்டிருந்தன.

ஒரு வழியாக சாண்டோ பங்கு பெறும் நிகழ்ச்சியும் வந்தது.

அந்த நிகழ்ச்சிக்கு முன்பாக சர்க்கஸ் கூடாரத்தைச் சுற்றியும் போலீஸார் குவிக்கப்பட்டனர். யூனிஃபாரம் அணிந்தவர்களும் அணியாதவர்களும் அதில் கலந்தே நின்றிருந்தனர்..

சாண்டோ மேடைக்கு வந்தார்.

பார்வையாளர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக அன்று அரங்கத்துக்கு வந்த சாண்டோ நரைத்த தலை மற்றும் தாடி மீசையுடன் இருந்தார்.

அறிவிப்பு ஒலித்தது: "சர்க்கஸ் உலகில் சாதனை படைத்து, இந்தியாவிலுள்ள பயில்வான்கள் எல்லோரையும் பளு தூக்குவதில் வெற்றி கண்டவர் நமது சாண்டோ. இன்று நமது சாண்டோ ஒரு மினி காரையே இரண்டு நிமிட நேரம் தலைக்குமேல் தூக்கிப்பிடிப்பார். ரசிகர்கள் அமைதியாக இருந்து காட்சியை ரசிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்."

பார்வையாளர்கள் ஒருவரை ஒருவர் வியப்புடன் பார்த்துக்கொண்டனர்.

ஒரு சில நிமிடத்தில் பழைய ஆஸ்டின் கார் ஒன்றை ஒரு கோமாளி மேடையில் கொண்டு வந்து நிறுத்தினான்.

காரிலிருந்து இறங்கிய கோமாளி ஒரு தடவை சுழன்றபடியே பார்வையாளர்களுக்கு சலாம் செய்தான்.

தாடியும், மீசையும் நரைத்த சாண்டோ காரின் அருகே வந்தார். அவர் உடம்பில் அணிந்திருந்த நீண்ட கோட்டைக் கழற்றினார்.

உறுதியான உடல் வாய்ந்த வெள்ளைக்காரர் ஒருவர்தான் அன்று சாண்டோவாக வந்திருந்தார்.

சாண்டோ காரை நெருங்கினார்.

காரைத் தன் பக்கமாக அனாயாசமாகத் திருப்பியவர், இரண்டு கைகளாலும் காரை மெதுவாக உயர்த்தத் தொடங்கினார். கார் அவர் தலைக்கு மேலே வந்தபோது பார்வையாளர்களிடமிருந்து பலமான கைதட்டல் எழுந்தது.

"இந்த சாண்டோ நாம் எதிர்பார்த்த மனிதனைப்போல் தெரியவில்லையே" முன் வரிசையில் அமர்ந்திருந்த அலெக்ஸ், தன்னருகில் இருந்த சைமனிடம் கூறினார்.

"உண்மைதான்... இவன் நாம் எதிர்பார்த்த நபரே அல்ல. யாரோ வெள்ளைக்காரன் மாதிரி இருக்கிறானே" சைமனும் சந்தேகத்துடன் பேசினார்.

மறுபடி அறிவிப்பு முழங்கியது:

"இதோ இங்கிருக்கும் மதிப்புக்குரிய சாண்டோ எங்கள் சர்க்கஸ் கம்பெனியின் பெருமைக்குக் காரணமானவர். இங்குள்ள யாராவது அவருடன் போட்டியிட விரும்பினால் மேடைக்கு வரலாம். எங்கள் சாண்டோவை வெற்றி பெறும் நபருக்கு இந்த மேடையிலேயே பத்தாயிரம் ரூபாய் பரிசளிக்கத் தயாராக இருக்கிறோம்!"

அலெக்ஸ், தனக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் வெயிட் லிஃப்டிங் சாம்பியனைப் பார்த்தார்.

"என்ன சொல்கிறீர்கள்?" அலெக்ஸ் கேட்டார்.

"முயற்சி பண்றேன்!" பயில்வான் சொன்னார்.

"ம்... சீக்கிரம்."

சற்றும் தாமதிக்காமல் இருக்கையிலிருந்து எழுந்த சாம்பியன் தன்னுடைய ஓவர் கோட்டை அவிழ்த்து நாற்காலியில் போட்ட பிறகு மேடையை நோக்கி நடந்தான்.

பார்வைக்கு வில்லியம் பிளெய்க்கைவிட உடல் பலம் அதிகமுள்ளவனாகவே தெரிந்தான், நேப்பாளத்தைச் சேர்ந்த இந்தப் பயில்வான்.

மேடைக்கு வந்தவன், இரண்டு தடவை பஸ்கி எடுத்த பிறகு அந்த உடம்பு இரண்டு பங்கு பெரியதாகி விட்டது போல அவனுக்கு தோன்றியது.

புதிதாக வந்திருக்கும் நேப்பாளி சாம்பியன் ஏற்கெனவே மேடையிலிருக்கும் வயதான சாம்பியனை சுலபமாக வெற்றி கொண்டு விடுவான் என்றே தோன்றியது.

"அந்த கார் அட்டைக்காராக இருக்கும்!" பார்வையாளர்கள் பக்கத்திலிருந்து ஒருவர் கத்தினார்.

"இல்லேன்னா, வயசான பெரியவர் அதை அனாயாசமாகத் தூக்க முடியுமா என்ன?" மற்றொருவர் கேலிக் குரலில் கேட்டார்.

நேப்பாளி சாம்பியன் காரை நெருங்கி வந்தான்.

காரின் கீழே கைகளைச் செலுத்திப் பார்த்தான். காரின் பகுதிகள் உண்மையானதாகத்தான் இருந்தன. சக்கரங்களைப் பிடித்தபடியே காரை உயர்த்தமுயன்றான். ஆனால், கார் தரையிலிருந்து எழும்பவில்லை.

இரண்டு எட்டு பின்னுக்கு வந்த நேப்பாள சாம்பியன் காரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மீண்டும் காரின் அருகே வந்தான்.

மீண்டும் ஒரு தடவை காரின் சக்கரங்களைப் பிடித்தான். கார் உயரவில்லை. பார்வையாளர்கள் பக்கத்திலிருந்து கூக்குரல்கள் உயர்ந்தன.

"அது நிஜமான கார்தான்!" பார்வையாளர்கள் பக்கமிருந்து யாரோ ஒருவர் கத்தினார்.

நேப்பாள சாம்பியன் சந்தேகத்துடன் வயதான பழைய சாம்பியனைப் பார்த்தான்.

மூச்சை அடக்கியவனாக மறுபடியும் ஒரு தடவை காரை உயர்த்த முயன்றான். ஆனால், முடியவில்லை.

பார்வையாளர்கள் பக்கத்திலிருந்து கூக்குரல்கள் எழுந்தன. அதுவரை அரங்கத்தின் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த கோமாளி காரை ஒட்டி வந்தவன் பார்வையாளர்களுக்கு வணக்கம் செலுத்தியபடி காரை நெருங்கினான். அனாயாசமாகக்

காரைத் தொட்டு ஒரு புறமாக சரித்தான். பிறகு அதன் அடிப்பரப்பைத் தொட்டு மேற்புறமாக உயர்த்தினான்.

கார் மேல்நோக்கி உயரத் தொடங்கியது.

எல்லோர் கண்களும் வியப்புடன் அந்தக் காட்சியையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தன.

கார் மேற்புறமாக உயர உயர, அதற்கேற்றபடி மேற்கத்திய இசையும் பின்னணியாக உயர்ந்தது.

தலைக்குமேல் காரை உயர்த்திக் காட்டிய கோமாளி, பழையபடி அதைத் தரையில் நிற்க வைத்தான். பிறகு அதன் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் செய்து வந்த வழியே திரும்பினான்.

பார்வையாளர்கள் பக்கத்திலிருந்து எழுந்த கைதட்டல்கள், சர்க்கஸ் கூடாரத்தையே குலுக்கியது.

சற்று நேரத்தில் கோமாளி அரங்கத்துக்குள் திரும்பி வந்தான்.

"அந்தக் கோமாளியைக் கைது செய்யுங்கள்!" அலெக்ஸ் தன்னருகில் இருந்த மஃப்டி போலீஸாரிடம் கூறினார்.

நான்கு பேர் சட்டென்று அரங்குக்கு வந்து கோமாளியைப் பிடித்துக்கொண்டு வெளியேறினர்.

"நம்மகிட்டயா அவன் வேலையைக் காட்டறான்?" அலெக்ஸ் கோபத்துடன் கேட்டார்.

"நாம இப்படிச் சுத்தி வளைப்போம்னே அவன் எதிர் பார்த்திருக்க மாட்டான்!" சைமன் தங்கள் திட்டம் வெற்றி பெற்றுவிட்ட பெருமிதத்தில் பேசினார்.

கோமாளியை போலீஸ் ஜீப்பில் ஏற்றி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தனர். கோமாளியின் மேக்கப்பைக் கலைத்துப் பார்த்தபோது, தாங்கள் எதிர்பார்த்த நபரல்ல கோமாளி என்பது புரிந்தது.

உண்மையிலேயே சர்க்கஸில் வேலை செய்யும் கோமாளி அவர்.

"நீதான் காரை உயர்த்தினாய்யா?" அலெக்ஸ் கேட்டார்.

"காரை உயர்த்தினது நான் இல்ல சார்!"

"அப்புறம் யார்?"

"எனக்குத் தெரியாது சார்!"

"நீ எப்படிய்யா மேடைக்கு வந்தே?"

"காரை உயர்த்திய பிறகு, மேடைக்கு வந்த சாண்டோவின் கோட்டை மறுபடி கொண்டு வந்து கொடுப்பதுதான் என் வேலை. அப்போதுதான் நீங்கள் என்னைப் பிடித்துக்கொண்டு வந்தீர்கள்."

"ஓகோ... அப்படியா சங்கதி? சரி, இவரை விட்டு விடுங்கள்." அலெக்ஸ் உத்தரவிட்டார்.

சற்று நேரத்தில் தொலைபேசி மணியடித்தது.

அலெக்ஸ் ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ... யார் பேசுறது?"

"நான்தான் தாவூத் இஸ்மாயில்... உண்மையான ஜோக்கர் பேசுறேன்."

"எதிர்பார்க்காததால, கோட்டை விட்டுட்டேன்!"

"அது உங்க வழக்கம்தானே!"

"என்ன பேசுறே நீ?"

"சரி, விஷயத்துக்கு வர்றேன், என்னைவிட மோசமான சர்வதேசக் கடத்தல்காரர்களின் பட்டியலில் உங்கள் பெயர் ஆரம்பத்திலேயே இருக்கிறது!"

உண்மையிலேயே அந்தத் தகவல் அலெக்ஸைத் திடுக்கிட வைத்தது.

சட்டென்று ரிசீவரை வைத்தார்.

அலெக்ஸின் வெளிறிய முகத்தைப் பார்த்த சைமன் கேட்டார்: "என்ன சார், என்ன ஆச்சு?"

"நம்ம பேரெல்லாம் அடங்கிய லிஸ்ட் ஒண்ணு அவனுக்குக் கிடைச்சிருக்குதாம். இல்லேன்னா வில்லியம் பிளெய்க் கொண்டுவந்த ஃபைலை அவன் பார்த்திருக்கணும்!"

"அப்படியானால் ஆபத்துகள் ரெண்டையும் அப்புறப் படுத்தியாகணும்!"

"அவன்தான் மாயாவி மாதிரி மறைஞ்சு திரியுறானே!"

"ஒண்ணு செய்யலாமா? டாக்டர் சுகாசினியை - அதுதான் அந்த மாயாவியின் காதலியைக் கடத்திக் கொண்டுவந்து விட்டால், அவன் எப்படியும் நம்மிடம் வந்துதானே ஆகவேண்டும்!"

அலெக்ஸின் இந்த யோசனை புத்திசாலித்தனமானது என்று சைமனுக்குத் தோன்றியது.

"நாம் அவளை எங்கே வைத்திருக்கிறோம் என்பது அவனுக்கும் தெரியவேண்டும்?" சைமன் கேட்டார்.

"அப்படிப்பட்ட இடத்தைக் தேர்ந்தெடுத்துவிட்டால் போகிறது!"

வெகு நேர விவாதத்துக்குப் பிறகு டாக்டர் சுகாசினியைக் கடத்தி வந்து, பழைய எஸ்டேட் கட்டடத்திலேயே பாதுகாப்பாகச் சிறை வைப்பது என்று தீர்மானித்தனர். "ரஷீதின் பங்களாதான் இதற்கு உகந்தது. தாவூத் இஸ்மாயில் வந்தாலும் சமாளித்துப் பிடித்துவிடலாம்."

"அன்று நாம் கொஞ்சம் எச்சரிக்கையோட செயல்பட்டிருந்தால், மொத்தத் தங்கமும் பறிபோயிருக்காது.

இந்தத் தடவை அவன் எலும்புகளை நொறுக்கி விடுமளவு நமது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவிட வேண்டியதுதான்" என்று முடிவெடுத்தனர்.

அன்று இரவு சுமார் எட்டுமணியளவில் அம்பாஸடர் கார் ஒன்று டாக்டர் சுகாசினியின் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது.

அதிலிருந்து முரட்டுத்தனமான மனிதர்கள் நான்கு பேர் இறங்கினர்.

# 22

டாக்டர் சுகாசினியின் வீட்டு 'கேட்'டைக் கடந்த அவர்கள் நிலைவாசல் கதவின் அருகே வந்தனர்.

வந்தவர்களில் ஒருவன் காலிங்பெல்லின் சுவிட்சை அழுத்தினான்.

டாக்டர் சுகாசினி கதவைத் திறந்தாள். சட்டென்று ஒரு கை அவள் வாயைப் பொத்தியது. அவளை தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு ஜீப்புக்கு வந்து சேர்ந்தான். ஒதுங்கி நின்றிருந்த மற்றவர்களும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

ஜீப் ஸ்டார்ட் செய்யப்பட்டுத் தயாராக நின்று கொண்டிருந்தது. சுகாசினியின் வாயைப் பொத்திய குளோராபாம் துணியை அப்புறப்படுத்தினர். அதற்குள் சுகாசினி சுய நினைவற்று, மயக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தாள்.

ஜீப் விரைந்து கொண்டிருந்தது.

ஆள் வாசமில்லாத எஸ்டேட் பங்களாவை அடைந்தது ஜீப்.

அலெக்ஸ் ஜோன்ஸ், சைமன் கோமஸ், ரஷீத் ஆகியோர் சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

"ஆளுங்க காரியத்தை நல்லபடியா முடிச்சுட்டாங்களா?" ஜீப் சத்தத்தைக் கேட்டதால், அந்த அறைவாசலில் வந்து நின்ற காவல்காரரிடம் அலெக்ஸ் கேட்டார்.

"யாரோ ஒரு பொண்ணைத் தூக்கிட்டு வர்றாங்க!" காவல்காரர் பதிலளித்தார்.

சற்று நேரத்துக்குள் இரண்டுபேர் சுகாசினியை சோபாவில் படுக்க வைத்தனர்.

அங்கு வந்த ரஷீத், "வேண்டாம், அவளை அதோ அந்த அறைக்குள் படுக்க வையுங்கள்!" என்றார்.

அந்த இருவரும் ரஷீத் சுட்டிக்காட்டிய அறையிலிருந்த கட்டிலில் அவளைப் படுக்க வைத்தனர்.

"இவள் கண்விழிச்சா அவனைப் பத்தின விவரம் தெரிஞ்சுக்கலாம். ஒரே கல்லுல ரெண்டு மாங்கா!" அலெக்ஸ் வாய்விட்டுச் சிரித்தார்.

பாட்டில்களும் கிளாஸ்களும் வந்து சேர்ந்தன.

"இது நம் வெற்றியின் முதல்படி. இவளை வைத்துக் கொண்டு நாம் எவ்வளவோ சாதிக்கலாம்!" சைமன் மதுபாட்டிலின் மூடியைத் திறந்தபடி பேசினார்.

"ஒரு பெரிய பார்ட்டிக்கும் ஏற்பாடு செய்யலாம். பார்ட்டியின் முக்கிய அயிட்டமே டாக்டர் சுகாசினியாத்தான் இருக்க வேண்டும்." ரஷீதின் கண்கள் இதைச் சொல்லும்போது ஒரு விதப் பளபளப்புடன் ஜொலித்தது.

அதே நேரம் தாவூத் இஸ்மாயில் தன்னுடைய வீட்டிலிருந்து, சுகாசினியின் டெலிபோன் நம்பருக்கு டயல் செய்தான்.

அங்கு தொடர்ந்து மணியடித்துக் கொண்டிருந்ததே தவிர யாரும் எடுப்பதாகத் தெரியவில்லை. தாவூதின் மனத்தில் சந்தேகம் தோன்றியது. உடனே அவளது மருத்துவமனைக்கு டயல் செய்தான்.

அன்று டாக்டர் சுகாசினிக்கு 'வீக்லி ஆஃப்' என்பதால், 'மருத்துவமனைக்கு வரமாட்டார்!' என்ற தகவல் கிடைத்தது. அந்தச் செய்தி தாவூதை கவலைக்கு உள்ளாக்கியது. ஒருவேளை அலெக்ஸின் ஆட்கள் அவளைக் கடத்தியிருப்பார்களோ என்றும் தோன்றியது.

அந்த நேரம் அலெக்ஸைச் சேர்ந்த எந்த மனிதன் தட்டுப்பட்டாலும் கொன்றுவிடும் அளவுக்கு தாவூதிடம் கோபமிருந்தது.

மோட்டார் பைக்கின்மீது ஏறி அமர்ந்தவன், ஸ்டார்ட் செய்து நேராக சுகாசினியின் வீட்டுக்கு வந்தான். இந்தத் தடவை எதிராளிகள் யாராவது தட்டுப்பட்டால் சுட்டுத் தள்ளுவது என்றே அவன் தீர்மானித்திருந்தான்.

எப்படியும் தாவூத், சுகாசினியின் வீட்டுக்கு வருவான் என்று திட்டமிட்டிருந்த அலெக்ஸ் இரண்டு பேரை சுகாசினியின் வீட்டில் காவலுக்கு வைத்திருந்தார். கொலை வழக்கில் கைதாகி, பரோலில் விடுதலையாகியிருந்தவர்கள் அவர்கள் இருவரும். தாவூதின் போட்டோவைக் காட்டி, அவனைக் கொலை செய்துவிட்டால் கேஸ் இல்லாமல் செய்து விடுவதுடன் நல்ல தொகை தருவதாகவும் அலெக்ஸ் வாக்குறுதி அளித்திருந்தார்.

இருவரது கைவசமும் நீண்டபிடியுள்ள வாள்கள் இருந்தன. "முடிந்தால் துண்டு துண்டாக வெட்டித் தள்ளுங்கள்!" என்பதுதான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு.

சுகாசினியின் வீட்டுக்கு சுமார் நூறு மீட்டர் தொலைவிலேயே பைக்கை நிறுத்தி வைத்த தாவூத் நடந்துதான் வீட்டை நெருங்கினான்.

தன்னைக் கொல்வதற்கோ அல்லது உயிருடன் பிடிப்பதற்கோ ஏதாவது ஏற்பாடு செய்திருப்பார்கள் என்பது தாவூதுக்கு நன்றாகவே தெரியும். எனவே, தாவூத் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொண்டான்.

'கேட்'டை நெருங்கியதும் சற்று நேரம் நின்றான்.

வீட்டுக்குள் எவரும் இருக்கும் அடையாளம் தெரியவில்லை. வாசல்புறத்தில் ஒரேயொரு லைட் மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

தாவூத் ஒரு தடவை சாலையின் இருபுறத்தையும் பார்த்தான். எவரும் தட்டுப்படவில்லை. ஆனால், கேட் திறந்து கிடந்தது. அதுவே சந்தேகத்தை ஏற்படுத்தியது அவனிடம்.

எச்சரிக்கையுடன் நுழைந்தவன் காலிங் பெல் சுவிட்சை அழுத்தினான். உள்ளே மணியடிக்கும் சத்தம் கேட்டது. ஆனால், உட்புறத்திலிருந்து எந்தவிதமான அசைவும் கேட்கவில்லை.

கதவை உட்புறமாக அழுத்தியதும் திறந்து கொண்டது. உள்ளே நுழைந்தவன் நேராகப் படுக்கையறைக்குள் விரைந்தான். ஒருவேளை சுகாசினியை யாராவது தாக்கிவிட்டுப் போயிருந்தால், காப்பாற்றவேண்டுமே என்பதற்காகப் படுக்கையறைக்கு விரைந்தான்.

அவளது படுக்கையறையை அடைந்ததுமே வரவேற்பு அறையில் விளக்கு எரிந்தது.

ஏறத்தாழ மூன்றடி நீளமுள்ள பட்டையான வாளுடன் இரண்டு தடியர்கள் நின்று கொண்டிருந்தனர். பார்த்தாலே பயமேற்படுத்தக்கூடிய உருவங்கள்!

"நாடகத்துல உங்களோட வேஷம் என்ன?" தாவூத் சிரித்தபடி கேட்டான்.

அதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாதவனாக ஒருவன் வாளை ஓங்கியவாறு தாவூதுக்கு நேராகப் பாய்ந்தான்.

"முட்டாள்தனமா எதையாவது செய்யக்கூடாது; என் கையில இருக்கிறதைக் கவனிச்சியா?" தாவூத் துப்பாக்கியை வெளியே எடுத்தபடி பேசினான்.

"நீங்க துப்பாக்கியை இங்கே பயன்படுத்த முடியாது."

“ஏன்?”

“துப்பாக்கிச் சத்தம் வெளியில கேட்டா, போலீஸ் வீட்டை வளைச்சுக்குவாங்க!”

மின்னல் வேகத்தில் மேற்புறமாகப் பாய்ந்து வாளைப் பிடித்திருந்தவனது தொண்டையில் காலால் உதைத்தான். அவன் மல்லாந்து விழுந்தபோது, மற்றவன் வாளை ஓங்கிபடி பாய்ந்தான். தாவூத் குனிந்தான்.

இரண்டாவது முறை தாவூத் பாய்ந்தபோது மல்லாந்து விழுந்து கிடந்தவனின் கையிலிருந்த வாள் தாவூதின் கைக்கு வந்தது.

“உங்களோட தந்திரத்தை நிறுத்திக்கிறீங்களா? கத்திக்குக் கத்தி, துப்பாக்கியும் என்கிட்ட இருக்கு. இந்த இடத்துல கொல்லக் கூடாதுன்னு நெனைக்கிறேன். நான் சொல்றபடி கேக்கலேன்னா எனக்கு வேற வழியில்லை. உங்க தொண்டையில கத்தியைப் பாய்ச்சத் தயங்கமாட்டேன்.”

நின்று கொண்டிருந்தவன் தாவூதை கவனித்தபடி வாளை ஓங்கிய நிலையில் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

“என்னை உங்களுக்குத் தெரியாதுன்னு நினைக்கிறேன். என் பேரு தாவூத் இஸ்மாயில்!”

இருவரும் திடுக்கிட்டது தெரிந்தது.

தாவூதின் கை அந்தச் சிறிய இடைவெளியைப் பயன்படுத்தத் தவறவில்லை. நின்று கொண்டிருந்தவனின் மணிக்கட்டின் மேற்புறப்பகுதியைத் துளைத்துக்கொண்டு வெளிவந்தது தாவூதின் கத்தி.

அவன் அலறினான். அதே நேரம் அவன் கையிலிருந்த கத்தி, வீசியெறிந்ததுபோல் தொலைவில் சென்று விழுந்தது.

“சுகாசினி எங்கே? சொல்லு சீக்கிரம்!” தாவூத் கேட்டான்.

"எங்களுக்குத் தெரியாது!" இருவரும் ஏககாலத்தில் பேசினர்.

"நீங்க எப்படி இங்கே வந்தீங்க?"

"எங்களை இங்கே கொண்டுவந்து விட்டுப் போயிட்டாங்க!"

"யார் கொண்டுவந்து விட்டுப் போனது?"

"டி.எஸ்.பி. சார்தான்!"

"ஓகோ... கதை அப்பிடி வருதா? உண்மையைச் சொன்னதால உங்களைச் சும்மா விடுறேன். ம்... தப்பிச்சுப் போங்க!"

இருவரும் அங்கிருந்து தப்பித்தால் போதுமென்று வெளியேறி ஓடினர்.

தாவூத் லைட்டுகளை அணைத்துவிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தான். சுகாசினியை எங்கே கொண்டு போயிருப்பார்கள் என்பது தாவூதுக்குத் தெரிந்தது.

பிறருக்குத் தெரியாமல் வைத்திருக்க வேண்டுமானால் எஸ்டேட் பங்களாவைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். தாவூதின் பைக் எஸ்டேட்டை நோக்கிச் செல்லும் பாதையில் விரைந்தது.

பைக்கின் சத்தத்தை எதிராளிகள் கேட்டுவிடக்கூடாது என்பதற்காகத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு, தாவூத் நடக்கத் தொடங்கினான்.

பங்களாவில் அலெக்ஸ் ஜோன்ஸின் கூட்டத்தார் மிகுந்த எச்சரிக்கையோடு தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். எப்படியும் தாவூத் அங்கு வருவான் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

பன்னிரண்டு பேர் ஆட்டோமாட்டிக் துப்பாக்கிகளுடன் காவலிருந்தனர்.

பங்களாவை ஒட்டியுள்ள சாலையை தாவூத் நெருங்கியபோது, ஒருவன் துப்பாக்கியுடன் சாலையை குறுக்காகக்

கடந்தபடி அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டிருப்பதை தாவூத் கவனித்தான்.

சட்டென்று தாவூத் தேயிலைச் செடிகளுக்குள் புகுந்து மறைந்து கொண்டான்.

நிலவு வெளிச்சம் சன்னமாக இருந்தது. அந்த வெளிச்சத்தில் காவல்காரன் சில்ஹவுட் படம் மாதிரித் தெரிந்தான். ராணுவச் சிப்பாய் மாதிரி இருந்தான். அவன் தோளில் துப்பாக்கி இருந்தது.

ஏதோ தீர்மானத்துக்கு வந்தவனாக தாவூத் அந்த காவலாளியின் பின்னால் நெருங்கினான். எதிர்பாராத ஒரு தருணத்தில் தாவூத் காவலாளி மீது பாய்ந்தான். கைவசமிருந்த கயிறை அவன் கழுத்தில் சுருக்கிட்டு முறுக்கினான். சற்று நேரத்தில் அவன் மூச்சை நிறுத்தி அசைவற்றுச் சரிந்தான். தாவூத் அவனது உடைக்கு மாறினான்.

தாவூத் பங்களாவை நோக்கி நடக்கத் தொடங்கினான். தொப்பியைக் கண்ணை மறைப்பதுபோல் இழுத்து விட்டுக்கொண்டான்.

சற்று நேரத்தில் மற்றொரு காவலாளி எதிர்ப்பட்டான். ஆனால், தாவூதைப் பார்த்துச் சந்தேகப்பட்டதாகத் தெரியவில்லை. தன்னுடைய கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று நினைத்ததால் மௌனமாக இருந்தான்.

இந்த நிலை பங்களா வாசல் வரை தொடர்ந்தது.

பங்களாவுக்கு நுழைந்தான் தாவூத்.

சுலபமாக உள்ளுக்குள் நடந்தான்.

குறிப்பிட்ட அறையைத் திறந்து கதவைக் காலால் தட்டி மூடினான்.

அறைக்குள்-

அலெக்ஸும், சைமனும், ரஷீதும் மது நிரம்பிய கிளாஸ்களை வாயருகில் அப்போதுதான் கொண்டு போயிருந்தனர்.

"நான் தாவூத் இஸ்மாயில் வந்திருக்கிறேன்!" தாவூத் உரத்த குரலில் அறிவித்தான்.

# 23

"யாரும் அசையக் கூடாது. இப்ப என்ன பண்ணப் போறேன்னா, ஒவ்வொருத்தரையா நிதானமா கொல்லப் போறேன்... முதல் தடவையா ஒரு பரிசோதனை!"

ஒரு குண்டு வெடித்தது.

"ஐயோ!" என்கிற அலறலுடன் சைமன் கோமஸ் மட்ட மல்லாக்க விழுந்தார். அவர் முழங்கால் எலும்பின் பந்துக்கிண்ண மூட்டு துண்டு துண்டாகச் சிதறியது. அவர் அணிந்திருந்த பாண்ட் கண்மூடித் திறப்பதற்குள் சிவப்பு நிறத் திரவத்தில் நனைந்து சுற்றுப்புறத்தையும் சிவப்பாக்கியது. தரையில் கிடந்து புரண்டபடி சைமன் கதறிக்கொண்டிருந்தார்.

"வேண்டாம்... மேற்கொண்டு யாரையும் எதுவும் செய்யக்கூடாது. உன் தேவை என்ன? நாங்கள் உனக்குக் கட்டுப்படுகிறோம்!" அலெக்ஸ் தன் இரண்டு கைகளையும் உயர்த்தினார்.

ரஷீதும் தன் கைகளை உயர்த்தினார்.

"சரி... ஒரு போலீஸ் அதிகாரியே இப்படிச் சொல்லி விட்டதால் நான் அதற்கு ஒப்புக்கொள்வதுதான் நல்லது" தாவூத் அந்த நிலையிலிருந்து கொஞ்சம்கூட அசையாமல் பேசினான்.

"நாங்க என்ன பண்ணணும்?" ரஷீத் கேட்டார்.

"ரொம்பச் சுலபம்... உங்கள்ல யாராவது ஒருத்தர்... வேண்டாம் ரஷீதே அதைச் செய்யட்டும் டாக்டர் சுகாசினியைச் சுமந்து கொண்டுபோய் ஜீப்பில் படுக்க வைக்கவேண்டும். மிச்சத்தை பிறகு சொல்கிறேன்." தாவூத் உறுதியான குரலில் சொன்னான்.

உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் அவசரத்துடன் ரஷீத் சட்டென்று அறைக்குள் நுழைந்து மயங்கிக் கிடந்த சுகாசினியைத் தோளில் போட்டுக்கொண்டு வெளியே வந்தார்.

"மிஸ்டர் அலெக்ஸ். நீங்கள் ரஷீதைப் பின்பற்றுங்கள்!"

அலெக்ஸ் அதற்குக் கீழ்ப்படிந்தார்.

மூவரும் வெளியே வந்தார்கள்.

சுகாசினியை ஜீப்பில் படுக்கவைத்த பிறகு ரஷீது திரும்பினார். மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப் போல் தாவூதைப் பார்த்தார்.

"மிஸ்டர் அலெக்ஸ் ஜீப்பை ஓட்டி வரட்டும். ரஷீத் ஜீப்பின் முன்புறம் உட்காருங்கள். நான் உங்கள் இருவரையும் பின்புறத்திலிருந்து கவனிக்கிறேன்." தாவூத் கூறினான்.

அந்தச் சூழ்நிலையில் தாவூத் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்ளக்கூடிய நிலையில்தான் அவர்கள் இருந்தனர். எனவே, இருவரும் அப்படியே நடந்து கொண்டனர். ஜீப் புறப்பட்டது.

தாவூத், பின்புற ஸீட்டில் உட்கார்ந்தபடி சுகாசினியின் தலையைத் தன் மடிமீது வைத்துக் கொண்டிருந்தான்.

எந்த நேரமும் பயனபடுத்துவதற்குச் சௌகரியமாகத் துப்பாக்கி தாவூதின் கையில் இருந்தது. தான் சொல்வதை மீறி யாராவது நடக்க முற்பட்டால் சுட்டுவிடுவது என்ற தீர்மானத்தில் இருந்தான் தாவூத்.

ஜீப், எஸ்டேட் பாதையைத் தாண்டி, மெயின் ரோட்டை அடைந்தது.

மணி நள்ளிரவு ஒன்றரைக்குமேல் ஆகியிருந்தது.

"ஜீப்பை நிறுத்துங்கள்!"

"மேற்கொண்டு மிஸ்டர் ரஷீத் ஜீப்பை ஓட்டட்டும்!"

ரஷீத் டிரைவிங் ஸீட்டில் அமர்ந்துகொண்டு ஜீப்பைச் செலுத்தத் தொடங்கினார். ஒரு கிலோ மீட்டர் ஜீப் பயணமாவதற்குள் ஜீப்பை நிறுத்தச் சொன்ன தாவூத் அலெக்ஸை ஜீப்பிலிருந்து இறங்கச் சொன்னான்.

அலெக்ஸ் இறங்கியதும், ரஷீத்திடம் ஜீப்பை செலுத்தச் சொன்னான் தாவூத்.

ஜீப் முன்புறமாக நகரத் தொடங்கியது.

நகரை நெருங்கச் சுமார் பதினைந்து கிலோ மீட்டர் இருக்கும் போது தாவூத் மீண்டும் ஜீப்பை நிறுத்தச் சொன்னான்.

ஜீப் நின்றது.

"ம்... நீங்களும் இறங்கிக் கொள்ளலாம். மேற்கொண்டு நானே ஜீப்பை ஓட்டிக்கொள்கிறேன். நீங்கள் நிதானமாக உங்கள் இருப்பிடத்துக்குத் திரும்பலாம்!"

தாவூத் ஜீப்பைக் கிளப்பினான்.

சுகாசினியின் வீட்டுக்கு முன்னால் ஜீப்பை நிறுத்தி, சுகாசினியை அவளது வீட்டுக்குள்-படுக்கையறைக்குள் படுக்க வைத்து, கதவை வெளிப்புறமாகப் பூட்டி, சாவியை வீட்டுக்குள் எறிந்தான்.

ஜீப்பை ஸ்டார்ட் செய்து தன்னுடைய இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தான் தாவூத்.

வில்லியம் பிளெய்க்கைச் சந்தித்து நடந்ததை அவரிடம் விவரித்தான்.

பிளெய்க், அவனைப் பாராட்டினார்.

நகரத்திலிருந்து வந்து கொண்டிருந்த லாரி ஒன்றை நிறுத்தி ரஷீத் ஏறிக் கொண்டார்.

சற்றுத் தூரம் சென்ற பிறகு ரோட்டோரம் இருந்த மைல் கல் ஒன்றின்மீது அமர்ந்திருந்த அலெக்ஸைக் கவனித்து, அவரையும் லாரியில் ஏற்றிக்கொண்டார்.

எஸ்டேட் பங்களாவை அடைந்ததும், காயம்பட்டு ரத்தத்தை அதிகமாக இழந்திருந்த சைமனை அவசர அவரசரமாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். சைமன் காப்பாற்றப்பட்டார்.

மறுநாளே, தாவூதை இனிமேலும் உயிருடன் விட்டு வைக்கக் கூடாது என்று பெரிய திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள்.

அலெக்ஸின் குவார்ட்டர்ஸில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்தார்கள். போலீஸ் துறையின் உயர் அதிகாரிகள் பலர் அங்கு கூடியிருந்தனர்.

"சில நாட்களாக உங்களைப் பார்க்கவே முடியவில்லையே. அப்படி எங்கேதான் போயிருந்தீர்கள்?" டி.எஸ்.பி. ஹமீது, அலெக்ஸிடம் கேட்டார்.

"தாவூத் இஸ்மாயிலைத் தேடிப் போயிருந்தோம்." அலெக்ஸ் தயங்காமல் பொய் சொன்னார்.

"அப்படியும் தாவூதைப் பிடிக்க முடியவில்லையா?" ஹமீது கேட்டார்.

"இல்லை. சரியாகச் சொல்வதனால் தற்போது அவன் எங்கே இருக்கிறான் என்றே தெரியவில்லை."

"வில்லியம் பிளெய்க்கும் அவனிடம்தான் சிக்கிக்கொண்டிருக்கிறார்."- ஹமீது ஒரு பெருமூச்சுடன் சொன்னார்.

"அதில் எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது!" மற்றோர் அதிகாரி கூறினார்.

"மேற்கொண்டு நாம் என்ன நடவடிக்கை எடுக்கலாம்?" ஹமீது கேட்டார்.

"நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆள்வாசம் இல்லாத வீடுகள், பங்களாக்கள் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்."

"நல்ல யோசனைதான்!"

"இதுவரை நமக்கு அப்படி ஒரு யோசனை தோன்றவே இல்லை. அந்த மாதிரி இடத்தில் பிளெய்க்கைப் பாதுகாப்பதும் தாவூதுக்குச் சுலபம்!"

"இதற்கு முன் நாம் பல தடவை அவனுக்காக வலை விரித்திருக்கிறோம். ஆனால், எல்லாவற்றிலிருந்தும் அவன் புத்திசாலித்தனமாகத் தப்பித்து விட்டான். இந்தத் தடவை அவனை அதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. இப்போது நாம் என்ன செய்வது? மிஸ்டர் ஹமீது நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"தாவூதைப் பிடிக்க வேண்டியது அத்தியாவசியம். முதல் விஷயம் வில்லியம் பிளெய்க்கின் கடத்தல். தாவூதை நாம் பிடிக்காமல் இருந்தால் ஒட்டுமொத்தமாக நமது டிபார்ட்மெண்ட்டையே ஒரு மாதிரியாகப் பேசுவார்கள். இத்தனை காலமாக நாம் போட்ட திட்டங்கள் எப்படித் தோல்வியடைந்தன? அதுதான் எனக்கு அதிசயமாக இருக்கிறது.

"அதைப்பற்றி விவாதிப்பதைவிட, இந்தத் தடவை அவனைத் தப்பிக்க விடாமல் ஒரே அமுக்காக அமுக்க என்ன செய்வதென்று யோசிப்போம்." அலெக்ஸ் கூறினார்.

இருப்பினும் அன்று எந்தவிதமான தீர்மானத்துக்கும் வராமல் போலீஸ் அதிகாரிகள் பிரிந்தனர்.

நள்ளிரவு தாண்டிய பிறகும் வீட்டிலிருக்க மனமில்லாத அலெக்ஸ், ஜீப்பை எடுத்துக்கொண்டு ரஷீதின் பங்களாவை அடைந்தார்.

ரஷீத் ஏகக் கலவரத்திலிருந்தார்.

நடந்ததையெல்லாம் சுகாசினியிடமிருந்து தெரிந்து கொண்ட தாவூத், எந்த நேரமும் தன்னைப் பழிவாங்க இங்கு வரலாம் என்பதே ரஷீதின் பயத்துக்கான காரணம்.

அலெக்ஸைப் பார்த்தவுடன் ரஷீத் ஓரளவு நிம்மதி அடைந்தார் என்று சொல்லலாம்.

"நல்ல நேரத்துக்கு வந்து சேர்ந்தீங்க. என்ன செய்யிறதுன்னு தெரியாம நான் விழி பிதுங்கிக்கிட்டிருந்தேன். அவன் எந்த நேரமும் எதுவும் செய்யலாம். அவனை நாம ரொம்பவே காயப்படுத்தியிருக்கிறோம். பழிவாங்காம இருக்க மாட்டான்!" ரஷீத் பேசினார்.

"உண்மைதான், அந்த டாக்டர் சுகாசினியைக் கெட்டிக்காரத்தனமாகக் கடத்தி வந்தும் நம்மால் நினைத்தபடி செயல்படமுடியவில்லை. அவன் எங்கு தங்கியிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டால் வேறு ஏதாவது திட்டமிடலாம்."

"மற்றொரு தகவல் வந்துள்ளது. நாளைக்கு கொச்சிக்கு வரும் கிரேக்கக் கப்பலில் ஒன்றரைக்கோடி மதிப்புள்ள ஹாஷிஷ் வருகிறது. வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி அதை எடுத்து வருகிறாள். இதுதான் அவள் போட்டோ."- ரஷீத் போஸ்ட் கார்டு சைஸ் போட்டோவை அலெக்ஸிடம் காட்டினார்.

ஹாலிவுட் சினிமா நடிகையைப்போல் தோற்றமளித்தாள் அந்த பெண்.

கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தாள்.

சிவப்புப் புள்ளிகள் நிறைந்த கவுன் ஒன்றை அணிந்திருந்தாள்.

"சரக்கை எப்படி எடுத்து வருகிறாள்?" அலெக்ஸ் கேட்டார்.

"சைக்கிள் டியூப் போன்ற பாலித்தீன் குழாயில் போட்டு உடம்பில் முழுக்கச் சுற்றிக்கொண்டு வருகிறாள். அவள் உடல் நிறத்திலேயே பாலித்தீன் குழாய் இருப்பதால் யாராலும் சட்டென்று அடையாளம் கண்டுபிடிக்க முடியாது!"

"நாம் எப்படி சரக்கைப் பெற்றுக்கொள்வது?" அலெக்ஸ் கேட்டார்.

"புத்திசாலித்தனமாக நாம் அதைத் திட்டமிடவேண்டும். கஸ்டம்ஸ்காரர்கள் அவளைப் பிடிக்க முற்படலாம். இரண்டு மூன்று டிபார்ட்மெண்ட்காரர்கள் அவளைச் சூழ்ந்து வரலாம். அவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டு அவளை நாம் கடத்திவர வேண்டியிருக்கும்!"

"சொல்வது மாதிரி அது அவ்வளவு சுலபமா?"

"நீங்கள் உங்கள் யூனிஃபார்மிலேயே போய் அவளை அழைத்து வருவதுதான் நல்லது. நீங்கள் அவளைக் கைது செய்து வருவதாக மற்றவர்கள் நினைக்கவேண்டும். அப்படிச் செய்தால் யாரும் சந்தேகப் பட மாட்டார்கள்."

"நல்ல யோசனைதான்!"- ஒப்புக்கொண்ட அலெக்ஸ் ரஷீத்திடமிருந்து விடைபெற்றார்.

மறுநாள் காலையிலேயே அலெக்ஸ் கொச்சி துறை முகத்துக்கு வந்து சேர்ந்தார். கப்பல் பத்தே முக்கால் மணிக்குத் துறைமுகத்தை அடையலாம் என்ற தகவல் கிடைத்தது.

அலெக்ஸ், விக்கிரமன் நாயருடன் மற்றும் இரண்டு போலீஸ் அதிகாரிகளையும் யூனிஃபார்முடன் அழைத்து வந்திருந்தார்.

கப்பல் துறைமுகத்துக்கு வந்து நங்கூரம் பாய்ச்சி நின்றது.

பயணிகள் சுங்கச் சோதனைப் பிரிவை நோக்கி நடந்தனர்.

"அதோ வருகிறாள்!" அலெக்ஸ் ஓர் உருவத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார்.

# 24

கப்பலிலிருந்து இறங்கியவள் எந்தவிதமான தயக்கமும் இன்றிச் சாதாரணமாக நடந்து கொண்டாள்.

அவள் தோளில் பெரிய பை ஒன்று பின்புறமாகத் தொங்கிக் கிடந்தது.

மறுவிநாடியே அந்த அதிசயம் நடந்தது.

அலெக்ஸும் கூட்டத்தாரும் வியப்பினால் வாயடைத்துப் போனார்கள்.

நடந்துகொண்டிருப்பவளைப் போலவே வேறொருத்தி அவளைத் தொடர்ந்து வந்தாள். அதே வேடம்... அதே கண்ணாடி... அதே பெரிய பை...

சினிமாவில் இடம் பெறும் இரட்டை வேடம்போல் இருந்தனர்.

'இந்த இருவரில் நாம் அணுகவேண்டியது யாரை?' அலெக்ஸ் யோசனையில் ஆழ்ந்தார்.

ஒரு சில விநாடிகளில் இரண்டு பெண்களும் இணைந்து அருகருகே நடக்கத்தொடங்கினர். இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு தங்களுக்குள் எதையோ பேசிக் கொண்டவர்களைப் போல் இருவரும் எதிரெதிர்த் திசைகளில் பிரிந்தனர்.

எங்கிருந்தோ இளைஞன் ஒருவன் திடுமென்று மோட்டார் பைக்குடன் முளைத்தான். அந்தப் பெண்களைச் சேர்ந்தவன் என்பது போல் இருந்தன அவனது உடையும், தலைமுடி அமைப்பும்.

வலது புறமாகத் திரும்பியவள் அந்த மோட்டார் பைக்கின் பில்லியனில் ஏறி உட்கார்ந்தாள். அதற்குப் பின் சற்றும் தாமதிக்காமல் பைக் சீறிப் பாய்ந்து புறப்பட்டது.

"அவன்தான் தாவூத் இஸ்மாயில்!" அலெக்ஸ் உரத்த குரலில் அலறினார்.

உடனே அவர்கள் கொண்டு வந்திருந்த ஜீப், மோட்டார் பைக்கின் பின்னால் பாய்ந்தது. நகரின் முக்கியமான வீதிகளில்

மோட்டார் பைக்கும் ஜீப்பும் குறிப்பிட்ட ஒரே இடைவெளியில் ஓர் ஓட்டப்பந்தயமே நடத்தின.

சுமார் நான்கு கிலோ மீட்டர் பயணம் செய்த பிறகு மெயின் ரோட்டின் குறுக்கே சென்ற பாதையில், முன்புறம் சென்றவர்களைப் போலவே மற்றொரு ஜோடி பைக்கில் வந்து, முந்தைய பைக் மற்றும் ஜீப்புக்கு இடையில் புகுந்து விரைவாகப் பாதையைக் கடந்தது.

"அதே மாதிரி இரண்டு பேர்!" ஜீப் டிரைவர் உரத்த குரலில் கூவினார். அலெக்ஸ் அதைக் கவனிக்கவே செய்தார்.

ஜீப்பின் வேகம் குறைந்தது.

"சார், நாம் யாரைப் பின் தொடர்வது?" ஜீப் டிரைவர் கேட்டார்.

"நானும் அதைத்தான் யோசிக்கிறேன்!" அலெக்ஸ், சப்-இன்ஸ்பெக்டர் விக்கிரமன் நாயரைப் பார்த்தார்.

சற்றுத் தூரத்தில் மேலும் இரண்டு பேர், முந்தைய ஜோடிகளைப்போல் அதே வேஷத்தில் மோட்டார் பைக் அருகில் நின்று கொண்டிருந்தனர். ஜீப் அவர்களைக் கடந்ததும் அதே ஜோடி ஜீப்பைத் தொடர்ந்தது.

"நமது கவனத்தைத் திசை திருப்புவதற்காகச் செய்துள்ள ஏற்பாடுதான் இது. நாம் உடனே போலீஸ்ஸ்டேஷனுக்குத் திரும்ப வேண்டியதுதான்" அலெக்ஸ் ஜீப் டிரைவரிடம் கூறினார்.

ஜீப், போலீஸ் ஸ்டேஷனை நோக்கித் திரும்பியது.

ஸ்டேஷனுக்குள் நுழைந்த அலெக்ஸ் உடனடியாக எல்லா அவுட் போஸ்ட்டுகளுக்கும் தகவல் தெரிவிக்க ஏற்பாடு செய்தார். குறிப்பிட்ட வேடத்தில் மோட்டார் பைக்குகளில் பயணம் செய்துவரும் எல்லா ஜோடிகளையும் கைது செய்யுமாறு அறிவிக்கச் செய்தார்.

சுமார் அரைமணி நேரம் கழிந்த பிறகு ஒவ்வொரு பகுதியிலிருந்தும், 'நீங்கள் குறிப்பிட்ட மாதிரி வேடத்தில் யாரையும்

நாங்கள் பார்க்கவில்லை' என்ற தகவல் தொடர்ந்து வரத் தொடங்கியது.

அலெக்ஸ் மிகவும் ஏமாற்றமடைந்தவராகக் காணப்பட்டார்.

"ஓகோ... அவன் இந்த அளவுக்கு நம்மிடம் விளையாட ஆரம்பித்து விட்டானா?" அலெக்ஸ் தன் கையிலிருந்த ரூல்தடியை வலுவுடன் மேஜைமீது தட்டினார்.

அன்று இரவு சைமன் கோமஸின் பங்களாவில் நண்பர்கள் ஒன்று சேர்ந்தனர். தாவூத் இஸ்மாயிலைப் பிடிப்பதற்கான வழிகள் அடைபட்டுப் போனதுடன், தொடர்ந்து தங்களை ஏமாற்றிக்கொண்டிருப்பதையும் தாங்க முடியாதவர்களாக ஒவ்வொருவரும் புலம்பினர். கண்டிப்பாக இதற்கு ஏதாவது மாற்றுவழி கண்டுபிடித்தே தீருவதென்று பிடிவாதமாக முயன்றனர்.

"அந்த லேடி டாக்டர் சுகாசினி நினைத்தால் நமக்கு உதவ முடியும். ஆனால், நாம் அவளை நெருங்குவதைத் தெரிந்து கொண்டால் தாவூத் நம்மைப் பழிவாங்காமல் விடமாட்டான்." அலெக்ஸ் பேசினார்.

"நீங்கள் தந்திரம் நிறைந்த கெட்டிக்கார போலீஸ் ஆபீஸர் என்றால் டாக்டர் சுகாசினியைக் கைது செய்யமுடியும். அப்படிச் செய்தால் தாவூத் உங்களுக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும்." சைமன் கூறினார்.

"உண்மைதான். ஆனால் அதற்கும் சந்தர்ப்பம் வாய்க்க வேண்டுமே." அலெக்ஸ் பெருமூச்சு விட்டபடி தொடர்ந்தார்.

"டாக்டரைக் கடத்திக் கொண்டுபோய் வெளியிடத்தில் வைத்ததால்தான் அவன் அப்படியெல்லாம் நடந்து கொள்ள முடிந்தது. அதை விட்டுவிட்டு, போலீஸ் 'ஸ்டேஷனில் உங்கள் நேரடிப் பார்வையிலேயே வைத்துப் பாருங்கள். தாவூத் சரண்டர் ஆகிறானா, இல்லையா என்று!"

சைமனின் இந்த யோசனை நல்லதுதான் என்று அலெக்ஸுக்குத் தோன்றியது. ஆனால், அதில் வேறு ஒரு சிக்கல் இருந்தது. டாக்டர் சுகாசினியின் உறவினர்கள் அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள். அது வேறு ஏதாவது சிக்கல்களைக் கிளப்பிவிடலாம்.

'அவள் மாமா ஒருவர் ஆளுங்கட்சியின் எம்.எல்.ஏ. நிலைமை கொஞ்சம் தீவிரமானால் தன்னுடைய பதவியே கூட பறிபோகலாம். எனவே, மிகுந்த எச்சரிக்கையோடு செயல்பட வேண்டியுள்ளது.'

'ஆனால், உடனடியாக ஏதாவது செய்தே தீரவேண்டும் இல்லாவிட்டால் முந்திக்கொண்டு எதிராளிகள் ஒட்டு மொத்தமாகத் தங்களைக் கூண்டிலேற்ற ஏற்பாடு செய்யலாம்.'

"எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம் ஒன்று உள்ளது" என்ற அலெக்ஸ் தனக்கு முன்னால் நிறைந்திருந்த விஸ்கி கிளாஸைக் கையில் எடுத்தபடி தொடர்ந்தார்: "அந்த டைரியும், வில்லியம் பிளெய்க்கும் தாவூத்திடம் சிக்கியிருக்கும் வரையில் நமக்கு ஆபத்துதான்."

"உண்மைதான். அதற்கான மாற்று வழியாகத்தான் சுகாசினியைப் பயன்படுத்தலாம் என்கிறேன்" சைமன் பேசினார்.

"ஒன்று வேண்டுமானால் செய்யலாம். அவளது வீட்டைச் சுற்றி வலுவான காவலுக்கு ஏற்பாடு செய்யலாம். அதே நேரம் அவளுக்கும் அது தெரியாமல் இருக்கவேண்டும். என்ன சொல்கிறீர்கள்?"

"அது நல்ல யோசனைதான். எந்த சமயத்தில் தாவூத் அந்த வீட்டுக்குள் நுழைகிறானோ அப்போது சுற்றி வளைத்து நாம் இருவரையும் கையும் களவுமாகப் பிடிக்கலாம். இந்த மாதிரி செய்தால் யாரும் எதுவும் சொல்ல முடியாது."

"அப்படியே செய்யலாம். இது எவ்வளவு தூரம் வெற்றியடையும் என்று தெரியவில்லை."

அதே நேரம் டெலிபோன் மணி ஒலித்தது.

சைமன் ரிசீவரை நெருங்கி எடுத்தார்.

''ஹலோ... போன் உங்களுக்குத்தான்'' என்றபடி அலெக்ஸிடம் கொடுத்தார் சைமன்.

அலெக்ஸ் ரிசீவரை கிராடிலில் வைக்கும்போது அலெக்ஸின் முகம் வெளிறியிருந்தது.

"என்ன விஷயம்?" சைமன் கேட்டார்.

"ஏர்போர்ட்டில் தென்பட்ட இருவரில் உண்மையான பெண்ணை தாவூத் கடத்திக் கொண்டு போய்விட்டானாம். அவன் போட்ட நாடகம் வெற்றிகரமாகப் பயனளித்துவிட்டதாம் கர்வத்துடன் சொல்கிறான்!"

"அப்படியானால் மோட்டார் பைக்கில் வந்த மற்ற மனிதர்கள் யார்?"

"அவனிடம் ஆட்களுக்குப் பஞ்சமா என்ன? எதற்கும் நாளைக்கு ஒரு முயற்சி செய்து பார்க்கிறேன்" கிளாஸில் இருந்ததை மொத்தமாகத் தொண்டையில் ஊற்றிவிட்டு எழுந்தார்.

அலெக்ஸின் ஜீப் அங்கிருந்து புறப்பட்டது.

ஜீப் சற்றுத் தொலைவு வந்தபிறகு அவருக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

"நீங்கள் இந்த அளவுக்கு முட்டாள்தனமாக பேசுவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை."

"யாரது?" அலெக்ஸ் பிரேக்கை அழுத்தி ஜீப்பை நிறுத்தியபடி பின்புறம் திரும்பிப் பார்த்தார்.

"பயப்பட வேண்டாம். நான்தான் தாவூத் இஸ்மாயில். ம்... ஜீப் போய்க்கிட்டே இருக்கட்டும்" பின்புறக் குரல் கூறியது.

ஒரு போலீஸ் அதிகாரியாக இருந்த போதிலும் அலெக்ஸ் அந்தக் கணத்தில் பயப்படவே செய்தார்.

"நான் சொல்ற வழியிலேயே ஜீப்பை ஓட்டுங்கள்!"

நகர எல்லை தாண்டியதும் தாவூத் ஜீப்பை நிறுத்தச் சொன்னான். அலெக்ஸ் அவனது வார்த்தைகளுக்குக் கட்டுப்படவே செய்தார். ஜீப் நின்றது.

பின்னால் உட்கார்ந்திருந்த தாவூத் கறுப்பு நிறமான உறை ஒன்றை அலெக்ஸின் தலையில் போட்டுக் கீழ்ப் புறமாக இழுத்து, கழுத்துப் பகுதியில் அழுத்தாமல் கயிற்றைப் போட்டுக் கட்டினான்.

"ம்... இப்போது நீங்கள் இடதுபுறமாக உட்காருங்கள். நான் ஜீப் ஓட்டுகிறேன்" தாவூத் கூறினான்.

அலெக்ஸ் நகர்ந்து உட்கார்ந்தார்.

ஜீப் தார்ரோட்டில் விரைவாக ஓடிக்கொண்டிருந்தது. தாவூத் அடிக்கடி அலெக்ஸைக் கவனிக்கவே செய்தான் அலெக்ஸ் உட்கார்ந்த நிலையிலேயே அமைதியாக இருந்தார்.

அலெக்ஸ் இதுவும் நல்லதுக்குத்தான் என்று நினைத்தார். 'தாவூத் அவனுடைய ரகசியமான இருப்பிடத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறான். அவனாகவே, வலிய வந்து தன் தலையைக் கொடுக்கிறான். இந்தத் தடவை அவனைத் தப்பிக்க விடக்கூடாது.'

ஜீப் எங்கோ ஓரிடத்தில் நின்றது.

ஜீப்பிலிருந்து இறங்கிய தாவூத் அலெக்ஸின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனான்.

ஏதோ ஓர் இடத்துக்கு வந்ததும் தாவூத், அலெக்ஸின் தலையிலிருந்த கறுப்பு உறையை அவிழ்த்து எடுத்தான்.

அலெக்ஸ் திகைப்பும் வியப்பும் ஒருங்கே அடைந்தார். அவருக்கு எதிரே வில்லியம் பிளெய்க் அமர்ந்திருந்தார்.

# 25

ஒரு கணம் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினார் அலெக்ஸ்.

தனக்கு முன்னால் அமர்ந்திருப்பவர் சர்வதேச ரகசிய போலீஸ் அதிகாரிகளில் முக்கியமானவரான வில்லியம் பிளெய்க். அவரைச் சந்திப்பதோ தாவூத் இஸ்மாயிலின் ரகசிய இருப்பிடத்தில்.

தாவூத் இப்போது தன்னையும் இங்கே கடத்திக் கொண்டு வந்திருக்கிறான். தன்னைப் போலவே பிளெய்க்கும் கடத்துப்பட்டடு இங்கு சிறைவைக்கப்பட்டிருக்கிறார்.'

"உங்களைத்தான் நான் வெகுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" பிளெய்க், அலெக்ஸிடம் பேசினார்.

"என்னை எதிர்பார்த்தீர்களா?"

"ஆமாம்... நான் வில்லியம் பிளெய்க்தான். இங்குள்ள கடத்தல் புள்ளிகள் சிலரைக் கையோடு கொண்டு போவதற்காக வந்தேன். சந்தர்ப்பவசமாக இங்கு அகப்பட்டுக் கொள்ள நேர்ந்து விட்டது."

"நீங்கள் தாவூத் இஸ்மாயிலிடம் சிக்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், சரியாக இந்த இடம் எது என்று தெரியாததால் உடனடியாக வந்து உங்களை விடுவிக்க முடியவில்லை."

"பரவாயில்லை. இப்போதாவது உங்களால் இங்கு வந்து சேர முடிந்ததே. நீங்கள் ஓர் அதிகாரியாக யூனிஃபார்ம் போட்டுக் கொண்டு வேலை செய்யும்போது உங்களைக் கைது செய்யவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது."

அலெக்ஸ் மனதுக்குள் சிரித்துக் கொண்டார் அலெக்ஸைப் பொறுத்தவரை சரியான நேரத்தில் தான் வரவேண்டிய இடத்துக்கு வந்திருப்பதாகத் தோன்றியது. 'வில்லியம் பிளெய்க்கைச் சந்திக்க நேர்ந்தால், முதலில் அவரிடமுள்ள ஃபைலைக் கைப்பற்றவேண்டும். பிறகு பிளெய்க்கைத் தீர்த்துக்கட்ட வேண்டியதுதான்.

தான் யோசிப்பது போல் நடக்கவில்லையானால் தான் உட்பட தன்னைச் சார்ந்த பலபேர் கையும் களவுமாக அகப்பட்டுக் கொள்ள நேரிடும். இது ஒரு வகையில் ஜீவமரணப் போராட்டமும்கூட! அகப்பட்டுக் கொண்டால் சந்தேகமே இல்லாமல் தூக்குதண்டனை கிடைக்குமளவு தன்மீது குற்றங்கள் உள்ளன. மேற்கொண்டு அவை தொடர்ந்து கொண்டுமிருக்கிறது.

'எனவே எப்படிப் பார்த்தாலும் வில்லியம் பிளெய்க் உயிருடன் இருக்கக்கூடாது. ஃபைலை வேண்டுமானாலும் பிறகு எடுத்துக்கொள்ளலாம். முதலில் வில்லியம் பிளெய்க்கைத் தீர்த்துக்கட்ட வேண்டியதுதான். அதை எப்படிச் செய்வது? என்பது பற்றி யோசித்த வேளையில்தான், சந்தர்ப்பம் சரியான இடத்துக்குத் தன்னைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. என்ன இருந்தாலும் தனக்கு இந்த இடத்தில் எந்த ஆபத்தும் ஏற்படப் போவதில்லை என்பது உறுதி. தன்னிடமிருந்து மேற்கொண்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளவிரும்புவார்களே தவிர, தன்னைக் கொல்ல மாட்டார்கள்.'

'மிஸ்டர் பிளெய்க், இப்போது நீங்களும் நானும் ஒரே மாதிரியான நிலையில்தான் இருக்கிறோம்" அலெக்ஸ் கூறினார்.

"அப்படியா சொல்கிறீர்கள்?" பிளெய்க் கேட்டார்.

"நாம் இருவருமே பக்கா கிரிமினல் பேர்வழியான தாவூத் இஸ்மாயிலின் கையில் அகப்பட்டு ஒரே இடத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் குறிப்பிடுகிறேன்."

"நீங்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தை வைத்துப் பார்த்தால் அது உண்மைதான். ஆனால், ஒரு சிறு திருத்தம். நான் இந்த

இடத்தில் உங்களைக் கைது செய்வதுதான் அந்தத் திருத்தம்!" பிளெய்க் கூறினார்.

அலெக்ஸ் சிரித்துக் கொண்டார்.

"என்னைக் கைது செய்வதற்க்கான அதிகாரமோ, அத்தாட்சியோ உங்களிடம் இருக்கிறதா?" அலெக்ஸ் கேட்டார்

"இருக்கிறது... அது உங்களுக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும்."

"இருக்கலாம். அப்படி ஏதாவது உங்களிடம் இருந்தால் முதலில் நான் அதைப் பார்க்க விரும்புகிறேன்."

"என்னுடைய தற்போதைய சூழல் மற்றும் பதவியின் காரணமாக நான் அதை உங்களிடம் காட்டவேண்டிய அவசியமில்லை. இந்த விநாடியிலிருந்து நீங்கள் என்னுடைய கைதிதான்."

தாவூத் இஸ்மாயில் அந்த அறையிலிருந்து எப்போதோ வெளியேறியிருந்தான். 'தற்சமயம் இந்த அறையில் பிளெய்க்குடன் தான் மட்டும்தான் இருக்கிறோம்.

இது ஒரு நல்ல சந்தர்ப்பம்தான்'.

சுறுசுறுப்பாக இயங்கிய அலெக்ஸின் கைகள் தன்னுடைய இடுப்புப் பகுதியிலிருந்த துப்பாக்கியை எடுத்து, பிளெய்க்கை நோக்கி சுட்டன. துப்பாக்கி குண்டு வெடித்த சத்தம் கேட்டது.

அதே சமயம் மற்றொரு குண்டு வெடித்த சத்தமும் கேட்டது.

அப்போது அலெக்ஸ் அலறியபடியே பின்புறமாகச் சரிந்தார். அவர் கையிலிருந்த துப்பாக்கி எங்கோ பறந்துபோய் விழும் சத்தம் கேட்டது. துப்பாக்கி பிடித்திருந்த அவர் பெருவிரலிலிருந்து குண்டு பாய்ந்ததால் ரத்தம் கொட்டத் தொடங்கியது.

சட்டென்று துள்ளியெழுந்த பிளெய்க், அலெக்ஸைப் பிடித்துக்கொண்டார்.

தாவூத் இஸ்மாயில் தன் வலது கையில் வைத்திருந்த பஞ்சு பிளாஸ்டர் போன்றவற்றை பிளெய்க்கிடம் வீசி எறிந்தான்.

ஒரு டாக்டரின் சுறுசுறுப்பு மற்றும் லாகவத்தடன் பிளெய்க், அலெக்ஸின் கையில் கட்டுப் போட்டார்.

களைப்பு அடைந்த அலெக்ஸ் நாற்காலியில் அமர்ந்தார். அந்தச் சந்தர்ப்பத்திலும் அங்கிருந்து தப்பிப்பது எப்படி என்பதைக் குறித்தே அலெக்ஸின் மனம் யோசித்துக் கொண்டிருந்தது.

"இங்கு வந்து சேர்ந்த பிறகுகூட முட்டாள்தனமாக நடந்துகொண்ட உங்களை என்னவென்று சொல்ல? உங்களுக்கு மிக அருகிலிருந்த நான் மறுமுறையும் துப்பாக்கியைப் பயன்படுத்தியிருப்பேன். ஆனால் செய்யவில்லை" தாவூத் இஸ்மாயில், அலெக்ஸின் முன்னால் வந்து நின்று பேசினான்.

மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகியிருந்தது.

"மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்" தாவூத், பிளெய்க்கைப் பார்த்துக் கேட்டான்.

"நீங்கள் சற்று நேரத்துக்கு முன் என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி. மற்றவை பற்றிப் பிறகு யோசிப்போம்!" பிளெய்க் துப்பாக்கியை உறைக்குள் போட்டபடி, தனது படுக்கை அறையை நோக்கி நடந்தார்.

தாவூத் தன்னிடமிருந்த வயர்லெஸ் டெலிபோனில் சுகாசினியின் நம்பரை டயல் செய்தான்.

"ஹலோ... டாக்டர் சுகாசினிதானே..."

"ஆமாம்... ஓகோ நீங்கள்தானா?"

"அந்த அளவுக்கு குரல் பழக்கமாயிடுச்சா? நானேதான். அப்புறம் நம்ம போலீஸ் அதிகாரி இருக்கிறாரே, இப்ப இங்கேதான் அடைபட்டிருக்கார்."

"அப்படியா?"

“ஆமாம்... இன்னொரு விஷயம், யார் வந்து கூப்பிட்டாலும் வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம். ஒருவேளை எனக்கு ஆபத்து என்று கூடச் சொல்வார்கள். எதிராளிகளுக்கு இந்நேரம் விஷயம் தெரிந்திருக்கலாம்.”

“புரிந்துவிட்டது. அதற்காக என்னைப் பிணைக்கைதியாகப் பிடித்துக்கொள்வார்கள் என்று சொல்ல வருகிறீர்கள். அப்படித்தானே?”

“ஆமாம். அதுவேதான்!”

“கவனமா இருந்துக்கிறேன்.”

டாக்டர் சுகாசினி கட்டிலில் வந்து படுத்துக் கொண்டாள்.

கடிகாரத்தின் ‘டிக் டிக் டிக், சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. வேறு எந்தவிதமான சத்தமும் கேட்கவில்லை.

அலெக்ஸின் தற்போதைய நிலையை உணர்ந்த அவரின் நண்பர்கள் யாராவது தன்னைத் தேடி வரலாம் அந்த உணர்வு இல்லாவிட்டால் தாவூத் இப்படி எச்சரித்திருக்க மாட்டார்.

சுகாசினி, தாவூத்தின் யோசனை, முன்எச்சரிக்கை போன்றவற்றை எண்ணி வியப்பு அடைந்தாள்.

சற்று நேரத்தில் டெலிபோன் மணி ஒலித்தது. சுகாசினி படுக்கையிலிருந்து எழுந்து ரிசீவரை எடுத்தாள்.

“ஹலோ... யார் வேண்டும் உங்களுக்கு?” சுகாசினி கேட்டாள்.

‘‘நான் சர்க்கஸ் கம்பெனி மானேஜர் தாஸ் பேசுகிறேன்”எதிர்முனை பதிலளித்தது.

“என்ன செய்தி?”

‘‘சற்று நேரத்துக்கு முன்னால் தாவூத்தைச் சுட்டு விட்டார்கள்.”

"கடவுளே... அப்படி ஒருபோதும் நடந்திருக்கக் கூடாது!' அவள் மனதுள் பிரார்த்தனை செய்தாள். அவள் தலை சுற்றுவதுபோல் தோன்றியது.

"ரகசிய இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார். அவரை வெளியே உள்ள மருத்துவமனை எதற்கும் கொண்டுபோக முடியாது. அதனால் உடனடியாக கார் அனுப்புகிறேன். புறப்பட்டு வாருங்கள்."

சுகாசினி குழப்பத்தின் வசப்பட்டாள்.

'என்ன செய்யலாம்?'

மணி பன்னிரண்டரைக்குமேல் ஆகிவிட்டது. இந்த நேரத்தில் யார் வந்தாலும் அவர்களுடன் எப்படிப் போவது?

வரப்போவது யார்?

ஒருவேளை இது தாவூத் குறிப்பிட்டது போல் நாடகமாக இருக்குமோ? தன்னைக் கடத்த முயற்சி செய்கிறார்களோ என்னமோ!

சுகாசினி சட்டென்று தாவூதின் ரகசிய எண்ணை டயல் செய்தாள்.

மறுமுனையில் மணியடிக்கும் சத்தம் கேட்கவில்லை பரபரப்படைந்தவள் மறுபடி மறுபடி முயன்றாள். எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை.

நேரடியாக தாஸுக்கே போன் செய்து பார்த்தால் உண்மையைத் தெரிந்த கொள்ளலாம் என்று நினைத்தால், தாஸின் தொலைபேசி எண் அவளுக்குத் தெரியாது.

அதே சமயம் வெளியே காலிங்பெல் ஒலித்தது. என்ன செய்யலாம்?' என்று யோசித்தவாறாக வரவேற்பு அறையை அடைந்தாள்.

ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது கார் ஒன்று நின்றுகொண்டிருந்தது.

"வெளியே நிற்பது யார்?" ஜன்னலின் கண்ணாடிக் கதவைத் திறந்தபடி கேட்டாள் சுகாசினி.

"தாஸ் அனுப்பி வைத்திருக்கிறார். அவர், காரில் உட்கார்ந்திருக்கிறார். உங்களைக் கையோட கூட்டிவரச் சொன்னார்." வெளியே இருந்தவன் பேசினான்.

"நான் நம்ப முடியாது. தாஸையே நேரடியாக வரச்சொல்லுங்கள்!" சுகாசினி கூறினாள்.

வெளியே இருந்தவன் காரை நெருங்கினான்.

"காரின் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. காரிலிருந்து இறங்கியவன் நேராக ஜன்னலை நெருங்கினான். "நான் தான் தாஸ்." உட்புறமுள்ள சுகாசினியைப் பார்த்தபடியே பேசினான்.

"மிஸ்டர் தாவூதுக்கு என்ன ஆனதென்று சொன்னீர்கள்?"

"சுட்டு விட்டார்கள் என்று சொன்னேனே!'

"எங்கே... அவர் உடம்பில் எந்த இடத்தில் காயம்?"

"தோளில் குண்டு பாய்ந்திருக்கிறது."

சுகாசினி சில விநாடிகள் யோசித்தாள்.

இந்த தாஸை எந்த அளவுக்கு நம்பலாம்? அல்லது இவன்தான் தாஸ் என்பதற்கு என்ன அத்தாட்சி?' இதுவரை தாஸைப்பற்றி அவள் கேள்விப்பட்டிருந்தாளே தவிர, நேரில் பார்த்ததில்லை எனவே அவள் ஒரு தந்திரம் செய்தாள்.

"மிஸ்டர் தாவூதுக்கு அடிபட்டிருப்பதாகத்தானே சொன்னீர்கள். அவரை சீக்கிரமாக உள்ளே எடுத்து வாருங்கள். மருத்துவம் செய்யத் தேவையான பொருட்கள் இங்கேயே இருக்கிறது."

"சரி, உடனே கொண்டு வருகிறேன்!" என்று சொல்லியபடி அங்கிருந்து விருட்டென்று புறப்பட்டான்.

அரைமணி நேரத்துக்குப் பிறகு மறுபடி காலிங்பெல் ஒலித்தது.

சுகாசினி எழுந்தாள்.

# 26

வரவேற்பு அறைக்கு வந்தவள், ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். கேட் அருகில் ஜீப் ஒன்றும், அதைச் சுற்றி சில மனிதர்களும் நின்றிருந்தனர்.

வந்திருப்பவர்கள் தாவூதின் எதிரிகள் என்பதுடன், தன்னைக் கடத்திச் செல்வதுதான் அவர்களின் நோக்கம் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

தன்னைப் பிணையாக வைத்து தாவூதுடன் பேரம் பேசுவதோ, சிறைப்பிடிப்பதோதான் அவர்களது திட்டம் என்பதும் தெரிந்தது.

கதவைத் திறக்காமல் படுக்கை அறைக்குள் நுழைந்து துப்பாக்கியை எடுத்து வந்தாள்.

ஜன்னலருகில் தரையில் முழங்காலிட்டு அமர்ந்து ஜீப்பைக் கவனித்தாள்.

ஜீப்பின் முன்புற டயரைக் குறிவைத்து துப்பாக்கி விசையை அழுத்தினாள். துப்பாக்கி குண்டு வெடித்ததைத் தொடர்ந்து டயரிலிருந்து காற்று வெளியேறும் சத்தம் ஒரு சீறலாகக் கேட்டது.

சற்றும் தாமதிக்காமல் இடது முன்புற டயரையும் குறிபார்த்துச் சுட்டாள். அதுவும் சரியாக வெடித்தது.

இரண்டுமுறை துப்பாக்கிக் குண்டு வெடித்த சத்தத்தைக் கேட்டதும் ஜீப் அருகே நின்றிருந்தவர்கள் பதற்றமடைந்தனர். ஒருவேளை தாவூத் சுகாசினியின் வீட்டுக்குள்தான் இருக்கிறானோ என்றுகூட அவர்கள் சந்தேகப்பட்டனர். மேற்கொண்டும்

தாமதித்தால் துப்பாக்கி குண்டு தங்கள் மீது கூடப் பாயலாம் என்று நினைத்தவர்களாக அங்கிருந்து மறைந்தனர்.

சற்றும் தாமதிக்காமல் சுகாசினி உடனே போலீஸ் கண்ட்ரோல் ரூமுக்கு டயல் செய்தாள்.

ஜீப்புடன் ஒரு கூட்டம் தன்வீட்டுக்கு வெளியே காத்திருப்பதாகவும் உடனே வருமாறும் தகவல் தெரிவித்தாள்.

பதினைந்து நிமிடங்களுக்குள் ஒருவேன் நிறைய போலீஸார் அவள் வீட்டுக்கு முன்வந்து இறங்கினர் அவள் நடந்ததையெல்லாம் விவரித்தாள்.

முன்சக்கரம் இரண்டும் பஞ்சரான ஜீப்பை வேனின் பின்புறம் இணைத்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றனர்.

நடந்த சம்பவங்களை அறிந்த சைமன், ரஷீத் இருவரும் கலவரத்துக்கு உள்ளானார்கள். அது சைமனுடைய ஜீப்.

விபரீதத்தை உணர்ந்த சைமன் அன்று இரவில் தன்னுடைய ஜீப்பை யாரோ கடத்திக் கொண்டு போனதாக ஒரு புகார் கொடுத்தார்.

பொருத்தமான காரணமாகத் தோன்றியதால் போலீஸ் அதையும் பதிவு செய்து கொண்டது.

மறுநாள் மாலை நேரத்தில் டி.எஸ்.பி. ஹமீது சைமனின் பங்களாவுக்கு வந்தார்.

அலெக்ஸைப் பற்றி ஏதாவது விவரம் கிடைக்குமா என்று பார்ப்பதற்காக வந்திருந்தார்.

"தாவூத் இஸ்மாயில்தான் அவரைக் கடத்திக் கொண்டு போயிருக்க வேண்டும்!" சைமன் கோமஸ் கூறினார்.

"நீங்கள் இப்படி நினைக்கக் காரணம் ஏதாவது உண்டா?" ஹமீது கேட்டார்.

"அவர்கள்தான் ஒருவருக்கு ஒருவர் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறார்களே!"

"அப்படியானால் அலெக்ஸ் இப்போது எங்கே இருப்பார்?"

"அது எனக்குத் தெரியாதே!"

"ஒருவேளை உங்கள் நண்பர் ரஷீதின் பங்களாவில் அலெக்ஸ் இருப்பாரோ?"

"அங்கு இல்லை என்பது எனக்கு உறுதியாகத் தெரியும்."

"சரி, எனக்கு வேறொரு விஷயமும் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது." என்று கூறிய ஹமீது மிகவும் இயல்பாக நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

பிறகு, தான் கொண்டு வந்திருந்த சிறிய சூட்கேஸைத் திறந்தார். அதற்குள்ளிருந்த ஃபைல் ஒன்றை எடுத்து சைமனிடம் நீட்டினார்.

சைமன், அந்தஃபைலின் மேற்புறம் எழுதப்பட்டிருந்த வாக்கியங்களைப் பார்த்ததுமே மூச்சடைந்ததைப் போலானார்.

'சர்வதேசக் குற்றவாளிகள் பாகம்-1'

"இதை மட்டும் பார்த்தால் போதாது. இதற்குள் உங்களுக்கு அறிமுகமான நபர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பாருங்கள்." ஹமீது கூறினார்.

சைமன் ஃபைலைத் திறந்தார்.

முதலில் மிகவும் கனம் குறைந்த ஒரு காகிதம் இருந்தது. அதில் எதுவும் எழுதியிருக்கவில்லை. காகிதத்தைப் புரட்டினார். அடுத்த பக்கத்தின் மேற்புறத்தில் வலது ஓரத்தில் புகைப்படம் ஒன்று இருந்தது.

அந்த போட்டோவைப் பார்த்த சைமன் வியப்புடன் டி.எஸ்.பி.ஹமீதைப் பார்த்தார்.

அது அலெக்ஸின் போட்டோ. யூனிஃபார்முடன் அதில் தோற்றமளித்தார். அந்தப் பக்கத்தில் அவரைப் பற்றிய விவரம் மற்றும் குற்றச்சாட்டுகள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

"என்ன நினைக்கிறீங்க இதைப்பத்தி!" ஹமீது கேட்டார்.

"நான் என்ன சொல்ல இருக்கிறது?" சைமன் எதிர்க்கேள்வி கேட்டார்.

'நீங்கள் நிறைய சொல்லமுடியும். தயங்காமல் சொல்லுங்கள்." ஹமீது வற்புறுத்தினார்.

சைமன் கோமஸ் ஒருகணம் தடுமாறினார். என்ன சொல்வதென்று யோசித்தார்.

"சரி, அடுத்த பக்கங்களையும் புரட்டுங்கள்" ஹமீது ஏறத்தாழ மிரட்டுவதுபோல் கூறினார்.

அடுத்த பக்கத்தைத் திருப்பியதும் நேராக வலதுபுற மூலையைப் பார்த்தார். சைமனுக்கு இருந்த பயம் கொஞ்சம் விலகிய மாதிரி தெரிந்தது.

அங்கு தாவூத் இஸ்மாயிலின் படம் இருந்தது.

"இவரையாவது உங்களுக்குத் தெரியுமா?" ஹமீது நிதானத்தை இழக்காமல் கேட்டார்.

"... ... ... ..."

"இவனையாவது தெரியுமா?"

"தெரியாது!"

"சரி படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்!"

"தாவூத் இஸ்மாயில்."- சைமன் எழுத்துக் கூட்டிப் படிப்பதுபோல் இடைவெளிவிட்டு வாசித்தார்.

"இப்பொழுதாவது தெரியுமா!"

"கேள்விப்பட்டிருக்கிறேன்!"

"நேரில் பார்த்ததில்லையா?"

"இல்லை!"

"ஒரு சந்தேகம் இவன் ரஷீதின் எஸ்டேட் பங்களாவுக்கு வந்திருக்கிறானா?" ஹமீது, சைமனின் கண்களை ஊன்றிக் கவனித்தபடி கேட்டார்.

"வந்திருந்ததாகக் கேள்விப்பட்டேன்." சைமன் கூறினார்.

"மிஸ்டர் சைமன் கோமஸ், என்னை உங்களுக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும் பொய் சொல்லலாமா? முதல் பக்கத்தில் நீங்கள் பார்த்த அலெக்ஸ் மாதிரியான ஆளில்லை நான். என்னுடைய வீட்டுக்கு வந்து பாருங்கள். என் அப்பா சம்பாதித்ததும், உத்தியோகத்துக்கு வந்தபிறகு நான் சம்பாதித்ததும் மட்டும்தான் இருக்கிறது. அதாவது நேர்மையாகச் சம்பாதித்த சொத்துக்கள்."

சைமன் தடுமாறினார்.

ஹமீது சொன்னதெல்லாம் உண்மைதான். அவர் நேர்மையான ஒரு போலீஸ் ஆபீஸர். ஒருபோதும் வளைந்து கொடுக்காதவர். குற்றவாளி, அவரது நெருங்கிய உறவினராக இருந்தாலும் கூட மன்னிக்க மாட்டார்.

'டாக்டர் சுகாசினியைத் தெரியுமா உங்களுக்கு?" ஹமீது கேட்டார்.

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

''நீங்கள் கேள்விப்பட்டது ஏராளமாக இருக்கும் போலிருக்கிறதே. நன்றாகப் பொய் சொல்கிறீர்கள். சரி விஷயத்துக்கு வருகிறேன். டாக்டர் சுகாசினியை ரஷீதின் எஸ்டேட் பங்களாவுக்கு கொண்டு போயிருக்கிறீர்கள். அங்கு தாவூத் இஸ்மாயிலை நீங்கள் சந்தித்திருக்கிறீர்கள்."

சைமன் கோமஸ் ஒருகணம் திடுக்கிட்டார். 'தனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் கூர்மையான அறிவுடைய மனிதர் நிறைய விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார். அவர் எவ்வளவுதான் மிரட்டினாலும் கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்கக் கூடாது' என்று சைமன் கோமஸ் தீர்மானித்தார்.

"மிஸ்டர் ஹமீது நீங்கள் சொன்னதெல்லாம் பொய். ஆதாரமில்லாத விஷயங்களை உண்மையென்று சாதிக்க நினைக்கிறீர்கள். நான் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நீங்கள் எனக்கு அறிமுகமானவர் என்பதால்தான் உங்கள் பேச்சை கேட்க உட்கார்ந்தேன். மன்னிக்கணும்!" சைமன் கோமஸ் சொன்னார்.

"நீங்கள் சொன்னதை ஒப்புக் கொள்கிறேன். அடுத்த பக்கத்தைத் திருப்புங்கள்!"

அந்தத் தாளை புரட்டும்போது சைமனின் கைகள் நடுங்கின. அடுத்த பக்கத்தில் ரஷீதின் போட்டோ இருந்தது. சைமன் சற்று ஆறுதலுடன் மூச்சு விட்டார்.

"ரஷீதையும் உங்களுக்குத் தெரியாது என்று சொல்லப்போகிறீர்களா?" ஹமீது கேட்டார்.

"அப்படிச் சொல்லமாட்டேன். இவரை எனக்குத் தெரியும். இவரிடமிருந்து நான் ரப்பர் வாங்கியிருக்கிறேன். அப்போது ரப்பர் ஏஜென்ஸி ஒன்றை நடத்தி வந்தேன்."

"ஒருவேளை இவரையும் தெரியாதென்று மறுத்து விடுவீர்கள் என்று நினைத்தேன், பரவாயில்லை" ஹமீது அவரைப் பார்த்தபடி பேசினார்.

சைமன் கோமஸின் நிலை அப்போதும் திணறலாகத்தான் இருந்தது. ஆனால், மனத்துள் அந்தச் சந்தர்ப்பத்தை எப்படிச் சந்திப்பது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருந்தது.

அடுத்தடுத்த பக்கங்களில் சைமனுக்குக் தெரியாத ஐந்துபேரின் புகைப்படங்கள் இருந்தன.

அந்த ஃபைலில் சைமனின் படமோ, சைமனைப் பற்றிய விவரமோ இல்லாமலிருந்தது. சைமனின் திணறல் இப்போதுதான் சற்று அடங்கியது.

"மிஸ்டர் ஹமீது, குளிர்ச்சியாக ஏதாவது சாப்பிடுகிறீர்களா? மாம்பழச்சாறு எடுத்துவரச் சொல்லட்டுமா? நீங்கள் வேறு எதுவும் சாப்பிட மாட்டீர்களே" மனதின் பாரம் குறைந்தவராக சைமன் பேசினார்.

"வேண்டாம். இப்போது எதுவும் வேண்டாம். அப்படியானால் அலெக்ஸைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது இல்லையா?" ஹமீது திரும்பவும் ஒரு தடவை கேட்டார்.

"தெரியாது. அதுதான் உண்மை."

"அவரைக் காப்பாற்ற விரும்புகிறீர்களா?"

"ஆமாம்."

"எதற்காக?"

"எங்களுக்கு இடையே உள்ள நட்புக்காக."

"அப்படியானா நான் சொல்லித்தர்ற வழியில போங்க. அதுதான் இந்த வழியில..." ஹமீது தனது பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

சைமன் வாங்கிப் பார்த்தார்.

# 27

டி.எஸ்.பி. ஹமீது தந்த காகிதத்தைப் பிரித்துப் பார்த்தார் சைமன். அவர் போக வேண்டிய பாதையைப் படம் வரைந்து விளக்கியிருந்தார். அழகாக வரையப்பட்டிருந்தது மேப்.

முதலில் குறிப்பிடப்பட்டிருந்த இடங்கள் சைமனுக்கு நன்றாகத் தெரிந்த இடங்கள்.

"இதோ இதுதான் பெட்ரோல் பங்க்" ஹமீது படத்தின் ஒரு பகுதியில் பால்பாயிண்ட் பேனாவை வைத்துக் காட்டியபடி

"இந்த பங்க்கில் காரை நிறுத்தி சசி இருக்கிறாரா என்றுகேட்க வேண்டும். லேசான வழுக்கை விழுந்த மனிதர் ஒருவர் வெளியே வருவார். அவரைக் காரில் ஏறச் சொன்னால், மிச்சத்தை அவர் பார்த்துக் கொள்வார்..." ஹமீது விவரித்தார்.

"ஏதாவது சிக்கல் வருமா?" சைமன் கோமஸ் கேட்டார்.

"அதெல்லாம் ஒன்றும் நடக்காது. அங்கே போனால் அலெக்ஸைப் பார்க்கலாம். அவருடன் வந்து விடுங்கள்!"

"மிஸ்டர் ஹமீது, இந்த விஷயத்தில் நீங்கள் எனக்கு உதவ முடியாதா?" சைமன் கேட்டார்.

"இதற்கெல்லாம் நான் உதவமுடியாது. என்னுடைய வேலை சம்பந்தப்பட்டதல்ல இதெல்லாம். எங்களுடைய வேலையைப் பற்றி உங்களுக்குத்தான் தெரியுமே! இதையேகூட நான் சொல்லக் கூடாதுதான். ஆனால், உங்களுக்கு இடையேயுள்ள நட்புக்காக இதைச் செய்கிறேன்... அவ்வளவுதான்!"

"அப்படி இருந்தால் நல்லது. நன்றி, சசி பிரச்சினைக்குரிய ஆளெல்லாம் கிடையாதே!"

"கிடையாது. அப்படி ஏதாவது இருந்தால் நான் சொல்லி அனுப்புவேனா?"

"எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது."

"இன்று இரவு எட்டு மணிக்குமேல்தான் அங்கு போக வேண்டும்."

"அதுவும் தெரியும். பகல் நேரத்தில் போவது அவ்வளவு நல்லதில்லையே. ஆமாம்... தாவூத் இஸ்மாயில்...?"

"அநேகமாக அவன் இப்போது போலீஸாரிடம் சிக்கியிருக்க வேண்டும்."

"அது உறுதியான தகவலா?"

"ஆமாம் உறுதியானதுதான்."

ஹமீது காரில் ஏறிப் புறப்பட்டார்.

எப்படியும் அலெக்ஸ் ஜோன்ஸைக் கண்டுபிடித்தே தீருவதென்று உறுதி பூண்டார். அலெக்ஸுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அது தன்னையும் பாதிக்கும் என்பது சைமனுக்குத் தெரிந்தே இருந்தது.

சரியாக எட்டுமணியானபோது சைமன் புறப்பட்டார்.

கோட்டு பாக்கெட்டின் இரண்டு பைகளிலும் இரண்டு கைத்துப்பாக்கிகளைப் போட்டுக் கொண்டார்.

ஆபத்து ஏற்படுகிறதோ இல்லையோ மிகவும் ஆபத்தான இடத்துக்குப் போகிறோம் என்பதும் அவருக்குப் புரிந்தது.

பங்களாவுக்கு வெளியே வந்தவர் காரை ஸ்டார்ட் செய்தார்.

கார் கேட்டைத் தாண்டியதும் உட்புறமாகப் பூட்டிக் கொண்ட வாட்ச்மேன் தன்னுடைய கூண்டுக்குள் புகுந்து கொண்டான்.

சற்று நேரத்துக்குள் கார் திரும்பி வந்தது.

வாட்ச்மேன் கேட்டைத் திறந்தான்.

கார் போர்டிகோவில் வந்து நின்றது.

காரிலிருந்து இறங்கியது தாவூத் இஸ்மாயில்தான். காரின் பின் ஸீட்டில் இரண்டு கைகளையும் பின்புறம் கட்டி, வாயில் துணி செருகிய நிலையில் சைமன் படுத்திருந்தார்.

"இறங்குங்கள்!" கதவைத் திறந்த தாவூத் சொன்னான்.

சைமன் காரிலிருந்து இறங்கினார்.

வாட்ச்மேன் இதையெல்லாம் கவனித்ததாகத் தெரியவில்லை. கதவைத் திறந்து விடுவதும் பூட்டுவதும்தான் தன்னுடைய வேலையென்று மறுபடி கூண்டுக்குள் போய்ப் புகுந்துகொண்டான். கூண்டிலிருந்து வெளிப்பக்கமாக பீடிப்புகை வெளிவந்து கொண்டிருந்தது.

சைமன் கோமஸ், தாவூத் இஸ்மாயிலின் முன்னால் நடந்து கொண்டிருந்தார்.

தாவூத் அந்த வீட்டுக்கதவைத் தள்ளித் திறந்தான்.

சைமனின் பிரத்தியேக அறைக்கு அவரை அழைத்து வந்தான் தாவூத்.

"உங்களை நான் மிகவும் சுலபமாக மடக்கி விட்டேன் இல்லையா? தாவூத் கேட்டான்.

சைமன் மவுனமாகவே உட்கார்ந்திருந்தார்.

"டி.எஸ்.பி. ஹமீது இங்கே வரும்போது நான் வெளியிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அவர் புறப்பட்டுப் போனதும் நானும் கிளம்பி விட்டேன்." தாவூத் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி சைமனுக்கு எதிரில் உட்கார்ந்தான்.

"இன்றிரவு இந்த பங்களாவுக்கு வர வேண்டுமென்று நான் எற்கெனவே தீர்மானித்திருந்தேன். அப்படித்தான் நான் இங்கு ஏழேமுக்காலுக்கு வந்து சேர்ந்தேன். வாட்ச்மேன் என்னைப் பார்த்து விடக்கூடாது என்பதற்காக நான் டிக்கியில் ஏறி உட்கார்ந்து கொண்டேன்" சைமனை நெருங்கிய தாவூத், அவரது கோட்டுப் பைகளில் இருந்த இரண்டு துப்பாக்கிகளையும் வெளியே எடுத்தான்.

'ஹலோ... உங்களுக்கு என்ன வேண்டும்?" சைமன் பொறுமை இழந்தவராகக் கேட்டார்.

"பரவாயில்லை; சீக்கிரமாவே விஷயத்துக்கு வந்து விடுகிறீர்கள். உங்களது சேஃப்டி லாக்கரின் சாவி மட்டும் போதும்!"

"எதுக்காக? நான் உங்களது பொருள் எதையும் எடுக்கவில்லையே?"

"எடுக்கவில்லை. இது எடுக்க முற்பட்டதற்கான தண்டனை. டாக்டர் சுகாசினியின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த நீங்கள் முயற்சி செய்தீர்கள் இல்லையா? அதற்கான ஒரு சிறு

தண்டனை. ஒரு பெண்ணின் மானத்துக்கு இதைவிட அதிகமாக விலை கொடுக்கலாம் என்பது நம் இருவருக்குமே தெரியும். இருந்தாலும் ஐந்து லட்சம் நீங்கள் அபராதம் செலுத்தலாம்."

சைமன் தவிப்புடன் பார்த்தார்.

"இதைப்பற்றி அதிகமாக யோசிக்க வேண்டியதில்லை. நான் தேவைப்படுகிறதை நீங்க தரலேன்னா, என் குணமே மாறிவிடும். உங்களுக்கும் அது தெரியுமில்லையா?"- தாவூத் இஸ்மாயில், தன் துப்பாக்கியின் முனையை சைமனின் வாய்க்கு அருகே கொண்டு சென்றபடி கூறினான். அதே நேரம் அவன் இரண்டு கால்களும் அவரின்கால்களை மிதித்துக்கொண்டிருந்தன.

சைமனால் அந்த வேதனையைத் தாங்க முடியவில்லை.

"சாவி எங்கே இருக்கிறது என்று சொன்னால் மட்டும் போதும்!" தாவூத் சற்றுப் பின்னுக்கு நகர்ந்தான்.

"அதோ... அங்கே... பொம்மைக்கு உள்ளே!" சைமன் கையால் சுட்டிக்காட்டிப் பேசினார்.

தொப்பை வயிறுடன் இருந்த பொம்மையை நெருங்கி, அதன் தலையைத் திருகித் திறந்து அதிலிருந்து சாவிக்கொத்தை வெளியே எடுத்தான்.

அந்த அறையிலிருந்த பெரிய இரும்பு பீரோவை தாவூத் திறந்தான்.

அவன் கண்கள் ஒரு விநாடி பளபளப்பான ஒளியால் கூசின. உட்புறம் தங்கக் கட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மற்றொரு மூலையில் பழங்கால நகைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

கடவுள் வடிவம் கொண்ட தங்கச் சிலைகள் வேறொரு அடுக்கில்.

கோயில்களிலிருந்து காணாமல் போயிருந்த ஐம்பொன் சிலைகள் சில, அடித்தட்டில் கிடந்தன.

தாவூத் பீரோவின் உட்புறமிருந்த ரகசிய அறையைத் திறந்தான். இதுவரை பார்த்ததைவிட ஆச்சரியம் ஏற்படுத்தும் காட்சி அதற்குள் தென்பட்டது.

வைரம் பதித்த தங்க நகைகள் அதற்குள் இருந்தன. ஏதோ அரச வம்சத்தின் நகைகள் போலிருந்தன.

"நீங்கள் ரொம்பவும் கெட்டிக்காரர்தான். நான் வெறும் கடத்தல்காரன் மட்டும்தான். நீங்கள் கடத்தல்காரர் மட்டுமல்ல, பெரிய கொள்ளைக்காரரும்கூட" தாவூத், சைமன் கோமஸைப் பார்த்தபடி பேசினான்.

சைமன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர வேறு எதுவும் பேசவில்லை.

"இதையெல்லாம் நீங்கள் தனியாகவா அனுபவிக்கப் போகிறீர்கள்?" தாவூத் கேட்டான்.

சைமன் திடுக்கிட்டவராக தாவூத்தைப் பார்த்தார். ஒரு வேளை தாவூத் அதிலிருந்து எதையாவது எடுத்துப் போவானோ என்று பயந்தார்.

'அப்படி அவன் கொண்டு போகாமல் இருக்க வேண்டுமென்றால் சட்டென்று அதற்கு ஏதாவது ஓர் உபாயம் கண்டுபிடித்தே ஆகவேண்டும்' சைமனின் சிந்தனை தீவிரமாக வேலை செய்தது.

"தான் உடனே செயல்பட்டாக வேண்டும்.'

"மிஸ்டர் தாவூத் இஸ்மாயில்; நீங்கள் என்னுடைய சேமிப்பை எல்லாம் பார்த்துவிட்டீர்கள். மேற்கொண்டு மறைப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை. நாம் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வோமா?" சைமன் கோமஸ் கேட்டார்.

"ம்... சொல்லுங்கள். என்ன உங்கள் ஒப்பந்தம்? நம்மைப் போன்றவர்கள் இந்த மாதிரி வார்த்தைகளைப் பயன்படுத்துவது உண்டா என்ன?"

"எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போகக்கூடாது!"

"மிஸ்டர் சைமன், நானும் நீங்களும் ஒரே துறையில் இருப்பவர்கள். யார், யாரை வீழ்த்துவது என்று போட்டி மனப்பான்மையுடன் செயல்படுபவர்கள். அதனால் இதையெல்லாம் நான் எடுத்துக்கொண்டு போவதாகத் தீர்மானித்திருக்கிறேன்."

தாவூத், டேபிள் மீது விரித்திருந்த சித்திர வேலைப்பாடு நிறைந்த துணியைச் சட்டென்று உருவினான்.

அதை பீரோவின் கீழே விரித்துவிட்டு நகைகள் மற்றும் தங்கக் கட்டிகளையும் அதில் வாரி வாரிப் போட்டான்.

அதையெல்லாம் பார்க்கப் பார்க்க சைமன் கோமஸின் நெஞ்சே வெடித்துவிடும்போல் ஆனது. 'வருடக்கணக்காக கஷ்டப்பட்டு தான் சேகரித்து வைத்திருப்பது மொத்தமும் தன் கண்முன்னாலேயே நிமிடங்களுக்குள் கரைந்து போகப் போகிறது.'

சைமனின் மனத்தில் என்னவெல்லாமோ யோசனைகள் அலைபாய்ந்தன.

தாவூத் அதையெல்லாம் வாரிப்போட்டு மூட்டையாகக் கட்டிவிட்டான்.

"சரி நான் கிளம்புகிறேன்" தாவூத் அந்த மூட்டையுடன் புறப்பட்டான்.

காரில் ஏறி காரை ஸ்டார்ட் செய்து கேட்டை அடைந்தபோது, வாட்ச்மேன் கேட்டைத் திறந்து விட்டான்.

இரும்பு பீரோவிலிருந்து எடுத்துவந்த நோட்டுக்கட்டுகளில் ஒன்றை எடுத்து வாட்ச்மேனின் முன்னால் எறிந்துவிட்டு காரை வெளியே எடுத்துக்கொண்டு போனான் தாவூத்.

வாட்ச்மேனுக்கு எதுவும் புரியவில்லை. நோட்டுக் கட்டை ஒரு தடவை திருப்பியும் புரட்டியும் பார்த்துவிட்டு பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான்,

ஒருசில நிமிடங்களுக்குள் பின்னால் கைகளைக் கட்டியபடி சைமன் வேகமாக ஓடி வந்தார்.

"அவனை எதற்காக வெளியில் விட்டாய்?" சைமன் வாட்ச்மேனிடம் கேட்டார்.

"யாரு இது... ஐயோ என்னங்க முதலாளி உங்களுக்கு என்ன ஆச்சு?" வாட்ச்மேன் வாயைப் பிளந்தபடி கேட்டான்.

"என் கைக் கட்டுகளை அவிழ்த்து விடாமல் வேடிக்கையா பார்க்கிறாய்?" கோபத்துடன் கத்தினார் சைமன்.

வாட்ச்மேன் உடனே கைக் கட்டுகளை அவிழ்த்து விட்டான்.

சைமன் கோமஸ் அவசரமாக வாட்ச்மேனின் கூண்டுக்குள் இருந்த டெலிபோனை எடுத்து போலீஸ் ஸ்டேஷன் நம்பரை டயல் செய்தார்.

தன்னுடைய வீட்டுக்குள் புகுந்து தாவூத் இஸ்மாயில் மொத்தப் பணத்தையும் கொள்ளையடித்துப் போனதாகத் தெரிவித்தார். அத்தனையையும் தன்னுடைய காரிலேயே போட்டு காரையும் எடுத்துப் போய்விட்டதாக தாவூத் மீது குற்றம் சாட்டினார். கார் போன திசையையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

அப்போது ஸ்டேஷனில் டுட்டியிலிருந்த எஸ்.ஐ.விக்கிரமன் நாயர் உடனடியாக ஒயர்லெஸ்ஸில் நகரின் எல்லாப் பகுதிகளுக்கும் தகவல் அனுப்பினார். அத்துடன் ஒரு வேன் நிறைய துப்பாக்கி ஏந்திய போலீஸாரை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து புறப்படவும் செய்தார்.

"இந்த தடவை அவன் என்னிடமிருந்து தப்பிக்கவே முடியாது?"- விக்கிரமன் நாயர் ஆவேசத்துடன் சவால் விடுபவரைப்போல் பேசினார்.

# 28

நகர் முழுவதையும் போலீஸார் சல்லடை போட்டுச் சலித்த பிறகும் தாவூத் இஸ்மாயிலை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு மாந்திரீகனைப்போல் அவன் மறைந்து விட்டிருந்தான்.

சைமன் பைத்தியம் பிடித்த நிலைக்கு வந்தார்.

மறுநாள் இரவு எட்டுமணி சுமாருக்கு டி.எஸ்.பி. ஹமீது சைமனின் பங்களாவுக்கு வந்தார்.

தாவூத் இஸ்மாயிலின் ரகசியமான பங்களாவுக்குச் செல்லும் வழியை விளக்கும் மேப் ஒன்றை அவர் சைமனிடம் கொடுத்தார். ஏற்கெனவே அவர் தந்தது காணாமற்போனதில் சைமன் மிகவும் தவித்துக்கொண்டிருந்த வேளையில்தான் மறுபடி அவரது கைக்கு மேப் வந்தது.

சைமன் அதை மிகவும் கவனத்துடன் பார்த்தார்.

அந்தப் பாதை முடிவடையும் இடத்தில் ஓட்டல் ஒன்று இருப்பதாகக் குறிக்கப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பது மிகச்சிறிய ஒரு ஓட்டல்தான் என்று ஹமீது கூறவும் செய்தார்.

"அங்கிருந்து தென்புறமாகப் போனால் அலெக்ஸ் ஜோன்ஸ் தற்போது உள்ள கட்டடத்தை அடையலாம். இந்தத் தடவை உங்களுக்கு வழிகாட்ட யாரும் இருக்கமாட்டார்கள். இது வேறொரு வழி!" ஹமீது விளக்கத் தவறவில்லை.

"நீங்கள் சரியான விலாசத்துக்குப் போய்ச் சேர்ந்தால் அலெக்ஸையும் கண்டிப்பாக அழைத்துவர வேண்டும். நான் எதற்காக உங்களிடம் இவ்வளவு விளக்கமாக இதையெல்லாம்

சொல்கிறேன் என்றுகூட உங்களுக்குச் சந்தேகம் ஏற்படலாம். உண்மைதானே?" ஹமீது கேட்டார்.

அப்படியொரு சந்கேம் சைமனுக்கு ஏற்பட்டதும் உண்மைதான். 'எதற்காக டி.எஸ்.பி. ஹமீது தன்னிடம் இவ்வளவு விவரங்களைச் சொல்கிறார்? இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிற அவரே நேரடியாகப் போய் அலெக்ஸை விடுதலை செய்து கொண்டுவர முடியாதா என்ன? தன்னிடம் எதற்காக இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறார்?'

"உண்மையில் இதே கேள்வியை நான் உங்களிடம் கேட்க வேண்டுமென்று இருந்தேன்."- சைமன் சொன்னார்.

"நான் அதற்கு விளக்கம் சொல்கிறேன். அலெக்ஸ் தற்போது ஒரு சிறிய விபத்தில் அகப்பட்டிருக்கிறார். யாரோ அவரை துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்கள். தாவூத் இஸ்மாயில் என்றும் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் எவ்வளவுதான் ரகசியமாகப் போனாலும் வெளியுலகத்துக்கு விஷயம் தெரிந்துவிடும். அதன் பிறகு என்ன நடக்கும் என்பது உங்களுக்கே தெரியும். அதனால்தான்!"

அந்த விளக்கம் நியாயமானதாகத் தோன்றியது சைமனுக்கு.

தான் அங்கே போவதாக சைமன் ஒப்புக் கொண்டார்.

இரவு பத்து மணிக்குப் பிறகு சைமன் தன்னுடைய மற்றொரு காரை எடுத்துக்கொண்டு மேப்பில் இருந்த பாதையில் பயணம் செய்தார்.

கடைசியில் அந்தச் சிறிய ஓட்டலை அடைந்தார்.

அந்த நேரத்தில் ஓட்டலில் யாருமே இல்லை.

சைமன் வலதுபுறமாக காரைத் திருப்பினார். ஒரு கார் எச்சரிக்கையுடன் கடக்கும் அளவுக்குத்தான் வழி இருந்தது. அந்த வழி முடிவடைந்த இடம் ஒரு பாழடைந்த கேட்டின் முன்புறம்.

காரின் ஹெட்லைட் வெளிச்சத்தில் கேட்டின் மறுபுறம், சற்றுத் தொலைவிலேயே பழைய கட்டடம் ஒன்று தென்பட்டது.

கேட்டுக்குள் காரைச் செலுத்தினார்.

கட்டடத்தின் முன்னால் கார் நின்றது.

கடிகாரத்தைப் பார்த்தார் சைமன். மணி பன்னிரண்டு தாண்டிவிட்டிருந்தது. காரிலிருந்து இறங்கியவர் முன்புறம் தென்பட்ட கதவைத் தட்டினார்.

கதவு திறக்கப்பட்டது. அதேநேரம் உட்புறம் விளக்கு எரியவும் செய்தது.

மிகவும் குறைந்த சத்தத்துடன் ஜெனரேட்டர் ஒன்று இயங்குவதும் கேட்டது. அதனால் தான் வந்திருக்கும் இடத்தில் மின்சார தொடர்பு இல்லை என்பது புரிந்தது. அதேநேரம் தான் வந்திருப்பது யாருடையதோ ரகசியமான இருப்பிடம் என்பதும் அவருக்குப் புரிந்தது.

தனக்கு முன்னால் நிற்கும் மனிதரை சைமன் ஊன்றிக் கவனித்தார். அது வேறு யாருமல்ல; சாட்சாத் தாவூத் இஸ்மாயில்தான்.

"வெல்கம் டு மிஸ்டர் சைமன் கோமஸ். நான் உங்களைத்தான் எதிர்பார்த்திருந்தேன்." தாவூத் தன் ஆள்காட்டிவிரலில் ரிவால்வரைச் சுழற்றியபடி வரவேற்றான்.

தன் வீட்டுக்கு வந்து தனது மொத்தச் சொத்தையும் கொள்ளையடித்த தாவூத் திரும்பவும் தனக்கு முன்னால் நின்றுகொண்டிருக்கிறான்.

சைமனுக்கு சட்டென்று எதுவும் புரியவில்லை. தான் வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பது அதன் பிறகுதான் புரிந்தது. டி.எஸ்.பி.ஹமீது தன்னை ஏமாற்றிவிட்டாரா?

அவர் எதற்காக இப்படிச் செய்யவேண்டும்? எதுவுமே

"ம்... வாருங்கள்." தாவூத் உட்புறமாக வருமாறு அழைத்தான்.

'இவ்வளவு தூரம் வந்த பிறகு இவன் சொல்வதற்குக் கீழ்ப்படியாமல் வேறுவழியில்லை!' என்று மனத்துள் தீர்மானித்தவராக சைமன் கோமஸ் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தார்.

சட்டென்று பாய்ந்த தாவூத் அவரின் இடது கையைப் பிடித்து இழுத்து உற்புறமாக வீசியெறிந்தான். சைமன் சற்றுத் தொலைவில் இருந்த சோபாவில் உட்கார வைத்ததுபோல் கச்சிதமாக விழுந்து உட்கார்ந்தார்.

"அதே நேரம் வில்லியம் பிளெய்க் அந்த அறைக்குள் வந்தார்.

"என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா?" பிளெய்க் கேட்டார்.

சைமன் வியப்பு நிரம்பிய கண்களுடன் அவரைப் பார்த்தார்.

'யார் இந்த வெள்ளைக்காரன்?'

"என் பெயர் வில்லியம் பிளெய்க். இதோ இந்த ஃபைலைப் பாருங்கள்." பிளெய்க் தன் கைவசமிருந்த ஃபைலை சைமனிடம் தந்தார்.

புகழ்பெற்ற குற்றவாளிகள் மற்றும் போதை மருந்து கடத்துபவர்களின் பட்டியலும், போட்டோக்களும் நிறைந்ததுமான ஃபைல் அது.

சைமன் அதன் பக்கங்களை ஒவ்வொன்றாகப் புரட்டினார்.

முதலில் இருந்தது சைமனின் படம்தான். அடுத்து அலெக்ஸின் படம். பிறகு ரஷீத்.

"உங்களை இங்கேயே பார்க்க முடிந்ததில் மகிழ்ச்சி. நான் உங்களைத் தேடி வந்திருந்தால் என் உயிருக்கு உலை வைத்திருப்பீர்கள்." வில்லியம் பிளெய்க் சிரித்தபடி பேசினார்.

சைமன் அமைதியாக இருந்தார்.

"உங்கள் நண்பரைப் பார்க்க விரும்புகிறீர்கா?" பிளெய்க் கேட்டார்.

சைமன் எதுவும் பதில் சொல்லவில்லை.

"வாருங்கள் காட்டுகிறேன்." பிளெய்க், சைமனை மற்றொரு அறைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு பாண்டேஜ் கட்டுடன் அலெக்ஸ் படுத்திருந்தார்.

"இனிமேல் நீங்கள் ரெண்டு பேரும் இந்த அறையிலேயே கிடக்கலாம்." பிளெய்க் கூறினார்

இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று சைமனுக்கு விளங்கவில்லை.

"அதோ பக்கத்தில் இருக்கும் கட்டில் உங்களுக்குத்தான் போடப்பட்டிருக்கிறது" சட்டென்று அறைக்குள் வந்த தாவூத் கூறினான்.

இருவரும் வெளியே போனதும் கதவு வெளிப்புறமாகத் தாழிடப்பட்டது.

"என்ன இதெல்லாம்?" சைமன், அலெக்ஸிடம் கேட்டார்.

"நானும் உங்களை மாதிரித்தான். எனக்கும் ஒன்றும் புரியவில்லை. நாம் இப்போது இவர்களின் கஸ்டடியில் இருக்கிறோம். இங்கிருந்து உடனடியாக நாம் வெளியேறா விட்டால் பாவிகள் நம்மை உயிருடன் விட்டு வைக்கமாட்டார்கள்!" அலெக்ஸ் விரக்தி நிறைந்த குரலில் பேசினார்.

சைமன் தன்னுடைய பாக்கெட்டில் கையை நுழைத்தார். சுருட்டும், சிகரெட் லைட்டரும் இருந்தன நல்லவேளையாக!

'ஒரு சுருட்டைப் பற்ற வைப்போம். ஏதாவது ஒரு வழி புலப்படாமலா போகும்?'- என்று நினைத்தவராக ஒன்றை எடுத்துப்பற்ற வைத்தார்.

"மிஸ்டர் சைமன். நீங்க வந்த மாதிரியே கையை வீசிக் கொண்டா போகப் போகிறீர்கள்? நான் ஒருவன். இங்கே உயிருக்குப் போராடுவது உங்களுக்குத் தெரியவில்லையா?" அலெக்ஸ் பரிதாபமாகக் கேட்டார்.

"வருவதற்கு முன் தெரியவில்லை. இப்போது புரிந்துவிட்டது. அதற்கும் நான் ஒரு வழி வைத்திருக்கிறேன்"

சைமன் தன் இடுப்பில் கட்டியிருந்த டியூப் ஒன்றைக் அவிழ்த்தார்.

அதற்குள் நான்கு வெடிகுண்டுகள் இருந்தன. ஒவ்வொன்றையும் இடத்தைக் குறிபார்த்து எறிய வேண்டியதுதான். கையெறி குண்டுகள்.

"பார்த்தீங்களா, ஒன்று இந்த இரண்டு பேரையும் தீர்த்துக்கட்டி விடுவேன். இல்லாவிட்டால் இதைக் காட்டி மிரட்டியே இவர்களிடமிருந்து தப்பிக்க வேண்டியதுதான்" சைமன் கூறினார்.

"எனக்கென்னமோ இதெல்லாம் பிரயோஜனப்படுமென்று தோன்றவில்லை. தாவூத் மோசமானவன். அதனால் வஞ்சகமாக ஏதாவது செய்தால்தான் அவனைக் கொல்ல முடியும்."

"சற்றுப் பொறுங்கள்!" சைமன் சைகை காட்டியபடி அலெக்ஸை நெருங்கினார்.

இருவரும் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு படுத்திருந்தனர்.

மணி இரண்டுக்கு மேல் ஆகியிருந்தது.

அப்போது வெளியே கார் ஒன்று ஸ்டார்ட் ஆகிப் புறப்படும் சத்தம் கேட்டது. அவர்கள் போய்விட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது!" அலெக்ஸ் கட்டிலிலிருந்து மெதுவாக எழுந்தார்.

சுற்றுமுற்றும் பார்த்தார். பின்புறம் ஜன்னல் ஒன்று தெரிந்தது. கதவு மரத்தாலானதுதான். திறக்க முயற்சி செய்தார். ஆனால், முடியவில்லை.

"கதவைத் தட்டிப் பார்க்கலாம்" சைமன் எழுந்து கதவை வலுவுடன் தட்டினார்.

யாரும் வருவதாகத் தெரியவில்லை.

"இங்கே யாரும் இல்லையென்று தோன்றுகிறது. இதுதான் நல்ல சந்தர்ப்பம்." அலெக்ஸ் கூறினார்.

அதே நேரம் கதவைத் திறந்து கொண்டு ஒருவன் உள்ளே வந்தான்.

சைமன் சட்டென்று அவன் மீது பாய்ந்து பிடித்தார். எப்படியாவது தப்பிக்கவேண்டும் என்கிற வெறியிலிருந்த உணர்வில் அலெக்ஸும் அவனை நெருங்கினார்.

உள்ளே வந்த மனிதனின் தலையில் ஓங்கி அடித்தார். வந்தவன் சத்தம் போடாமல் தரையில் சுருண்டுவிழுந்தான்.

வந்தவன்தான் அந்தக் கட்டடத்தின் காவல்காரன். அவனை அறைக்குள் அப்படியே போட்டுவிட்டு இருவரும் அறையிலிருந்து வெளியேறினர்.

சைமன் ஓட்டி வந்த கார் அங்கு இல்லை. அதற்குப் பதிலாக அங்கு ஒரு மோட்டார் பைக் இருந்தது சைமன் ஸ்டார்ட் செய்தார்.

அலெக்ஸ் ஓடிவந்து அதில் ஏறிக் கொண்டார். டாக்டர் சுகாசினியின் வீட்டுக்கு முன்னால் வந்தபோது சைமன் பைக்கை நிறுத்தினார்.

"எதற்காக இங்கே நிறுத்துகிறீர்கள்?" அலெக்ஸ் கேட்டார்.

"இவளைக் கடத்திக் கொண்டுபோக வேண்டியதுதான். கேட்டுக்குள் அவளுடைய கார் மட்டும்தான் கிடக்கிறது. வேறு யாரும் இங்கு இல்லையென்று தெரிகிறது."

இருவரும் கேட்டை கடந்தனர்.

சைமன் வரவேற்பு மணியை அழுத்தினார்.

"யாரது?" உள்ளிருந்து சுகாசினி கேட்டாள்.

"தாவூத் இஸ்மாயில்!" சைமன் பதில் குரல் கொடுத்தார்.

தான் வரப்போவதாக தாவூத் சற்று நேரத்துக்கு முன்புதான்போன் செய்திருந்தான். எனவே, சந்தேகம் எதுவுமின்றி அவள் கதவைத் திறந்தாள்.

சட்டென்று பாய்ந்த சைமன் அவளைப் பிடித்துக் கொண்டார். அவள் கையைப் பின்புறமாக மடக்கி அவளை வீட்டுக்குள் கொண்டு போனார். அவளது கார் சாவியைத் தேடி எடுக்கச் செய்து அதே நிலையிலேயே அவளை காருக்கு அழைத்துவந்தனர்.

தாவூத் இஸ்மாயிலின் மோட்டார் பைக்கை அங்கேயே விட்டுவிட்டனர்.

மூவரும் ஏறியதும் கார் அங்கிருந்து புறப்பட்டது.

"இப்போது உன்னைக் கடத்திக் கொண்டு போனது தாவூத் இஸ்மாயில்தான் என்று யாரும் சந்தேகப்படமாட்டார்கள்" அலெக்ஸ் பெருமிதம் நிறைந்த குரலில் பேசினார்.

# 29

அலெக்ஸும், சைமனும் சுகாசினியைக் கடத்திக் கொண்டுபோகும் சந்தர்ப்பத்தில் தாவூத் இஸ்மாயில் ரஷீதின் எஸ்டேட் பங்களாவில் இருந்தான்.

அவனுடன் வில்லியம் பிளெய்க்கும் இருந்தார்.

ரஷீதை மிவும் புத்திசாலித்தனமாக அணுகியிருந்தனர் இருவரும். கடைசியில் ரஷீதைத் தங்களின் பிடிக்குள் போட்டுக்கொள்ளவே செய்தனர்.

இரண்டுகோடி ரூபாய் விலைமதிப்புள்ள ஹாஷிஷ் போதை மருந்து தங்களிடம் இருப்பதாகக் கூறி மாறுவேடத்துடன் அவர்கள் பங்களாவுக்குச் சென்றனர்.

மாதிரியையும் காட்டினார்கள்.

எல்லாமே ரஷீதுக்குப் பிடித்துப்போனது.

அந்த வியாபாரத்தில் தனக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதை உணர்ந்து கொண்டதால், ரஷீத் அவர்களுடன் கிளம்பினார். அவர்கள் மொத்தமாக வந்து சேர்ந்த இடம் தாவூத் இஸ்மாயிலின் ரகசியமான இருப்பிடத்துக்குத்தான்.

அங்கு வந்து சேர்ந்த பிறகும் ரஷீதுக்கு தான் இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது புரியவில்லை.

அலெக்ஸும், சைமனும் தப்பித்து விட்டார்கள் என்பதை உணர்ந்ததும் தாவூத் மிகவும் ஏமாற்றமடைந்தான்.

ஒவ்வொருவராக மொத்தப் பேரையும் அங்கு ஒன்று சேர்ப்பதுடன் தாவூதின் திட்டம். பிறகு அவர்களது மொத்தமான பொருட்களையும் மூட்டை கட்டிக்கொண்டு இடம் பெயர்வது அவன் திட்டம். அதற்கு உதவும் ஒரு மனிதனாகவே அவன் வில்லியம் பிளெய்க்கைக் கருதினான்.

உண்மையில் பிளெய்க்கின் மனவோட்டம் என்ன என்பது தாவூதுக்குத் தெரியவில்லை.

"இங்கே இருந்தவர்கள் எங்கே?" பிளெய்க் கேட்டார்

"தப்பித்து விட்டார்கள்!" தாவூத் ஏமாற்றத்துடன் பதிலளித்தான்.

"மேற்கொண்டு நாம் என்ன செய்வது?" பிளெய்க் வருத்தப்பட்டார்.

"கவலைப்படாதிங்க. நான் விசாரிக்கிறேன்."

பக்கத்து அறையில் ரஷீத் மதுவருந்திக் கொண்டு இருந்தார். அந்தப் பாழடைந்த பழைய கட்டடத்தை வெளிப்புறம் பார்த்தபோதே, இப்படிப்பட்ட வியாபாரத்துக்கு இது உகந்த இடம்தான் என்பது புரிந்து. எனவே, ரஷீதுக்கு எந்த விதமான சந்தேகமும் ஏற்படவில்லை.

ரஷீதின் மனம் தன்னுடைய லாபத்தை எப்படி அதிகப்படுத்தலாம் என்பதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது.

அப்போது நள்ளிரவு ஒரு மணிக்குமேல் ஆகியிருந்தது.

தொலைபேசி மணியடித்தது.

தாவூத் ஒருகணம் யோசித்தான். தனக்கு மிகவும் நெருக்கமானவர்களுக்கு மட்டுமே இந்தத் தொலைபேசி எண் தெரியும். ஆனால், இந்த நேரத்தில் போன் செய்வது யாராக இருக்கும் என்று யோசித்தான்.

சுகாசினி இந்த நேரத்தில் போன் செய்ய வாய்ப்பு இல்லை. எனவே, சர்க்கஸ் கம்பெனி மானேஜர் தாஸ்தான் போன் செய்கிறார் என்று நினைத்தவனாக ரிசீவரை எடுத்தான். விபரீதமாக அலெக்ஸின் குரல் கேட்டது எதிர்முனையில்!

"ஹலோ ஜீரோ டிரிபிள் நைன்தானே?" அலெக்ஸின் குரலில் எகத்தாளம் தெரிந்தது.

"ம் ..." தாவூத் உறுமலுடன் பதிலளித்தான்.

"இந்த நம்பர் எனக்கு எப்படிக் கிடைத்தது என்று தெரிந்துகொள்ள வேண்டாமா, இந்தா தெரிந்துகொள்! நீ யாருன்னு சொல்லுடா நாயே!" எதிர்முனையில் அலெக்ஸ் யாரையோ மிரட்டுவது தெரிந்தது.

"நான்தான் தாஸ்!" மறுமுனையில் குரல் கேட்டது.

"தாஸ் என்ன இதெல்லாம்? உங்களை அவர்கள் பிடித்துக்கொண்டார்களா என்ன?" தாவூத் திகைப்புடன்கேட்டான்.

மானேஜர் தாஸ் எதிராளிகளிடம் அகப்பட்டால் தன்னுடைய எல்லா ரகசியங்களும் வெளியாகும் என்று தாவூத் பயந்தான். அதுமட்டுமா, இதுவரை தான் சேர்த்து வைத்திருப்பதையெல்லாம் கவர்ந்துகொண்டு போய்விடுவார்கள். தங்கம், போதை மருந்து, தங்கபிஸ்கெட்டுகள், பணம்... எல்லாமே மாயமாக மறைந்துவிடும். எல்லா ரகசியங்களும் தெரிந்த ஒரு மனிதன் தாஸ் தனது நடவடிக்கைகளைத் திட்டமிடுவதிலும் தாஸுக்குப் பங்கு உண்டு.

'தாஸ் தந்திரசாலி. கூர்மையான அறிவு உடையவர். எனவே எப்படியும் தாஸைக் காப்பாற்ற வேண்டியதுதான். தாவூதையே காப்பாற்றுவது போன்ற முக்கியமான விஷயம் தாஸைக் காப்பாற்றுவது.

தன்னுடைய வலுவான எதிரிகளின் கையில் அகப்பட்டிருக்கும் தாஸை எப்படிக் காப்பாற்றுவது?'

பழிக்குப் பழி! அது பயன்படவில்லையானால்?

ஒருவேளை அதற்காக அவர்கள் அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யலாம்!'

தாவூத், வில்லியம் பிளெய்க்கைப் பார்த்தான்.

"என்ன சொல்கிறீர்கள்?" அவர் கேட்டார்.

"என் நண்பனை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள்."

பிளெய்க் யோசித்தார்.

"அதற்கு என்ன செய்யலாம்?"

அவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

மறுபடி கேள்வி பிறந்தது.

"இத்துடன் தீரவில்லை. இன்னொருவரின் குரலைக் கேட்கிறீர்களா?" போனின் மறுமுனை ஒலித்தது.

"யாரது?" தாவூத் விசாரித்தான்.

"சொல்லுடி... நீயும் இங்கேதான் இருக்கிறேன்னு" அலெக்ஸ் சொன்னபோது ஆள் யார் என்பது புரிந்துவிட்டது தாவூதுக்கு.

அவள் டாக்டர் சுகாசினியாகத்தான் இருக்க வேண்டும்.

"நான்தான் சுகாசினி பேசுகிறேன்."

தாவூதின் சந்தேகம் உறுதியானது.

"பாஸ்டர்ட்"- தாவூத் கோபத்துடன் ரிசீவரை வீசியெறிந்தான்.

"என்ன... என்ன நடக்கிறது?" என்று கேட்டபடி ரஷீத் அங்கு வந்தார்.

"உங்க அப்பன் பேசுறான்!" தாவூத் அவர் மீது சீறிப் பாய்ந்தான். அதற்குள் அவன் தன் பொய்த்தாடியைப் பிய்த்தெறிந்தான்.

ரஷீத்துக்கு அப்போதுதான் உண்மை புரிந்தது.

தாவூத் இஸ்மாயில்!

தன் மிகப்பெரும் எதிரியான தாவூத் இஸ்மாயிலின் பங்களாவுக்குள் வந்து சிக்கிக்கொண்டோம் என்பது புரிந்தவுடன் ரஷீத் ஒருகணம் தடுமாறினார்.

'இங்கு போதை மருந்தும் கிடையாது. வேறு எதுவும் கிடையாது! தன்னை ஏமாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள்' என்பது அப்போதுதான் புரிந்தது.

அன்றொரு நாள் டாக்டர் சுகாசினியைக் கடத்திக் கொண்டு போனதற்காக இப்போது பழி வாங்குகிறார்கள் என்பது புரிந்தது.

"எதற்காக நீங்கள் என்மீது கோபப்படுகிறீர்கள்?" ரஷீத் கேட்டார்.

"எதற்காகவா... அந்தத் துரோகிகள் என்னுடைய ஆட்களைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள். நான் இப்போது உங்கள் விரலை வெட்டி அங்கு அனுப்பப் போகிறேன்."

"எதற்காக இப்படியெல்லாம் செய்யவேண்டும் அவர்களுக்கும் எனக்கும் வியாபார ரீதியான தொடர்பு மட்டும்தான். ஏன் அதை உங்களுடன் வைத்துக்கொள்ளக் கூடாதா என்ன?"

"நீங்கள் சொல்வதும் சரிதான். உங்களுக்குள் எந்தவிதமான ரத்த உறவும் இல்லையே!"

"அது மட்டுமல்ல ஒரு விதத்தில் -ஒரே தொழில் செய்கிறவர்கள் என்ற முறையில் நாமெல்லாம் ஒரே ஜாதியும்கூட."

"ம்..." என்று பதிலாக முனகிய தாவூத் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். பிறகு நிதானமாக பாக்கெட்டிலிருந்து ரிவால்வரை எடுத்தான்.

சுவரில் வலை கட்டியிருந்த சிலந்தியைப் பார்த்துச் சுட்டான். துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட புகை அடங்கியபிறகு வலையின் மையத்தில் இருந்த சிலந்தி இப்போது சுவரோடு ஒட்டிக்கொண்டிருந்தது.

ரஷீத் ஒரு கணம் வியப்படைந்தார்.

இந்த அளவுக்கு ஒரு மனிதனால் துல்லியமாக குறிபார்க்க முடியுமா என்ன? சிலந்தியின் நடுஉடலில் குண்டு பாய்ந்து அது கன்னாபின்னாவென்று சிதறி ஒட்டியிருந்தது.

சந்தேகம் தீராத தாவூத் சுவரை நெருங்கிப் பார்த்தான். 'இல்லை.. நான் தோல்வியடையவில்லை! தாஸையும் சுகாசினியையும் நான் எப்படியும் மீட்டுக்கொண்டு வருவேன்.' தாவூத் மனத்துள் தீர்மானித்தான்.

"மிஸ்டர் ரஷீத், நீங்கள் இங்கேயேதான் தங்கவேண்டும். வெளியேற முயற்சி செய்தால் இவர் உங்களைச் சுட்டுவிடுவார்!" வில்லியம் பிளெய்க்கைச் சுட்டிக் காட்டிய தாவூத் கூறினான். பிறகு ஒரு சிறிய சூட்கேஸை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

சற்றுநேரத்தில் கார் புறப்படும் சத்தம் கேட்டது. கார் ஓட்டும்போது தாவூத் யோசித்துப் பார்த்தான்.

'தாஸும் சுகாசினியும் பெரும்பாலும் சைமனது பங்களாவில்தான் இருக்கவேண்டும்.'

நேராக ஓட்டலுக்கு வந்தவன், ரிசப்ஷனிஸ்டை நெருங்கினான். தாவூதுக்கு வேண்டிய நபர்தான் ரிசப்ஷனில் உட்கார்ந்திருந்தான்.

தாவூத் அங்கிருந்து சைமனின் பங்களாவுக்கு டெலிபோன் செய்தான்.

மறுமுனையில் அலெக்ஸ் ரிசீவரைக் கையில் எடுத்தார்.

"நான்தான் ஜீரோ ட்ரிபிள் நைன் பேசுகிறேன். ஒரு விஷயம் ஞாபகமிருக்கட்டும். எந்தக் காரணம் கொண்டும் என் ஆட்களுக்கு எந்தவிதமான சேதாரமும் ஏற்படக்கூடாது. மீறி ஏதாவது நடந்தால் ரஷீது மட்டுமல்ல யாரும் மிச்சமிருக்க மாட்டீர்கள்!" எதிர்முனையில் பதிலுக்குக் காத்திருக்காமல் தாவூத் ரிசீவரை வைத்தான்.

"ஹவுஸ் கீப்பர் ரேணு இல்லையா?" தாவூத் கேட்டான்.

"இருக்கிறாள்.... ஓய்வு எடுக்கப் போயிருக்கிறாள். கூப்பிடட்டுமா?" ரிசப்ஷனில் இருந்தவன் கேட்டான்.

"அவசியமான விஷயம், கூப்பிடுங்கள்!"

"இதோ கூப்பிடுகிறேன். அவளுக்கும் இதெல்லாம் ரொம்பவும் பிடித்தமான விஷயங்கள்தான்."

ரிசப்ஷனிஸ்ட் இன்டர்காமில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்ததும், ரேணு விரைவிலேயே வரவேற்பு ஹாலுக்கு வந்தாள்.

நைட் கவுன் அணிந்து, தலைமுடியை அப்படியே வாரியெடுத்து முடிந்திருந்தாள் ரேணு. அந்த நேரத்திலும் அவள் தோற்றம் அழகாக இருந்தது.

இருபத்துநான்கு வயது இருக்கலாம். இங்கு வருவதற்கு முன் விளம்பர மாடலாக வேலை செய்தாள். என்ன

காரணத்தாலோ, அந்தத் தொழிலில் அலுப்பு ஏற்பட்டதால், ஓட்டல் வேலைக்கு வந்து சேர்ந்தாள்.

தாவூத் இரண்டு தடவை அவளை போதை மருந்துக் கடத்தலுக்குப் பயன்படுத்தியிருக்கிறான்.

"ரேணு ஒரு உதவி செய்யவேண்டும். முதலில் உடனடியாக உடை மாற்றிவிட்டு வா. தலை அலங்காரமெல்லாம் வேண்டியதில்லை, ரொம்பத் தூரத்திலிருந்து பயணம் செய்து வருவது மாதிரி தோற்றமளிக்கவேண்டும். இன்னும் சற்று நேரத்தில் ஒரு டிரெயின் வரும். அதிலிருந்துதான் நாம் இருவரும் வருவதாக எதிராளிகள் நினைக்க வேண்டும்" தாவூத் கூறினான்.

அதற்கு ஒப்புக் கொண்ட ரேணு உடனே தன்னுடைய அறைக்குத் திரும்பினாள். சற்று நேரத்தில் புடவைக்கு மாறி, தோளில் ஒரு பயணப் பையையும் மாட்டியிருந்தாள்.

இருவரும் காரில் ஏறிப் புறப்பட்டனர்.

"மிகவும் ஜாக்கிரதையாக நடிக்கவேண்டும். சில சமயம் கொஞ்சம் உடல்வலுவையும் பயன்படுத்த வேண்டிவரலாம்" தாவூத் கார் ஓட்டியபடியே கூறினான்.

கார் ஒரு கேட் முன்னால் நின்றது.

# 30

கார், கேட்டின் அருகில் நிற்கும் சத்தம் கேட்டதும் அலெக்ஸ் ஜோன்ஸின் வீட்டில் விளக்கு எரிந்தது. தன் கணவர்தான் வந்துவிட்டார் என்று நினைத்த அலெக்ஸின் மனைவி வெளிப்புற விளக்கை எரியவிட்டாள். கடந்த சில நாட்களாக அவரைப்பற்றி எந்தவிதமான செய்தியும் இல்லை. எங்கே போனாரோ? இதுவரை ஒரு தகவலும் இல்லை என்பதால் வீட்டுக்கு அருகில் எந்த வாகனம் வந்து நின்றாலும் வெளிப்புற விளக்கை எரிய விட்டு ஜன்னல் வழியாகக் கவனிப்பாள்.

இப்போது வேறு யாரோ ஒரு பெண்ணும் ஆணும் காரிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தனர்.

ஆணைப் பார்த்தால் ஒரு டாக்டர் மாதிரியும் பெண்ணைப் பார்த்தால் ஒரு நர்ஸ் மாதிரியும் தெரிந்தனர்.

வரவேற்பு மணி ஒலிப்பதற்கு முன்பாகவே அலெக்ஸின் மனைவி ஷெர்லி வெளிப்புறக் கதவைத் திறந்தாள்.

"மிஸ்டர் அலெக்ஸ் ஜோன்ஸின் வீடுதானே இது! நீங்கள் அவர் மனைவி என்று நினைக்கிறேன்" தாவூத் பாக்கெட்டிலிருந்து ஸ்டெதாஸ் கோப்பை வெளியே எடுத்தபடியே கேட்டான்.

"ஆமாம் நீங்கள்... அவர் உடம்புக்கு ஏதாவது?" ஷெர்லியின் குரலில் படபடப்புத் தென்பட்டது.

"பயப்படும்படி எதுவுமில்லை. ஆனால், உடனடியாக உங்களைப் பார்க்க விரும்புகிறார்" தாவூத் கூறினான்.

"ஒரு போன் செய்து விலாசம் சொன்னால் நானே வந்திருப்பேனே!" ஷெர்லி கேட்டாள்.

"போன் செய்தால் நீங்கள் வீணாகக் கவலைப்படுவீர்கள் என்றுதான் நாங்கள் நேரில் வந்திருக்கிறோம். உங்கள் துணைக்காகத்தான் நர்ஸை அழைத்து வந்திருக்கிறேன்" தாவூத் தன்னுடன் வந்திருக்கும் ரேணுவைப் பார்த்தபடி பேசினான்.

தாவூதின் நடவடிக்கையில் ஷெர்லிக்கு எந்தவிதமான சந்தேகமும் தோன்றவில்லை. ஒரு டாக்டரும், நர்ஸும் வந்து 'கணவர் உங்களைப் பார்க்க விரும்புகிறார்!' என்று சொன்னால் யாராவது சந்தேகப்பட முடியுமா?

"ஒரு நிமிஷம்... இதோ வந்திடுறேன்" ஷெர்லி அவசர அவசரமாக வீட்டுக்குள் போனாள்.

ஹாலில் இருந்த டெலிபோன் மணியடித்தது. தாவூத் துள்ளிப்பாய்ந்து ரிசீவரை எடுத்தான். உடனேயே ரேணுவை அருகில் வரும்படி சைகை செய்தான்.

எதிர்முனையில் அலெக்ஸின் குரல் கேட்டது தாவூதுக்கு விஷயம் புரிந்ததும். பதிலளிக்காமல் ரேணுவைப் பார்த்தான்.

அவள் ரிசீவரை வாங்கி "ராங்க் நம்பர்!" என்று சொல்லிவிட்டு, அதைப் பழைய இடத்தில் பொருத்தினாள்.

டெலிபோன் மணி சத்தம் கேட்டு ஷெர்லி வந்துவிடப் போகிறாளே என்று ரிசீவரையும், ஷெர்லி இருந்த அறையையும் மாறி மாறி பார்த்தான் தாவூத்.

மறுபடியும் டெலிபோன் மணி ஒலித்தது.

தாவூத் ரிசீவரை எடுத்தான்.

"அலெக்ஸ் பேசுறேன்!" இம்முறை தாவூத் குரலை மாற்றி "ராங் நம்பர்!" என்றான்.

அதற்குள் உடையைச் சரிசெய்து கொண்டு வந்த ஷெர்லி, "எனக்கா போன் வந்தது?" என்று கேட்டாள்.

"இல்லை, யாரோ பெட்ரோல் பங்க்தானேன்னு கேட்டாங்க, ரெண்டு தடவையும் ராங்க் நம்பர்னு சொல்லிட்டேன்!" இம்முறை தாவூது ரிசீவரை கிராடிலில் வைக்காமல் டேபிளின் மீது வைத்தான். மறுபடி மணியடிக்கக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் செய்தான்.

அவன் சொன்னதை ஷெர்லி நம்பிவிட்டதாகத் தோன்றியது.

"நான் இதோ வந்துடுறேன். கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கம்மா!" ஷெர்லி உட்புறம் பார்த்தபடி பேசினாள். அவர்கள் மூவரும் வீட்டிலிருந்து வெளியேறும்போது இளம் பெண் ஒருத்தி கதவை மூடி உள்ளே தாழிடும் சத்தம் கேட்டது.

தாவூத் இஸ்மாயில் காரை ஸ்டார்ட் செய்தான் பின்புற ஸீட்டில் ரேணும், ஷெர்லியும் அமர்ந்திருந்தனர்.

"அவருக்கு என்ன ஆச்சு?" ஷெர்லி கேட்டாள்.

"ஒரு பைக் ஆக்சிடெண்ட்!" தாவூத் கூறினான்.

"அவர் பைக்ல போறதில்லையே!"

"உண்மைதான். அவசரமா ஒரு கள்ளக்கடத்தல் கும்பலைத் துரத்திட்டுப் போனார்."

"இதுவரையிலும் அவருக்கு இப்படி ஆனதேயில்லை. ரொம்ப நாளா பைக்ல பயணம் பண்றதும் இல்லை" ஷெர்லி கூறினாள்

கார் விரைந்து கொண்டிருந்தது.

ஷெர்லி வெளிப்புறத்தை வேடிக்கை பார்த்துவிடக்கூடாது என்பதற்காக ரேணு பேச்சுக் கொடுத்துக் கொண்டே வந்தாள்.

கார் ஓரிடத்தில் நின்றது.

"வாருங்கள்!" காரின் கதவைத் திறந்துவிட்ட தாவூத் அழைத்தான்.

இருவரும் காரிலிருந்து இறங்கினர்.

ரேணுவுக்குக்கூட அந்த இடம் பழக்கமற்றதாக இருந்தது.

"என்ன இங்கே வெளிச்சமே இல்லாமல் இருக்கிறது?" ஷெர்லி சுற்றுமுற்றும் பார்த்தபடி கேட்டாள்.

"ஒரு வேளை கரண்ட் போயிருக்கும்!" தாவூத் சமாளித்தான்.

வில்லியம் பிளெய்க் கதவைத் திறந்தார்.

அறைக்குள் விளக்கு எரிந்தது.

"அவர் எங்கே?" ஷெர்லி பரபரப்புடன் கேட்டார்.

"வாருங்கள் அவருடன் பேசலாம்!" தாவூத் டெலிபோனை நெருங்கினான்.

நம்பரை டயல் செய்தான்.

சைமன் கோமஸின் வீட்டு டெலிபோனில் மணியடித்தது. யாரோ எடுத்தார்கள்.

"அலெக்ஸ் இருக்கிறாரா? ரிசீவரை அவரிடம் கொடுங்கள்"- தாவூத் பேசினான்.

அலெக்ஸ் லைனில் வந்தார்.

"மிஸ்டர் அலெக்ஸ்தானே? நான் தாவூத் பேசுறேன் வெச்சுடாதீங்க. உங்க மனைவி உங்ககிட்ட பேச விரும்புறாங்க. தாவூத் ரிசீவரை ஷெர்லியிடம் கொடுத்தான்.

"என்னங்க... உங்களுக்கு எப்படி இருக்கு? எங்கே இருக்குறீங்க" ஒரே மூச்சில் படபடப்புடன் கேட்டாள் ஷெர்லி.

"ஆமாம்... நான்தான் பேசுறேன். இப்ப நீ எங்கேருந்து பேசுறே?" அலெக்ஸ் வியப்புடன் கேட்டார்.

"எந்த இடம்னு தெளிவாச் சொல்ல முடியலை. பக்கத்துல ஒரு டாக்டரும் நர்ஸும் வெள்ளைக்காரரும் இருக்காங்க. ஆமா நீங்க ஆஸ்பத்திரியிலயா இருக்கிறீங்க?"

"இல்லையே... என்ன விஷயம்?"

தாவூத், ரிசீவரை ஷெர்லியிடமிருந்து வாங்கிக் கொண்டான்.

தாம் ஏதோ வலையில் விழுந்துவிட்டோம் என்பது அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

அவன் முன்பு சொன்ன பெயரை ஒரு தடவை உதட்டுக்குள் உச்சரித்துப் பார்த்தாள்.

தாவூத் இஸ்மாயில்தான் தன் முன்பாக நின்று கொண்டிருக்கும் டாக்டரா?

ஷெர்லிக்கு ஒன்றும் புரியவில்லை.

"மிஸ்டர் அலெக்ஸ், நான் சொல்லாமலே உங்களுக்கு விஷயம் புரிந்திருக்கும் இந்நேரம். டாக்டர் சுகாசினியின் உடம்பில் ஒரு கீறல் விழுந்தால்கூட... உங்கள் மனைவி... என்னைச் சொல்லாதவனாக்காதீர்கள். அதனால் ரிசீவரை சுகாசினியிடம்

கொடுங்கள்.” தாவூதின் பேச்சு, மிரட்டலும் கட்டளையும் கலந்தது போலிருந்தது.

சற்று நேரத்தில் சுகாசினி பேசினாள்.

“நான்தாங்க சுகாசினி பேசறேன். இதுவரையில எனக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை.”

“ரொம்ப நல்லது. உடனேயே அலெக்ஸ்கிட்டேயிருந்து சைமனோட கார் சாவியை வாங்கிட்டு பத்திரமா வீட்டுக்குப் போய் சேரணும். சேர்ந்தவுடனேயே அங்கிருந்து உடனடியா எனக்கு போன் பண்ணணும்” தாவூத் கூறினான்.

“இதை நீங்களே அவங்ககிட்டப் பேசுறது நல்லது!” சுகாசினி ரிசீவரை அலெக்ஸிடம் கொடுத்தாள்.

தாவூத், அவளிடம் சொன்னதையே அலெக்ஸிடம் விவரித்தான்.

சற்று நேரத்துக்குள் சுகாசினியிடமிருந்து போன் வந்தது. தான் பத்திரமாக வீடுவந்து சேர்ந்ததாக, தாவூத்திடம் தகவல் சொன்னாள்.

சந்தேகம் தீராத தாவூத் அவள் தொலைபேசியை வைத்தவுடன், சுகாசினியின் டெலிபோன் நம்பருக்கு டயல்செய்தான். சுகாசினியே எடுத்துப் பேசியதும் சுகாசினி தனது வீட்டுக்கு வந்துவிட்டது உறுதியானது.

“சரி வாருங்கள் நாம் போகலாம்!” தாவூத் ஷெர்லியிடம் கூறினான்.

“இதெல்லாம் என்ன நாடகம்?” ஷெர்லி சற்றுக் கோபத்துடன் கேட்டாள்.

“டாக்டர் சுகாசினி பேசினதைக் கேட்டீங்க இல்லையா? அந்த டாக்டரை உங்க கணவரும் சைமன்ங்கறவரும் கடத்திட்டுப் போயிட்டாங்க. அதுக்காக ஒரு சின்ன நாடகம் ஆட வேண்டியதாப் போச்சு. மன்னிச்சுடுங்க!” தாவூத் கூறினான்.

தாவூத் இஸ்மாயில் ஷெர்லியை அவளது வீட்டில் கொண்டுபோய் விட்டான். பிறகு அங்கிருந்து நேராக சுகாசினியின் வீட்டுக்குப் போனான்.

“நீங்களும் இங்கேயே இருந்தா ஆபத்து இல்லையா?” சுகாசினி கேட்டாள்.

“எனக்கு அப்படி தோன்றவில்லை” அவள் தோளில் கையைப் பதித்தபடி பேசினாள்.

“ஒரு ஆபத்திலேருந்த தப்பிச்சிருக்கிறே இல்லையா? அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடிடலாம்” அவன், அவள் கண்களை உற்றுப் பார்த்தபடி பேசினான்.

“எப்படிக் கொண்டாடுறதாம்?” அவள் கேட்டாள்.

“நான் சொல்லட்டுமா?” என்று கேட்டவன் அவள் காதுகளில் எதையோ கிசுகிசுத்தான்.

“ச்சே...” அவள், அவன் வாயைப் பொத்தினாள்.

தாவூத் அவளை இருகைகளிலும் ஏந்தி கட்டிலை நோக்கி நடந்தான்.

அதன் பிறகு அவன் கைகள் விரைவாகச் செயல்பட்டன.

“என்னைப்போன்ற ஒரு கள்ளக்கடத்தல்காரனை, ஒரு டாக்டரான சுகாசினிக்கு எப்படிப் பிடித்துப் போனது? நினைத்தாலே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!” தாவூத் சுயநிலைக்கு வந்தவனைப் போல் கேட்டான்.

“இதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது. நான் அதைப் பற்றியெல்லாம் யோசித்ததே இல்லை” அவள் கைகள் அவன் முதுகுப்பகுதியில் அளைந்து கொண்டிருந்தன.

கடிகாரம் மணி பன்னிரண்டு என்பதைக் காட்ட அடித்து ஓய்ந்தது.

கடிகாரம் மணியடித்து ஓய்ந்த அதே நேரத்தில் தொலை பேசி மணியடித்தது.

# 31

'இந்த வேளையில் யாராக இருக்கும்?' தாவூத் யோசித்தான்.

தொலைபேசி தொடர்ந்து மணியடித்துக் கொண்டேயிருந்தது.

போர்வையைக் விலக்கிவிட்டு அவன் கட்டிலிலிருந்து எழுந்தான். சுகாசினி நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். தாவூத் போர்வையை அவள் மீது போர்த்தி விட்டான்.

ரிசீவரை எடுத்தான்.

"டாக்டர் சுகாசினியின் வீடுதானே?" எதிர் முனை கேட்டது.

"ஆமாம்!"

"நான் டி.எஸ்.பி.ஹமீது!"

"சொல்லுங்க சார்!" தாவூத் பதிலளித்தான்.

"தாவூத்தானே?"

"ஆமாம் சார்!"

எதிர்முனையில் போன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

தாவூதுக்குச் சந்தேகம் தோன்றியது.

எதற்காக அவர் கூப்பிட்டிருப்பார்?

ஒருவேளை நான் இங்கே இருக்கின்றேனா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினாரா? நான் இங்கிருக்கிறேன் என்று சொன்னது சரியல்லவென்று தோன்றுகிறது. புலிவாயில் தலை கொடுத்தது மாதிரி ஆகிவிட்டதா என்ன?

இப்போது என்ன செய்யலாம்?

தாவூத் சுகாசினியைப் நெருங்கி, அவளை எழுப்பினான்.

அவள் கண் விழித்து அவனைப் பார்த்தாள்.

“கதவை மூடிக்கோ. இந்தா துப்பாக்கி. யாராவது ஆக்கிரமிக்க நினைச்சாத் தயங்காம முழங்காலுக்குக் கீழே சுட்டுடு. மானத்தையும் உயிரையும் காப்பாத்தணும்னா, பரிதாபம் பார்க்கக் கூடாது!” துப்பாக்கியை அவளிடம் கொடுத்தாள்.

“இந்த நேரத்துல எங்கே போறீங்க?” அவள் கேட்டாள்.

“நான் அதையெல்லாம் இன்னும் தீர்மானிக்கலை. உடனே கிளம்பியாகணும். சீக்கிரமாக திரும்பி வர்றேன்” அவசர அவசரமாக உடைமாற்றிக் கொண்டு கிளம்பினான்.

சூட்கேஸுக்குள் இருந்த துப்பாக்கியை எடுத்து பேண்ட் பாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டான்.

“ஜாக்கிரதை நான் வெளியேறினா உடனே கதவை மூடித்தாழ்ப்பாள் போட்டுக் கொள்ள வேண்டும்.” உடையைச் சரி செய்து கொண்டிருந்த சுகாசினியிடம் கூறினான்.

இருவரும் வரவேற்பு அறைக்கு வந்தனர். சுகாசினி வெளிவாசலைத் திறந்ததும் சட்டென்று உட்புறம் பாய்ந்து ஒருவன் தாவூதைப் பிடித்துத் தள்ளிவிட்டு வரவேற்பு அறையுள் நுழைந்தான்.

எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியால் தாவூத் ஒரு கணம் நிலைதடுமாறினான்.

எனினும் விரைவாகச் சுதாரித்து எழுந்த தாவூத் தன் கையிலிருந்த சூட்கேஸை சோபாவின் மீது எறிந்தவன் தன்னைத் தள்ளிவிட்டவனை நெருங்கி அவன் முழங்காலில் ஓங்கி உதைத்தான்.

வந்தவன் சட்டென்று தரையில் விழுந்தான். விழுந்தவன் விலகிய பேண்ட்டின் அடிப்பகுதியை மேற்புறமாக உயர்த்தினான். காலைச் சுற்றி இறுக்கிக் கட்டப்பட்டிருந்த பெல்ட்டில் ஏராளமான கத்திகள் செருகப்பட்டிருந்தன.

விருட்டென்று கத்திகள் இரண்டை உருவியவன் தாவூதின் மீது குறிவைத்தபடி முன்னேறினான். ஆபத்தை உணர்ந்த தாவூத் சட்டென்று மேற்புறமாகப் பாய்ந்து ஃபேனைப் பிடித்துக் கொண்டான்.

எதிராளி சட்டென்று அந்த ஃபேனின் சுவிட்ச் எங்கு இருக்கிறது என்று பார்த்து அதைத் தட்டிவிட்டான்.

ஃபேன் ஓடத் தொடங்கிய அதே நேரத்தில் தாவூத், வந்தவன் மீது ஒரே பாய்ச்சலாக விழுந்தான். அவன் மல்லாக்க விழுந்தான். நிமிர்ந்த தாவூத் இரண்டு கால்களையும் ஒரே நேரத்தில் ஓங்கி உதைத்ததில் எதிராளியின் இரண்டு கைகளிலும் இருந்த கத்திகள் தூரத்தில் தெறித்து விழுந்தன.

தாவூதின் வலு அதன்பிறகு அதிகரிக்கத் தொடங்கியது.

குதிரைப் பந்தயத்தில் ஓடும் குதிரையையே அனாயாசமாகத் தூக்கி நிறுத்தும் தாவூத் அவனை இரண்டு கைகளாலும் ஒரு சுழற்றுச் சுழற்றி வாசலுக்கு வெளியே தூக்கியெறிந்தான். கேட்டையும் தாண்டி அவன் ரோட்டில் போய் விழுந்தான்.

வெளியே வேறு யாரும் இல்லையென்று தோன்றியது.

அதற்குள் கைத்துப்பாக்கியை எடுத்து வந்த சுகாசினி வாசல் கதவை நெருங்கினாள். தாவூத் கதவைத் தாண்டியதும் உட்புறமாகத் தாழிட்டாள். துப்பாக்கியை ஆயத்தமாக வலது

கையில் பிடித்துக்கொண்டு இடது கையில் சூட்கேஸுடன் கேட்டை கடந்தான் தாவூத்.

ரோட்டை நெருங்கிய அதே விநாடியில் கார் ஒன்று அவனை உரசியபடி பிரேக்கிட்டு நின்றது.

"பின்ஸீட்டில் ஏறிக்கொள். பின்னாலேயே போலீஸ் வருகிறது!" காரை ஓட்டி வந்தவன் மெல்லிய குரலில் பேசினான்.

அந்தச் சந்தர்ப்பத்தில் காரில் யார் இருந்தாலும் ஏறிக்கொள்ளாமல் வேறு வழியில்லை.

கதவைத் திறந்து ஏறிக்கொண்டான். பின்புறத்தில் யாரும் இல்லை. முன்னாலும் டிரைவர் மட்டுமே தெரிந்தான். வேறு யாரும் இல்லாமல் இருந்ததே தாவூதுக்குத் தைரியம் கொடுத்தது.

கார் நகரத் தொடங்கியது.

சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் போவதற்குள் எதிரில் போலீஸ் வேன் ஒன்று வருவதை தாவூத் பார்த்தான்.

டிரைவர் சொன்னது உண்மைதான் என்று புரிந்தது.

"நீங்கள் யார்?" டிரைவரைப் பார்த்துக் கேட்டான் தாவூத்.

"நிஜமாகவே என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டபடி உட்புற விளக்கைப் போட்டுவிட்டுத் திரும்பினார் டிரைவர்.

அவர் டி.எஸ்.பி.ஹமீது!

"சார்... நீங்களா?" தாவூத் வியப்புடன் கேட்டான்.

“நானேதான், தற்சமயம் நீங்கள் உள்ளூர் போலீஸாரின் கைகளில் அகப்படக்கூடாது என்று விரும்புகிறேன். அதனால்தான் காப்பாற்றுகிறேன்” ஹமீது கூறினார்.

“ஏன் சார்?”

“காரணம் இருக்கிறது. ஆனால், அதை நான் இப்போது சொல்ல முடியாது. என் மூலமாக உங்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்று நான் உறுதியளிக்கிறேன். அது போதுமில்லையா?” ஹமீது கேட்டார்.

“அவ்வளவு தயவு போதும் சார். இந்தச் சூழ்நிலையில் போலீஸ்காரங்ககிட்ட அகப்படக்கூடாதுங்கிறதுதான் என்னோட நோக்கமும்”- இயல்புப்படி தன்னுடைய பாக்கெட்டிலிருந்து சிகரெட் பாக்கெட்டை வெளியே எடுத்தவன், என்ன நினைத்தானோ மறுபடியும் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான்.

“பரவாயில்லை... நீங்கள் சிகரெட் புகைக்கலாம். எனக்கு அதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை” ஹமீது கூறினார்.

அவர் வார்த்தைகள், தாவூதிடம் அவர் மீது அவனுக்கிருந்த மதிப்பைப் பன்மடங்கு உயர்த்திவிட்டது. இருப்பினும் தாவூத் சிகரெட்டை எடுக்கவோ, பற்ற வைக்கவோ இல்லை.

“புகைபிடிக்காமல் விட்டதும் நல்லதுதான். எனக்கு இந்தப் புகை அவ்வளவாக ஒத்துக்கொள்ளாது. இருந்தாலும் புகை பிடிப்பவர்களை நான் தடுக்க விரும்புவதில்லை. அதனால்தான் உங்களிடம் புகை பிடிக்கலாம் என்று சொன்னேன்.”

கார் ஓடிக்கொண்டிருந்தது.

அதே நேரம் போலீஸ் வேன் டாக்டர் சுகாசினியின் வீட்டு முன்னால் வந்து நின்றது. அதிலிருந்து அலெக்ஸும் துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்களும் திமுதிமுவென்று இறங்கினர்.

அலெக்ஸ் மிடுக்காக நடந்து அந்த வீட்டின் காலிங் பெல்லை அழுத்தினார்.

சுகாசினி துப்பாக்கியைக் கையில் பிடித்தபடி ஜன்னலருகில் வந்து நின்று பார்த்தாள்.

"கதவைத் திறங்கள்!" அலெக்ஸின் குரல் கட்டளையாக ஒலித்தது.

"எதுக்கு சார்?" சுகாசினி தைரியத்துடன் கேட்டாள்.

"உள்ளே பத்திரமாக ஒளிந்திருக்கிற கள்ளக்கடத்தல்காரர் ஒருவரைப் பிடிக்கவேண்டியிருக்கிறது. அதற்குத்தான்!" அலெக்ஸின் குரலில் அதிகாரத் தொனி தெரிந்தது.

"இந்த வீட்டுக்குள் நீங்கள் குறிப்பிட்ட யாருமில்லை. நான் மட்டும்தான் இருக்கிறேன்."

"நீங்கள் சொல்வது உண்மையாகவேகூட இருக்கலாம். ஆனால், அவர் இங்கிருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. சற்று நேரத்துக்கு முன்னால் போலீஸ்காரர் ஒருவரை இந்த இடத்தில் அவன் கடுமையாகத் தாக்கியிருக்கிறான்."

"யாரும் அப்படி இங்கு வரவில்லை!"

"இந்த சாக்குபோக்கெல்லாம் எங்களுக்கு வேண்டாம். கதவைத் திறக்காவிட்டால் உடைப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை."

"முடிந்தால் அதைச் செய்யுங்கள்!" சுகாசினியும் விட்டுத்தரவில்லை.

"ம்... கதவை உடையுங்கள்! ரெண்டு பேரையும் மொத்தமாகத் தூக்கிக்கொண்டு போகவேண்டியது தான்."

உடனே இரண்டு பேர் வலுவுடன் கதவின் மீது மோதினார்கள்.

"கதவை உடைக்கக்கூடாது" சுகாசினி உள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

"நீங்கள் பாட்டுக்கு உங்கள் வேலையைச் செய்யுங்கள். வருவதை நான் பார்த்துக் கொள்கிறேன்." அலெக்ஸ் கதவின் மீது மோதுபவர்களுக்குத் தைரியம் கொடுத்தார்.

சுகாசினி ஜன்னலின் ஓரத்திலிருந்து வெளியே பார்த்தாள்.

அலெக்ஸ் ஜோன்ஸ் தனியாக நின்று கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. ஜீப்பின் முன்புற விளக்கு வெளிச்சம் தெளிவாக அவரை அடையாளம் காட்டிக் கொண்டிருந்தது.

சுகாசினி அவரைக் குறிபார்த்தாள்.

துப்பாக்கியின் ட்ரிக்கரை அழுத்தினாள்.

பளிச்சென்று வெளிச்சம் புறப்பட்டதுடன், குண்டும் வெடித்தது.

வெளியிலிருந்து அலறல் ஒன்று எழுந்தது.

அலெக்ஸ் பின்புறமாக மரம்போல் விழுந்தார்.

"இன்னும் பதினொரு குண்டுகள் இந்தத் துப்பாக்கிகளில் இருக்கிறது. பாருங்கள்... இரண்டு கையிலும் இரண்டு துப்பாக்கி இருப்பதை!" சுகாசினி உரத்த குரலில் கூறினாள்.

போலீஸார் அதை எதிர்பார்க்கவில்லையென்று தோன்றியது.

"வேடிக்கை பார்க்குறீங்களா? விழுந்து கிடக்குறவரைக் காப்பாத்தாம நிக்குறீங்களே. அவர் இன்னும் சாகலை!" சுகாசினி திரும்பவும் பேசினாள்.

உடனேயே போலீஸார் அலெக்ஸை கைத்தாங்கலாகத் தூக்கி வேனில் ஏற்றினார்கள். வேன் உடனே புறப்பட்டது.

மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் சுகாசினி திகைத்து நின்றாள்.

ஹமீது ஓட்டிச்சென்ற கார் அதற்குள் தாவூத் இஸ்மாயிலின் ரகசிய இருப்பிடத்தை நெருங்கி விட்டிருந்தது.

# 32

கார் கேட்டைத் தாண்டி நின்றது.

"இதுதான் உங்களது தற்காலிகமான இருப்பிடம் இல்லையா?" ஹமீது கேட்டார்.

"இதுதான் சார்!"

இருவரும் காரிலிருந்து இறங்கினர். ஹமீது இறங்கிய இடத்தில் நின்றபடியே மரங்களுக்குள் மறைந்திருந்த அந்தப் பழைய கட்டடத்தைச் சற்று நேரம் பார்த்தபடி இருந்தார்.

இப்படியொரு கட்டடம் அந்தப் பகுதியில் இருப்பதே அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது.

அங்கங்கே காரை உதிர்த்து உடைந்து, உதிரத் தொடங்கிய செங்கல் பரப்பை டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்த்தார் ஹமீது.

"இது யாருடைய பங்களா?"

"வெள்ளைக்காரர் ஒருவருடையது. அவர் சுவிட்சர்லாந்தில் இருக்கிறார். ஆனால், உரிமையாளர் வேறொரு மனிதருக்கு பவர் ஆஃப் அட்டார்னி கொடுத்துவிட்டுப் போயிருந்தார். அவரிடமிருந்து நான், சர்க்கஸ் கம்பெனி மானேஜனின் பெயரில் வாங்கியிருக்கிறேன்."

"நல்ல இடம்தான்! இங்கிருந்து என்ன செய்தாலும் யாருக்கும் எதுவும் தெரியாது" என்ற ஹமீது வாசற்படியை நோக்கி நடந்தார்.

தாவூத் மூன்று தடவை கதவைத் தட்டினான். உடனே வெளிப்புற விளக்கு எரிந்தது. சற்று நேரத்தில் கதவு திறக்கப்பட்டது.

வில்லியம் பிளெய்க் கதவைத் திறந்தார்.

ஹமீது, அவருக்கு வணக்கம் சொன்னார். பிறகு இருவரும் கைகுலுக்கிக் கொண்டனர்.

"மிஸ்டர் ஹமீதுதானே நீங்கள்?" பிளெய்க் சந்தேகத்துடன் கேட்டார்.

"ஆமாம் மிஸ்டர் பிளெய்க். அது நானேதான்!" ஹமீது சிரித்தபடி பேசினார்.

"உங்கள் போட்டோவைப் பார்த்திருக்கிறேன். இப்போது நேரில் சந்திக்க முடிந்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன்!"

மூவரும் சோபாவில் அமர்ந்தனர்.

"நீங்கள் இங்கேயே இருந்துவிட்டதற்கு ஏதாவது காரணம் உண்டா?" ஹமீது கேட்டார்.

"காரணம் தாவூத் இஸ்மாயில் மட்டும்தான். ஒரு வகையில் சொன்னால் இது இப்போதைய சூழ்நிலைக்கு பாதுபாப்பாகவும் தோன்றியது."

"எதனால்?"

"நிறையக் காரணங்கள் உண்டு. இங்கு வந்த பிறகு மிஸ்டர் அலெக்ஸுக்கு ஏராளமான நண்பர்கள் இருப்பதைத் தெரிந்து கொண்டேன். அதுவும் சாதாரணமானவர்கள் அல்ல. அதுவுமில்லாமல் என்னிடமுள்ள ஃபைலில் என்னென்ன விவரங்கள் உள்ளது என்பதும் ஓரளவு அவருக்குத் தெரியும்." பிளெய்க் கூறினார்.

"அதனால்...?" ஹமீது கேட்டார்.

"நான் இங்கு வந்திருப்பது மிகவும் முக்கியமான ஒரு விஷயத்துக்காக." பிளெய்க் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

டி.எஸ்.பி. ஹமீதைப் பார்த்ததும் வில்லியம் பிளெய்க்குக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இதுவரையில் அவருக்குத் துணையாக இருப்பவன் தாவூத் மட்டும்தான். ஒருவிதத்தில் இது விசித்திரமாகத் தோன்றினாலும், இதுதான் பிளெய்க்குக்கு ஆறுதலான விஷயமாக இருந்தது.

தாவூத் விஷயங்களை விளக்கிய பிறகுதான், ஹமீது உண்மையை உணர்ந்தார். வில்லியம் பிளெய்க்கும்

நிலைமையை விவரித்தபோதுதான் ஹமீதுக்கு முழுமையான ஓர் உருவம் கிடைத்தது.

அலெக்ஸ் உட்பட ஒரு பெரிய கள்ளக்கடத்தல் கும்பல் இங்கு இயங்கிக் கொண்டிருப்பதும், போலீஸின் நடவடிக்கைகள் பற்றி அவர்களுக்குத் தகவல் தெரிவிப்பதும் அலெக்ஸ்தான் என்பது அப்போதுதான் ஹமீதுக்கு புரிந்தது.

தாவூத் இஸ்மாயிலும் கள்ளக்கடத்தல் பேர்வழிதான். ஆனால், இருவரின் வழியும் வேறுபட்டவையாக இருந்தன.

பெண்களை வைத்து நடத்தும் வியாபாரம் தாவூத்திடம் இல்லை. பெண்கள் விஷயத்தைப் பொறுத்தவரை தாவூத் இதுவரை நல்லவன் என்றே பெயர் வாங்கியிருக்கிறான்.

"சொல்லுங்கள்!" ஹமீது கேட்டார்.

"ஒரு நாட்டை முழுவதுமாக அழிக்கக்கூடிய அளவுக்கு பிரவுன்ஷுகர் வியாபாரத்தில் அலெக்ஸின் கூட்டத்தினர் ஈடுபட்டுள்ளனர். அதில் அலெக்ஸுக்குக் கணிசமான பங்கு உண்டு. உண்மையில் நீங்கள் சொல்லுவதைப்பற்றி -அதாவது அதில் அலெக்ஸுக்குப் பங்கு இருப்பதைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது!" ஹமீது ஒப்புக்கொண்டார்.

அப்போதுதான் மிகவும் ஆபத்தான பிரவுன் ஷுகரின் விளைவைப்பற்றி வில்லியம் பிளெய்க் விளக்கினார்.

"ஒரு மனிதன் ஒரு தடவை பிரவுன்ஷுகரைப் பயன்படுத்தி, ருசி கண்டுவிட்டால் அதன்பிறகு அவனால் அது இல்லாமல் இருக்கமுடியாது. அதன் புகையிழுப்பில் ஏற்படும் போதை அவனை ஆயுள் முழுவதும் அடிமைப்படுத்திவிடும். சாப்பாடு, மற்ற பொருள்கள் எல்லாமே அவனுக்கு இரண்டாம் பட்சம்தான்.

பிரவுன் ஷூகருக்கு அடிமையான ஒருவருக்கு, அதன் போதையிலிருந்து விடுபட்டவுடனே மறுபடி அது இன்றியமையாததாகிறது. அது இல்லாத ஒரு வாழ்க்கையை அவனால் நினைத்துப் பார்க்கவே முடியாது. இதன் விளைவாக அவன் உடம்பில் கடைசியில் வெறும் எலும்பு மட்டும்தான் மிச்சமாகும்.

பிரவுன் ஷூகர் விற்பவர்கள் ஒரு நிலைக்குப் பிறகு பணம் வாங்காமலேயே அதைக் கொடுப்பார்கள். ஒரு கட்டத்தில் அவன் எவ்வளவு பிரவுன்ஷூகர் பயன்படுத்தினாலும் போதையேறாத மரத்துப்போன நிலைக்கு ஆளாவான். அப்போது அவனே பிரவுன் ஷூகராக மாறிவிடுகிறான். வியாபாரி அவனது உடம்பை எரித்து அதிலிருந்து கடுமையான பிரவுன் ஷூகரை எடுத்துக் கொள்வான்."

ஹமீதும், தாவூத் இஸ்மாயிலும் வியப்புடன் அவர் சொல்லும் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் சொல்வதெல்லாம் உண்மைதானா?

"அப்படியென்றால்?" ஹமீது, வில்லியம் பிளெய்க்கைப் பார்த்தார்.

"இந்த ஒரு வழக்குக்கே அதில் ஈடுபட்டுள்ள மொத்தப் பேருக்கும் மரணதண்டனை உறுதி."

ஹமீதுக்கு அப்போதுதான் ஒரு விஷயம் புரிந்தது.

வில்லியம் பிளெய்க் இங்கு வந்து சேர்ந்தபோது நல்ல சமயத்தில் தாவூத் இஸ்மாயில் மட்டும் குறுக்கிட்டிராவிட்டால் எப்படியும் கொல்லப்பட்டிருப்பார். இருப்பினும் ஹமீது, தாவூத்திடம் கேட்டார்.

"மிஸ்டர் தாவூத் நீங்கள் எதற்காக இவரை இப்படிச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்?"

"நிஜமாகவே உங்களுக்குக் காரணம் புரியவில்லையா என்ன?" தாவூத் சிரித்தபடி கேட்டான்.

"புரியவில்லைதான்!"

"தொழில் முறையில் அலெக்ஸும் அவரது கூட்டாளிகளும் என் எதிரிகள். எங்களுக்கிடையே எப்போதும் உட்பூசல் இருந்து கொண்டுதான் இருக்கும். எதிராளியை வளரவிடுவது என்பது எங்களைப் போன்றவர்களுக்கு ஆபத்தாகிவிடும். உலகம் முழுவதும் இதுதான் நிலைமை!"

கள்ளக்கடத்தல் கோஷ்டிகளுக்கு நடுவே இப்படிப்பட்ட உட்பூசல்கள் இருப்பது ஹமீதுக்கும் நன்கு தெரியும்.

இந்தப் பூசல்களின் பொருட்டு அடிக்கடி கொலைகள் கூட நடப்பதுண்டு. சமீப காலமாக அப்படிப்பட்ட மரணங்கள் அதிகரிக்கவும் செய்துள்ளன. சமூகத்துக்கு நன்கு அறிமுகமான பெரும்புள்ளிகள் சிலவேளை கொலை செய்யப்படும்போது மட்டும் அவர்கள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்று தெரியவரும்.

எம்.பி-க்கள் மற்றும் எம்.எல்.ஏ-க்களுடன் தொடர்பு வைத்துள்ள கள்ளக்கடத்தல் கும்பல்கள் கூட உள்ளன என்பதும் ஹமீதுக்குத் தெரியும்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாமல் அவர்கள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டாலும் மிகவும் புத்திசாலித்தனமாகத் தப்பித்து விடவும் செய்கின்றனர்.

"மிஸ்டர் ஹமீது, இந்த கள்ளக்கடத்தல் கும்பல்களைப் பற்றி நீங்கள் அதிகமாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்

...து எனக்குப் புரிகிறது. அப்படித்தானே?" வில்லியம் ...ளெய்க் கேட்டார்.

"ஓரளவுக்கு அது உண்மைதான். நல்ல நோக்கத்துடன் ... சில சந்தர்ப்பங்களில் தாவூத் இஸ்மாயில் தப்பித்துச் ...ல்ல நான் வேண்டுமென்றே அனுமதித்திருக்கிறேன். ...ற்குக் காரணம் தாவூதுடன் எனக்கு இருக்கும் அன்போ, ...ப்போ காரணமல்ல!"

"அப்படியானால் நீங்கள்தான் அவ்வப்போது எனக்கு ...கிருந்தோ கிடைத்தது போன்ற தகவல்களைத் தந்தவர். ...ண்மையா?"

"ஆமாம்... அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் உங்களைக் ...ப்பாற்ற வேண்டியதும் என்னுடைய தேவையாக இருந்தது." ...மீது ஒப்புக்கொண்டார்.

எத்தனையோ சந்தர்ப்பங்களில் தானே நம்பமுடியாதபடி ...ப்பித்ததற்கு ஹமீது உதவியிருக்கிறார் என்ற உண்மை ...ப்போதுதான் தாவூதுக்கு புரிந்தது.

"எதற்காக சார் அப்படிச் செய்தீர்கள்?" தாவூத் ...ட்டான்.

"இன்னுமா உங்களுக்கு அது புரியவில்லை? நீங்கள் ...ப்பிக்காமல் போயிருந்தால் வில்லியம் பிளெய்க்கின் ...லைமை என்னவாகியிருக்கும்?"

"ஓகோ அந்த விஷயத்தைச் சொல்கிறீர்களா? சரி ...ாகட்டும். மேற்கொண்டு நீங்கள் என்ன செய்யப் ...ாகிறீர்கள்?" தாவூத் கேட்டான்.

“என்னுடைய நோக்கத்தில் ஏறத்தாழ எழுபத்தைந்து சதவிகிதம் நிறைவேறி விட்டது. வில்லியம் பிளெய்க்கைப் பத்திரமாகச் சேர்த்து விடவேண்டும் என்பது மட்டும்தான் இப்போது மீதமுள்ளது.”

“அதற்கென்ன, நாம் புறப்பட்டால் போகிறது.” வில்லியம் பிளெய்க் பாதிக்குமேல் தீர்ந்துபோன சுருட்டை ஆஷ்ட்ரேயில் போட்டு நசுக்கிவிட்டு மற்றொன்றை எடுத்தார்.

“நீங்கள் புகை பிடிப்பதில்லையா?” பிளெய்க் கேட்டார்.

“சாதாரணமாகப் புகைப்பதில்லை. எப்போதாவது ஒரு தடவை சிகரெட் பிடிப்பேன். அதிகமாக அதில் எனக்கு விருப்பமில்லை!” ஹமீது கூறினார்.

உடனே தாவூத் தன்னுடைய சிகரெட் கேஸைத் திறந்து ஒன்றை எடுத்துக்கொண்டு ஹமீதிடம் நீட்டினான்.

ஹமீது ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டார்.

பிளெய்க் அந்த சிகரெட்டைக் கவனித்தார். உலகின் மிக விலையுர்ந்த சிகரெட் அது.

தாவூத் நல்ல ரசனையுள்ளவன்தான் என்பது பிளெய்க்குக்குப் புரிந்தது.

குண்டுக்காயம்பட்டிருந்த அலெக்ஸை போலீஸ் அதிகாரிகள் நேரடி மேற்பார்வையில் மருத்துவமனையில் கொண்டுபோய்ச் சேர்த்தனர். அலெக்ஸுக்கு ஏற்பட்ட காயம் அந்த அளவு ஆபத்தானதாக இருக்கவில்லை. தோளின் மேற்புறத் தோலைத் தேய்த்துக்கொண்டு வெளியேறி இருந்தது குண்டு.

கடத்தல் கும்பல் ஒன்றைப் பிடிக்க முற்பட்டபோது காயம் ஏற்பட்டதாக மருத்துவமனையில் கூறினார். அந்தக்

கும்பல் தாவூத்தினுடையது என்றும் பெயர் குறிப்பிட்டனர். செய்தியை அறிந்த சைமன் உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்து வந்தார்.

தனியாகப் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்தில் அலெக்ஸ், சைமனிடம் உண்மையில் நடந்ததைத் தெரிவித்தார்.

"நான் என்ன செய்ய வேண்டும்?" சைமன் கேட்டார்.

"இவ்வளவு தூரம் வந்தபிறகு டாக்டர் சுகாசினியை உயிருடன் விட்டுவைக்கக் கூடாது. அவளைக் கொலை செய்துவிட்டு அந்தப் பழியை தாவூத் மீது போடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அது ஒன்றுதான் தற்போதைய சூழலுக்கு சரியாகும்." அலெக்ஸ் கூறினார்.

அதுதான் நல்லதென்று சைமனும் நினைத்தார்.

உடனேயே அங்கிருந்து ஜீப்பில் புறப்பட்டார்.

சைமன், சுகாசினியின் வீட்டைநெருங்கியபோது கார் ஒன்று அங்கிருந்து சீறிப் பாய்ந்து செல்வதைக் கவனித்தார். சைமன் உடனே முன்னால் போன காரைப் பின்தொடர முயன்றாலும் முயலவில்லை. அது சைமனுக்குப் போக்குக்காட்டி விட்டுச் சட்டென்று மறைந்துவிட்டது.

சைமன் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாகிவிட்டது.

தாவூது வாட்சைப் பார்த்தான்.

மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகியிருந்தது.

அறைக்குள் வந்தவன் ரிசீவரை எடுத்துக் காதில் பொருத்திக் கொண்டு சுகாசினியின் நம்பரை டயல் செய்தான். எதிர் முனையில் மணியடிப்பது கேட்டது. ஆனால், அங்கு யாரும் இல்லை போல் தோன்றியது.

தாவூத்தின் முகம் சந்தேகத்தால் கருமையடையத் தொடங்கியது.

தாவூத் பழையபடி ஹாலுக்குத் திரும்பி வந்தபோது ஹமீதும், பிளெய்க்கும் அங்கிருந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

"டாக்டர் சுகாசினியைக் காணவில்லை!" தாவூத் தெரிவித்தான்.

"அப்படியானால் நாம் உடனே புறப்படவேண்டியது தான்!" ஹமீது விரைவாக வெளிவாசலை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

# 33

டாக்டர் சுகாசினியின் வீட்டுவாசலை அடைந்தபோது, கேட்டின் உட்புறம் ஜீப் ஒன்று நின்று கொண்டிருந்தது.

வீட்டுக்குள் விளக்குகள் ஒன்றிரண்டு எரிந்து கொண்டிருந்தன.

யாரெல்லாமோ வீட்டுக்குள் இருப்பதுபோல் தோன்றியது. கேட்டின் வெளியே காரை நிறுத்திவிட்டு தாவூத் இஸ்மாயில் இறங்கினான். அவன் கைகள் இரண்டிலும் துப்பாக்கிகள் இருந்தன.

"யாரங்கே?" வாசலருகில் வந்தவுடன் தாவூத் கேட்டான்.

இரண்டு பேர் சட்டென்று தாவூதை நோக்கிப் பாய்ந்து வந்தனர். பார்வைக்கு உள்ளூர் அடியாட்கள் போல் தெரிந்தனர்.

“நான் தாவூத் இஸ்மாயில்... உங்க உயிர் மேல உங்களுக்கு ஆசையிருந்தா மரியாதையா நகர்ந்துடுங்க!” தாவூதின் குரல் கட்டளைபோல் ஒலித்தது.

பாய்ந்து வந்தவர்கள் ஒருகணம் தயங்கியது போல் தெரிந்தது. முதலில் வெளிவந்த அடியாட்கள் பின்வாங்க முயற்சி செய்ததும் வீட்டுக்குள் இருந்து மற்றொருவன் வெளிவந்தான்.

“நீங்க யாரா இருந்தா எனக்கென்ன? மனுஷன்தானே... இங்கே ஒருத்தனோட பலமும் பலவீனமும்தான் அளவுகோல்” என்றவன் மற்ற இருவரிடமும் தாவூதுடன் மோதும்படி சைகை செய்தான்.

அவர்கள் மீண்டும் தாவூதை நோக்கிப் பாய்ந்தார்கள்.

இரண்டு முறை துப்பாக்கிக் குண்டுகள் வெடித்தன.

மிகவும் சரியாக அந்த இருவரின் முழங்கால் எலும்புகளின் மீது குண்டுகள் பாய்ந்தன.

அவர்கள் பின்புறமாகச் சாய்ந்து விழுந்தனர்.

தாவூத் மூன்றாவதாக வந்த மனிதனை நோக்கித் துப்பாக்கியை நீட்டினான். கண்ணிமைக்கும் நேரத்தில் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்து தாவூத்தை நோக்கி அவன் வீசினான்.

தாவூத் சட்டென்று குனிந்தான்.

கழுத்தை நோக்கி வந்த கத்தி, தாவூத் குனிந்து கொண்டதால் ஜன்னலின் மரச்சட்டத்தின் மீது பாய்ந்து நின்றது.

அதன் பிறகு தாவூத் தயங்கவில்லை. மூன்றாவது முறையாக துப்பாக்கி குண்டு வெடித்த சத்தம் கேட்டது. கத்தியெறிந்தவனும் முழங்காலில் குண்டு வாங்கிக் கீழே சரிந்தான்.

தாவூத் குறி தவறாமல் சுடுவதை கவனித்த ஹமீது வியப்பு அடைந்தார்.

"டாக்டர் சுகாசினி எங்கே?" விழுந்து கிடந்த தலைவனிடம் தாவூது கேட்டான்.

"நாங்கள் அவரைப் பார்க்கவில்லை!" கத்தி வீசி விழுந்தவன் வேதனையுடன் பேசினான்.

"நீங்கள்லாம் யார்? எதுக்காக இங்கே வந்திருக்கீங்க?"

"டாக்டரைக் கொண்டு போறதுக்குத்தான் வந்திருக்கிறோம்."

"உங்களை அனுப்பினது யார்?"

"சூபரின்டெண்டெண்ட் சார்தான்!"

"யார் எஸ்.பி.அலெக்ஸ் ஜோன்ஸா?" வில்லியம் பிளெய்க் கேட்டார்.

"ஆமாம் சார்!"

"நீங்கள் எல்லோரும் ஜீப்பில் ஏறுங்கள்!" ஹமீது கூறினார்.

"கொஞ்சம் உதவுங்க சார்!"

தாவூத், அவர்கள் ஜீப்பில் ஏற உதவினான்.

"நான் சொன்னதை ஒழுங்காக் கேட்டிருந்தா இந்தக் கஷ்டம் வந்திருக்காது. உங்ககூட டிரைவர் யாராவது வந்தாங்களா, இல்லை உங்கள்ல ஒருத்தர்தான் டிரைவரா?"

"டிரைவர் தனியாக இருக்கார்!"

"எங்கே அவரு?"

அப்போது ஒருவன் அவர்களுக்கு முன்னால் வந்த நின்றான்.

"ஜீப் யாரோடது?"

"அலெக்ஸ்சார்தான் எங்ககிட்ட குடுத்து அனுப்பினார்!"

"ஓகோ... அப்படியா, இவங்களையெல்லாம் அவர்கிட்டக் கொண்டுபோய் விட்டுடுங்க! ம்..." தாவூத் உரத்த குரலில் கூறினான்.

தன் உடம்பிலும் ஏதாவது காயம் ஏற்படலாம் என்று நினைத்திருந்தான் டிரைவர். நல்லவேளையாக அப்படி எதுவும் ஏற்படாததில் மகிழ்ந்தான். அவன் பயத்துடன் எழுந்தான்.

அதே சமயம் அங்கிருந்த டெலிபோன் ஒலித்தது.

தாவூத் ரிசீவரை எடுத்தான்.

"ஆமாம்... இது சுகாசினியின் வீடுதான். யார் பேசிட்டிருக்கிறதுன்னு நீங்க தெரிஞ்சுக்கணும்னா, உங்க பேரைச் சொல்லணும்!"

"எனக்குத் தேவை சுகாசினியோட காதலன்!"

"அந்தக் காதலன்தான் பேசுறேன்."

"அதாவது சுருட்டைத் தலைமுடியுடன், குதிரையைத் தூக்க முடிந்தவர்தானே?"

"ஓகோ... யார் தாஸா பேசுறது?"

"ஆமாம்... நான்தான் சார்!"

"என்ன தாஸ், என்ன விசேஷம்?"

"டாக்டர் சுகாசினி இங்க நம்ம டெண்ட்டில் பத்திரமா இருக்கிறாங்க!"

"அப்படியா. சரி அங்கேயே இருக்கட்டும். நான் அப்புறமா வந்து பாத்துக்கிறேன்" ரிசீவரை வைத்த தாவூத் ஹமீது மற்றும் பிளெய்க்கை நோக்கித் திரும்பினான்.

"பயப்பட வேண்டியதில்லை. சுகாசினி பத்திரமான இடத்திலேயே இருக்கிறாள். அடுத்ததாக நாம் செய்ய வேண்டியது என்ன" தாவூத் கேட்டான்.

"நேராக சென்று அலெக்ஸ் ஜோன்ஸைப் பிடிக்க வேண்டியதுதான்!" பிளெய்க் பதிலளித்தார்: "அவரைக் கைது செய்வதற்கு வேண்டிய சகல தஸ்தாவேஜுகளும் என்னிடம் உள்ளன. தப்பிப்பதற்கு முன்னால் அவரை நாம் பிடித்தாக வேண்டும்!"

அலெக்ஸ் படுத்திருந்த மருத்துவமனையை நோக்கி அவர்களது கார் பறந்தது.

அவர்கள் ஆஸ்பத்திரியை நெருங்கிய அதே சமயத்தில் அங்கிருந்து ஆம்புலன்ஸ் ஒன்று விரைவாக வெளியேறுவதை, காரிலிருந்த மூவரும் கவனித்தனர். கார் உள்ளே நுழையவிடாமல் கேட்டின் நடுப்பகுதியில் வேண்டுமென்றே

வேன் குறுக்கிட்டு வெளியேறிக்கொண்டிருந்தது. கார் சற்று நேரம் வெளியிலேயே நிற்க நேர்ந்தது.

ஆஸ்பத்திரிக்குள் போய்ப் பார்த்தபோது அலெக்ஸைக் காணவில்லை. ஆனால், அவர் மருத்துவமனையிலேயே இருப்பதாக நர்ஸ் அடித்துப் பேசினாள். தாவூதுக்கு அந்த நர்ஸே சந்தேகத்துக்கு உரியவளாகத் தெரிந்தாள்.

தாவூத் அவளை நெருங்கி உற்றுப் பார்த்தான்.

"உண்மையைச் சொல்! அலெக்ஸ் எங்கே போயிருக்கிறார்? அவர் அகப்படலேன்னா உன்னை உயிரோட விடமாட்டேன்" தாவூத் தனது துப்பாக்கியை அவள் முகத்துக்கு நேராக உயர்த்தினான்.

அவள் ஏகத்துக்கு மிரண்டாள்.

தாவூதின் முகம் கோபத்தால் சிவந்துகொண்டே இருந்தது.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் வெளியே போன ஆம்புலன்ஸில் அவர் இருந்தார்."

"அந்த ஆம்புலன்ஸ் எங்கே போகுது?"

"நிஜமாவே எனக்குத் தெரியாது!"

"இருக்கட்டும்!" நர்ஸிடமிருந்து விலகிய தாவூத் டெலிபோனை நெருங்கினான்.

ஏதோ ஒரு நம்பரை டயல் செய்தான்.

எதிர்முனையில் ரிசீவரை எடுத்த சத்தம் கேட்டது.

‘‘தாஸ்... நான் தாவூத் பேசுறேன் கே.என்.ஈ. நாற்பத்தொன்பது அறுபத்தெட்டு நம்பர் போட்ட ஆம்புலன்ஸ் எங்கே இருந்தாலும் உடனடியா கண்டுபிடிக்கணும்’’ தாவூத் கூறினான்.

டாக்டர் வில்லியம் பிளெய்க்கும், ஹமீதும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு மூவரும் அங்கிருந்து வெளியேறினர்.

“அலெக்ஸின் விஷயத்தை தாஸ் கவனித்துக் கொள்வார். அடுத்ததாக நாம் யாரிடம் போவதென்று தீர்மானித்து விட்டேன்” தாவூத் உறுதியுடன் பேசினான்.

மூவரும் சைமன் கோமஸின் வீட்டை நெருங்கியபோது, அவர் ஏர்போர்ட்டுக்குப் போயிருப்பதாகத் தகவல் கிடைத்தது. சைமனின் உதவியாளர் பெண்மணிதான் தகவல் சொன்னாள்.

“இந்த நேரத்திலா?” டி.எஸ்.பி. ஹமீது கேட்டார்.

“அவசரமான ஒரு விஷயத்தை முன்னிட்டு கெய்ரோ வழியாக லண்டன் செல்லும் ஃபிளைட்டில் அவர் புறப்படுகிறார். அதுதான் காரணம்!”

“நீங்கள் சொன்னது சரியான தகவல்தானா?” ஹமீது கேட்டார்.

“நான்தான் அவருக்கு டிக்கெட் எடுத்து வந்தேன்.”

“ஃபிளைட்டின் சரியான நேரம் என்ன?”

‘‘இன்னும் பத்து நிமிடத்தில் புறப்படும்!’’ அவள் வாட்ச்சைப் பார்த்தபடி பேசினாள்.

தாவூத் இஸ்மாயில் உடனடியாக ஏர்போர்ட்டின் அவசரத் தொடர்பு நம்பருக்கு டயல் செய்தான்.

"ஹலோ... லண்டனுக்குப் போகும் ஃபிளைட்டைக் கொஞ்சம் தாமதப்படுத்த வேண்டும். அதில் சர்வதேசக் கடத்தல் குற்றவாளியான தாவூத் இஸ்மாயில் இருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது."

"உண்மையாகவா?" எதிர்முனை வியப்புடன் கேட்டது.

"வாருங்கள் போகலாம்!" ரிசீவரை வைத்த தாவூத் மற்ற இருவரையும் பார்த்துப் பேசினான்.

மூவரும் விமான தளத்தை நோக்கிப் பறந்தனர். விமான தளத்தின் வெளிப்புற கேட்டைக் கடந்ததும் விமான நிலையத்தை போலீஸ் துறை சுற்றி வளைத்திருப்பது தெரிந்தது. போலீஸ் வேன்களும் ஜீப்பும் மிகவும் எச்சரிக்கையுடன் பாதுகாப்பு வளையத்தை உருவாக்கியிருந்தன.

காரை வெளியிலேயே நிறுத்திய தாவூத் மற்ற இருவரையும் பார்த்துப் பேசினான்: "சார் நீங்கள் இருவரும் போய் சைமனைக் கைது செய்யுங்கள். சைமனுடன் ஒருவேளை ரஷீதும் இருக்கலாம். நான் இங்கேயே காரில் காத்திருக்கிறேன்."

ஹமீதும், பிளெய்க்கும் இன்ஸ்பெக்ஷன் அறையை நோக்கி விரைந்தனர்.

"சார், விமானத்துக்குள் ஒரு சிறிய சோதனை நடத்த வேண்டும். ஏற்கெனவே தகவல் தந்தது நான்தான். என் பெயர் ஹமீது. இவர் இண்டர்போல் அதிகாரி மிஸ்டர் வில்லியம் பிளெய்க்." ஹமீது பிளெய்க்கை போலீஸ் கமிஷனரிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

பிளெய்க்கைப் பற்றி அவர்கள் ஏற்கெனவே கேள்விப் பட்டிருந்தனர். பிளெய்க் அவசர அவசரமாக சைமன் மற்றும்

ரஷீதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கி ஃபைலை எடுத்துக் காட்டினார்.

அலெக்ஸ் கூடவா இந்தக் கூட்டத்துடன் சம்பந்தப் பட்டிருக்கிறார் என்று வியப்படைந்த கமிஷனர், விமானத்தைச் சோதனையிட ஏற்பாடு செய்தார்.

தாவூத் குறிப்பிட்டது போல் விமானத்துக்குள் ரஷீதும் இருந்தார்.

பேச்சுக்கு நடுவே பிளெய்க்கும் ஹமீதும் தாவூதைப் பற்றியும் குறிப்பிட்டனர்.

"தாவூத்தையும் கைது செய்ய வேண்டுமில்லையா... இல்லாவிட்டால்?" பிளெய்க் கேட்டார்.

"கண்டிப்பாக கைது செய்ய வேண்டும். தாவூத் இங்கு வந்ததுமுதல் நான் அவரது நடவடிக்கைகளைக் கண் காணித்திருக்கிறேன். அதில் எந்தவிதமான தவறும் இல்லை."

சற்று நேரத்துக்குள் விமானத்திலிருந்து சைமன், ரஷீத் ஆகிய இருவரையும் கைது செய்துகொண்டு வந்தனர். அவர்களது லக்கேஜை சோதனை போட்டதில் சுமார் இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள ஹாஷிஷ் பௌடர் இருந்ததும் தெரிய வந்தது.

தக்க சமயத்தில் இந்த இருவரையும் பிடிக்க உதவிய தாவூதுக்கு ஹமீதும், பிளெய்க்கும் மனத்துக்குள் நன்றி கூறிக்கொண்டனர்.

என்ன இருந்தாலும் ஒரு குற்றவாளி என்ற முறையில் தாவூதைக் கைது செய்யாமல் இருக்க முடியாது என்பதுதான் ஹமீதின் வாதம்.

ஒரே காரில்தான் அவர்கள் பயணம் செய்தனர். கார் மிகவும் பயங்கரமான வேகத்தில் விரைந்து கொண்டிருந்தது.

'தாவூதை எப்படிக் கைது செய்வது?' என்பதைப் பற்றியே பிளெய்க்கும், ஹமீதும் யோசித்துக் கொண்டிருந்தனர்.

ஹமீது நிறையத் தடவை தாவூதுக்கு உதவி செய்திருக்கிறார். போலீஸ் துறையின் கெடுபிடியான நடவடிக்கைகளின்போது ஹமீது, தாவூதுக்கு எச்சரிக்கை செய்யவும் தவறவில்லை.

ஹமீதைப் பொறுத்தவரை அதற்கும் குறிப்பிடத்தக்க ஒரு காரணம் இருந்தது.

முதல் விஷயம்: தாவூத் இஸ்மாயிலுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் யார், அவர்கள் எப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் என்பதைக் கண்டறிவது. அடுத்ததாக: யாரெல்லாம் தாவூதை எதிர்க்கிறார்கள் ஏன்? இந்தப் பட்டியல் சரியானால் ஓரளவு கடத்தல்காரர்களின் முழுமையான பட்டியல் தயாராகிவிடும்.

அவர் எதையெல்லாம் எதிர்பார்த்துக் காத்திருந்தாரோ, அதெல்லாம் நிறைவேறிவிட்டது.

இருள் நிறைந்த பாதையில் கார் விரைந்து கொண்டிருந்தது. உண்மையில் தாங்கள் போக வேண்டிய பாதை இதுவல்ல என்று ஹமீது திடுமென்றுதான் கண்டுபிடித்தார்.

"மிஸ்டர் தாவூத் கார் எங்கே போகிறது?" ஹமீது கேட்டார்.

"சார், என் பெயர் தாஸ், அலெக்ஸ் தப்பித்துப்போக முயற்சி செய்த ஆம்புலன்ஸை மடக்கிப் பிடித்து சர்க்கஸ் கூடாரத்துக்குள் பத்திரமாகக்கொண்டு போயிருக்கிறேன்.

அலெக்ஸுக்கு விஸ்கியில் தூக்க மாத்திரை போட்டுத் தூங்க வைத்திருக்கிறேன். நல்ல தூக்கத்தில் இருக்கிறார்!"

"அப்படியானால் தாவூத் எங்கே?" ஹமீது வியப்புடன் கேட்டார்.

"அது யாருக்கும் தெரியாது சார். அவர் எங்கே இருப்பார் என்பது அவருக்கு மட்டுமே தெரியும். ஒருவேளை இப்போது புறப்பட்ட ஃப்ளைட்டில்கூடப் போயிருக்கலாம். பம்பாயில் இறங்கலாம். யாருக்குத் தெரியும்?" தாஸ் மிகவும் சாதாரணமாகப் பேசினார்.

கார் அப்போதும் இருளின் ஊடாகப் பாய்ந்து கொண்டிருந்தது.

தாவூத் இஸ்மாயில் அப்போதும் ஒரு புதிராக, விடை தெரியாதவனாகத்தான் தென்பட்டான்.

---------